என் குருநாதர்

(H.H.ஸ்வாமி தயானந்த சரஸ்வதி)

மீரா சண்முகம்

வெளியீடு
ஆர்ஷ வித்யா பீடம்
பூராணாஜாடி
ரிஷிகேசம்

முதற் பதிப்பு – 15 ஆகஸ்ட் 1990
(சுவாமிஜி 60 ஆண்டு நிறைவு விழா நினைவு வெளியீடு)
இரண்டாம் பதிப்பு – 15 ஆகஸ்ட் 1995

தொகுப்பு திருமதி மீரா சண்முகம் ஹைதராபாத்

பிரதிகள் கிடைக்குமிடம் :–

சுவாமி தயானந்த சரஸ்வதி கல்விக்குழு
மஞ்சக்குடி (அஞ்சல்)
612 610
தமிழ் நாடு

ஒளி அச்சுக் கோர்வை :
ஏகம் கம்ப்யூட்டர்ஸ், 78, எல்லீஸ் ரோடு,
சென்னை – 2. தொலைபேசி : 84 85 99

மனோ அச்சகம், சென்னை – 5. தொலைபேசி : 84 34 00

ஆசிரியர் பற்றி

சுவாமிஜியின் வாக்கிற்கு வாழ்வு தரும் சீடர்களில் இவரும் ஒருவர். சுவாமிஜியின் உபன்யாசங்களை தமிழ் மக்களும் கேட்டு, அதன்படி நடக்க தமிழில் மொழி பெயர்த்து நூலாக வெளியிடுவதில் இவருக்கு ஆர்வம் மிகுதி.

1987ல் இல்லறத்தில் ஆனந்தம் என்னும் நூல் வெளியிட்டார்.

இந்நூல் (என் குருநாதர்) இவரின் இரண்டாவது படைப்பு.

அணிந்துரை

முப்பது வருடங்களுக்கு முன்பு ஒரு தொழிலதிபர் ஹைதராபாத்தில் ஸ்வாமிஜியின் கீதைச் சொற்பொழிவை ஒரு முறை கேட்டார். பிறகு தன் வியாபாரத்தை, தொழிலை தன் குமாரர்கள் பொறுப்பில் விட்டு விட்டு ஸ்வாமிஜியின் சொற்பொழிவு நடக்குமிடத்திற் கெல்லாம் சென்று ஸ்வாமிஜியின் வேதாந்தக் கருத்துக்களிலே ஆழ்ந்து அதில் கிடைக்கும் பேரானந்தத்தில் மூழ்கி விட்டார். ஸ்வாமிஜி ஹைதராபாத் வரும் போதெல்லாம் தன் வீட்டில் தங்கச் செய்தார். தன் மனைவியையும் கிடைத்தற்கரிய ஸ்வாமிஜியின் சொற்பொழி வைக் கேட்கச் செய்து தன் மனைவிக்கும் ஆத்மீகத் துறையில் ஈடுபாடு வரச் செய்தார். பிறகு அத்தம்பதியினர் ஸ்வாமிஜியின் அத்யந்த சீடர்களானார்கள். ஸ்வாமிஜி ஆர்ஷ் வித்யா பீடம் ஸ்தாபிக்கும் போது உடனிருந்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார் கள். அந்த அரிய பாக்கியம் பெற்ற தம்பதியினர் தான் உயர்திரு ஷண்முகம் மீரா ஷண்முகம் ஆவர். உயர்திரு ஷண்முகம் அவர்கள் பிரம்ம ஞானத்தை அடைந்து இவ்வுலகை விட்டு விண்ணுலகை எய்தியவுடன் திருமதி மீரா ஷண்முகம் அவர்கள் வாழ்க்கையில் வேதாந்தக் கருத்துக்களைக் கடைப்பிடித்து வாழ்வதோடு தங்கள் குருவிற்குக் காணிக்கையாக குருவின்

25-6

பெருமையைப் பாரெல்லாம் அறிந்து கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் தன் குருநாதரின் சரிதத்தை உள்ளது உள்ளபடி மிகுந்த பக்தியுடன் நல்ல தமிழில் மிகவும் சிறப்பாக எழுதி உள்ளார். இதைப் படிப்பவர் ஒரு பெரிய மஹானின் சாதனை களைத் தெரிந்து கொள்வதோடு தன் வாழ்க்கையின் நோக்கம் என்ன? தான் எப்படி வாழ வேண்டும்? என்பதையும் தெரிந்து பயனடைந்திடுவர்.

வணக்கம்.

பெசன்ட் நகர்
சென்னை.

கந்தசாமி பிள்ளை

பொருளடக்கம்

என் குருநாதர்

என் குருநாதர்

பிறப்பும் இளமைப்பருவமும்.

பிறந்தான் பெம்மான் புலன் வெல்லும் கலைசொல்ல!
புகழ் கடந்த பெருமாள், எம்மான் புவனம் வென்றான்!
இறவான் பிறவான் யாவருக்கும் இன்பநிலை தருவான்
மறவான் அன்பர்களை, மாசிலான் தோன்றினான
புவியினில்

நீதி தவறாத மனுநீதிச்சோழன் தோன்றியதும், சோறுடைய சோழநாட்டில் கவேர முனிவரின் கமண்டலத்தில் தோன்றியதாய் புராணம் கூறும், தென் கங்கை நதியான புனித காவேரியும் பாயும் ஸ்தலத்தில், தியாகப்பிரம்மம் சதாசிவ பிரம்மேந்திராள், தாயுமான ஸ்வாமிகள், இன்னும் பல பெரிய மஹான்கள், ஞானிகள், அறிவாளிகள் தோன்றிய மண்ணில் புகழ்பெற்ற தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது கும்பகோனம். இதற்கு ஒரு தனிச்சிறப்பு அளித்துள்ளது புராணம். உலகில் பாபம் செய்தவர்களுக்கு விமோசனம் பெறவழி என்னவென்றால் கும்பகோணம் மகாமகக் குளத்தில் மகாமகத்தின் போது மூழ்கினால் பாவம் போகும் என்பார்கள். கும்பகோனத்தில் பாவம் செய்தவர்களுக்கு என்ன விமோசனம் கும்பகோணத்திலேயே நசிந்து விடும் என்பர்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஸ்தலமான கும்ட கோணத்திற்குப் பதிமூன்று மைல் தூரத்தில் உள்ளது 'மஞ்சக்குடி' என்னும் அழகிய கிராமம். சுமார் 1500 மக்கள் கொண்ட சிறிய கிராமம். அமைதியான வீதி சுற்றிலும் பசுமையான வயல்களும், உயர்ந்த தென்னை மரங்களும், இடையில் சிற்சில கோபுரங்களும், பார்க்கும் பொழுதே பரமானந்தத்தையும் தத்துவ உணர்வையும் அளிக்கும் தனிச்சிறப்பு வாய்ந்த கிராமம். இக்கிராமத்தில் சுவாமிஜியின் முன்னோர்கள் வசித்து வந்தார்கள். பாட்டனார் பெயர் மஹாலிங்க ஐயர் நல்ல செல்வச் செழிப்புள்ள குடும்பம். எப்போதும் சிவா, சிவா என்று சொல்லிக் கொண்டே இருப்பார். தர்மகுணம் படைத்தவர். வீட்டில் உள்ளவர் களுக்குத் தெரியாமலேயே தர்மம் செய்வார். இவர் நிலங்களைப் பயிர் செய்தவர்கள் இவரைப் பார்க்க வரும்பொழுது குரு, தெய்வம், ராஜா இவர்களை வெறும்கையோடு போய்ப் பார்க்கக் கூடாது என்ற முறைப்படி ஒரு பூசணிக்காய் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போவார்கள். பின்னர் அவர்கள் வீடு திரும்பும் போது, அவர்கள் வெறும் கையுடன் திரும்பிப் போகக் கூடாது என்று அதைப்போல் பன்மடங்கு மதிப்புள்ள நெல் கொடுத்து அனுப்புவார் மஹாலிங்க ஐயர். வீட்டுலுள்ளவர்கள் ஒரு சிறிய பூசணிக்காய்க்கு இவ்வளவு மதிப்பு மிக்க தானம் செய்வார்களா? இது தகுமா? என்று கேட்பார்கள். இதற்கு அவர் என்ன பதில் சொல்வார் தெரியுமா? ஒரு சிறிய பூசணிக்காய்க்கு இவ்வளவு மதிப்புள்ள நெல் தானம் செய்வது பொருத்தம் அல்ல என்று எனக்குத் தெரியும், ஆனால் ஏழையான அவனுக்கு உள்ள ஒரு சிறிய இடத்தில் பயிரான இரண்டு காய்களில் ஒன்றைக் கொடுத்தால் அவனுக்கு எவ்வளவு நஷ்டம் என்று ஆலோசனை செய்து பார்க்கும் பொழுது எனக்கு இது நஷ்டமாகத் தெரியவில்லை.

அவனுக்குரியதைக் கொடுப்பதில் ஏற்படும் நஷ்டத்தையே பெரியதாக எண்ணி, அதற்கு ஈடு செய்வதாக நினைத்து நெல் கொடுத்த இவருடைய தர்ம குணம் எல்லோராலும் போற்றப்படும்.

இவருக்கு இரண்டு பிள்ளைகள் மூத்தபிள்ளை கணேச ஐயர் இளையவர் கோபால ஐயர். இரண்டு பெண்களும் இருந்தார்கள். கணேச ஐயர் வக்கீல், சுவாமிஜியின் பெரியப்பா ஊரில் உள்ளவர்களிடம் பணம் வாங்காமலேயே வேண்டிய உதவிகளைச் செய்வார். இவர் எடுக்கும் வழக்குகள் எல்லாம் ஜெயமாகும். இவரும் சகோதரர் கோபல ஐயரும் ஒரே குடும்பமாய் ஒற்றுமையாக வசித்து வந்தார்கள்.

சுவாமிஜியின் தாயாரின் தந்தை பெயர் சுவாமிநாத ஐயர் பெரியசிவபக்தர். எப்போதும் உடல்முழுவதும் விபூதி பூசிக் கொண்டு பரமசிவா, பரமசிவா என்று சொல்லுவார். யாரைப் பார்த்தாலும் பரமசிவா என்றே பேசுவார். இதனால் இவரைப் சிலர் பரமசிவா ஐயர் என்றும் சொல்லுவார்கள். மரணகாலத்தில் சிவா, சிவா என்று கூறிக்கொண்டே இவரது ஆவி பிரிந்தது. பாட்டியின் பெயர் துளசி அம்மாள். தன் இல்லத்திற்கு வருபவர்களை அன்புடன் அன்னமிட்டு உபசரிப்பார்கள். ஒருவர் மனமும் கோணாமல் நடந்து கொள்வார்கள்.

இவ்வளவு பெரும் குணங்களுடைய குடும்பத்தில் அமைதியையும், ஞானானந்தத்தையும் அளிக்கப் போகும் மஹான் உயர்திரு சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் 1930ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதி, கபட மற்ற உயர்ந்த ஆசாரசீலமுள்ள ஸ்ரீமதி வாலாம்பாள் என்ற அம்மையாருக்கும், அன்பும் கனிவும் சீலமும் உள்ள கோபால ஐயர் என்ற உத்தமருக்கும் இந்த புருஷோத்தமர் மகவாய்த் தோன்றினார்.

இவருடன் பிறந்தவர்கள் ஐந்து சகோதர்கள் மூத்தவரும் சிறுவயதில் இறந்துவிட்டார். இரண்டாவது பிள்ளை நம் சுவாமிஜி மூன்றாவது சகோதரர் ஸ்ரீனிவாசன் நான்காவது ராமச்சந்திரன், ஐந்தாவது தருமராஜன் ஆகியோர் ஆவர். பூர்வாசிரமத்தில் நம் சுவாமிஜியிக்கு நடராஜன் என்பது திருநாமம். இளமையிலேயே பெயருக்கு ஏற்றாற்போல் சிவபக்தி தினந்தோறும் காலையில் சிவன் கோவிலுக்கு ஒரு கூடை புஷ்பம் பறித்துக்கொண்டு போய்க் கொடுப்பார். அன்போடு புதுமலர் தூவி ஆர்வத்துடன் இறைவனைப் போற்றுதலில் மிக விருப்பம் உள்ளவர். பெயருக்கு ஏற்றாற் போல நடராஜ பக்தி அதிகம்.

சுறுசுறுப்பும் கூர்ந்த அறிவுமுள்ள சிறுவனாய் இருந்தார். மஹா துடுக்குதான். ஆனால் துறவுக்குரிய மனப் பக்குவம் அப்போதே இருந்தது. பிச்சை இட அவர் கைவைத்தால் மூட்டை காலியாய்விடும். நம்மிடம் இவ்வளவு இருக்கும் போது ஏழைகளுக்கு இவ்வளவு குறைவாய்க் கொடுத்தால் எப்படிப்போதும்? என்று அரிசியை அள்ளிக் கொடுக்கும் குணம். சிறுவனைத்தருமம் செய்யும்படிச் சொல்லப் பெரியோர் களுக்கு சற்று பயம்தான்.

தமது வயலில் மாடுகள் பயிர் மேய்வதைப் பார்த்தாலும் பார்க்காதது போல் மறுபுறம் வேறு எதையோ பார்த்துக் கொண்டு வரும் பாவனையில் வந்து விடுவார். அவைகள் பசியாய் சாப்பிடும் பொழுது தடுக்க முடியாத இளகிய மனம். இதை ஒரு சமயம் கவனித்த தாயார், இப்படியும் ஒரு ஏமாந்த பிள்ளை இருக்குமா? இது என்ன மனோபாவம் என்று புரிந்து கொள்ள முடியாமல் தவித்தார்கள். எவ்வுயிரும் தன் உயிர்போல் நேசிக்கும் இனிய பாவம் அல்லவா அது!

எப்போதும் இவருடன் நான்கு, ஐந்து தோழர்கள் இருப்பார்கள். தன்னிடம் உள்ளதைப்பிறருடன் எப்போதும் பகிர்ந்து கொள்ள முடியும் என்ற நிச்சய மனோபாவம் உடையவர். தோழர்களுடன் சேர்ந்து தென்னைமரத்தில்

இருக்கும் தேங்காய்களைப் பறித்து, அதன் உள்ளே வெல்லம் வைத்து சுட்டுச் சாப்பிடுவார்கள். இது தன் வீட்டுப் புறக் கடையில் வைக்கோல் போரில் யாரும் பார்க்கா வண்ணம் நடக்கும் லீலை. சிலசமயம் மரத்தில் தேங்காய்களைக் காணோமே என்று தாயார் கேட்டால் ஒருதுண்டு சுட்ட தேங்காய் தந்து நல்ல சுவையாக இருக்கின்றது இல்லையா? என்று தாயின் கோபத்தைச் சமாதனம் செய்து விடுவார்.

தென்னை மரம் ஏறுவதில் மரம் ஏறுவதையே தொழிலாகக் கொண்டுள்ளவர்கள் கூட தோற்றுவிடுவார்கள் அவ்வளவு லாவகமாய்க் காலில் கயிறு கூட கட்டிக் கொள்ளாமல் ஏறிவிடுவார். எங்கு சென்றாலும் தன் தோழர்களுக்கு உதவியாக இருப்பார். மாமரங்களில் ஏறி மாங்காய்களைப் பறித்துத் தோழர்களுக்கு கொடுப்பார். கண்ணபிரான் ஆயர்பாடியில் விளையாடினதைப் போலிருக்கின்றது, இது மஹாத்மாக்களின் பால்யலீலைகள் போதும்!

அறப்பிணியாற்றப் பிறந்த மகனின் இயல் அறியாத தந்தை இவன் எனக்கு என்ன செய்யப் போகின்றான்? இவனால் இக்குடும்பத்திற்குப் பயனில்லை என்று சிற்சில சமயங்களில் வருத்தமுறுவார். மகனின் ஜாதகத்தைப் பார்த்துத்தான் அவருக்கு இவ்வித மனசஞ்சலம் உண்டாயிற்று ஆனால் பிள்ளை அடையப்போகும் பெரும் பேற்றைப் பார்க்க நீண்டநாட்கள் அவர் உலகில் இல்லை.

நம் சுவாமிஜியின் ஒன்பதாவது வயது ஆரம்பத்திலேயே தந்தை, தரணியை நீத்தார். சொல்லறியா துயரத்தில் மூழ்கிவிட்டார் தாயார். தந்தையைப் பிரிந்து தாய் கதறும் கோலத்தைப் பார்க்க முடியவில்லை.

தாயை சமாதானம் செய்ய முடியவில்லை. வீட்டிற்கு வெளியில் வந்து அங்கு கோலி விளையாடிக் கொண்டிருந்த

பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருந்தார். இதைச் சுற்றத்தார் ஒருவர் கவனித்து, என்ன, இச்சமயத்தில் இவ்விதம் விளையாடுகின்றாய்? என்று கேட்டார் அதற்கு சுவாமிஜி, ''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ இம்மாநிலத்தே'' என்ற ஔவையார் பாடலைக் கூறினாராம். அச்சிறிய வயதிலேயே ஞானம் பேசிற்று. இவர் கூறிய இவ்வார்த்தை ''விளையும் பயிர் முளையில் தெரியும்'' என்பது போலிருந்தது.

தந்தை இறந்ததைக் கண்டு கலங்காத பிள்ளையைப் பார்த்து என்ன அழுத்தமான பிள்ளை? அழவில்லையே என்று ஆச்சரியமும், ஆத்திரமும் கொண்டார்கள் சிலர். ஞானத்தினால் உறுதிபட்ட உள்ளம் என்பதை உணராதவர்கள் புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் கருத்தில் கொள்ளாத குழந்தை உள்ளம் கவலையற்றிருந்தது.

அதன் பின்பு குடும்பம் நடத்துவது மிகமிகச் சிரமமாய்விட்டது. சரியாய் உதவி செய்யும் சுற்றம் இல்லை. போதிய பணவசதியும் இல்லை. கலங்கி நின்ற குடும்பப் பொறுப்பை நம் சுவாமிஜியின் அத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இளம் வயதிலேயே கணவனை இழந்த பால்ய விதவை இக் குழந்தைகளையே தன் குழந்தைகளாய்ப் பாவித்து வந்தார்கள்.

அவர்கள் விவசாய வேலைகளைக் கவனிக்கும்போது சுவாமிஜியையும் தன்னுடன் வைத்துக் கொண்டு வேலைகளைக் கவனித்து வந்தார்கள். இவர்கள் எந்த வேலையையும் முன் யோசனையுடன் திட்டமிட்டுத் திறமையோடு செய்யும் திறமையுள்ளவர்கள். பதினான்கு வருடம் உமாமகேஸ்வரி பூஜை செய்து பதினாறாம் வருடம் பதினாறு பேர்களுக்குத் துணி, பாத்திரம் விசிறி, குடை, செருப்பு முதலியவற்றைத் தானமாகக் கொடுத்தார்கள். ஏகாதசி விரதம், சூர்ய நாராயணவிரதம், ரிசிபஞ்சமி இன்னும் அனேக விரதங்களை

அனுஷ்டித்து வந்தார்கள். இவ்விதம் விரத காரியங்களில் எல்லாம் சுவாமிஜியின் உதவிக்கு வைத்துக் கொண்டு செய்வார்கள் கிராமத்தில் உள்ளவர்கள் இந்த அம்மையாரிடம் சுபகாரியங்கள் செய்யும் பொழுது விபூதி வாங்கிக் கொண்டு போவார்கள். அக்கிராமத்தில் உள்ளவர்கள் இந்த அம்மை யாரிடம் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். திட்டமிட்டு வேலை செய்யும் திறமையும், விரதங்களின் மகிமையையும் சுவாமிஜி இவர்களிடமிருந்து தெரிந்து கொண்டார்கள்.

பள்ளிப்பருவம்

பிள்ளைகளின் படிப்பை நிறுத்தி ஏதாவது தொழிலில் விடுமாறு சிலர் யோசனை கூறினார்கள். ஆனால் தாயாருக்கு இஷ்டம் இல்லை. எப்படியோ கஷ்டப்பட்டுப் படிக்க வைக்கும் முயற்சியை ஏற்றுக் கொண்டு பள்ளிக்கு அனுப்பி வந்தார்கள். நம் சுவாமிஜி பள்ளிக்குச் சென்று வருவதோடு ..ரி, திரும்பப் புத்தகத்தைப் தொடுவதில்லை. ஆனால் வருஷம் தவறாமல் மேல் வகுப்பு போய்விடுவார். மிகுந்த ஞாபசக்தி உள்ளவர்.

இந்துக்கள் கல்லை இறைவனாகப்பாவித்து வணங்கும் விக்கிரக ஆராதனை தவறு என்று வாதிடுபவர்களில் ஒரு மாணவன் நம் சுவாமிஜியிடம் நீங்கள் ஏன் கல்லைக் கும்பிடுகின்றீர்கள்? என்று கேட்டான். அதற்கு சுவாமிஜி நீங்கள் நாட்டை வணங்க, நாட்டின் கொடியை வணங்குகிறீர்கள் பெரிய மனிதர்களை வணங்க அவர்களின் படத்தைப் பூஜிக்கின்றீர்கள், அவர்கள் உருவம் போட்ட டாலரைக் கழுத்தில் அணிந்து கொள்கின்றீர்கள் அல்லவா, அது போன்ற நாங்கள் கல்லைக் பூஜிக்க வில்லை அது கல் என்று எங்களுக்குத் தெரியும் ஆனால் அதில் உயர்ந்த ஒன்றை, கடவுளைப் பார்க்கின்றோம். ஆகையால் அதைப் பூஜிக்கின்றோம் என்றார் இன்றும் சுவாமிஜி தன் உபன்யாசங்களில் ''மைல்கல்லை'' யாரும் பூஜிப்பது

இல்லை. அது மைல்கல் என்று தெரியும் ஆனாலும் கல்லை அவன் பூஜிக்கின்றான், அதில் கல்லுக்கு மேல் ஒன்றைப் பார்க்கின்றான். சிற்பி கல்லில் சிற்பத்தைச் செதுக்குகின்றான் அதில் கண்களைத் திறந்த பின்பு அவனே அக்கல்லில் கடவுளைப்பார்த்துப் பூஜிக்கின்றான். செதுக்கும் திறமையைக் கடவுள் என்று பூஜிக்கின்றான். இந்த உருவம் பகவானேயன்றி வேறல்ல, ''பகவான் சர்வ வியாபி ஆகாயம் அவர், நீர் அவர், நெருப்பு அவர், பூமியும் அவர் என்று சர்வத்திலும் நாம் பகவானைப் பார்க்கின்றோம்'' என்று கூறுவார்.

இவர்களின் யுத்திகளுக்குத் தகுதியான பதில் யுக்தி கூறி மேற்கொண்டு பேசாமல் இருக்கச் செய்து விடுவார். இவ்வளவு மாணவர்களில் இவர் ஒருவரே இவ்விதம் எதிர்ப்புகளைத் திறமையோடு பதில் கூறிச் சமாளித்து வந்தார். அப்போதெல்லாம் சுவாமிஜிக்கு இவர்கள் கூறுவது எவ்வளவு உண்மை? இவற்றிற்கு எல்லாம் சரியான விடை என்ன? எங்கு எவ்விதம் இவற்றைக் கற்பது? இந்த உண்மைகளை எப்படி அறிவது? என்ற எண்ணம் எழுந்தது. இவர்கள் கூறும் யுக்திக்குத்தான் ஏதோ பதில் யுக்தியின் மூலம் பேசாமல் இருக்கச் செய்தாலும், இவர் மனதில் இவர் கூறிய பதில்கள் திருப்தியானதாக இல்லை. ஆதலால் இதற்குத் தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இதனால் சக மாணவர்களுக்கு சுவாமிஜியிடம் அன்பும் மரியாதையும் ஏற்பட்டது ராமாசமி ஐயர் ''பிசிக்ஸ்'' உபாத்தியாயர். சிறந்த அறிவாளி. இவரிடம் எல்லோருக்கும் பயம். இவர் யாரிடமும் பேசமாட்டார். ஓர் நாள் சுவாமிஜியை அழைத்து உனக்கு நல்ல எதிர்காலம் உள்ளது என்று கூறினார். இவர் செயல்களைக் கவனித்து அவர் அன்றே இவரது மேன்மையை ஊகித்திருப்பார் போலும். இவருடைய பள்ளியில் ஆங்கிலம் முக்கிய பாடமாகவும் இரண்டாவதாகத் தமிழ் அல்லது

சமஸ்கிருதம் படிக்கவேண்டும் என்றும் ஓர் புதிய மாற்றம் ஏற்படுத்தினார்கள். அப்போது சுவாமிஜிக்கு எதைக் கற்றுக் கொள்வது தமிழா? சமஸ்கிருதமா? என்ற சந்தேகம் ஏற்பட்டது. இவருக்குத் தந்தை இல்லாததினால் சரியானது எது என்று யோசனை கூறுபவர்கள் இல்லை. தாயார் சமஸ்கிருதம் கற்றுக்கொள்ளும்படிக் கூறினார். அப்போது தமிழ் நமக்கு ஏற்கனவே தெரிந்திருக்கின்றது அதனால் மீண்டும் தமிழ் கற்றுக் கொள்வதைவிட, சமஸ்கிருதம் கற்றுக் கொண்டால் ஒரு புதிய பாஷை கற்றுக் கொண்டதாகும் என்று சமஸ்கிருதத்தை இரண்டாவது மொழியாகவும் ஆங்கிலத்தை முதல் மொழியாகவும் கற்றார்.

அவருக்குச் சிறந்த முறையில் சமஸ்கிருதம் கற்பித்த S.V பாலகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களின் கற்பிக்கும் முறையையும் திறமையையும் இன்றும் சுவாமிஜி பாராட்டு கின்றார். சமஸ்கிருதத்தில் ஆர்வம் உண்டாவதற்கு அவரும் ஓர் காரணம் ஆவார்.

விளையாட்டிலேயே மூழ்கிவிடும் பிள்ளையை ஆங்கிலம் கற்றுக்கொள்வதில் விருப்பம் இல்லையே என்று கோபிக்கும் தாயார்முன் ஆங்கிலப் புத்தகத்தை அம்மா புரிந்து கொள்ளாதபடி வினோத வார்த்தைகளாலும், உச்சரிப்பாலும் கவனமாய்ப் படிப்பதைப் போல் அம்மாவின் கவனத்தையே மாற்றிவிடுவார்.

வயது ஆக, ஆக இவருக்கு வேதாந்த விஷயங்களைப் பற்றி ஆராய்ந்து தெரிந்து கொள்ள மிகுந்த ஆவல ஏற்பட்டது அதனால் அப்போதே உப நிஷதங்கள் முதல், பல அரிய கருத்துள்ள புத்தகங்களை வாங்கிப் படித்து வந்தார். பெரும் செல்வமாக நினைத்து வேதாந்த புத்தகங்களைச் சேர்த்து வைத்தார். உருவத்தில் சிறியவராக இருந்தும், அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்து விளங்கினார்! பெரிய

மஹாத்மாவாக திகழப் போகும் இவர் இயல்பு இவ்விதம் இருப்பது இயற்கை தானே!

''சில தீரச் செயல்கள்''

ஒரு சமயம் நம் சுவாமிஜியின் கலங்காத மனோ பாவத்தையும், சகிப்புத் தன்மையையும் குறிக்கும் நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்தது. காலை பள்ளி ஆரம்பிக்கும் நேரம், எல்லா பிள்ளைகளும் அவரவர் இடத்தில் அமர்ந்திருக்கின்றார்கள். அப்போது வேடிக்கையாய் ஆசிரியர் அமரும் இடத்தில் நின்று கொண்டிருந்தார் சுவாமிஜி. வகுப்பில் உள்ள பிள்ளைகள் எல்லாம் இவருடைய குறும்புச் செய்கையில் கலந்து, ஆனந்தமாய் ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள். உபாத்தியாயர் இவர்களது அட்ட காசத்தையும், அதற்குக் காரணமான நம் சுவாமிஜியையும் பார்த்து மிகவும் கோபம் கொண்டார். ''உம், கையை நீட்டு'' என்று தன் கோபம் தீரப் பிரம்பால் அடித்து விட்டார். கை ரத்தம் கட்டிப் பெரியதாய் வீங்கி விட்டது. ஆனால் நம் சுவாமிகளின் கண்ணில் ஒரு துளி கண்ணீர் கூட வரவில்லை. அவ்வளவு சகிப்புத் தன்மையும் மனோபலமும் இருந்தது. கண்கலங்காமையும், தைரியமும் சுவாமிஜியின் பிறவிக் குணமாகும்.

பக்கத்து வீட்டுக்காரர் நம் சுவாமிஜியின் மீது மிகவும் பிரியம் உள்ளவர். இவருடைய வீங்கிய கையைப் பார்த்து மிகவும் கோபம் கொண்டார். ''தந்தை இல்லாப்பிள்ளை யாரும் கேட்பவர்கள் இல்லை என்று இப்படி அடித்தானா? ஆகட்டும் நான் பார்க்கின்றேன்'' என்று சத்தமிட்டார். ''என் குற்றத்திற்காக அவர் அப்படி அடித்தார். தப்பு செய்தால் தண்டனை அனுபவிக்கத் தானே வேண்டும். தாங்கள் கோபிக்க வேண்டாம்!'' என்று அவரைச் சமாதானம் செய்தார் சுவாமிஜி.

''ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு''

என்ற வள்ளுவர் வாக்கின்படி வாழ்க்கையை அமைத்துக் கொண்ட இளவல்பயம் என்பதே அறியாதவர், எதற்கும் அஞ்சாத நெஞ்சமுடையவர், மகா தைரியசாலி. ஒரு சமயம் பக்கத்து வீட்டுக்காரர் அலறிக் கொண்டிருந்தார் நம் சுவாமிகளின் பெயரைச் சொல்லி ''நடராஜா பாம்பு! பாம்பு! வீட்டிற்குள் வந்து விட்டது'' என்று அவருக்கோ அவருடைய பிள்ளைக்கோ, அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கோ பாம்பை அடிக்கத் தைரியம் இல்லை. சுவாமிஜி உடனே அங்கு சென்று பார்க்கும் போது, பாம்பு தலையை வளையினுள் விட்டுக் கொண்டு வாலை ஆட்டிக் கொண்டிருந்தது. வால் இருக்கும் இடத்தில் பாம்பு தன் தலையை வைத்துக் கொண்டிருக்கும். வாலைத் தொட்டால் தன்னைக் கடித்துவிடும் என்ன செய்வது என்று சற்றுயோசித்து சரேலென்று வாலைப் பிடித்து வெளியில் இழுத்து ஓங்கி பூமியின் மீது அடித்துப் போட்டார். அத்தனை பெரியவர்களும் எவ்வளவு தைரியம் இச் சிறியவனுக்கு! என்று பிரமித்து நின்றார்கள்.

ஆற்றிலும், கிணற்றிலும் நீச்சல் அடிப்பதில் வெகு சமர்த்தர் அவர் பொன்மேனியைப் பார்க்காத கிணறு இல்லை. மஞ்சக்குடியிலிருந்து நீச்சல் அடிப்பதற்காகவே கும்பகோணம் போவார் அங்கு காவிரி அகன்று, ஆழமாயிருப்பதால் நீச்சலுக்கு சௌகரியமாக இருக்குமென்று, ஒரு சமயம் கங்கையில் நீந்தி உயிர் பிழைத்ததே ஆச்சரியமாய் விட்டது. தன் உயிருக்கும் பயப்படதாவர்.

நண்பர்களுடன் பள்ளி செல்லும் வழியில் இவர்களை விட ஐந்தாறு வருடம் வயதில் பெரியவனாய், பலத்த கட்டு வாய்ந்த சரீரமுடைய ஒரு முரடன் அங்கு இருந்தான். அவன்

தினந்தோறும் இவர்களைப் பார்த்து ஏளனமாய் கேலிகள் செய்து கொண்டும், அவர்களுடைய சிற்றுண்டிகளை உண்டும் வந்தான். இவ்விதம் சில நாட்கள் நிகழந்தது. இவனை எதிர்க்க இவர்களில் யாருக்கும் பலம் இல்லை. சுவாமிஜியின் மனத்திற்கு இது பிடிக்கவில்லை. ''இவனை எதிர்த்து நிற்காவிடில் இது மேன்மேலும் வளரும். இதற்கு என்ன செய்வது?'' என்று யோசித்தார். தன்சினேகிதன் தாண்டவனிடம், ''இன்று நம்மை கேலி செய்வானாகில் நான் சும்மாவிடப்போவது இல்லை. எனக்கு என்னவானாலும் ஆகட்டும்'' என்று கூறினார்.

இவர்கள் பயந்தவர்கள் எதிர்க்க சக்தி இல்லாதவர்கள் என்ற தைரியத்தில் வழக்கம் போல் அன்றும் அம்முரடன் கேலி செய்தான். உடனே அவன் எதிர்பாராத வண்ணம் அவனை தன் பலம் கொண்ட மட்டும் ஓர் குத்து விட்டார் நம் சுவாமிஜி. அவன் உருண்டு போய் ஒரு பள்ளத்தில் வீழ்ந்து விட்டான். அதன் பிறகு எல்லோரிடமும் ''அந்த ஆளிடம் போகாதீர்கள்'' என்று கூறினானாம். இச்செயல் சுவாமிஜிக்கு ஒரு பாடமாக அமைந்தது. எங்கு, எப்போது, விட்டுக் கொடுக்க வேண்டுமோ, அப்போது விட்டு கொடுக்க வேண்டும் சூழ்நிலைக்குத் தக்கவாறு எப்போது எதிர்க்க வேண்டுமோ அப்போது எதிர்க்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டார். தன்னை ஜெயிக்கும் இயல் புள்ளவர்களுக்கு உலகத்தில் எதை ஜெயிக்க முடியாது!

படிப்பறிவில்லா ஒருவரிடம் சிலம்ப வித்தை கற்றுக் கொண்டார். அவரிடம் மிகுந்த மரியாதை காட்டுவார். இக்கலையைக் கற்றுக் கொண்ட பின் அவருக்குத் தகுந்த காணிக்கை கொடுத்து அவரைக் கௌரவித்தார் இளமையிலேயே நன்றி மறவா நற்குணமும், பணிவும் நிறைந்தி

ருந்தது படிக்காத பாமரனாக இருந்தாலும் நம் சுவாமிஜி அவரை அணுகிச் சிலம்ப வித்தையைக் கற்றுக் கொண்டார், பேதைமை இல்லாப் பெருந்தகையாளர்!

''சங்கம் நிறுவியது''

உலகில் தலை சிறந்து விளங்கப்போகும், ''ஆர்ஷவித்யா பீடம்'' என்பதை நடத்தப் போகும், திறமையின் வித்து நம் சுவாமிகள் உள்ளத்தில் உறைந்திருந்ததைக் காட்டும் ஒரு சந்தர்ப்பம் 1947 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இளமையிலேயே எதற்கும் தலைமை தாங்கி நடத்தும் அவர் ஆற்றலுக்கு எடுத்துக் காட்டாய் அமைந்தது. ''நேரு வாலிபர் சங்கம்''என்ற பெயரில் ஒரு சங்கம் ஏற்படுத்தித் தன் சினேகிதர்களுடன் அதை நடத்தினார். அதில் சுதந்திர தினம் கொண்டாட ஏற்பாடு செய்தார்கள். அதற்கு அங்குள்ள பெரியவர்கள் பழைமையில் விருப்பம் உள்ளவர்கள். அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்களுடன் ஒத்துழைக்கவும் விரும்பவில்லை. அப்படிப்பட்டவர்களின் முன்னிலையில் பெரியபந்தல் போட்டு ஜவஹர்லால் நேரு, மஹாத்மா காந்தி படங்களை வைத்து சுதந்திர தின விழாவைக் கொண்டாடினார்கள், விழாவில் பேசும் போது ''பழைமையை விடாத பெரியோர்களுக்கும் சகோதர, சகோதரிகளுக்கும் நமஸ்காரம்'' என்று ஆரம்பித்து சுதந்திர தினத்தின் நன்மைகளையும், நேரு, காந்தி போன்றோர் செய்த தொண்டுகளைப் பற்றியும் வெகு அழகாகப் பேசினார் சுவாமிஜி. அவர் உண்மையைப் பேச எப்போதும் தயங்குவது இல்லை. இங்குள்ள பெரியவர்களுக்கு இராஜகோபால் ஸ்வாமி பெருமாள் தான் நல்ல புத்தியைக் கொடுத்து இம்மாதிரியான தொண்டுகளில் ஈடுபடச் செய்ய வேண்டும் என்று பேசினார். நம் சுவாமிஜியின் தூய வாக்கும். கபடமற்ற போக்கும், உண்மை அன்பும் தாய்மார்களையும், சகோதர

சகோதரிகளையும் கவர்ந்தது. இவர்கள் சுவாமிஜியின் செயல்களுக்கு உதவியாக இருந்தார்கள்.

மெல்ல, மெல்லக் குடும்பத்தைக் கவனிக்கும் பொறுப்பு உண்டாயிற்று, தாய்க்கும், சகோதரர்களுக்கும் வேண்டிய உதவி செய்வார். வயலுக்குச் சென்று பயிர்களைக் கவனிப்பது அறுவடை சமயங்களில் மேற்பார்வை பார்ப்பது தேங்காய் களை விற்பனைக்காகத் தோட்டத்திலிருந்து பறித்துக் கொண்டு போய் விற்று, வரி கட்டுவது, குடும்பச் செலவுகள் செய்வது போன்ற காரியங்களைக் கவனத்துடனும் மிகுந்த பொறுப்புடனும் செய்வார். சில சமயம் தேங்காய்களைப் பறித்து எடுத்துக்கொண்டு வரும்போது சில வீட்டுக்காரர்கள் கேட்டால் தேங்காய்களைக் கொடுத்து விடுவார்.

கடுமையாய்த் தன்னலம் கருதாமல் உழைத்தார். தன் இளைய சகோதரன் கிராமத்தில் வயல் வேலைகளைக் கவனிக்கும் திறமை உள்ளவர் ஆனதும், நம் சுவாமிஜி சென்னை சென்று ஏதாவது உத்தியோகம் செய்து குடும்ப நிலையை உயர்த்த வேண்டும் என்று தீர்மானித்தார்.

''உத்யோகம்''

''மெய்வருத்தம் பாரார்; பசி நோக்கார்;
கண் துஞ்சார்; எவ்வெவர் தீமையும்
மேற்கொள்ளார், செவ்வி அருமையும் பாரார்,
கருமமே கண்ணாயினார்.''

வேலை தேடி, சென்னையிலிருந்த தன் அத்தை வீட்டிற்கு வந்தார். அத்தையின் கணவர் மிகவும் நல்லவர். இவரை அன்புடன் கவனித்துப் பல வழிகளில் ஊக்கமூட்டி வந்தார். இவர் எப்போதும் ஆங்கிலத்தில் பேசுவார். அக்காலத்தில் ஆங்கிலம் வீட்டில் பேசுவது மிகவும் குறைவு. அத்திம்பேர் பேசுவது சுவாமிகளை மிகவும் கவர்ந்தது. தானும் இது

போல பேச வேண்டும். ஆங்கிலம் நன்றாய்க் கற்க வேண்டும் என்று ஷேக்ஸ்பியர், கோல்ட்ஸ்மித் போன்றவர்களின் ஆங்கிலப் புத்தகங்களையும் ஆங்கிலப் பத்திரிகைகளையும் வாசித்துத் தன் ஆங்கில ஞானத்தை வளர்த்துக் கொண்டார். சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும், கற்றுக் கொண்டார்.

'தார்மீக ஹிந்து' என்னும் பத்திரிகைக்கு இவருக்கு வேலை கிடைத்தது. ஜகன்னாச்சாரியர் என்பவர் இப் பத்திரிகையை ஆங்கிலத்திலும், தமிழிலும் நடத்தி வந்தார். இவர் வேதம், சமஸ்கிருதம், ஆங்கிலம் கற்றிருந்தார் ஜகன்னா சாரியார் நாஸ்திக வாதத்திற்கு இப்பத்திரிக்கை மூலம் பதில் அளித்து கொண்டு வந்தார். இச்சந்தர்ப்பம் சுவாமிஜிக்கு தான் இளமையில் எதிர்பார்த்த யுக்தி வாதங்களுக்குப் பதில் கூறவும், உண்மையைத் தெரிந்து கொள்ளவும் உதவும், என்ற நம்பிக்கையில் இப்பத்திரிக்கை வேலையை ஏற்றுக் கொண்டார்.

இப்பத்திரிகையை நடத்துவதற்காக சங்கராச்சாரியர், அகோபில மடம் முதல் இன்னும் அநேக இடங்களுக்குச் சென்று பணம் திரட்டி பத்திரிகையை நடத்தி வந்தார். சுவாமிஜி இப்பத்திரிகைக்கு கட்டுரை எழுதுவது, எடிட் செய்வது, அச்சகத்தில் உள்ளவர்களுக்கு என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும் என்பதைக்கூறுவது, சைக்கிளில் சென்று பத்திரிகை விநியோகம் செய்வது முதல் எல்லா வேலைகளையும் தானே கவனித்து வந்தார். இதனால் இப்பத்திரிக்கை மூலம் ஜனரஞ்சகம் என்றால் என்ன என்பதைக் கற்றுக்கொண்டார்.

பத்திரிகை லாபகரமானதாக இல்லாததினால் இதை மூடிவிட்டு ஸ்ரீராஜகோபால பால கான பக்தி ஜன நாடக சபா என்பதை ஜகன்னாச்சாரியார் ஆரம்பித்தார். அதற்கு சுவாமிஜியை மேனேஜராகச் செய்தார். அதன் முதல் நாடகம் ''பக்த குசேலா'' இந்த நாடகம் வெற்றிகரமாக நிகழவில்லை

இதன் பிறகு இந்தியன் "Air Forceல்'' பைலட்டாகப் பயிற்சி பெறவேண்டும் என்று, இவருடைய நண்பர் ரங்காச்சாரியும் சுவாமிஜியும் சென்றார்கள். ஏதோ சில காரணங்களால் பைலட்டாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதன்பின (ground Training) சர்வீஸ் என்பதில் சேர்ந்தார். இதில் ஆறுமாதம் பயிற்சி பெறவேண்டும். அதில் இவருடைய நம்பர் 204309 கொடுத்தார்கள். இதில் துப்பாக்கிப் பிடிப்பது எப்படி? துப்பாக்கியால் குறிபார்த்துச் சுடுவது எப்படி? என்றும் அநேக மைல்கள் ஓடுவது, பெரிய பள்ளங்களைத் தாண்டுவது, கயிற்றைப் பிடித்துக் கொண்டு ஏறுவது போன்ற அநேக பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்தார்கள் வட இந்திய சைவ ஆகாரமும் டீயும் கொடுத்தார்கள்.

இந்தப் பயிற்சி முடிவதற்குள் தந்தையின் சிரார்த்தம் வந்து விட்டது. மாதம் தவராமல் தர்ப்பணம் செய்து வந்தார் சிரார்த்தம் செய்வதற்கு விடுமுறை அளிக்கவில்லை. கடுமையான கட்டுப்பாடுகள் இருந்தது. இந்தக்கட்டுப்பாட்டு முறைகள் இவருக்குப் பிடிக்கவில்லை சிறு வயதிலிருந்தே தன்னை யாரும் கட்டுப்பாடு செய்வதை விரும்புவது இல்லை. இந்தக் கட்டுப்படாத மனபான்மையே என்னைச் சாமி யாக்கியது என்பார், சுதந்திர புருஷனாய், மனிதப் பிறவிக்கே உரிய சுதந்திரம் தரும் ஆத்ம ஞானத்தைப் - போதிக்கப் போகின்ற வரைக் கட்டுப்பாடுகள் எவ்விதம் கட்டுப்படுத்தும்.

ஆனால் இதிலிருந்து விலகுவதும் கடினமாக இருந்தது எப்படியோ Air Marshall அன்பைச் சம்பாதித்து கொண்டு இதிலிருந்து விலகிக் கொண்டார்.

இதன்பின்பு Lens News Service ல் இரண்டு வருடம் வேலை பார்த்தார். இதில் வேலை செய்யும் போது அநேக விஷயங்களைத் தெரிந்து கொண்டார். இதன் பின்பு இந்தியாவிலுள்ள பத்திரிகைகளுக்கு (Scooping)

விஷயங்களைத் தயாரித்துக் கொடுத்து வந்தார். இதனால் இவருக்கு எல்லாப்பத்திரிகை எடிட்டர்களையும் தெரியும்.

இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வேலை பார்த்தார். அங்கு ராஜகோபாலன் என்பவர் பத்திரிகை எடிட் செய்வார். சுவாமிஜி, எடிட் செய்வதற்கு அவகாசம் இல்லாமல் வெகு திருத்தமாய் எடிட் செய்தார். தலையங்கம் கவர்ச்சிகரமாய் நன்றாக எழுதுவார். இதை ராஜகோபாலன் அவர்கள் கவனித்து பத்திரிகையில் வேலை பா௱க்கும்படிக் கூறினார். அதனால் பத்திரிக்கையாளர் பகவன்தாஸ் கோயங்கா என்பவரை சந்தித்துப் பேசினார். தற்சமயம் இருப்பவர்களை எடுத்துவிட்டு வேலை கொடுக்க முடியாததால் இன்னும் ஆறு மாதம் கழித்துக் கட்டாயம் பத்திரிக்கையில் வேலை கொடுப்பதாகக் கூறினார்.

இதனால் வேலை இல்லாமல் காத்திருக்க வேண்டிய தாயிற்று. அப்போது M.S.பாலம்மாள், என்பவர்களுடன் பரிச்சயம் ஏற்பட்டது. இவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் நின்றார்கள். தேர்தல் வேலைகளில் தனக்கு உதவி செய்யுமாறு சுவாமிஜியைக் கேட்டுக் கொண்டார்கள். சுவாமிஜி தன்னுடன் சில நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு தேர்தல் வேலைகளைச் செய்தார். அவ்வப்போது மேடை ஏறிப் பேசும் சந்தர்ப்பங்கள் வந்தது. இவ்விதம் பாலம்மாளுக்காக, ஒரு மாதம் உதவி செய்தார்கள். ஆனால் நிரந்தரமான வேலைகள் ஏதுமில்லை. அரசு சிறைக் கைதிகளின் Jail Reforms Committee என்ற ஓர் குழுவை அமைத்து சிறைகளைப் (சிறை சீர்திருத்தக் குழு) பார்வையிட்டு அறிக்கை அனுப்ப ஏற்பாடு செய்ய இருந்தது.

அதில் நம் ஸ்வாமிஜி ஸ்டெனோவாகப் பணியாற்றினார். அக்கமிட்டியில் உள்ளவர்கள் நாட்டில் உள்ள அனைத்துச் சிறைச்சாலைகளையும் நேரில் சென்று பார்வையிட்டனர். அவர்கள் நடத்துகின்ற நேர்முகப் பேட்டி முதலியவற்றை

அப்படியே குறிப்பு எடுத்து அறிக்கை தயார் செய்து கொடுத்தார் அவர்கள் ஓய்வு எடுக்கும் நேரங்களில் கைதிகளைச்சந்தித்து கைதிகள் ஏன் குற்றம் செய்தார்கள் என்பதை அவர்கள் மனம் விட்டுக் கூறுவதைக் கேட்பார். அவர்கள் சரியாகப் படிக்காததுதான் என்பதை உணர்ந்து தற்காலத்தில் ஆசிரியர்களைச் சந்திக்கும் போது நீங்கள் சரியாகப் பணியாற்றினால் கைதிகளின் கூட்டம் சிறைகளில் குறையும் என்பார். 6 மாதம் குழுவின் வேலைமுடிந்தது. மீண்டும் வேலை தேடும் படலம்.

ஓர் நாள் இவர் பேண்ட், ஷர்ட் போட்டுக் கொண்டு, டை கட்டிக் கொண்டு வெகு ஜோராக வெளியில் கிளம்பினார்; மருமான் தன்னை ரொம்ப மிடுக்காய் அலங்கரித்துக் கொண்டு வெளியில் செல்வதைப் பார்த்த அத்தை அவர்கள், ஏது? வேலை கிடைக்கா விட்டாலும் அட்டகாசத்திற்குக் குறை வில்லை என்றார்கள் வேடிக்கையாக.

எனக்கு இன்று நிச்சயம் வேலை கிடைக்கப் போகின்றது பாருங்கள் என்று சொல்லிப் புறப்பட்டார். எப்படியாவது வேலை தேடிப் பெறுவது என்ற நிச்சயத்துடன் அப்போது அரசாங்க வேலை தேடித்தரும் நிறுவனத்திற்குச் சென்று வேலை கேட்டார். (Employment exchange) அவர்கள் (Volcot Brothers) வால்காட் பிரதர்ஸில் வேலை இருக்கிறது. நீ போய் பார் என்றார்கள். இவர் அங்கு செல்வதற்கு முன்பே ஐந்து பேர்கள் இந்த வேலைக்காக அமர்ந்திருந்தார்கள். இவர்கள் அனைவரையும் சந்தித்துப் பேசிய பிறகு சுவாமிஜியின் முறை வந்தது. இவரை ''முன்பு தாங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?'' என்று கேட்டார்கள். சுவாமிஜி தான் சுருக்கெழுத்தும், டைப்பும் செய்து கொண்டிருந்ததாய்க் கூறினார். அவர்களுக்குச் சுருக்கெழுத்துதாளர் தேவை இருந்ததால் இவருக்கு அந்த வேலை கொடுத்துவிட்டார்கள்

உடனே வீட்டிற்குச் சென்று அத்தையிடம் தனக்கு வேலை கிடைத்து விட்டது என்று கூறினார். அவர்கள் நம்பவில்லை. ஆனால் இவருடைய நண்பர்களும், தெரிந்தவர்களும் இது நல்லவேலை, எதிர்காலத்தில் முன்னுக்கு வரச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்று கூறினார்கள்.

இங்கு இவருக்கு நிறைய சௌகர்யமும் சம்பளமும் கிடைத்தது. இவருடைய சுறுசுறுப்பும் திறமை, புத்தி கூர்மையும் கண்டு சக ஊழியர்கள் புகழ்வார்கள். இவருடைய தன்னலமற்ற தொண்டும் உண்மையான அன்பும், இவர் புகழை விரும்பாவிட்டாலும் புகழ் இவரைத் தேடி வந்தது.

இவர் மனம் எப்போதும் வேதாந்த தத்துவங்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது. மறைகளின் உண்மையை அறிய வேண்டும் என்ற ஆவல் தன்னுள் இருந்தது.

கீதா ஞானயக்ஞாவும் தொண்டும்

அன்பர் பணி செய்ய எனை
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்ப நிலை தானே வந்து
எய்தும் பராபரமே

-தாயுமானவர்

1952ல் வருஷம் சென்னையில் ஸ்ரீசுவாமி சின்மயானந்தரின் கீதாஞானயக்ஞா ஆரம்பமாகி இருந்தது. அப்பொழுதெல்லாம் நாற்பது நாட்கள் யக்ஞா நிகழும். இவருடைய உபன்யாசத்தைக் கேட்க அக்ஷயன் என்ற தன் அத்தை மகன் சென்று கொண்டிருந்தார். சுவாமி ஜிக்கு இவ்விஷயம் தெரியாது தன்னுடன் எப்போதும்

இருக்கும் அக்ஷயனை இரண்டு நாட்களாகக் காணவில்லை. மறுதினம் அக்ஷயனைப் பார்த்து, நீ எங்கே போயிருந்தாய்? உன்னை இரண்டு நாட்களாகக் காணவில்லையே என்று கேட்டார்.

ஸ்ரீசுவாமி சின்மயானந்தர் முண்டக உபந்நிஷத்தைப் பற்றி ஆங்கிலத்தில் பேசுகின்றார். எழும்பூரில் அதைக் கேட்க நான் சென்றிருந்தேன் என்றார். நாளைக்கு நாமும் சென்று பார்க்கலாம் என்று சுவாமிஜி யக்ஞாவிற்குச் சென்றார். அங்கு சுவாமி சின்மயானந்தா அவர்களின் பிரகாசமான முகமும், கம்பீரமான முறையில் அவர் பேசும் தோரணையும் இவருக்குப் பிடித்திருந்தது. இவர் மனதைக் கவர்ந்தது. அவர் பேச்சைக் கேட்கும் போது அவர் கூறுவது யாவும் தனக்குத் தெரிந்தது போலிருந்தது. பிறகு முண்டக உபநிஷத் புத்தகம் வாங்கிப் படித்தார்.

இவ்வளவு காலம் எந்தப் பேருண்மையதைத் தெரிந்து கொள்ள வேண்டும் இதற்கு என்ன வழி? எப்படி அடைவது? என்று தெரியாமல் தன் உள்ளத்தில் எந்தப் பேருணர்வு புகைந்து கொண்டிருந்ததோ, அந்த உணர்விற்கு உயர் அளித்தது ஸ்ரீசுவாமி சன்மயானந்தர் அவர்களின் உபன்யாசம், பஞ்சப் பொறியில் பட்ட தீயைப்போல் அவர் உள்ளத்தில் ஞானம் பற்றிக் கொண்டது. இவ்வளவு அழகாய் உண்மையைப் பற்றிப் சொல்லும் ஸ்ரீசுவாமி சின்மயானந்தர் அவர்களின் கருத்தை உலகெல்லாம் உணர வேண்டும், உய்யவேண்டும், எல்லோரும் ஆனந்தம் அனுபவிக்க வேண்டும். இவர் கூறுவதில் ஏதோ உண்மை இருக்க வேண்டும். ஆதலால் இதற்கு நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார். இதன் பின்பு இவா வாழ்க்கை முழுவதும் மாற்றம் அடைந்து விட்டது.

அப்போதெல்லாம் சுவாமி ஸ்ரீசின்மயான்தர் யக்ஞா முடிந்தபின் அன்னதானம் செய்வது வழக்கம் பிச்சைக்காரர்களும், சாதுக்களும் பெருங்கூட்டமாய்

சேர்ந்திருந்தார்கள். அன்னதானம் ஆரம்பமாயிற்று கூட்டம் கட்டுப்படுத்த முடியவில்லை ஒழுங்கின்றிச் சாப்பிட்டு மடியில் கட்டிக் கொள்ளும் பிச்சைக்காரக் கூட்டத்தைக்கட்டுப்படுத்த முடியாமல் திணறிக் கொண்டிருந்தார்கள். பரிமாறுபவர்கள். இதைப் பார்த்த நம் சுவாமிஜி தானே முன் சென்று, அக்கூட்டத்தாரை ஒழுங்காய் அமரச் செய்து சப்தம் இல்லாமல் சுறுசுறுப்பாய் மிகுந்த திறமையுடன், அன்னதான விழாவைச் சிறப்பாய்ச் செய்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீசின்மயான்தா அவர்கள் மிகுந்த ஆனந்தத்துடன் இவரைப் புகழ்ந்தார்.

ஸ்ரீசுவாமி சின்மயானந்தர் தான் செய்து கொண்டிருக்கும் உபயன்யாசத்தை புத்தக வடிவில் செய்வதற்காக தினந் தோறும் ஒரு டைப்பிஸ்டு மூலம் டைப் செய்து வந்தார் வழக்கமாய் டைப் செய்து கொண்டிருந்தவர் வேறு வேலையாய்ச் சென்று விட்டார். அப்போது ஸ்ரீசின்மயானந்த சுவாமி இங்கு யாருக்காவது டைப் செய்ய வருமா என்று கேட்டார். சுவாமிஜி உடனே சொல்லுங்கள், செய்கின்றேன் என்றார். ஸ்ரீசுவாமிசின்மயா அவர்கள் விஷயத்தைச் சொல்லி முடிப்பதற்குள் இவர் டைப் செய்துவிட்டு அடுத்தது என்ன வென்று காத்துக்கொண்டிருப்பார். இவருடைய சுறுசுறுப்பும் கூர்ந்த அறிவும் கண்டு ஸ்ரீசுவாமி சின்மயானந்தா அவர்கள் பிரமித்தார்.

யக்ஞா முடிவு நாளன்று ஓர் புத்தகத்தை யக்ஞ பிரசாதமாக யக்ஞத்தில் கலந்து கொண்டவர்களுக்கு கொடுப்பார் ஸ்ரீசின்மயானந்தர். இந்த யக்ஞ பிரசாத புத்தகம் ப்ரூப் பார்க்க வேண்டி இருந்தது. அப்போது இங்கு யாருக்காவது ப்ரூப் பார்க்கத் தெரியுமா? என்று கேட்டார் ஸ்ரீசின்மயானந்தர்.

சுவாமிஜி எனக்குத் தெரியும் என்று கூறினார். சுவாமி சின்மயானந்தர் சந்தோஷப்பட்டு, உனக்கு என்ன தெரியாது

என்று சொல் பார்க்கலாம், என்று கூறி ஆனந்தப்பட்டார். இவ்விதம் பெயர், ஊர் சொல்லாமலேயே திறமையோடு குறிப்பறிந்து வேலைகளைச் செய்வார். இவருக்குச் செய்யும் தொண்டு தன் தந்தைக்கு செய்வது போல் உணர்ந்தார். இவர் மேல் கொண்ட அன்பினால் எதையும் வேண்டாது காரியங்கள் செய்து வந்தார்.

இதன் பின்பு அடுத்த வருடம் தைத்ரிய உபநிஷத் யக்ஞா செய்ய சென்னை வரப்போவதாக கூறினார், ஸ்ரீசுவாமி சின்மயானந்தர். தைத்ரிய உபநிஷத் யக்ஞா ஆரம்பிப் பதற்குள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வேத பாடசாலை சென்று தைத்ரிய உபநிஷத் கற்றுக் கொண்டார் நம் சுவாமிஜி.

அடுத்த ஆண்டு தைத்ரிய உபநிஷத் யக்ஞாவை சின்மயானந்தர் நிகழ்த்தினார். அப்போது யக்ஞா ஆரம்பமாவதற்கு முன்பு தைத்ரிய உபநிஷத்தைப் புது முறையில் கம்பீரமான குரலில் அழகாய்ப் பிழையின்றி கூறி அனேக மக்களைக் கவர்ந்தார் நம் சுவாமிஜி. இது யக்ஞாவிற்கே தனிக்கவர்ச்சி கொடுத்தது.

ஒரு நாள் இவர் நண்பர்களில் இருவர் ஸ்ரீசின்மயானந்தா அவர்களிடம் மந்திர உபதேசம் எடுத்துக் கொள்ளப் போகின்றோம் என்று புறப்பட்டார்கள். அவர்களுடன் நம் சுவாமிஜியும் சென்றார்.

இவரைப் பார்த்தவுடன் ஓ! நீயும் வந்து விட்டாயா என்று ஸ்ரீசுவாமி சின்மயானந்தர் ஆனந்தப்பட்டார். மந்திர உபதேசம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் இருந்தும் திருவருள் கூட்டி வைத்தது. நண்பர் களுடன் இவரும்கும் உபதேசம் செய்து வைத்தார் ஸ்ரீசுவாமி சின்மயானந்தர்.

1955ம் ஆண்டு ''சின்மயாமிஷன்'' செக்கரெட்டரியாகப் பணி ஏற்றார். அப்போது பாலவிஹார் ஸ்டடி குரூப் முதலியவைகளைத் தாமே நடத்தி வந்தார், அப்போதே பிள்ளைகள் குருஜி, குருஜி என்று அழைப்பார்கள் கல்லூரி ஆங்கிலப் போதகரான P.S சுப்பிரணி ஐயர் சமஸ்கிருத வகுப்பு நடத்தி வந்தார். அவரிடம் நம் சுவாமிஜி சமஸ்கிரதமும், பகவத்கீதை சந்தி பிரித்து உச்சரிப்பு செய்யவும் கற்றுக் கொண்டார். இதை எல்லோருக்கும் மனதிற்கும், செவிக்கும் இனிமை தரும் வகையில் கற்றுக் கொடுத்தார். இன்றும் கீதாம்ருத வர்ஷிணீம் என்று வாக்கினால் நாம் உச்சரிக்கும் போது, நம் உள்ளம் அம்ருதமாகும் விதத்தில் இந்த உச்சரிப்பும் அமைந்து எல்லோராலும் மிகவும் போற்றப்பட்டு வருகின்றது.

உலகியல் இன்பங்களில் நாட்டம் இல்லா மனம் பிரம்மச்சரியம், உயர்பண்பு, எக்காரியமும் சோர்வின்றி செய்யும் திறம், உற்சாகம், ஊக்கம், தன்னலமற்ற தொண்டு ஆகிய இவர் செயல்கள் பிராகாசிப்பதை கேட்கவும் வேண்டுமா? யாரிடமும் அதிகம் பேசமாட்டார். கருமமே கண்.

விசாலமனப்பான்மை உடையவர். இவருடன் இருந்த சக தொண்டர்கள் சிலருக்கு, இவருக்குக் கிடைக்கும் நற்பெயரை யும் புகழையும் பார்த்து சற்று மனத்தாங்கல் ஏற்படும். ஆனால் அவர்களையும் தன் தோழர்களாக்கிக் கொண்டு, தனக்குப் புகழ் வேண்டாம். எல்லாப்பெயரும் புகழும் நம் குரு நாதருக்கே என்று தொண்டு செய்து வந்தார்.

ஸ்ரீசுவாமி சின்மயானந்தரின் கீதா ஞானயக்ஞா எங்கெல்லாம் நிகழவேண்டுமோ அங்கு தான் முன்பே சென்று, போஸ்டர்கள் தயார் செய்து, சாவணீர் தயாரித்து. யானை மேல் ஸ்ரீசின்மயானந்தர் படம் வைத்து ஊர்வலம் வருவது, துணிகளில் விளம்பத்தை வரைந்து கட்டுவது, இன்னும் அனேக விதங் களில் யக்ஞாவைப்பற்றி மக்களுக்கு அறிமுகப் படுத்துவார். சோர்வின்றி இரவு பகல், தன் நலம் பார்க்காமல் வேலை செய்வார். குருநாதர் புகழ் ஓங்க வேண்டும் என்று.

திருமணமுயற்சி

சுவாமிஜி சம்பாதிக்க ஆரம்பித்து விட்டதனால் தாயாரையும், சகோதரர்களையும் சென்னைக்கு அழைத்துக் கொண்டார். கடைசிச் சகோதரர் உயர்நிலைப் பள்ளியில் பயின்று கொண்டிருந்தார். மற்ற இரு சகோதரர்களுக்கும் வேலை இல்லை. ஆகையால் குடும்பப் பொறுப்பை தானே ஏற்று நடத்தி வந்தார்.

வயது வந்த பிள்ளை, குடும்பத்திற்கு இவர் தான் பெரியவர். நல்ல வேலை கிடைத்துவிட்டது நன்கு சம்பாதிக்கின்றார். வீட்டில் விரதங்கள் இருக்கவும் பூஜைகள் செய்யவும் யாரும் இல்லை. ஆகையால் திருமணம் செய்து விடவேண்டும். இன்னும் வயது ஆனால் நல்லதல்ல என்று தீர்மானித்தார்.

ஆனால் சுவாமிஜியின் விருப்பம் வேறு விதமாக இருந்தது. ஞானம் பெறும் பாதையில் வாழ்வைக் கழிக்க வேண்டும் என்று தீர்மானித்தார். ஆனால் தாயாருக்கு இவ்விஷயம் தெரியாது. திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தி வந்தார். ஒரு நாள் தாயார் தனக்கு விருப்பமுள்ள ஒரு பெண்ணைப் பார்த்துவிட்டு வந்து, நம் சுவாமிஜியிடம் தான் பார்த்துவிட்டு வந்த பெண்ணைப் பற்றிய விபரங்களைக் கூறி

அப்பெண்ணைச் சென்று பார்த்துவிட்டு வருமாறு சுவாமி ஜியிடம் கூறினார்கள் தாயார். எனக்கு விருப்பம் இல்லாத போது, நான் ஏன் சென்று பெண் பார்க்க வேண்டும் என்றார் ஆனால் தாயார் விடவில்லை. நீ பெண்ணைப் பார்த்து விட்டு வா. பிடிக்கவில்லை என்றால் சொல் என்றார்கள். ஏன் இவ்வாறு தாயார் கூறினார்கள் என்றால் பெண் பார்த்தால் இவர் மனம் மாறிவிடும் என்பது அன்னையின் நோக்கம்.

ஆனால் சுவாமிஜிக்குத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் இல்லை. எனக்கு விருப்பம் இல்லாதபோது பெண்ணைப் பார்ப்பது நல்லதல்ல என்று கூறி விட்டார். சுவாமிஜி அன்று திருமணம் என்ற கட்டில் கட்டுப்படாததால் தான் இன்று தன்னைத் தேடி வரும் மக்கள் மனதிலுள்ள கட்டுக்களை தகர்த்தெறிய முடிகின்றது.

எப்படி இருந்தாலும் இந்த உயரிய ஆத்மீக, உணர்வைப்பெற, ஞானத்தைப் பெற நாம் இவர்கள் அனைவரையும் பிரிய வேண்டும். அதிலும் தாய் மனம் வேதனைப்படும் அல்லவா? அவ்வித அதிர்ச்சியைத் தரக்கூடாது என்பதற்காக மெல்ல மெல்லத் தன், தாயை விட்டு அடிக்கடி பிரிந்திருக்க ஆரம்பித்தார். மேலும் ஞான வளர்ச்சிக்காகவே தன்னை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டார்.

காலை ஐந்து மணிக்கே எழுந்து வேத சபாவிற்கு சென்று விடுவார். இதன் பின்பு வேலைக்குச் செல்வது. மாலையில் சுவாமி சின்மயானந்தா மிஷன் காரியங்களைக் கவனிப்பார். சத்சங்கங்கள் நடத்தி வந்தார் பல இடங்களில் சென்னை வெங்கடேஸ்வரா அச்சகத்தில் அச்சாகி வந்த ''தியாகி'' என்ற மாதப் பத்திரிகை சுவாமி சின்மயானந்தரால் நடத்தப்பட்டது. இது மாதாமாதம் சரியான காலத்தில் வெளிவரவில்லை. அதனால் அப்பத்திரிகையின் பொறுப்பும் நம் சுவாமிஜிக்கு ஏற்பட்டது. இதனால் இன்னும் ஓய்வு இல்லாமல் போய்விட்டது. காலை ஐந்து மணியிலிருந்து இரவு பதினோரு மணிவரை வேலை

இருக்கும். பிள்ளை வீட்டிற்கு நேரத்தில் வந்து சாப்பிட வில்லையே என்று அம்மா கவலைப்படுவார்கள். அப்போது அம்மாவைத் தனக்காக விழித்திருக்க வேண்டாம் என்று கூறி, தனக்குரிய உணவை வெளி வராந்தாவில் மூடி வைத்து விடுங்கள். நான் சாப்பிட்டுக் கொள்கிறேன் என்று கூறி அவ்விதம் அந்த உணவை உண்டபின் அங்குள்ள கட்டிலி லேயே உறங்கி விடுவார். இவ்விதம் தாயுடன் அதிகம் பழகும் அவகாசத்தைக் குறைத்துக் கொண்டார் நம் சுவாமிஜி.

ஸ்ரீசின்மயானந்தர் பகவத்கீதா புத்தகம் ஆங்கிலத்தில் வெளியிடுவதற்காக டைப் செய்ய நம் சுவாமிஜியைத் தன்னுடன் உத்திரகாசிக்கு அழைத்துச் சென்றார் 1956ல். அப்போது சுவாமி தபோவன் மஹராஜ் அங்கு இருந்தார். இரண்டு மாதங்கள் அங்கு இருந்து பகவத்கீதா வெளியிடுவதற்கு வேண்டிய காரியங்களைக் கவனித்து வந்தார். நம் சுவாமிஜியின் சுறுசுறுப்பு. புத்திகூர்மை, பணிவு, அன்பு முதலிய குணங்களைப் பார்த்து சுவாமி மஹராஜ் இவரை மிகவும் விரும்பினார். ஒரு சமயம் ஸ்ரீ சுவாமி சின்ம யானந்தரிடம் இந்தச் சிறுவனை விடாதே என்று கூறினார். உத்தரகாசியில் வசித்து வந்த சாதுக்களைப் பார்த்து நம் சுவாமிஜிக்குத் தானும் சாதுக்கள் போல் வாழ்க்கை நடத்த முடியும் என்று தோன்றியது.

தபோவன் மஹராஜிடம் நம் சுவாமிஜி ஊருக்குப் போக வேண்டும் என்று கூறினார். அதற்குத் தபோவன் மஹராஜ ''நீ ஏன் திரும்பி ஊருக்குப் போக வேண்டும்? இங்கேயே ஏன் தங்கக் கூடாது என்று கேட்டார். நம் சுவாமிஜி அடுத்த வருடம் வருகின்றேன் என்று கூறினார். அதே போல் 1957ம் வருடம் வேலையை விட்டுவிட்டு உத்திரகாசி சென்று படிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

இதற்குள் தான் கவனித்து வந்த குடும்பப் பொறுப்பைக் கவனித்துக் கொள்ள இரண்டு சகோதரர்கள் தயாராகி விட்டார்கள், சகோதரர் ஸ்ரீனிவாசன் என்பருக்கு ரயில்வே

யில் வேலை கிடைத்துவிட்டது. அடுத்த சகோதரர் ராமச்சந்திரன் என்பவருக்கு ராஜகோபாலாச்சாரியார் மஞ்சக்குடியில் உள்ள பள்ளியில் வேலை கொடுத்தார். தந்தை இல்லாத குழந்தைகள் என்று இவர்களுக்கும் இவர் குடும்பத்திற்கும் உதவி செய்வார் ராஜகோபாலாச்சாரியார். கடைசிச் சகோதரரும் உயர்தரக் கல்வியை முடித்துவிட்டார். அதனால் குடும்பப் பொறுப்பை மற்ற சகோதரர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று தாயாரை மஞ்சக்குடிக்கு அனுப்பி வைத்தார். இதன் பின்பு 1957ம் ஆண்டு தான் செய்து கொண்டிருந்த வேலையில் இருந்து விலகிக் கொண்டார்.

''சாதனா கேம்ப்''

கீதா ஞான யக்ஞாவின் பொழுது இடையில் ஓர் நாள், அப்பொழுதெல்லாம் ''சாதனா கேம்ப்'' என்று ஏற்பாடு செய்வார்கள். ஒருசமயம் அந்த 'கேம்ப்' திருப்பதியில் வைத்துக் கொள்வது என்று ஏற்பாடாயிற்று. அதற்கு 800 பேர்கள் வந்திருந்தார்கள். அவ்வளவு பேர்கட்கும் பஸ்வசதி, சாப்பாடு, தங்க இடவசதி எல்லாம் அங்கு உயர்ந்த வகையில் செய்தார் சுவாமிஜி. காலை நான்கு மணிக்கு அன்பர்களை ஆனந்தப்படுத்த வெங்கடேசசுப்ரபாதம் பாடினார். கம்பீரமும் இனிமையும் கலந்த மங்களகரமான மதுரகுரலில், அவர் பாடியதைக் கேட்டவர்கள் அத்தனை பேர்களும் இறைவன் திருவடியிலிருப்பது போன்ற உணர்வில் பேரானந்தத்தில் இருந்தார்கள். மீண்டும் மீண்டும் இப்படி ஒரு பாக்யம் நமக்குக் கிடைக்க வேண்டும் என்று அகமகிழ்ந்தார்கள்.

அடுத்தது ''திருவான்மியூர்'' சாதனா கேம்ப். அங்கும் அன்பர்களுக்கு எந்தக் கஷ்டமும் இல்லாமல், எல்லா வசதிகளும் ஏற்பாடு செய்திருந்தார் நம் சுவாமிஜி. அன்று வேதாந்தம் என்பது என்ன என்பது பற்றி வெகு அழகாய்ப் பேசினார், கருத்து மாறாமல் காதிற்கும் மனதிற்கும் இனிய

வகையில் பிரசங்கம் நிகழ்ந்தது. ஒவ்வொரு வார்த்தையையும் அளவாய் அழகாய் அடக்கத்துடன் பேசும் இவர் பேரியல்பைக் கண்டு எல்லோரும் பாராட்டினார்கள்.

''தியாகி பத்திரிகை ஆரம்பம்''

''அப்பியாசத்தை விட ஞானம் சிறந்தது
ஞானத்திலும் தியானம் மேலானது – தியானத்தைக்
காட்டிலும் கர்மபலத் தியாகம் உயர்ந்தது
தியானத்தினின்று விரைவில் சாந்தி வருகிறது''

பகவத்கீதை

மேற்கண்ட பகவத்கீதையின் கருத்தாய் நம் சுவாமிஜியின் வாழ்க்கையில் நடந்தது ஒரு தியாக நிகழ்ச்சி – சுவாமிஜி உத்தரகாசி அல்லது ரிஷிகேஷ் சென்று சாஸ்திரம் கற்க வேண்டும் என்பதற்காக தான் செய்த கொண்டிருந்த வேலையிலிருந்தும், மிஷன் அலுவல்களினின்றும் விலகிக் கொள்ளப் போவதாக ஸ்ரீ சுவாமி சின்மயானந்தரிடம் கூறினார்.

சென்னையிலிருந்து பெங்களூர் மாற்றப்பட்ட தியாகி பத்திரிகை வேலைகளைக் கவனிப்பதற்காக ஸ்ரீ சுவாமி சின்மயானந்தர் பெங்களூர் செல்லுமாறு சுவாமிஜிக்குக் கூறினார் ஸ்ரீ சுவாமி சின்மயானந்தர் கூறியபடி தியாகி பத்திரிகை நடத்துவதற்காக தான் செய்துகொண்டிருந்த வேலையைத் தியாகம் செய்து விட்டுப் பெங்களூர் சென்றார்.

1957ம் ஆண்டு பெங்களூரில் சுவாமிஜி தங்குவதற்கு ஓர் கார் வைக்கும் இடம் கொடுக்கப்பட்டது. சாப்பாடு வசதி இல்லை. இருந்தும் பத்திரிகையை சிறந்த முறையில் தயார் செய்யும் முயற்சியில் இரவு பகல் வேலை செய்தார். தானே பத்திரிகைக்கு தலையங்கம் எழுதுவது. எழுத்தாளர்கள் இல்லாத போது தானே பல புனை பெயரில் விஷயங்கள்

எழுதுவது, எடிட் செய்வது, அச்சாபீசுக்கு எடுத்துக் கொண்டு போவது முதல் எல்லா வேலைகளையும் தனிமையில் செய்தார். அங்கு கம்போஸ் செய்பவருக்கு இங்கிலீஸ் சரியாய் தெரியாது. ஆதலால் சுவாமிஜி உதவி செய்தார். பிறகு அச்சிட்ட புத்தகங்களை வெளி ஊர்களுக்கு அனுப்புவதற்காக அஞ்சலகத்திற்குக் கொண்டு போவார். சில சமயம் கால்நடையாகவும், சைக்கிளிலும் சென்று பத்திரிகைக்குரிய அலுவல்களைச் சரீர சிரமம் பாராமல் செய்தார்.

அப்போது இவர் இடவசதி இல்லாமல் சிரமப்படுவதைக் கவனித்த ஓர் அம்மையார், தன் வீட்டில் ஓர் அறை கொடுத்தார். தினம் காலையில் தானே சமையல் செய்து கொள்வார். இவர் கைப்பட்டாலே சமையல் மிகவும் ருசியாக இருக்கும். இவர் செய்யும் ரசம் தனிருசி உடையது. ஓர் அம்மையார் இதற்கு 'ராமரசம்' என்றே பெயர் வைத்து விட்டார்கள். இவர் சமையலைச் சாப்பிட நண்பர்கள் சேர்ந்து விடுவார்கள். சமைத்தவற்றை சாப்பிடக்கூட நேரம் இருப்பது இல்லை. சில வேளைகளில் சமைக்க நேரம் இருப்பது இல்லை சிற்சில நாட்களில் பட்டினியாக இருப்பார். இந்நிலையைக் கவனித்த ஒரு வயதான அம்மையார் தினந்தோறும் ''சாம்ராஜ்'' பேட்டியிலிருந்து இவருக்கு ஒரு வேளை ஆகாரம் கொண்டு வந்து கொடுப்பார்கள். அந்நன்றியை மறவாது இன்றும் நம் சுவாமிஜி பெங்களூர் சென்றால் அந்த அம்மையாரைப் பார்த்துவிட்டு வருவார்.

சாம்ராஜ் பேட்டிலுள்ள சமஸ்கிருத உயர்நிலைப் பள்ளியில் சமஸ்கிருதம் படிக்க ஆரம்பித்தார். இவர் 'தியாகி' பத்திரிகைக்கான அலுவல்களைக் கவனித்துக் கொண்டு, சமஸ்கிருத உயர்நிலைப் பள்ளிக்கும் செல்ல சில சமயம் தாமதமாகும். இவர் நிலையை உணர்ந்த உயர்நிலைப் பள்ளித் தலைவர் இவருக்கு தனிச்சலுகைகள் கொடுத்து அன்பு காட்டினார். அங்கு வீரராகவாச்சாரியார் இவருடைய சமஸ்கிருத உபாத்தியாயர். இவர் வைஷ்ணவர். இவர் மூலம் வைஷ்ணவமாகிய ''சரணாகதி தத்துவத்தை'' கற்றுக்கொள்ள

உதவியாக இருந்தது. இதனால் நம் சுவாமிஜியின் கர்மயோக உபன்யாசங்களில் இன்றும் சரணாகதி தத்துவத்தின் பிரதிபலிப்பு உள்ளது.

வீரராகவாச்சாரியார் பெரிய சமஸ்கிருத பண்டிதர். இவரிடமிருந்து ஹர்ஷநைஷதம், விக்ரம ஊர்வசியம், சாகுந்தலம், ரகுவம்சம் முதலிய காவியங்களையும் கொஞ்சம் சமஸ்கிருத இலக்கணமும் கற்றுக்கொண்டார். வீரராகவாச்சாரியார் அத்வைத சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டவர். இவர் சங்கரர் கூறுவது சரியானது தான், ஆனால் பரிபூரண சரணாகதி பாவம் இல்லாமல் அந்தக் கரண சுத்தி பெறமுடியாது என்ற உண்மையை அடிக்கடி கூறுவார். பகவான் சங்கரரும் இந்த உண்மையை வலியுறுத்துகின்றார். ஈஸ்வர அனுகிரகத்தினால் தான் அத்வைத தத்துவத்தை அறிந்து கொள்வதற்கு ஆவல் ஏற்படுகின்றது என்பது பகவான் சங்கரர் உறுதிமொழி.

காவியங்களைப் படித்துக் கொண்டிருக்கும் போதே, வேதாந்தம், உபநிஷத்துகள் என்ன கூறுகின்றன? இவைகள் கூறும் ஞானத்தை நான் எவ்விதம் பெறுவது என்று சுவாமிஜியின் மனம் உண்மையை அறிய முடியாமல் தவித்தது. இவர் மனதில் எழுந்த சாஸ்திர பிரமாண விஷயமான கேள்விகளுக்கு சரியான பதில் கூறுபவர்கள் கிடைக்கவில்லை. இவருடைய மனநிலையை 'துவாரக்' என்ற கணித மேதையானவரோடு பகிர்ந்து கொள்வார் வேதாந்தத்தில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு சரியான பதில் கூறுபவர்கள் யாரும் கிடைக்கவில்லை. வேதாந்தம் தவறானது என்று நிச்சயம் செய்யவும் முடியவில்லை. இவ்விதம் உண்மையை அறிந்து கொள்ள முடியாததினால் இது சோதனைக் காலமாகவே இருந்தது வேதாந்தத்தை தொடர்ந்து படிப்பதா? வேண்டாமா? என்ற குழப்பம் ஏற்பட்டது. அதனால் வேதாந்தம் படிக்க விருப்பம் இல்லை. இதனால் சிலகாலம் உறக்கம் இல்லாமலேயே போய்விட்டது.

இதனால் இவருடைய கவனம் (Mystic Studies) தன் அனுபவங்களிலிருந்து பேசுபவர்கள் கூறுவதைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆவல் ஏற்பட்டது. அதனால் ரமண பக்தரான போகி ராமையா மூலம் ரமணரின் போதனைகளைப் படித்தார். பிறகு J. கிருஷ்ணமூர்த்தியின் உபன்யாசங்களைக் கேட்டார். பிறகு வில்லியம் பிளேக் (William Black) வில்லியம் ஜேம்ஸ் (Willian James) முதலியவர்களின் 'ஆன்மீக' அனுபவங்களைக் குறிக்கும் புத்தகங்களைப் படித்தார். இவர்கள் புத்தகங்கள் சாஸ்திர பாவமாக ஒன்றும் கூறுகூது இல்லை. இவர்கள் அனுபவங்களை வைத்துக் கொண்டு பேசுவார்கள். இவர்கள் வார்த்தைகள் சில நாட்கள் சுவாமிஜியை மயக்கிற்று. நம் சுவாமிஜிக்கு வேதாந்தத்தில் சிரத்தை குறைவு பட்டதைத்தியாகி பத்திரிகை தலையங்கங்கள் மூலம், சுவாமிஜியின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை ஸ்ரீ சுவாமி சின்மயானந்தர் கவனித்தார். மேலும், தியாகி பத்திரிகை இவர் ஒருவராக நடத்தவதில் உள்ள சிரமத்தைக் கவனித்துப் பத்திரிகை நடத்தும் பொறுப்பை வேறொரு வருக்குக் கொடுத்துவிட்டுத் தியாகி பத்திரிக்கை யிலிருந்து சுவாமிஜியை விடுவித்து பம்பாய் சென்று சின்மயா மிஷன் அலுவல்களைக் கவனிக்கவும், எட்டு பாகங்களாக இருந்த பகவத் கீதை புத்தகத்தை நான்கு பாகங்களாகச் செய்யும் வேலையையும் கொடுத்தார்.

ஸ்ரீமத் பகவத்கீதையை எடிட் செய்யும்போது சிற் சில இடங்களில் தானே கருத்துக்களையும், விளக்கங் களையும் எழுதினார். இவருடைய ஓயாத உழைப்பினால் நான்கு பாகங்களாக ஸ்ரீமத் பகவத்கீதை பிரசுரமாகி விரைவில் வெளிவந்துவிட்டது. வருஷக் கணக்காய் செய்யவேண்டிய ஒரு காரியத்தை ஆறு மாதத்தில் முடித்துவிட்ட நம் சுவாமிஜியின் முயற்சியையும், திறமையையும் பாராட்டினார் ஸ்ரீ சுவாமி சின்மாயனந்தர்.

1954 ம் ஆண்டில் பிரசுரமான ஸ்ரீமத் பகவத்கீதையின் முதல் பாகத்தின் முன்னுரையில் அன்பர்கள் ஆவலைப் பூர்த்தி செய்ய குறைந்த கால அளவில் ஸ்ரீமத் பகவத்கீதை பிரசுரித்து வெளிவர அன்புத்தொண்டு செய்த பிரம்மச்சாரி நடராஜனுக்கு அன்பு என்று பாராட்டி எழுதியுள்ளார் ஸ்ரீசுவாமி சின்மாயனந்தர். இதன் பின்பு ஸ்ரீசுவாமி சின்மயானந்தரின் ஐம்பதாவது கீதா ஞான யக்ஞா சம்பந்தமான சாவணீர் புத்தகம் வெளியிடுவதற்கும் உதவி செய்தார்.

ஆனால் நம் சுவாமிஜியின் மனதில் வேதாந்தப் பிரமாணத்தைப் பற்றிய சந்தேகம் தெளியவில்லை. ஓர் சமயம் சுவாமி பிரணவானந்தர் தெலுங்கில் பேசியதை இவர் கேட்டார். அப்பொழுது தன் மனதிலுள்ள போராட்டத்திற்கு இவரிடம் பதில் கிடைக்கும் போல் தோன்றியது. சீனுவாசராவ் என்பவர் பிரணவானந்தருடைய முதல் சிஷ்யர். இவருக்கு ஸ்ரீ சுவாமி சின்மயானந்தரையும் தெரியும். இவர் நம் சுவாமிஜியை பார்க்குந் தோறும் நீங்கள் சுவாமி பிரணவானந்தரைச் சந்திக்க வேண்டும் என்று கூறுவார். இதனால் சுவாமி பிரணவானந்தரை சந்திக்க வேண்டும் என்கிற ஆவல் நம் சுவாமிஜிக்கு ஏற்பட்டது. ஸ்ரீ சுவாமி சின்மாயனந்தருக்கு சுவ்ாமி பிரணானந்ததைத் தெரியும். விஜயவாடாவிற்கு ஆஸ்ரமம் வைத்துக் கொண்டிருந்தார். ஸ்ரீ சுவாமி சின்மாயனந்தர் விஜயவாடாவில் ஓர் சபை கூட்டினார். அதற்கு சுவாமி பிரணவானந்தரை வரவழைத்தார் சுவாமிஜி. அப்பொழுது ஸ்ரீ சுவாமி சின்மயானந்தர் அவர்கள் சுவாமி தங்களுடன் இருக்க விரும்புகின்றார் என்று கூறினார். அதன் பிறகு சுவாமிஜி குடிவாடாவில் இருந்த பிரணவானந்தரின் ஆஸ்ரமத்திற்குச் சென்றார்.

பிரணவானந்தர் தன்னைத் தேடிவரும் பக்தர்களுக்கு நெய், பாலோடு நல்ல போஜனம் அளிப்பார். வேதாந்தத்தில் எவ்வித சந்தேகத்துடன் யார் வந்தாலும் சாஸ்திர

பிரமாண மூலமாய் அவர்களின் சந்தேகங்களை விளக்கி மனத்தெளிவைக் கொடுப்பார். சுவாமி பிரணவானந்தர் மிகவும் கோபக்காரர். அவரிடம் யாரும் அதிக நாட்கள் தங்க மாட்டார்கள் அதட்டி மிரட்டித்தான் வேலை வாங்குவார் இக்கோபக்கார சுவாமிகளுடன் நம் சுவாமிஜி மூன்று மாதங்கள் தங்கி நற்பெயர் வாங்கிக் கொண்டார். பிரணவானந்தருக்கு நம் சுவாமிஜியின் காந்த அறிவையும் ஆற்றலையும், பொறுமையையும் பார்த்து மிகுந்த அன்பும் மரியாதையும் ஏற்பட்டது. எந்த சாஸ்திரத்தில் கேள்வி கேட்டாலும் மிகுந்த அடக்கத்துடன் அழகாய் உண்மையை இவர் கூறும் திறம் கண்டு இவரைப் பாராட்டினார். ஆஸ்ர மத்திற்கு வரும் பக்தர்களிடம் நம் சுவாமிஜியைப் புகழ்ந்து பேசுவார்.

பஞ்சப் பிரமாணங்களைப் பற்றி நன்றாக விளக்கம் கொடுத்து இந்த பிரமாணங்கள் மூலமாக வஸ்துவாக இல்லாத ஆத்மாவை ஒரு பொழுதும் அறிய முடியாது என்ற தத்துவத்தை விளக்கினார். பிறகு வேதாந்த சாஸ்திரம் என்பது தான், ஆத்மஞானத்தைப் பெறுவதற்கு பிரமாண மாகவுள்ளது என்ற உண்மையை எடுத்துக் காட்டினார்.

வேதாந்த சாஸ்திரத்தைப் பிரமாணமாக வைத்து எவ்விதம் மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்ற உண்மையும், அவருடைய போதனா முறையிலிருந்து சுவாமிஜிக்குத் தெளிவாகப் புரிந்தது, பிரமாண விஷயமாகப் புரியாமல் இருந்த எல்லா சந்தேகங்களும் விலகிற்று. இதன்பிறகு இதுவரை நிகழ்ந்தவற்றைப் பற்றிக் கவலை இல்லாத வரானார். மனசாந்தி பெற்றார். இதனால் சுவாமிஜி வேதாந் தத்தைக் கசடறக் கற்றார். அதனால் தான் இவருடைய சாஸ்தி ரத்தை அடிப்படையாகக் கொண்ட போதனாமுறை தனிச் சிறப்புள்ளதாக, அமைந் துள்ளது. சுவாமி பிரண வானந்தரை பிரமாண குருவாய் நினைத்தார் நம் சுவாமிஜி. இவர் மூலம், தான் பெற்ற லாபத்திற்கு நன்றி செலுத்தும் வகையில் பிற்காலத்தில் ஓர் நிகழ்ச்சி அமைந்தது.

1975 ம் ஆண்டு மார்ச் மாதம் நான்காம் தேதி, குடிவாடாவில் சுவாமி பிரணவானந்தருக்கு, அவருடைய பிரதம சிஷ்யர் பிரம்மானந்த ரெட்டி என்பவர் கட்டிய கோவிலில், சுவாமி பிரணவானந்தர் சமாதியின் மேல் அவருடைய உருவச் சிலையையும், சிவலிங்க பிரதிஷ்டையையும் செய்ய ஒப்புக்கொண்டு, சாந்தீபணி சாதனாலயாவிலிருந்த அளவற்ற வேலைகளுக்கு மத்தியில் குடிவாடா சென்று எல்லோரும் மகிழும் வண்ணம் செய்தார்.

குடிவாடா சென்றிருந்தபோது பதினைந்து வருஷங்களுக்கு முன் தான் பிரம்மச்சாரியாக இருந்த போது, பார்த்தவர்கள் அனைவரையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, இன்று மகாத்மாவாக விளங்கும் நம் சுவாமிஜி எவ்வித மாறுபாடுமின்றி ஒவ்வொருவரையும் அன்புடன் விசாரித்தார். அவர்கள் எல்லோரும் நம் சுவாமிஜியின் ஞாபக சக்தியையும் அன்பையும் கண்டு அதிசயித்தார்கள்.

ஆச்சர்யகரமான மேதா சக்தியுடையவர் சுவாமிஜி என்பதை குறிக்கும் ஓர் நிகழ்ச்சி. சென்னையில் இவர் வசித்து வந்த வீதியில் ராமகிருஷ்ணன் என்ற பெயருடையவன் இருந்தான். அவன் மிகவும் குண்டாக இருப்பான். அவனை சில சிறுவர்கள் கேலி செய்வார்கள். உருளைக்கிழங்கு போண்டோ ராமகிருஷ்ண ஷேண்டோ என்று, இதை சுவாமிஜி கவனித்துள்ளார். ஓரிருமுறை இராம கிருஷ்ணனுடன் பழகியுள்ளார். இருபது வருஷங்கள் கழித்து ஒரு சமயம் ரயிலில் பிரயாணம் செய்யும்போது, அவரைக் கண்டு பிடித்து விட்டார். ஆனால் அவருக்கு இவரைத் தெரியவில்லை. மெல்ல அருகில் சென்று தங்கள் பெயர் ராமகிருஷ்ணன் தானே. சென்னையில் இந்த வீதியில் வசித்து வந்தீர்கள் இல்லையா என்று வீதியைச் சொல்லி அவரைக் கேட்டார். அவருக்கு வெகு ஆச்சர்யமாகிவிட்டது. இருபது வருஷங்களுக்கு முன் பார்த்த நம்மை இவர் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கின்றாரே என்று.

தனக்கு எப்படி இவ்விதம் இவர் பெயர், உருவம் ஞாபகத்திற்கு வந்தது என்று யோசித்துப் பார்த்தபோது,

உருளைக்கிழங்கு போண்டோ ராமகிருஷ்ண ஷேண்டோ, என்ற வேடிக்கை வார்த்தையோடு, ராமகிருஷ்ணன் என்பவரை ஞாபகத்தில் வைத்திருந்ததார், இருபது வருஷங்கள் கழித்தும் அவரைக் கண்டுபிடிக்க முடிந்தது. இதுபோல் முக்கியமாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள இது ஓர் சிறந்த முறை என்று சிஷ்யர்களுக்குப் பாட போதனையின் போது கூறினார் சுவாமிஜி.

Tyagi February 1, 1960

The definition 'God is One' presents such a simple look as to make you feel that there is not the ghost of a chance to find a fallacy in the statement. But in reality it is not as simple as all that.

In this statement 'God is One', one is the defining word. Well, is there any possibility of one without two? The existence of the second gives rise to the first. Without two, there is no one at all. The existence of one surely depends upon the existence of two. If I use the word 'one' in defining God, I have already impoverished God, the Infinite, by making it a helpless dependent of two! One is only when there is two. If God is one, then God is only one, not two that has already come into being because of my definition 'God is one'. Since two exists apart from God that is said to be one, my defined God is only a part-not the whole. And an incomplete definition is no definition at all. That is the reason why Shankara, who was well aware of the limitations of mind and therefore of

word, very wisely and safely said that "God is one without a second" (Ekamevaadvitiyan Brahma). Verily his philisophy is known as, not 'monism', but 'non-dualism' - Adwaita

Bearing all this in mind, if I say 'God is one' then surely I make a sort of definition. Otherwise?

பிப்ரவரி–1, 1960

''கடவுள் ஒன்று'' என்ற வரையறை தவறே இருக்க முடியாத ஒரு எளிய கருத்தாகத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் அது அவ்வளவு எளிதானதல்ல.

'கடவுள் ஒன்று' என்ற வாக்கியத்தில் ஒன்று ஒரு வரையறுக்கும் வார்த்தை நன்று, இரண்டாவது இல்லாது ஒன்று என்பது இருக்க இயலுமா? இரண்டாவது இருப்பதினால் ஒன்று என்ற வார்த்தைக்கு இடம் கிடைக்கிறது. இரண்டு இல்லாது ஒன்று இருக்கவே முடியாது. ஒன்றின் இருப்பதானது இரண்டாவது இருப்பதைச் சார்ந்து இருக்கிறது. கடவுளை வரையறை செய்யும்போது 'ஒன்று' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினால் நான் கடவுளின் வியாப்தியை குறைக்கின்றேன். எல்லையற்ற அகண்டத்தை வலிமையற்றதாக இரண்டாவதில் சார்ந்து இருக்கச் செய்கிறேன். இரண்டு இருக்கும்போது தான் ஒன்று இருக்க இயலும் கடவுள் ஒன்றானால் கடவுள் ஒன்றேதான், 'கடவுள் ஒன்று' என்ற வரையரையினால் இருப்பைப் பெற்ற இரண்டு அல்ல இறைவன் ஒன்று என்ற கடவுளிற்கு அப்பால் இரண்டு இருக்கிறபடியால் நான்வரையரை செய்யும் இறைவன் முழுமை அல்ல–அதன் ஒரு பகுதியே!

முற்றுப்பெறாத வரையறை ஒரு வரையறை ஆகாது ஆகவேதான் மனிதனுடையவும் வார்த்தையினுடையவும் எல்லையை நன்கு அறிந்து ஆதிசங்கரர் மிகவும் சாமர்த்தியமாக ''இறைவன் இரண்டாவது இல்லாத ஒன்று '' (ஏகம் ஏவ அத்விதீயம் பிரம்மா) என்று கூறினார். ஆகவே தான் அவருடைய கோட்பாடு ''ஒன்றே'' என்பதல்ல 'இரண்டாவது இல்லாதது' அத்வைதம் என அறியப் பெறுகிறது. இவை எல்லாவற்றையும் மனதில் கொண்டு 'கடவுள் ஒன்று' எனக் கூறினால் அப்பொழுது நிச்சயமாக நான் ஒரு வரையறைக் கூறுகிறேன். இல்லாவிட்டால்?

Tyagi February 15, 1960

"Flexibility of mind" is what is needed for a man who wants to learn. A mind that has run into a beaten track of accepted fact is neither willing to learn, nor capable of learning. Its doors are closed to the entry of fresh breeze of further understanding. It is a cess-pool of rotten thoughts, dead beliefs and damned concepts.

A mind that is agile and free is ready to learn and it is capable of learning. The old conclusions are not there to colour, to intepret, to prejudice the mind that learns. The mind is free and, therefore, it discovers. Discoveries in all realms of human thought were not the outcome of a mind that was tethered to existing beliefs. They were the results of a mind that was free from all prejudices of previous conclustions and theories. And those discoveries may still be questioned and proved to be false, for there are minds that are free and fresh, that are not tethered to old conclusions.

தியாகி பிப்ரவரி–15, 1960

அறிய விரும்பும் ஒரு மனிதனுக்குத் தேவையானது வளையக்கூடிய மனங்களைப் போல் வளை என்ற வார்த்தைக்கு ஏற்ப– சென்ற வழியிலேயே மீண்டும் செல்லும் மனம் கற்பதை விரும்பாதது– கற்கும் திறமையும் இல்லாதது– புதிய அறிதல் என்ற இனிமையான புதிய தென்றலுக்கு அதன் கதவுகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அழுகிய எண்ணங்கள் மூட நம்பிக்கைகள் உயிரிழந்த கருத்துக்கள் ஆகியவை நிரம்பிய குட்டையாகும்.

துடிதுடிப்பான சுதந்திரமான மனம் கற்கத் தயாராக உள்ளது. கற்கும் திறமை பெற்றது. பழைய வறட்டு சித்தாந்தங்கள் அந்தந்த மனதை மாசுபடுத்தாது– குழப்பாது சுயேச்சையான மனம் புதியவற்றைக் கண்டறியும் சமுதாயத்தை பாழடிக்கும் மூட நம்பிக்கைகளுடன் பிணைக் கப்பட்ட மனம் எக்காலத்திலும் எத்துறையிலும் புதிய னவற்றைக் கண்டதில்லை. பழைய கோட்பாடுகள் கொள்கைகள் ஆகியவற்றின் ஆதிக்கத்திற்கு உட்படாத மனத்தின் சாதனையேயே புதிய கருத்துகள்– இப் புதிய கொள்கை களும் ஒரு காலத்தில் தவறானவை என நிரூபிக்கப்படலாம். ஏன் எனில் பழைய மூடக் கொள்கையினால் கட்டுப்பெறாத சுயேச்சையான துடிப்பான மனம் உள்ளவர் பலர் இருக்கின்றார்கள். இருப்பார்கள்.

Tyagi March 15, 1960

In essence, Life is light — the light that is not opposite to darkness.

In reality, Life is joy — the joy that is not the counter-part of sorrow.

In truth, Life is simplicity ——the simplicity that owes not its existence to complexity.

In fact, Life is existence ___ the existence that is independendent of non-existence.

Oh!Life is Beauty ___ the Beauty that includes all ugliness.

Life is Purity ____ the Purity that embraces all impurities.

Life is Eternity —— the eternity that involves no time.

Life is Here ——its nearness does never involve space.

Life is Now —— the 'Now' that is neither the continuity of the past not the connecting link of the future.

Life is a Whole —— but it is not make of fragments.

Oh! Life is this; Life is that. Life is everything.

Now we have a doubt. The doubts is this

WHAT IS LIFE?

தியாகி மார்சு–15, 1950

வாழ்வு ஒளி ஆகும் – இருளுக்கு எதிர் இல்லாத ஒளி.

வாழ்வு ஆனந்தம் ஆகும் – துக்கத்தின் தொடர்பே இல்லாத ஆனந்தம்.

வாழ்வு எளிமை ஆகும் – அந்த எளிமை எந்த சிக்கலையும் ஆதாரமாகக் கொண்டதல்ல.

வாழ்வு என்பது இருத்தல் ஆகும் – இல்லாமையைச் சாராத நிலையான இருத்தல்.

ஓ! வாழ்வே அழகு–அந்த அழகு எல்லா அழகின் மையைத் தன்னகத்தே கொண்டது.

வாழ்வு தூய்மையாகும் – எல்லா அழுக்கையும் அடக்கிடும் தூய்மையாகும்.

வாழ்வு ஒரு நிரந்தரம் – காலத்தை கடந்த நிரந்தரம்.

வாழ்வு இங்கேயே – இங்கு என்பதால் இடத்தால் கட்டுப்பட்டதல்ல.

வாழ்வு இப்பொழுதே – இப்பொழுது என்றாலும் காலத்தால் கட்டுப்படாதது.

வாழ்வு முழுமையானது – ஆனால் பகுதிகளின் தொகுப்பாலான முழுமையல்ல.

ஓ! வாழ்வு இது! வாழ்வு அது!

வாழ்வுதான் எல்லாமே!

இப்பொழுது நமக்கு ஒரு ஐயம் –

வாழ்வு என்றால் என்ன?

Tyagi May 1, 1960

To say that we will organise first and then act is to postpone action. Act first, you will automatically get organised. Let the oxen under the yoke move, you need not push the wheels of the cart : they follow the hoods of the oxen, as naturally as your shadow follows you. In action there is organisation. In organisation there is only inaction.

தியாகி மே 1, 1960

''முதலில் அமைப்பை ஏற்படுத்திக் கொள்வோம் – பிறகு செயல்படுவோம்'' எனக் கூறுவது செய்யாமல் தள்ளிப் போடுவது ஆகும். முதலில் செயல்பட்டால் நாம் இயல்பாகவே ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு விடுவோம். வண்டி இழுக்கும் காளை நகரட்டும் – வண்டியை நாம் தள்ள வேண்டாம். வண்டி தானகவே எருதின் பின்னே நகர்ந்திடும், நம் நிழல் நம்மைத் தொடர்வது போல செயல்படுவதில் அமைப்பு இருக்கிறது. அமைப்பில் செயலின்மையே இருக்கின்றது.

Tyagi May 15, 1960

The call was feeble-perhaps it was not there at all-some seven years ago when Swamiji did not still enter into our lives. It was his advent on the spiritual horizon of India that made us feel that somewhere from the deep recesses of our heart-far, far beneath the debris that is our ego-a sound was making ceaseless efforts to penetrate the rubbish, to reach the surface. For it was Swamiji that lulled the din and roar in our within and successfully effected a temporary silence that was essential to make the feeble cal audible to ourselves. In fact the call has been there always-but unheard, unfelt, unknown. When it was made known, felt and heard. We were charmed with its beauty, with its peace, with its melody. Now there are attempts on our part to raise the volume of the call bringing silence in our within.

தியாகி மே 15–1960

ஏழு ஆண்டுகளுக்கு முன் சுவாமிஜி நம் மனதில் இடம் பிடித்திடவில்லை. அழைக்கும் குரல் வலிமை யற்றதாக இருந்தது – அது இல்லாதது போல இருந்தது. இந்தியாவின் ஆத்மீக வானிலே அவருடைய செயல் நம்முடைய அகந்தையின் இடிபாடுகளுக்குள்ளிருந்து– நம் மனத்தின் ஆழத்திலிருந்து ஒலி ஒலி அசுத்தத்தின் ஆழத்திலிருந்து வெளிவர அயராது முயன்றிடுவதை உணர்கிறோம். ஏனெனில் நம் உள்ளிருந்த ஆரவாரத் தையும் குழப்பத்தையும் அமைதிப்படுத்தியவர் நம் சுவாமிஜியே! அந்த ஓரளவு தற்காலிக அமைதியினால் அக்குரலை நாம் உணர்ந்து வணங்கினோம். உண்மையில் அந்த குரல் எப்பொழுதுமே இருந்ததுதான்–ஆனால் அதுவரை கேட்கப்படவில்லை, உணரப்படவில்லை, அறியப்படவில்லை. அது உணரப்பட்டபோது நாம் அதன் அழகினால், அமைதியினால், இளமையினால் கவரப் பட்டோம். நாம் இப்பொழுது நம் உள் அமைதியை உருவாக்கி அத்தெய்வீகக் குரலை எழுப்ப முயற்சிக்கிறோம்.

Tyagi June 1, 1990

Contenment is an inner condition obtaining when there is the fullness of heart. Contenment is a natural state that comes into being at the elimination of the sense of want, of the sense of smallness, of the sense of emptiness. Therefore to have contenment there should be no sense of smallness or want. Hence our attempts for the achievement of conten ment should be directed to eiiminating the sense of smallness, the sense of want.

தியாகி ஜுன் 1, 1990

மனம் குறைவின்றி நிரப்பப்படும் போது மனநிறைவு ஏற்படுகிறது. தேவை உணர்வை, குறை உணர்வை, வெறுமை உணர்வை நீக்கிடும் போது ஏற்படும் இயல்பான நிலை மனநிறைவு ஆகும். ஆகவே மனநிறைவைப் பெற்றிட, தேவை உணர்வோ குறை உணர்வோ இருத்தல் கூடாது. ஆகவே நாம் மனநிறைவைப் பெற நம் குறை உணர்வையும் தேவை யுணர்வையும் அகற்றிட முயன்றிட வேண்டும்.

Tyagi June 15, 1960

Personally "development" is superficial shallow, false. What is profound, deep and real is personality "unfoldment". The unfoldment of personality is always preceeded by an inner transformation. Whereas no such transformation takes place in personality "development". Therefore a 'developed' personality undergoes no total change, - no vital transformation, without such a change, of what use is this "development" of personality?

தியாகி ஜுன் 15, 1960

வெளி ஆள் வளர்ச்சி என்பது பொய்யானது. வெளிப் படையானது குறைவுடையது. உள் ஆளுமை பரிணாமம் தான் உண்மையானது; ஆழமானது; குறைவற்றது. அந்தக் காரணங்களின் சரியான மாற்றத்திற்குப் பிறகே உன் ஆளுமை பரிணாமம் நிகழ்கிறது. ஆனால் வெளி ஆள் வளர்ச்சியில் அவ்வாறான உள் மாற்றம் நிகழ்வதில்லை. ஆகவே வெளி ஆள் வளர்ச்சியில் தேவையான உள் மாற்றம் ஏற்படுவதில்லை. அப்படிப்பட்ட நல்லதொரு அந்தக் காரணம் மாற்றம் இன்றி வெளித்தோற்றத்தில் ஏற்படும் வளர்ச்சியால் யாது பயன்.

தியாகி மே 15–1960

ஏழு ஆண்டுகளுக்கு முன் சுவாமிஜி நம் மனதில் இடம் பிடித்திடவில்லை. அழைக்கும் குரல் வலிமை யற்றதாக இருந்தது – அது இல்லாதது போல இருந்தது. இந்தியாவின் ஆத்மீக வானிலே அவருடைய செயல் நம்முடைய அகந்தையின் இடிபாடுகளுக்குள்ளிருந்து– நம் மனத்தின் ஆழத்திலிருந்து ஒலி ஒலி அசுத்தத்தின் ஆழத்திலிருந்து வெளிவர அயராது முயன்றிடுவதை உணர்கிறோம். ஏனெனில் நம் உள்ளிருந்த ஆரவாரத் தையும் குழப்பத்தையும் அமைதிப்படுத்தியவர் நம் சுவாமிஜியே! அந்த ஓரளவு தற்காலிக அமைதியினால் அக்குரலை நாம் உணர்ந்து வணங்கினோம். உண்மையில் அந்த குரல் எப்பொழுதுமே இருந்ததுதான்–ஆனால் அதுவரை கேட்கப்படவில்லை, உணரப்படவில்லை, அறியப்படவில்லை. அது உணரப்பட்டபோது நாம் அதன் அழகினால், அமைதியினால், இளமையினால் கவரப் பட்டோம். நாம் இப்பொழுது நம் உள் அமைதியை உருவாக்கி அத்தெய்வீகக் குரலை எழுப்ப முயற்சிக்கிறோம்.

Tyagi June 1, 1990

Contenment is an inner condition obtaining when there is the fullness of heart. Contenment is a natural state that comes into being at the elimination of the sense of want, of the sense of smallness, of the sense of emptiness. Therefore to have contenment there should be no sense of smallness or want. Hence our attempts for the achievement of conten ment should be directed to eliminating the sense of smallness, the sense of want.

தியாகி ஜுன் 1, 1990

மனம் குறைவின்றி நிரப்பப்படும் போது மனநிறைவு ஏற்படுகிறது. தேவை உணர்வை, குறை உணர்வை, வெறுமை உணர்வை நீக்கிடும் போது ஏற்படும் இயல்பான நிலை மனநிறைவு ஆகும். ஆகவே மனநிறைவைப் பெற்றிட, தேவை உணர்வோ குறை உணர்வோ இருத்தல் கூடாது. ஆகவே நாம் மனநிறைவைப் பெற நம் குறை உணர்வையும் தேவை யுணர்வையும் அகற்றிட முயன்றிட வேண்டும்.

Tyagi June 15, 1960

Personally "development" is superficial shallow, false. What is profound, deep and real is personality "unfoldment". The unfoldment of personality is always preceeded by an inner transformation. Whereas no such transformation takes place in personality "development". Therefore a 'developed' personality undergoes no total change, - no vital transformation, without such a change, of what use is this "development" of personality?

தியாகி ஜுன் 15, 1960

வெளி ஆள் வளர்ச்சி என்பது பொய்யானது. வெளிப் படையானது குறைவுடையது. உள் ஆளுமை பரிணாமம் தான் உண்மையானது; ஆழமானது; குறைவற்றது. அந்தக் காரணங்களின் சரியான மாற்றத்திற்குப் பிறகே உன் ஆளுமை பரிணாமம் நிகழ்கிறது. ஆனால் வெளி ஆள் வளர்ச்சியில் அவ்வாறான உள் மாற்றம் நிகழ்வதில்லை. ஆகவே வெளி ஆள் வளர்ச்சியில் தேவையான உள் மாற்றம் ஏற்படுவதில்லை. அப்படிப்பட்ட நல்லதொரு அந்தக் காரணம் மாற்றம் இன்றி வெளித்தோற்றத்தில் ஏற்படும் வளர்ச்சியால் யாது பயன்.

Tyagi July 15, 1960

DUALITY : Thy names are innumerable :Now you name is 'Pain', now 'sharrow' ; now you are known as 'God', now 'Bad', Again, Pleasant and unpleasant, Like and Dislike, Fear and Anger and ever so many other Names you have in the same series; Further, the words I, He, She; Family, Society, Humanity,-all these are expressions of The own Glory. Bondage and Liberation, attachment, and attainment, secular and sacred-Oh! how many names you! have! Mind, would, time, space, soul, Self, truth, false-countless countless are thy names!

தியாகி ஜூலை 15–1960

இருமை–உன் பெயர்கள் கணக்கிடலங்காது உன் பெயர் ஒரு சமயம் வலி, ஒரு சமயம் துன்பம். ஒரு சமயம் நல்லது; ஒரு சமயம் கெட்டது. மீண்டும் இனியது–கசப்பானது, விருப்பு, வெறுப்பு, அச்சம், கோபம் இவ்வரிசையில் எத்தனையோ பெயர்கள். மேலும் நான் அவன், அவள், குடும்பம், சமுதாயம் மனித இனம்–இவை அனைத்தும் உன் பெருமையை எடுத்தியம்புகின்றன. அடிமை விடுதலை பற்றுதல், சாதனை மதசார்பற்றது, புனிதமானது–ஓ எத்துணை பெயர்கள் உனக்கு மனம், உலகம், காலம், வெளி, ஆன்மா வாய்மை, பொய், உன் நாமங்கள் கணக்கிலடங்காது.

Tyagi August 1, 1960

Most of us speak because we want to speak some thing. But there are people, however small their numerical strength is, who speak because they have

something to speak. The words of the former have alweays been more words, while that of the latter carry certain conviction and ring certain truth.

தியாகி 1 ஆகஸ்ட் 1960

நம்மில் பெரும்பாலோர் பேச விரும்புகிறோம். பேசுகிறோம் ஆனால் ஒரு சிலர் எண்ணிக்கையில் குறைவான வர்கள்–பேசுவதற்கு நல்ல கருத்து உள்ளது என்பதற்காகப் பேசுகிறார்கள். முதல் வகையினரது பேச்சு வெறும் வார்த்தைகள் தான். இரண்டாம் வகையினரது பேச்சு ஒரு நல்ல கோட்பாட்டை உடையது. ஒரு சிறந்த உண்மையை ஒலிப்பதாக அமைகிறது.

விஜயவாடா யக்ஞாவும் சத்யவதி அம்மையாரும்:

சுவாமி சின்மாயனந்தர் கீதா உபன்யாசம் ஆரம்பிப்பதற்கு முன் நம் சுவாமிஜி பஜனை செய்வார். கீதா உபன்யாசம் ஆங்கிலத்தில் நிகழ்த்துவதைப் புரிந்து கொள்ளாதவர்கள் கூட பஜனையைக் கேட்பதற்காகவே வருவார்கள். இன்னும் சற்று நேரம் பாடமாட்டாரா என்று ஏங்குபவர்கள் எத்தனையோ பேர்கள். இவருடைய மதுரகானத்திற்கு மயங்காதவர்களே கிடையாது.

விஜயவாடா யக்ஞாவின் போது சத்யவதி என்ற வயது முதிர்ந்த அம்மையார் சுவாமிஜியிடம் பாடம் கேட்டார். இவர்கள் இல்லத்தில் அடிக்கடி தங்குவார். இந்த அம்மையார் நம் சுவாமிஜியை தனக்குக் கிடைத்த ஞான புத்திரனாகவே நேசித்தார். பாபு பாபு என்று அன்பு ததும்ப சுவாமிஜியை அழைப்பார்கள். சாதுக்களைப் போற்றிப் பணிவதில் மிக விருப்பம் உள்ளவர்கள். நல்ல ஞானமும் பக்தியும் உள்ளவர்கள்.

ஒரு சமயம் கீதா யக்ஞாவின் போது நம் சுவாமி பாடிக் கொண்டிருக்கும் போது இவர்களுக்கு கிருஷ்ண பரமாத்மாவே பாடுவதைப் போன்ற உணர்வு ஏற்பட்டு மௌனமாகி சமாதியில் அப்படியே அமர்ந்து விட்டார்கள். கூட்டம் கலைந்ததும் இந்த அம்மையார் எழுந்திராமல் இருந்ததைப் பார்த்து இவர்களை வீட்டிற்குத் தூக்கிக் கொண்டு போனார்கள். என்ன முயற்சித்தும் மூன்று நாட்கள் வரை இந்த அம்மையார் பேருணர்விலேயே இருந்தார்கள். இறுதியில் நம் சுவாமிஜி தான் இந்த அம்மையாரை சமாதியிலிருந்து விடுவித்தார்கள்.

யாராவது அன்பர்கள் பணம் கொடுத்தாலும் அதைப் பத்திரமாய் வைக்காமல் எங்கு வேண்டுமானாலும் போட்டுவிடுவார் சுவாமிஜி. இதைக் கவனித்த சத்யவதி அம்மையார் ''பாபு, இப்படி பணவிஷயத்தில் அலட்சியமாய் இருந்தால் உனக்கு வேண்டியதை சமயத்தில் வாங்குவது எப்படி என்று கூறுவார்கள்'', ஆனால் இவருக்கு இயல் பானபற்றற்ற மனோபாவம் பண விஷயத்திலும் மாற வில்லை.

சுவாமிஜியை அனேக சீடர்கள் எப்பொழுதும் சூழ்ந்து கொள்ளுவார்கள். பாட்டு பஜனை, வேதாந்த விசாரணை எப்போதும் நடந்து கொண்டு இருக்கும். இதைக் கவனித்து சத்தியவதி அம்மையார் பாபு. உன்னிடம் சில பேரியல்புகள் இருக்கின்றன. இதனால் உன்னுடைய ஞான வளர்ச்சிக்குத் தடை ஏற்படக்கூடாது. நீ தனித்திருந்து உன்னுடைய ஞானத்தை மேன்மேலும் திடப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் உன் ஞான வளர்ச்சிக்கு இந்த மக்களால் தடை ஏற்படக்கூடும் என்று அடிக்கடி கூறுவார்கள்.

இவ்விதம் தன்னுடன் பேரன்போடு நடந்து கொள்ளும் இவ்வம்மையாரைத் தனக்கு ஞானத் தாயாகவே பாவித்தார்

சுவாமிஜி. இந்த அம்மையார் இன்றும் பாபு என்று அழைப்பதும் நம் சுவாமிஜி மாறா அன்புடன் இந்த அம்மையாரிடம் நடந்துக் கொள்வதும் பார்க்க பரவசமாக இருக்கும். அன்று எளிய பிரம்மச்சாரியாக இருந்தும், இன்று பெரிய மகாத்மாவாக இருந்தும் இவர் அன்பில், செய்கையில் எவ்வித வேற்றுமையும் கிடையாது.

சன்யாசம்

மாணிக்கத் துள்ளொலி போல
மருவி இருந்தாண்டி
பேணித் தொழு மடியார்
பேசாப் பெருமையன் காண்

தாயுமானவர்

மாணிக்கத்தினுள் ஒளி போன்று நம் சுவாமிஜியின் உள் ஒளிவீசும் தெய்வீகத்தை ஆத்மதேஜஸை உலக மக்களுக்கு உரிமையாக்கும் நாள். தன்னை நம்பிய அடியவர், ஆத்மீக வாழ்வை ஒளிபெறச் செய்யும் பெருமை வாய்ந்த நன்னாள். உத்தம சாது லட்சணத்தை விளக்கும் காவி உடுத்திய நாள். அன்பும், அறமும், பண்பும், பக்குவமும் போதிக்கத் தகுதியுள்ள உத்தமர் என்பதை உலகிற்கு அறிமுகப்படுத்திய பொன் நாள் அதுதான் 1962 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சிவராத்திரி அன்று சன்யாசம் பெற்ற நாள்.

இவர் சன்யாசம் எடுத்துக்கொள்ள வேண்டும். வேண்டாம் என்ற எவ்வித நோக்கமும் இல்லாமலிருந்தார். சிவராத்திரிக்கு முதல் நாள் ஸ்ரீ சுவாமி சின்மயானந்தர் சென்னையில் இருக்கும் பெத்தாஜி என்பவர் இல்லத்திற்கு இரவு வரும்படிக் கூறியிருந்தார்.

வழக்கம் போல் விடியற்காலை எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு 1008 காயத்ரி ஜெபம் செய்துவிட்டு காத்திருந்தார். அங்கு சாஸ்திரிகள் வந்தார். அவர் சுவாமிஜியைப் பார்த்தவுடன் நீயா? என்று ஆச்சர்யத் துடன் கேட்டார். சாஸ்திரிகள் சுவாமிஜியின் அத்தை ஊரான கோவிந்தபுரத்தைச் சேர்ந்தவர்கள் சுவாமியின் முன்னோர் களை நன்றாகத் தெரிந்தவர்கள். சுவாமிஜி புருஷசுக்தம், தைத்ரீயம் முதலிய வேதோச்சாரணம் செய்து கொண்டிருந்த போது சாஸ்திரிகளுக்குத் தெரியும். ஆதலால் நீங்கள் எந்த ஊர்? என்ன கோத்திரம்? என்று சுவாமிஜியை விசாரித்தார். சுவாமிஜி தன் கோத்திரம் ஊர் பெயர் கூறியவுடன் நீ கோபால ஐயர் பிள்ளையா, அந்த ஊர்க்காரர்களுக்குத் தெரிந்தால் என்னை சும்மா விடமாட்டார்கள். நீ வேறு யாரையாவது பார்த்துக் கொள் என்று கூறி கிளம்பிவிட்டார்.

சுவாமிஜிக்கு இவர் ஏன் வந்தார்? இவ்விதம் ஏன் கூறி திரும்பிப் போகின்றார் என்று தெரியவில்லை, ஆதலால் தாங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு சாஸ்திரிகள் ''விரஜத ஹோம்'' செய்வதற்காக வந்தேன் என்று கூறினார். இதைக் கேட்ட பின்பும் தான் சன்யாசம் கொடுக்கப் போகின்றார்கள் என்று தெரிந்து கொண்டார் சுவாமிஜி. ''நீங்கள் விரஜா ஹோமம் செய்யத்தானே வந்தீர்கள்?'' நான் யாரிடமும் தங்களைப் பற்றி கூறமாட்டேன். ஈஸ்வர அனுக்கிரஹம் எப்படி இருக்கின்றதோ அப்படித்தானே நடக்கும் நீங்கள் செய்யுங்கள் என்று கூறினார்.

அதன் பிறகு தான் சாஸ்திரிகள் விரஜா ஹோமம் செய்து வைத்தார். அதன் பின்பு ஸ்ரீ சுவாமி சின்மயானந்தா அவர்கள் சன்யாசம் கொடுத்து சுவாமி தயானந்த சரஸ்வதி என்ற திருநாமம் சூட்டினார். அன்று முழுவதும் நம் சுவாமிஜியைப் பார்க்க யாரையும் அனுமதிக்கவில்லை.

ஔவையின் பாடல் பொருளான மனிதனே நிறைய படித்து, நிறைய அறிவு பெறுகிறாய். உனக்கு முப்பது வயதாவதற்குள் உன்னிடமுள்ள காமம், கோபம், மயக்கம் என்னும் முக்குற்றங்களும் ஒழியப்பெற்று உன் மனம் ஒருமைப் பாடமைந்து உன் உள்ளத்தினுள்ளே ஒரு மெய்ப் பொருளை, காணத் தவறி விடுவாயானால் உனக்கு வெறும் படிப்பறிவு இருக்குமே தவிர அறிவினால் ஒரு உபயோகம் இல்லை என்ற உண்மை சுவாமிஜியின் விஷயத்தில் உண்மையாய் விட்டது. படிப்பறிவு மட்டும் இல்லாமல், உள்ளத்தில் மெய்ப்பொருளை தான் உணர்ந்து அதை உலகிற்கும் உணர்த்தும் உயரிய ஞான சக்தியை மேன் மேலும் பெருக்கிக் கொள்ள வழி வகுத்தது.

சில நண்பர்கள் யாருக்கும் தெரியாமல் சுவாமிஜியைப் பார்க்க வந்து விட்டார்கள். சிகைநீக்கி, காவியுடுத்தி, விபூதியும் சந்தனப்பொட்டும் அணிந்து, அமைதியே வடிவாய் அமர்ந்திருந்தார். சன்யாசத்திற்குத் தகுதியான வயது. வாலிபமுடுக்கு, செந்நிறமேனி, பிரம்ம தேஜசால் ஜொலிக்கும் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிருந்தது. நண்பர்களுக்கு இத்தனை நாட்கள் தோழனாய் இருந்தவர் இப்போது எல்லோரையும் காட்டிலும் மிக உயர்ந்த நிலையில். நம் மனதாலும் அறிய முடியாத ஆத்மீக தேஜஸால் பகவான் ஸ்ரீ சங்கரரைப் போல் பிரகாசிப்பதைப் பார்த்து அனைவரும் பேச்சற்று நின்று விட்டார்கள். ஏதோ பழைய உறவு சிதைந்து விட்டது போன்ற பிரிவும் துயரும் நண்பர்களுக்கு ஏற்பட்டது.

நம் சுவாமிஜி சன்யாசம் ஏற்றுக்கொண்ட விஷயம் இவருடைய சகோதரர் ஸ்ரீனிவாசன் என்பவருக்குத் தெரிந்தது இவருக்கு துக்கம் தாங்க முடியவில்லை. தந்தையற்ற எங்களுக்கு தந்தையும், தனயனுமாயிருந்தவர். எல்லா சம்பந்தங்களையும் பார்த்தார் என் தாய் மனம் என்ன

பாடுபடும் சன்யாசம் கொடுத்த எங்கள் உறவையெல்லாம் பிரித்து விட்டார்களே என்று சொல்லி விழுந்து புரண்டு அழுதார் தாங்கமுடியாமல். அவரைச் சமாதானம் செய்வது பெரிய சிரமமாய்ப் போய்விட்டது.

இரண்டாவது சகோதரர் ராமச்சந்திரன் என்பவர் தன் மன வருத்தத்திற்கு அதிக இடம் கொடுக்காமல் தன்னைத் தேற்றிக் கொண்டார். மூன்றாவது சகோதரர் தர்மராஜன் தந்தை பதவி வகித்த சகோதிரர் தன்னை விட்டுப் பிரிந்து விட்டது போன்ற உணர்வினால் கண்ணீர் விட்டார்.

உணர்வுடன் உறவுகளையும், தொடர்புகளையும் துறந்த துறவியான சுவாமிஜியின் மனம் அசையாமல், உலகம், உறவுகள் சத்தியமற்றது, இவையாவும் நாடகம் என்ற நிச்சயத்தால் கலங்காமல் ஆழ்கடல் போல அமைதியாகவே இருந்தது. இயற்கையும் ஈஸ்வரனும் தான் பெற்ற ஞானமே தனக்குத் துணை என்று தான் ஏற்றுக்கொண்ட சன்யாச லக்ஷண வாழ்க்கையின் உண்மையை நன்கு உணர்ந்திருந்தார்.

மறுநாள் மதுரை தபோவனத்திற்கு சுவாமிஜியைப் போய் கொஞ்சம் நாட்கள் தங்கி இருக்குமாறு சுவாமி சின்மயானந்தர் கூறினார். இவர் மதுரைக்குப் புறப்படும் போது மாற்றி உடுத்த ஆடைகள் இல்லை. எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் தனக்கு என்று எதையும் கேட்காத இவர் நிலை உணர்ந்த ஓர் சகோதரி இரண்டு காவி வேஷ்டிகளை வாங்கிக் கொடுத்தார்.

தபோவன மேனேஜர் ஸ்ரீனிவாசன் என்பவர் துவரிமான் கிராமத்தில் இருப்பவர். இவர் நம் சுவாமிஜிக்கு வேண்டிய சாமான்களை அனுப்பினார். இங்கு தானே சமையல் செய்துகொண்டு சத்சங்கங்கள் நடத்தி வந்தார். அப்போது மலேரியா ஜுரம் வந்துவிட்டது. என்ன செய்வது?

தனிமையில் ஏதோ கிடைத்த மருந்தைச் சாப்பிட்டார் குணம் இல்லை. இந்த ஜுரத்துடன் சிரமப்பட்டுத்தானே ஏதோ கை வைத்தியமாய் செய்து சாப்பிட்டார். பிறகு ஜுரம் குணமாயிற்று. இங்கு இவருக்கு ஏற்பட்ட எத்தனையோ வித அசௌகர்யங்களைப் பொருட்படுத்தாமல் அமைதி யாய் இருந்தார். இன்னும் பல சாஸ்திரங்களைப் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் இருந்தது. அப்போது திருச்சிக்கு அருகில் காவேரிக் கரையில் உள்ள கிராமத்தில் வசிக்கும பண்டிதரிடம் சாஸ்திரங்கள் கற்க வேண்டும் என்று அவரைப் பார்க்க அக்கிராமத்திற்குச் சென்றார்.

அவ்வீதியிலுள்ளவர்கள் சுவாமிஜி ஜோதி விஸ்வ ரூபமாய் வரும் அழகைப் பார்த்து வீதியில் தண்ணீர் தெளித்து பூர்ண கும்பத்துடன் வரவேற்றார்கள் அப்போது சாஸ்திரிகள் உடல் நலமில்லாது இருந்தார். ஆகையால் சாஸ்திரம் படிக்கும் நோக்கம் தடைப்பட்டது.

தன் தாயாரைப் பார்த்து விடை பெற்றுக் கொண்டு ரிஷிகேஷ் செல்லலாம் என்று தீர்மானம் செய்து கொண்டு மஞ்சக்குடிக்குப் போய் தாயாரைப் பார்த்தார். சிறுவயதில் கணவனை இழந்து சரியான பாதுகாப்பு இல்லாமல், எத்தனையோ விதமான கடும் சோதனையில் தன் குழந்தைகளை வளர்த்த தாய்க்கு பிள்ளையின் காவி வேஷத்தைப் பார்த்தவுடன் அளவற்ற துயரம் ஏற்பட்டது. தன் பிள்ளை என்ற பழைய உறவு பறந்து விட்டதே, சிறு வயதில் பலவித சிரமங்களை ஏற்று குடும்பம் நடத்தின பிள்ளை சுகப்படவில்லையே இந்த சன்யாசத்தை இளமை யிலேயே ஏற்றுக் கொண்டானே என்று வருந்தினார்.

நமக்கு சுவாமிஜியானாலும் பெற்றவர்களுக்குப் பிள்ளை தானே? பெற்ற மனம் பதைத்தது பிள்ளைப் பாசத்தால். தாய் மனம் அடையும் தவிப்பும், துக்கமும் எத்தகையது என்று

சற்றும் மனத் தளர்ச்சி இல்லாமல், பரமசாந்தமாய் வேடிக்கை பார்த்துவிட்டு, அம்மா, தாங்கள் இப்படி வருந்த லாமா? இன்னும் மூன்று பிள்ளைகள் இருக்கின்றார்களே எல்லோரும் தங்களைப் பார்த்துக் கொள்வார்கள், வருந்தாதீர்கள். இத்தனை நாட்களாய் தாங்கள் ஒருவர் தான் எனக்குத் தாய்யாக இருந்தீர்கள். இப்போது உலகெங்கும் எனக்கு தாய்மார்கள். வருந்த வேண்டாம் என்று தாயைச் சமாதானம் செய்துவிட்டு ரிஷிகேஷ் புறப்பட்டார்.

ரிஷிகேஷ் சென்று இரண்டு நாட்கள் தங்கியபிறகு, உத்திரகாசி சென்று அங்கு இருக்கும் ஒரு சுவாமிகளுடன் தங்கினார். அந்த சுவாமி மிகுந்த கோபக்காரர். நம் சுவாமி ஜியிடம் தன் இயல்பைக் காட்டுவார். கடுமையாய் வேலை வாங்குவார். ஆனால் இதற்கெல்லாம் நம் சுவாமிகள் கலங்கவில்லை. கற்பாறையை போல் கஷ்டங்களைத் தாங்குவார். இவருக்கு வேண்டியது வேலை தானே, ஒரு குறையும் வைக்காமல் செய்துவிடுவோம் என்று அவர் இடும் கட்டளைகளைத் தளர்வின்றி ஆனந்தமாகவே செய்து விடுவார். அந்த சுவாமிகளுக்கு வரும் கோபம் நம் சுவாமிஜியின் பொறுமைக்கு முன் வெட்கி ஏமார்ந்து விடும்!

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு கங்கோத்ரி யமுனோத்ரி பார்க்க வேண்டும் என்று உத்திரகாசி சுவாமிகளிடம் விடை பெற்றுக் கொண்டார். கால்நடையாகவே யமுனோத்ரி, கங்கோத்ரி பார்த்துவிட்டுத் திரும்பும்போது வழியில் பனிப்பாறை வழுக்கி பள்ளத்தில் விழுந்து பிழைத்ததே கஷ்டமாய் விட்டது. பலத்த அடிபட்டிருந்ததால் நல்ல ஜுரம் வந்து விட்டது. மூன்று நான்கு நாட்களாகியும் ஜுரம் குறையவில்லை. இவருக்கு வேண்டியதைச் செய்வதற்கு யாரும் இல்லை. ஆகையால் சென்னைக்கு வந்தார். இங்கு

இவர் உடல்நிலையைப் பரிசோதித்து டாக்டர்கள் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

ஸ்ரீ சுவாமி சின்மயானந்தா அவர்களுக்கு இவ்விஷயம் தெரிந்நதது. அவர் அறுவை சிகிச்சை செய்வதற்கு வேண்டிய ஏறபா!டுகள் செய்து, பத்மாவதி என்ற அம்மையாரிடம இந்தச் சுவாமிகள் ரொம்பப் படித்திருக்கின்றார், நீங்கள் எவ்விஷயத்தைப் பற்றி வேண்டுமானாலும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இவரை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறி நம் சுவாமிஜியின் உடல் நலத்தைக் கவனிக்கும் பொறுப்பை இந்த அம்மையாரிடம் ஒப்புவித்தார்.

ஆபரேஷன் முடிந்து உடல் நலம் அடைந்து கொண்டிருந்தது பத்மாவதி அம்மாவும் நம் சுவாமிஜியிடம் மிகுந்த அன்புடையவராய் அவருக்கு வேண்டிய உதவி களைச் செய்தார்கள். பத்மாவதி அம்மாவிற்கு வேதாந்த பாடங்களைக் கேட்பதில் விருப்பம் அதிகம். ஆகையால் வேதாந்த பாடங்களைக் கேட்டுக்கொண்டும், தனக்கு எழுந்த சந்தேகங்களை சுவாமிஜியிடம் கேட்டு அதற்குத் தகுந்த பதில் பெற்றும் ஆனந்தமடைவார் உயரிய தத்துவங்களை எளிமையாய் அனுபவ பூர்வமாய் இவர் விளக்கிச் சொல்லும் அழகை எல்லோரிடமும் புகழ்ந்து பேசினார்கள். இவ்விதம் பலருக்கும் நம் சுவாமிஜியின் ஞான ஒளி பரவ ஆரம்பித்தது.

திருமதி கமலாம்பாள்அம்மாள்

சாஸ்திரங்களின் உட்கருத்தை நன்கு அறிந்து அதிலேயே நிஷ்ட்டை பெற்றுத்தான் பெற்ற பேற்றை இந்த வையம் பெறவேண்டும் என்ற உதாரகுணமுடையவராக இருந்து வேதாந்த பிரச்சாரம் செய்து வருகின்ற

போது இவருடைய மஹிமை கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படத் துவங்கியது. இந்த சமயத்தில் ஜென்மாந்த்ர ஸுக்ருதவஸாத் ஸ்ரீ சுவாமிஜி அவர்களின் அருளைப் பெறுகின்ற பாக்யம் ஒரு சிலருக்குக் கிடைத்தது. அதில் எனது ஸ்நேகிதி கமலாம்பாள் அம்மையார் அவர்கள் தனக்குக் கிடைத்த அந்தப் பாக்யத்தைப் பற்றி மிகவும் உணர்ச்சி வயப்பட்டுத் தெரிவித்தார்கள். அதாவது ''சுவாமிஜி அவர்களைத் தரிசிக்கும் பாக்யம் பெற்ற அன்றே என் வாழ்வில் கிடைத்தற்கரிய ஒரு பாக்யம் கிடைத்துவிட்டது என்ற ஒரு நிறைவு உணர்ச்சி உள்ளத்தில் ஏற்பட்டது. அந்த மஹாத்மாவின் தபோவலிமையினால் ஏற்பட்ட ப்ரஹ்ம தேஜஸ் அவர் கண்களில் ப்ரகாஸித்த ஒளி, கருணை நிறைந்த பார்வை, புன்சிரிப்புத் தவழும் முகம், வைராக்ய சித்தத் துடன் நின்ற கம்பீரத் தோற்றம் என் மனக்கண் முன் இன்னும் தாண்டவமாடுகிறது. வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு அனுபவம்'' என்று உணர்ச்சி ததும்பச் சொன்னார்கள்.

மேலும் அவர்கள் ஸ்ரீ சுவாமிஜி அவர்களை எப்படித் தரிசிக்க நேர்ந்தது என்ற விபரங்களையும் தெரிவித்தார்கள்.

அதாவது ஸ்ரீ ரமணபக்தரான தன் தகப்பனாருடன் ஸ்ரீ ரமணபகவானைத் தரிசித்த பாக்யமும் அவர் அருளால் தான் தனக்கு இப்பேர்பட்ட மஹானைக் குருவாக அடையும் படியான பாக்யமும் கிடைத்தது என்றும் சொன்னார்கள். தனக்கு வேதாந்தம் படிக்க வேண்டும் என்ற ஆவல் மிகுந்திருந்தும் அதற்குத் தக்க ஆசார்யன் கிடைக்காமல் மிகவும் கவலையடைந்து பல ஆஸ்ரமங்களில் சென்று விசாரித்தும் பலன் கிடைக்காமல் தன் இஷ்டதெய்வமான முருகப் பெருமானைத் தினந்தோறும் 'நீயே குருவாக வந்து அருள் புரியவேண்டும் என்று பிரார்த்தித்து வந்ததாகவும் அதன் பலனாக அந்த முருகப்பெருமானே தனக்குக்

குருவாக வந்து அருள்புரிகின்றார் இது சத்தியம் எள்ள ளவும் சந்தேகமில்லை என்றும் கூறினார்.

மேலும் அவர் கூறினார், ஒரு நாள் என் தகப்பனாருடன் சின்மாயனந்தா லெக்சருக்குப் போய்விட்டு வீட்டிற்கு வந்ததும் தகப்பனாருடன் அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது உறவினனான ஒரு பையன் அங்கு வந்தான். அவன் ஸன்யாஸிகள் என்றாலே ஒரு வெறுப்புடன் பேசுவான் அவனை தகப்பனார் ஏன் நீ சின்மயா லெக்சர் கேட்பதில்லையா? என்று கேட்டார்கள். அவனுக்கு ஸன்யாஸிகளையே பிடிக்காது என்று நான் சொன்னேன் அவன் உடனே என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? அப்படி ஒன்றுமில்லை இப்போது கூட நான் ஒரு நண்பன் வீட்டில் ஒரு ஸ்வாமிஜி அவர்கள் 30, 40 பேர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். அவரும் சின்மயா மிஷனைச் சேர்ந்தவர் தான். கீழ்ப்பாக்கத்தில் பத்மா அம்மா வீட்டில் தங்கியிருக்கிறார் என்று சொன்னான். இதைக் கேட்ட என் தகப்பனார் வெகு நாளாக அவர்களும் வேதாந்த பாடம் ஆங்கிலத்தில் சொல்லக் கூடியவர்களாக இருந்தால் நல்லது என்று மிகவும் ஆவலுடன் இருந்ததால் உடனே என்னை அனுப்பி ஸ்ரீசுவாமிஜி அவர்களைத் தரிசித்து நமது வீட்டிற்கு வருவார்களா என்று தெரிந்த வரும்படிச் சொன்னார்கள். எனக்கும் அளவற்ற ஆனந்தம், என் புண்ணியம் பரிபக்கு வத்தை அடைந்ததென்று மன நிறைவுடன் மறுதினம் ஸ்வாமிஜியைத் தரிசிக்கச் சென்றேன். அந்த சமயம் 30, 40 பேர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியின் வகுப்பு முடிந்து வெளியில் வந்து கொண்டிருந்தார்கள். நான் தனியாகச் சென்றதால் சுவாமிஜி அவர்களைத் தனியாகத் தரிசிக்கலாமோ? கூடாதோ? என்று மிகுந்த அச்சமாக இருந்தது. அப்போது வெளியில் நின்ற ஒருவரிடம் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களைப் பார்க்க வேண்டும். நான் தனியே வந்திருக்கிறேன் பார்க்கலாமா?

என்று கேட்டேன். அவர் போகலாம் என்று சொல்லியும் நான் தயங்கிக்கொண்டே இருந்தேன். அதன்பிறகு நீங்கள் ஸ்வாமிஜி அவர்களிடம் தெரிவித்து, வரலாமா என்று பர்மிஷன் கேட்டு வாருங்கள் என்றேன். இவைகளை யெல்லாம் பக்கத்து அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்ததனாலோ என்னவோ ஸ்ரீ சுவாமிஜி ""Come in" என்று குரல் கொடுத்தார். அவ்வளவுதான் அந்தக்குரல் இதுவரை என் ஆயுளிலேயே கேட்காததைப் போன்று அபூர்வ சக்தி உடையதாக ஆகர்ஷித்தது. அதன் பிறகு உள்ளே சென்று தரிசித்தவுடன் எனக்கு ஏற்பட்ட அனுபவம் வாக்கினால் வர்ணிக்க கூடியதல்ல. அந்த உணர்ச்சியிலிருந்து விடுபட்டு அதன்பிறகே ஸ்வாமிஜியே நமஸ்கரித்தேன். உள்ளத்தில் பூரண நிறைவு ஏற்பட்டது. அதன்பின் என் பிதாவின் விருப்பத்தைத் தெரிவித்தேன். அப்பா ரமணபக்தர் என்பதைத் தெரிவித்ததுமே ஸ்வாமிஜி அவர்களும் மிகவும் மகிழ்ந்தார்கள். அதன்பிறகு சுவாமிஜி அவர்கள் சென்னையில் 5, 6 நாட்கள் தான் தங்கப்போவதாகவும், எந்த இடத்திலும் தங்கிப் பாடம் சொல்வதில்லை என்பதையும் தெரிவித்து அதன்பிறகு மறுநாள் எங்கள் வீட்டிற்கு வருவதாகத் தெரிவித்தார்கள். அதன்படியே நாங்கள், என்னுடைய மைந்தனான திரு. கோபால் ராமனை அனுப்பி ஸ்ரீ சுவாமிஜி அவர்களை அழைத்து வரச்செய்தோம். அப்போது என் பெற்றோர்களும் வந்து சுவாமிஜி அவர்களைத் தரிசித்து தங்களுடைய தள்ளாத வயதின் சிரமத்தைப் பாராமல் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்கள். அதன்பிறகு தகப்பனார் ரமண பக்தராக இருப்பதால் ரமணருடைய உபதேச சாரத்தை 30 ஸ்லோகங்கள் 5, 6 நாட்களில் சொல்ல முடியும் என்று நினைத்த ஸ்ரீ சுவாமிஜி அன்றே 5 ஸ்லோகங்களை மிகவும் ஸ்பஷ்டமாகத் தனக்கே உரித்தான குரலினிமையுடன் சொல்லி அவைகளின் அர்த்தத்தையும் விளக்கினார்கள். இதுவரை யாருமே இவ்வளவு தெளிவாக எடுத்துச் சொல்ல

வில்லையானதாலும் கேட்டவுடன் ஏற்பட்ட அனுபவத்தினால் அப்பா மிகவும் பிரமிப்பும் மிகழ்ச்சியும் அடைந்தார்கள். நாம் செய்த பாக்யம் தான் நமக்கு இப்பேர்பட்ட மஹான் கிடைத்திருக்கிறார் என்று அடிக்கடி அப்பா சொல்லிக் கொண்டே இருந்தார்கள்'' என்று கூறினார்.

இதே போல் சுவாமிஜி அவர்கள் பல இடங்களுக்குச் சென்று பிரச்சாரம் செய்கின்றபோது அம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்கி (Madras) வரும்போது அவர்களுடைய வீட்டில் ஸ்ரீ சுவாமிஜி அவர்களுக்காக ஸத்ஸங்க ஹாலுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் தங்கி அருள்புரிந்து வருகின்றார்கள்.

நாளாக ஆக நம் சுவாமிஜியின் ஆற்றலும் அறிவும் ஞானமும் மக்களைக் கவர்ந்தது. எங்கு சென்றாலும் எல்லா ஜாதியினராலும் போற்றப்பட்டார்கள். ஆண் பெண் பேதம் இன்றி சிஷ்யர்கள் ஆனார்கள். இவரைக் குருவாகப் பெற்றவர்கள் அனைவரும் இஷ்ட தேவதையைப் பார்ப்பதைப் போல் எண்ணினார்கள்.

''சாந்தீபனி சாதனாலயா''

நம் சுவாமி சின்மயானந்தருக்கு ஓர் விருப்பம். தான் பெற்ற இன்பம் யாவரும் பெறவேண்டும். ஆத்மாக்கள் உய்ய வேண்டும். உயர்ந்த ஞானத்தை மக்களிடையே பரப்ப வேண்டுமென்று இதன் விளைவு தான் ''சாந்தீபனி சாதனாலயா'' இந்த சாதனாலயா கட்டுவதற்கும், எப்படியெல்லாம் அமைத்தால் சாதனாலயா நன்றாகப் இருக்கும் என்பதற்கும் நம் சுவாமிஜி தன் குருநாதரான சுவாமி சின்மயானந்தருக்குப் பேருதவியாயிருந்தார்.

இப்போது சாந்தீபனி சாதனாலயா இருக்கும் இடம் பெரும் காடாயிருந்தது. பாம்புகளும், பூச்சிகளும் நிறைந்த

இடம். இதில் ஸ்ரீ ஜனசார்தன் என்ற எஞ்சினீயர் தன் மனைவி, குழந்தைகளுடன் ஒரு குடிசையிலும், நம் சுவாமிகள் இன்னும் சிலர் வெவ்வேறு குடிசைகளிலும் இருந்து கட்டிட வேலைகளைக் கவனித்து வந்தார்கள்.

அப்போது அங்குள்ள சூழ்நிலையில் ஒருவருக் கொருவர் எத்தனையோ வித மனோபாவங்கள் ஆனால் ஸ்வாமிஜி தான் எதிலும் தலையிடாமல் மிகுந்த பணிவுடனும், திறமையுடனும் தன் குருநாதரின் விருப்பமான லட்சிய அமைப்பான சாதனாலயா கட்டிட வேலைகளை எல்லோ ருடைய உதவியுடனும் செய்து முடித்தார்.

''தபாவன் பிரசாத்''

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை —திருக்குறள்

நம் சுவாமி சின்மயானந்தர் வேதாந்த விஷயங்களும் ஆச்ரம நடவடிக்கைகளையும் குறித்து வெளியிடும் பத்திரிகையான 'தபோவன் பிரசாத்' என்ற பத்திரிகையை நடத்தும் பொறுப்பை நம் சுவாமிஜியிடம் கொடுத்தார்.

பிறகு புத்தகத்திற்கு வேண்டிய விஷயங்களை எடிட் செய்தார். சரியான விஷயங்கள் பிரசுரத்திற்குக் கிடைக்காதபோது தானே இரண்டு மூன்று புனை பெயரில் வேதாந்த விஷயங்களை எழுதுவார். எப்படியெல்லாம் விஷயங்களைத் தயார் செய்தால் புத்தகம் அழகான முறையில் அமையும், தன் குருநாதர் பெயரும், புகழும் உலகெல்லாம் பரவும் என்ற நோக்கத்துடனே செய்தார். சாந்தீபனி சாதனாலயாவில் இருந்து பம்பாய் முப்பது மைல் தூரம். எது வேண்டுமானாலும் பம்பாய் போக வேண்டும் சில சமயம் சைக்கிள் மூலமாயும், சில சந்தர்ப்பங்களில் பஸ் மூலமாயும், கால்நடையாயும் போவார்.

விஷயங்கள் தயாரித்து அச்சாபீசில் கொடுத்து புரூப் பார்த்து அச்சிடும் வேலை வரை எல்லா வேலைகளையும் தானே செய்து வந்தார். இவ்விதம் சுற்றி அலைந்து வேலைகளை முடித்துக் கொண்டு ஆச்ரமம் திரும்பும்போது அகலமாய் விடும். இவருக்கு வேண்டிய ஆதாரம் இருக்காது. எத்தனையோ நாள் பட்டினி உடல் சோர்ந்தாலும் உள்ளம் சோரவில்லை.

அப்போது தபோவன் பத்திரிகை சம்பந்தமான வேலைகளைக் கவனித்து வந்த நேரம் போக மீதி நேரங்களில் சுவாமி சின்மயானந்தரிடம் வேதாந்த பாடம் பயின்று வந்த எட்டு மாணவர்களுக்கு இவரும் சில சமயம் பாடம் சொல்லுவார். சத்சங்கங்கள் நடத்தினார்.

கூழுக்கு உப்பு இல்லை என்பார்க்கும்,
குற்றி தைத்த காலுக்கோர் செருப்பு இல்லை
என்பார்க்கும்
பாலுக்கு சர்க்கரை இல்லை என்பார்க்கும்
கனக தண்டி மேலுக்கு ஓர் பஞ்சனை இல்லை என்
பார்க்கும் விசனம் ஒன்றே.

சிறு வயதில் பயின்ற மேற்குறித்த இப்பாடலை மறவாமல் தன் வாழ்க்கையில் ஏற்படும் சந்தர்ப்ப சூழ் நிலைகளில் பயன்படுத்திக் கொள்வார். மனவருத்தம், உடல் வருத்தம் பார்க்காது பசியையும், தூக்கத்தையும், பிறரின் இகழ்ச்சி, புகழ்ச்சியை எல்லாம் கருத்தில் கொள்ளாது தன் கருமமே குறியாக இருப்பார். எப்போதும் அமைதி தான். யாவும் நமக்கு இட்டப்படி தான் நடக்கும் என்று எல்லா சிரமங்களையும் வேலைகளைச் செய்து வந்தார். வேண்டுதல், வேண்டாதான் தாள் சேர்ந்தவர்க்கு என்ன குறை? இவர் மனதில் ஓர் விருப்பம் ஏற்பட்டது. தான் கொஞ்ச காலம் தனிமையில் ரிஷிகேசில் இருக்க வேண்டும், இன்னும் நிறைய வேதாந்த விஷயங்களைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் தோன்றியது. ஒரு நாள் சுவாமி

சின்மயானந்தரிடம் தான் ரிஷிகேஷ் போகப்போகும் நோக்கத்தைக் கூறி தன்னைப் போக அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதற்கு சுவாமி சின்மயானந்தர் ''சாப்பாட்டிற்கு கஷ்டமாகுமே. அங்கே போய் என்ன செய்யப் போகின்றாய்? என்றார். அங்குள்ள சாதுக்கள் எப்படி இருக்கின்றார்களோ அப்படி நானும் இருக்க விழைகிறேன், என்று கூறி உத்திரவு பெற்றுக்கொண்டு ரிஷிகேஷ் புறப்பட்டார்.

''ரிஷிகேஷில் ஆச்ரமம் அமைத்தது''

விட்டேன் உலகம் விரும்பேன்
இரு வினை வீணருடன்
கிட்டேன் அவருரை கேட்டும்
இரேன் மெய் கெடாதநிலை
தொட்டேன் சுக, துக்கமற்று விட்டேன்
தொல்லை நான் மறைக்கும்
எட்டேன், எனும் பரம் என்னிடத்தே
வந்திங்கெய்தி யதே.

– பட்டினத்தார்

ரிஷிகேஷிற்குச் செல்வதற்கு முன் மீண்டும 1965–ஆம் ஆண்டு தென்னக யாத்திரை துவங்கினார். இவ்விதம் போகும் வழியில் எங்கெங்கு சாதுக்கள் இருக்கின்றார்களோ அவ்விடங்களுக்குச் சென்று அவர்களைச் சந்தித்துப் பேசினார். சாஸ்திரத்தில் கூறியபடி பிரம்ம நிஷ்டர்கள் யாரும் இவருக்கு அகப்படவில்லை. இவர் இவ்விதம் சுற்றி வரும் வேளையில் வள்ளி மலையில் ஓர் சுவாமி இருப்பதால் கேள்விப்பட்டு அவரைப் பார்க்கச் சென்றார். அப்போது அங்கிருந்த சுவாமி சில நிமிடங்கள் பேசியவுடன் நம் சுவாமிஜி நன்கு சாஸ்திரம் கற்றவர். உயர்ந்த சாது என்பதைப் புரிந்து கொண்டு, ''தாங்கள் அதிகப் பசியோடு

இருக்கின்றீர்கள், இதோ ஒரு நொடியில் சாப்பாடு தயார் செய்து விடுகிறேன்'' என்று கூறி சமைத்து சாப்பாடு போட்டார்.

நம் சுவாமிஜியின் அருகில் அமர்ந்து எல்லாம் சூடாக இருக்கின்றது. நன்றாய் சாப்பிடுங்கள் என்று அன்பாய் உபசரித்தார். சாம்பார், ரசம் எதை எடுத்து வாயில் வைத்தாலும் ஒரே பூண்டு வாசனை. சுவாமிஜி பூண்டு சாப்பிட்டதே இல்லை. அதனால் எதையும் சாப்பி முடியவில்லை, மோர் இருக்குமா? என்று கேட்டார். அது மலைப்பிரதேசம் அந்நேரத்தில் அங்கு மோரும் இல்லை. தண்ணீர் விட்டு சாதம் சாப்பிட்டார். பூண்டு சமையலையும் இந்த சுவாமிஜியையும் மறக்க முடியாத ஓர் சம்பவம் நம் சுவாமிஜியின் வாழ்க்கையில். இவ்விதம் பல சுவாமிகளை யெல்லாம் தரிசித்துக்கொண்டே கன்னியாகுமரி சென்றார்.

அங்கு கடற்கரையில் சில மணி நேரம் அமர்ந்து ஆழ்ந்த அலைகடல், பெரிய அலை, சிறிய அலை செய்யும் 'ஓ, வென்ற சப்தம், நுரை, குமிழ் இவ்வளவும் அடங்கிய நீர்ப்பரப்பையும் அகன்ற நீல வானத்தையும் எவ்வித அசைவும் இல்லா மனதோடு, ஆழ்ந்த அமைதியோடு பார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது ''இங்கு ஓர் ஆச்ரமம் அமைத்துக் கொண்டால் நன்றாக இருக்கும்'' என்ற ஆலோசனை எழுந்தது. ஆனால் அதிக ஜன நடமாட்டம் இருக்கும் இடம் ஆனதினால் பெரிய சாமியார் என்ற பெயரும் கூட்டமும் பெருகும். இதனால் நமக்கும் என்ன பயன்? என்று சிந்தித்து இந்த ஆலோசனையை விட்டுவிட்டார்.

புராதன பெருமை வாய்ந்த ரிஷிகேஷுக்கேச் சென்று விடுவோம் என்று தீர்மானித்து தபஸ்விகளின் இருப்பிடமான இமயம் வந்து சேர்ந்தார். இங்கு ஆந்திர ஆச்ரமத்தில் தங்கினார்.

யாத்திரையினால் ஏற்பட்ட சிரமம் தாங்காமல் நல்ல ஜுரம் வந்துவிட்டது. புதிய சூழ்நிலை, இடமும் புதிது இவருக்கு உதவி செய்யும் ஆட்கள் இல்லை.

இவர் சிரமப்படுவதையும், இவர் திருமுகத்தில் பிரகாசித்த ஞானமும், அருட்கண்பார்வையும், அகிலானந்தா என்ற வயோதிக சன்யாஸினியின் மனதைக் கவர்ந்தது. தன் மகன் போன்ற பாவனையுடன் இவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். பிறகு ஜுரம் குணமாயிற்று. இச்சமயத்தில் தான் சுவாமி சுத்தானந்தா நம் சுவாமிஜியோடு நட்பு கொண்டார்.

இனி நாம் எங்காவது குடில் அதைத்துக் கொள்ள லாமென்று தகுந்த இடத்தைத் தேடி இமயமலை அடிவாரம் எல்லாம் சுற்றி வந்தார். எங்கும் இவர் மனம் கவரும் இடம் கிடைக்கவில்லை. இறுதியில் ஒரு நாள் 'புராண ஜாடி' இடப்பக்கமா போகும் போது அங்கு சில சாதுக்கள் குடில் அமைத்துக் கொண்டு வசித்து வந்தார்கள். 'புராண ஜாடி' என்றால் 'பழம் புதர்' என்று பெயர். இந்த இடம் பார்ப்பதற்கு அழகாய் இருக்கவே, அங்குள்ள சாதுக்களைப் பார்த்து இங்கு ஒரு குடியா அமைத்துக் கொள்ள லாமா என்று கேட்டார்? ஓ, ஓ பிரேம்சே லகாஸியே மஹராஜ்! என்றார்கள். குடியாவிலிருந்து கங்கைக்குப் போக நேராய் பாதை அமைத்துக் கொள்ளலாமல்லவா என்றார்? அது மட்டும் முடியாது, எல்லா குடியாவையும் தாண்டிக் கொண்டு தான் போகவேண்டும் என்றார்கள். சுதந்திர மனப்பான்மை யுள்ள நம் சுவாமிஜிக்கு இந்த அபிப்பிராயம் பிடிக்கவில்லை.

ஆகையால் இன்னும் சற்றுதூரம் சென்று பார்ப்போம் என்று வந்துகொண்டிருக்கும் போது, சாதுக்கள் சந்தடிகூட இல்லாமல், தெய்வீக ஒளி வீசும் உயர்ந்த இமய மலையின் அடிவாரத்தில் ஆழ்ந்து அகன்று தன் லட்க்ஷியத்தை நோக்கி தக்ஷிண முகமாய், புரண்டு செல்லும் கங்கையும், மறுபுறம் சந்திரபாகா என்ற நதி. இதன் மத்தியில் சிறிய

தீவுபோல் மரங்களும், புதரும் நிறைந்த ஏகாந்தமான இடம் இவர் மனதைக் கவர்ந்தது. அந்த இடத்தில் புல்லால் குடியா கட்டும் வேலை ஆரம்பித்தார்.

இதைக் கவனித்த சில சாதுக்கள், இந்த இடம் வெள்ளத்தில் மூழ்கக் கூடியது, முன்பு ''நேபாளி பாபா'' என்ற பெரிய சாதுவும் அவருடன் இன்னும் சிலரும் இருந்தார்கள். இவர்கள் உறங்கிக் கொண்டிருந்தபோது ஓர் நாள் இரவு கங்கை பிரவாகத்திற்கு அனைவரும் இரையாகி விட்டார்கள். ஆகையால் தாங்கள் வேறு இடம் மாற்றிக்கொள்வது நல்லது என்றார்கள். இவ்விஷயம் கேட்டும் நம் சுவாமிஜி மனம் தளரவில்லை. இந்த உடலாகிய குடிலில் உயிர் எத்தனை நாள் இருக்கும் என்பதே நம்பிக்கை இல்லாதபோது, இந்த புல் குடிசை என்ன சாஸ்வதம் என்று தைரியமாகவே குடில் அமைத்தார். அங்கு சுற்று வட்டாரத்திலேயே இல்லாத அளவிற்கு அவ்வளவு அழகாய் சிறிய கண்கவரும் குடில் அமைந்தது. பார்ப்பவர்கள் அனைவரும் இவ்வளவு அழகாய் அற்புதமாய் அமைந்திருக்கின்றதே இந்தக் குடியா என்று மீண்டும், மீண்டும் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள்.

இமயத்தை இருப்பிடமாகக் கொண்ட முனிவர்கள். இறைவனின் சடையில் தோன்றிய கங்கை பிரவாகம், பட்க்ஷீகளின் கானம், உலகியல் எண்ணங்களுக்கே இடம் இல்ல பேரின்பம் தரும் அமைதியான பழம்புதரின் மத்தியில் அமைந்த ''பரத்வாஜர்'' ஆச்ரமத்தைப் போன்ற குடில். அப்பப்பா! இத்தனை நாட்கள் அவருக்குக் கிடைக்காத பேர் அமைதி பெரியோர் கூறிய துறவறத்தின் மகிமையும், பெருமையும் உணர்ந்து அகண்டாகார சிவ போகத்தில் தன்னை மறந்து எதையும் வேண்டா இதயத்துடன் ஆனந்தமாய் சுதந்திர புருஷனாய், இயற்கையே துணையாய்க் கொண்ட வாழ்க்கை! அங்கு சற்று தூரத்திலுள்ள நேபாளி க்ஷேத்திரத்தில் கொடுக்கும் ரொட்டியும், பருப்பும்,

கங்கா ஜலமும் ஆகாரம். இந்தப் பேரின்பச் சூழ்நிலையையும், அமைதியையும் பயன்படுத்தி பிரம்ம சூத்திரத்திற்கு'' வியாக்கியானம் எழுதிக் கொண்டு வந்தார்.

ஓர் நாள் காலை டீ தாயரிப்பதற்காக ஸ்டவ் பற்ற வைக்கும்போது, தவறி குடில் பற்றிக்கொண்டது. புல் குடிசை தீ பட்டால் கேட்க வேண்டுமா? அக்னி தேவனுக்கு நல்லவிருந்து. தான் உயிராய் நேசித்த விலை மதிப்பற்ற, கிடைதற்கரிய புத்தகங்களையும், பிரம்ம சூத்திர உரையையும் எடுத்துக் கொண்டு வர உள்ளே புகுந்தார். தீயின் வேகம் அதிகமாகி நம் சுவாமிஜியின் பாதங்களைச் சுட்டுவிட்டது. ஏதோ சில புத்தகங்களுடன் வெளியில் வந்துவிட்டார்.

தான் கற்ற வேதாந்தம் செயல்படுவதைப் பார்வையிட்டார், மிதிலா பட்டணம் எரிந்ததைக் கேட்ட ஜனகரைப் போல் இருந்தார். உள்ளம் ஆழ்கடல் போல் அமைதியாகவே இருந்தது.

துறவியின் பரிபூரணத் தன்மையைச் சோதிக்க ஏற்பட்ட நிகழ்ச்சியாகவே இது அமைந்தது. மேலும், மேல் நோக்கிக் கொழுந்து விட்டெரியும் தீயைப் பார்த்து வாய்விட்டு இப்பாடலைப் பாடிக்கொண்டே ஓவென்று சிரித்தார்.

மூலம் தரோ; கேவலம் ஆஸ்ரஙந்தீ:
பாணி த்வயே போக்தும் அமத்ரயந்த்:!
கந்தாம் அபிஸ்த்ரீம் இவ குத்ஸயந்த்:
கௌபீன வந்த; கலு பாக்கியவந்த்: !

அயலார் குடில் அக்னிக்கு அரையாகும் காட்சியைப் பார்ப்பது போல் சாட்சியாய் நின்று தன் குடில் எரிவதைப் பார்த்தார். கைகளையே பிட்சா பாத்திரமாய் கொண்ட, கௌபீனதபரி நான் பாக்யசாலி என்பதின் அனுபவமும் தனக்கு அமைந்ததாய் மகிழ்ந்தார்.

மீண்டும் அதே இடத்தில் குடில் அமைக்கும் வேலையை ஆரம்பித்தார். இதை கவனித்த அருகிலிருந்த சாதுக்கள், ஒரு முறை எரிந்த இடத்தில் ஏன் கட்டுகின்றீர் என்றார்கள். அக்னிதேவதை இந்த இடத்தை புனிதமாக்கி விட்டது. ஆகையால் இங்கு குடில் அமைவதில் தவறில்லை என்று கூறி அங்கேயே தன் குடியாவை அமைத்துக் கொண்டார்.

பிக்ஷைக்கு தினம் போல எல்லா சாதுக்களும் போட்டி போட்டுக் கொண்டு பிக்ஷை வாங்குவதைப் பார்த்து, நான் அமைதியாய்க் காத்திருந்து இறுதியில் எது கிடைக்கின்றதோ அதை வாங்கிக் கொண்டு வருவார். கொண்டுவந்த பருப்புடன் கொஞ்சம் அரிசியும் கலந்து பொங்கல் போல் செய்து சாப்பிடுவார். உயர்ந்ததோ, சுவையற்றதோ எதுவானாலும் கிடைத்ததைக் கொண்டு பசியாற்றி வந்தார்.

அவ்வப்போது நேப்பாளி க்ஷேத்திரத்தில் துப்பட்டி கம்பளி முதலியவற்றைத் தானம் செய்வார்கள். இதை அங்குள்ள சாதுக்கள் சென்று வாங்கிக்கொண்டு வருவார்கள். சுவாமிஜியும் ஒரு முறை துப்பட்டி வாங்கிக்கொண்டு வந்தார் கொஞ்சம் நாட்கள் கழித்து வேறு ஓர் க்ஷேத்திரத்தில் மீண்டும் துப்பட்டி கொடுக்கிறார்கள் என்பதை வேறு ஓர் சாது சுவாமிஜியிடம் கூறினார். உடனே சுவாமிஜியின் மனதில் நாமும் சென்று வாங்கிக்கொண்டு வருவோம் என்ற எண்ணம் உதித்தது உடனே தன் மனதை கவனித்தார் நம்மிடம் துப்பட்டி இருக்கும்போது ஏன் மீண்டும் இவ்வித ஆசை எழுந்தது? துப்பட்டி இல்லாதவர்களுக்கு தானே கொடுக்கின்றார்கள் நம்மிடம் துப்பட்டி இருக்கும் போது ஏன் இந்த கீழ்மையான புத்தி தோன்றியது? இவ்விதம் பழக்கம் இல்லாத நமக்கு இவ்வெண்ணம் தோன்றக் காரணம் என்ன? என்று யோசித்தார். பிக்ஷை கொண்டு வந்து சாப்பிடுவதினால் தான் இவ்வித எண்ணம் நம்மில்

தோன்றியது. இனி பிக்ஷைக்குப் போகக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டு எதுவும் சாப்பிடாமல் தன் குடியாவின் கதவை மூடிக்கொண்டு படுத்துவிட்டார். அன்று முழுவதும் ஒன்றும் சாப்பிடவில்லை. மறுநாள் சுவாமிஜி பிக்ஷைக்கு வராததைக் கவனித்த சிவானந்த சுவாமி என்ன காரணமோ சுவாமிஜி பிக்ஷைக்கு வரவில்லை. நாம் பிக்ஷை எடுத்துக்கொண்டு போகலாம் என்று பிக்ஷையைக் கொண்டுவந்து சுவாமிஜிக்குக் கொடுத்துச் சாப்பிடச் செய்தார்

இவ்விதம் சிறுவயதிலிருந்தே தன்மனதில் ஏதாவது தவறான எண்ணம் தோன்றினால், அதற்குக் காரணத்தை ஆராய்ந்து மீண்டும் அவ்வித எண்ணமே வராமல் அழித்துவிடுவார். உதாரணத்திற்கு சுவாமிஜியின் பன்னி ரெண்டாவது வயதில் நிகழ்ந்த ஓர் சம்பவம்:

சுவாமிஜியின் பக்கத்து வீட்டுக்காரர் பிள்ளை ராணுவத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். தான் அங்கு பெண் பார்த்துத் திருமணம் செய்து கொள்வதாய் தந்தைக்கு எழுதி இருந்தான். தந்தையும் வெளியூர்களில் உள்ள சில பெண்கள் ஜாதகங்களைப் பார்த்தார். அவைகள் பொருத்தமாக இல்லை. ஆகையால் கிராமத்திலேயே உள்ள இரண்டு பெண்களின் ஜாதகம் பொருத்தமாக இருந்ததைப் பார்த்து வைத்திருந்தார். பிள்ளை ஒருமாத விடுமுறையில் கிராமத்திற்கு வந்தான். அப்போது அந்தப் பெண்ணைகளைப் பார்த்தான். அவன் மனதிற்கு சம்மதம் இல்லை. அதனால் இந்த வரன்கள் வேண்டாம் என்று கூறிவிட்டான்.

அடுத்த வருடம் விடுமுறையில் வந்து வேறு சில பெண்களைப் பார்த்துத் தனக்குப் பிடித்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டான்.

சுவாமிஜியின் இல்லத்தில் அச்சமயம் திருமணம் இருந்த தினால் இந்தத் திருமணத்திற்குப் போகமுடியவில்லை

ஆனாலும் சுவாமிஜியின் மனதில் கிராமத்தில் இருந்த அழகாய், குணவதியான பெண்ணை வேண்டாம் என்று கூறி வேறு இடத்தில் திருமணம் செய்து கொண்டானே, இப்பெண் ரம்பை, ஊர்வசி போல் மிகுந்த அழகாய் இருப்பாளோ என்னவோ? நாம் போய்ப் பார்க்கவேண்டும் என்று மிக்க ஆவல் கொண்டார். வயதில் மிகச் சிறியவர் ஆனதினால் ஏன் பெண்பார்த்துத் தேர்ந்தெடுக்கின்றார்கள் என்பது பற்றிய விஷயங்கள் ஒன்றும் தெரியாது.

சில பெரியோர்கள் மணமக்களைப் பார்ப்பதற்காக அவர்கள் இல்லத்திற்குச் சென்றார்கள். சுவாமிஜியும் அச்சமயம் அங்கு சென்றார். பெரியோர்களை நமஸ்கரித்து எழுந்த மணமக்களைப் பார்த்தவுடன் மணப்பெண் யார் என்பது கூறாமலே தெரிந்தவிட்டது சுவாமிஜிக்கு. பெரிய உருவம் கழுத்தே தெரியவில்லை. இப்பெண்ணை இவன் எப்படி விரும்பினான் என்று இவருக்குப் புரியவில்லை. அழகு என்றால் என்ன என்பதும் இவருக்குப் புரியவில்லை. அழகிய பெண்ணை வேண்டாம் என்று இப்பெண்ணை மணந்துகொண்டானே இது என்னவென்று புரியாமல் இவர் மனம் குழம்பிவிட்டது.

செய்வது தெரியாமல் ஆற்றங்கரைக்குச் சென்று அமர்ந்து சிந்திக்கலானார். ஏன் இவ்விதம் செய்தான் இவள் எவ்விதம் அழகு ஆக முடியும்? எது அழகு? என்றெல்லாம் சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது. இதற்குத் தகுந்த விடையும் தன் மனத்திற்குள்ளிருந்தே கிடைத்தது. நீ யார் அழகைப் பற்றி தீர்மானிக்கவும், சிந்திக்கவும்? அவன் திருமணம் செய்த கொண்டவன் தான் தீர்மானிக்க வேண்டும். அவன் மனதில் அவளிடம் ஏதோ ஓர் அழகு இருந்ததாய்த் தோன்றியிருக்கும். ஒரு வேளை கண் அழகாய் இருந்திருக்கலாம் அழகைப் பற்றி நிர்ணயிக்க நீ யார்? உனக்கு என்ன சம்பந்தம்

இதில் என்று தன்னைத்தான் கேட்டுக் கொண்டார். இதை விட ஓர்படி உயர்வான எண்ணம் எழுந்தது. அவன் இவளைத் தேர்ந்தெடுக்காமல் போயிருந்தாலும், தான் மிகுந்த அழகி என்று அவள் தன்னைப் பற்றி நினைத்துக்கொண்டு இருக்கலாம். அழகு, அழகு இல்லை என்பது பற்றி சிந்திக்க உரிமை ஏது? இதன் பின்பு அழகு, அழகு இல்லை என்பது பற்றிய சிந்தனைக்கே இன்று வரை இடம் கொடுத்தது இல்லை.

இந்த நிகழ்ச்சி சுவாமிஜியின் மனதில் அச்சிறிய வயதிலேயே பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது. நமக்கு சம்பந்தம் இல்லாத விஷயங்களில் எல்லாம கற்பனை செய்து கொள்கின்றோம். இவ்விதம் சிறு சிறு விஷயங்களால் நாம் செய்யும் கற்பனைகளால் நாமே நம்மில் துக்கததை ஏற்படுத்தி கொள்கின்றோம். சம்பந்தமற்ற சிந்தனையினால் குழப்பம் ஏற்படுகின்றது என்று இதில் ஓர் புரட்சிகரமான உண்மை இருப்பதைத் தெளிவாய் உணர்ந்தார்.

இவ்விதம் தன்மனதைத் தானே பரிசீலித்துச் செயல்படும் நடுநிலை உடையவர் ஆனதினார் மனதில் உதிக்கும் எண்ணங்களே வாழ்க்கைக்கு பந்தத்தையும், விடுதலை யையும் தரும் இயல்புள்ளது என்று நன்கு அறிந்தார். மனதை ஓர் கருவியாகவே உபயோகப்படுத்தும் பக்குவம் உள்ளவர் மனதிற்கு அடிமை ஆவது இல்லை.

இதன் பின்பு பிக்ஷைக்குப் போவதையே நிறுத்தி விட்டார். நேப்பாளி ஷேத்திரத்து அதிகாரி சுவாமிஜியின் உயர்வை அறிந்து குடிலுக்கே பிக்ஷை அனுப்பி வைத்தார்.

தன்னைத் தேடிவரும் சாதுக்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வார். சிற்சில சமயங்களில் அவர்களுடன் உண்பதையும் பகிர்ந்து கொள்வார். அவர்கள் தங்குவதற்

காகவும் தன் குடியாவை விட்டு தான் வெளியில் தங்குவார் தன்னைத் தேடிவரும் சாதுக்களுக்கு மரியாதை கொடுத்து அவர்களை அன்போடு உபசரிக்கும் விதம் இன்றும் பார்க்கவேண்டிய ஒன்று.

தினந்தோறும் காலை நான்கு மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்து, டீ தயார் செய்து சாப்பிட்டு கைலாச ஆசிரமத்திற்கு பிரம்மசூத்ரா பாடம் கேட்கப் போவார். கடும் குளிர், கைகால்கள் சுவாதீனம் இல்லாமல் செய்யும், உடம்பின் உள் எலும்பையும் தொடும். அக்குளிரையும் பொருட்படுத்தாமல் சென்று பாடம் கேட்டு வந்தார். அவர்கள் போதிக்கும் முறை விரைவில் பாடம் கற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. வேறு என்ன செய்வது, யாரிடம் சென்று பாடம் கேட்பது என்று யோசித்துக் கொண்டிருந்த போது ஓர் நண்பர் மூலம் அங்குக் கைலாச ஆசிரமத்திலேயே சுவாமி தயானந்தர் அவர்களும் பிரம்ம சூத்திரப்பாடம் ஹிந்தியில் சொல்லுகின்றார் என்பதைக் கேள்விப்பட்டு, அவரிடம் சென்று பாடம் கேட்டு வந்தார். இவர் போதிக்கும் முறை மனதிற்குப் பிடித்தமாக இருந்தது.

தினந்தோறும் கைலாச ஆஸ்ரமத்தில் பாட்டு கேட்டுக் கொண்டு வந்தவுடன் தன் குடில் கதவை மூடிக்கொண்டு, தான் படித்ததை எல்லாம் மனனம் செய்த பின்பே வெளியில் வந்து மற்றவர்களுடன் பேசுவார்.

கைலாச ஆஸ்ரமத்தில் உள்ள கீர்த்திஸ்தம்பத்தில் சுவாமி தயானந்த சரஸ்வதி சின்மயாமிஷின் என்று பொரித்திருக் கின்றார்கள். அதை இப்போதும் பார்க்கலாம்.

தான் எதைப் படித்தாலும் அதைச் செயலுக்குக் கொண்டு வருவதே இவர் இயல்பு. கசடறக்கற்று, கற்றபடி செயலாற் றுவார். இதனால் தலை சிறந்த ஆச்சார்யன் என்று இன்னும் கூறுகின்றார்கள்.

ரிஷிகேஷ் ஆஸ்ரமத்தில் வசித்து வந்த சாதுக்கள்

சுவாமி சுத்தானந்தா

சுவாமி சுத்தானந்தாவின் பூர்வாஸ்ரமப் பெயர் அனுமந்தராவ். உலக வாழ்க்கையில் மிகுந்த வெறுப்பு ஏற்பட்டு அதை விலக்கிக் கொள்ளும் வகை தெரியாமல் 1962ம் வருஷம் டிசம்பர் மாதம், ரிஷிகேஷ் வந்தார். சிவானந்தா ஆஸ்ரமம் சென்று அங்கு தங்குவதற்கு இடம் கேட்டார். இவருக்கு பாஷை தெரியாததினால் ஆந்திரா ஆஸ்ரமத்திற்குப் போகுமாறு கூறினார்கள். அதன்பின் ஆந்திர ஆஸ்ரமத்திலும் கொஞ்சம் நாட்கள் வேலையோ, இடவசதியோ கிடைக்காமல் கஷ்டப்பட்டார். அதன் பிறகு எப்படியோ ஆந்திரா ஆஸ்ரமத்தில் தங்கவும், வேலை செய்யவும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் சாப்பாடு போடுபவர்கள் இல்லை. நேபாளி ஷேத்திரத்தில் பிக்ஷை வாங்கிச் சாப்பிட்டு வந்தார்.

ஆனால் இவர் மனதிற்கு சாந்தி இல்லை. நல்ல சாதுக்களோடு தொடர்பு கொள்ள வேண்டும், நம் மனக்கவலைகளை சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தார். உத்திரகாசி போவதற்காக சுவாமிஜி நவம்பர் மாதம் ஆந்திரா ஆஸ்ரமத்தில் வந்து தங்கினார்.. சுத்தானந்தருக்கு ஸ்வாமிஜியை பார்த்ததும் மனதிற்கு சத்வகுணம் உள்ளவர் போல் இருக்கின்றார், இவர் பேசும் விதம், மற்றவர்களுடன் பழகும் விதம் எல்லாம் அலாதியாக இருக்கின்றது. இவரிடம் நம் மனக்குழப்பம், கவலைகளைச் சொல்ல வேண்டும் என்று தோன்றவே சுவாமிஜியிடம் தனக்கு ஏற்பட்ட இன்னல்களை எல்லாம் கூறினார். அப்போது சுவாமிஜி இவருக்கு சொன்ன ஆறுதல் வார்த்தைகள், இவர் மனதிற்கு சாந்தி கொடுத்தது கடமைகளைச் செய்துகொண்டு வாருங்கள் எல்லாம் சரியாய் விடும் என்றார்.

1965 ல் சுவாமிஜி வேதாந்தம் கற்பதற்காக ரிஷிகேஷ் வந்து ஆநதிர ஆஸ்ரமத்தில் தங்கினார். கைலாஸ் ஆஸ்ரமம் சென்று பாடம் படித்துக்கொண்டு வந்தார். அப்போ தெல்லாம் நம் சுவாமிஜிக்கு வேண்டிய சேவைகள் செய்து வந்தார்.

சுவாமிஜிக்கு ஆந்திர ஆஸ்ரமத்திலிருந்து சாந்தமான ஒரு இடத்திற்கு போயிருப்பதாக ஸங்கல்பமாயிற்று. ஆகையால் புராணா ஜாடியில் குடியா அமைத்துக்கொண்டு அங்கு தங்கிவிட்டார். அப்போதெல்லாம் கூட தன்னால் இயன்ற உதவிகள் செய்துவந்தார்.

1967ம் வருஷம் சுவாமிஜியின் யக்ஞா விசாகப் பட்டினத்தில் ஏற்பாடாகி இருந்தது. சுத்தானந்தாவை சிவராத்திரியின் போது விசாகப்பட்டினம் வரவழைத்து சன்யாச தீக்ஷை செய்துவைத்தார். அதன்பின் மறுதினமே சுத்தானந்தா சென்னைக்குப் போய் விட்டார். அங்கு கொஞ்சம் நாட்கள் இருந்த பின்பு, மீண்டும் ரிஷிகேஷிற்கு வந்து முன்போல் ஆந்திரா ஆஸ்ரம வேலைக்களைப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

1970 ல் இருந்து சுவாமிஜியின் ஆஸ்ரம வேலைகளைச் செய்ய வேண்டும் என்று வந்துவிட்டார். ஆஸ்ரமத்திற்கு தினத்திற்கு தினம் வரும் மக்கள் பெருகிக் கொண்டே இருந்தார்கள். மேலும் சில பிரம்மச்சாரிகள் தங்கியி ருப்பார்கள். கிரகஸ்தர்கள் வருவார்கள். இவர்களுக் கெல்லாம் இடவசதி சாப்பாடு வசதி யாத்திரைப் போவோர்களுக்கு வேண்டிய ஏற்பாடு முதல் யாவும் இவரே கவனித்து வருகிறார்.

சுவாமிஜியின் ஆஸ்ரமம் பெரியதாக ஆக வேண்டும். என்று சுவாமிஜியின் சீடர்கள் விரும்பினர். அவர்கள் தாங்களாகவே சுவாமிஜியின் அனுமதியுடன் 50 அறைகளுடன் கூடிய

கட்டிடங்களைக் கட்ட ஏற்பாடு செய்தனர். அதனைத் தானே முன் நின்று சுவாமி சுத்தானந்தா நிறைவேற்றினார். சுவாமிஜி எப்போதும் யக்ஞா செய்து கொண்டு இருப்பார், எப்பொழுதாவது இடையில் இங்கு வந்து தங்குவார். அப்போது கூட்டம் பெருகிவிடும். அப்போது சுவாமிஜியின் ஆலோசனையோடு என்னென்ன வேலைகள் செய்ய வேண்டுமோ அவற்றை மனம் கோணாமல் செய்வார். சுவாமிஜியின் குறிப்பறிந்து யார், யாருக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் குருசேவையாகவே செய்வார். சுவாமிஜி வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் சமயங்களில் இவரே ஆஸ்ரமத்தைப் பொறுப்புடன் கவனித்து வருகின்றார். வெளிநாட்டிலிருந்து சுவாமிஜி வந்தவுடன் அவருக்குத்தானே சமையல் செய்து போடுவார். எது சுவாமிஜிக்குப் பிடிக்குமோ அக்காரியங்களையே செய்வார். சுவாமிஜியும் இவருக்கு மிகுந்த அன்பும் மரியாதையும் காட்டுவார்.

சிறந்த குருபக்தி உடையவர். ஆஞ்சநேயர் ராம காரியத்திற்கு எவ்விதம் உதவி செய்தாரோ அவ்விதம் இவர் சுவாமிஜியின் ஆஸ்ரம காரியங்களில் சேவை செய்து கொண்டு வருகின்றார். சுவாமிஜியைத் தரிசிக்க வருபவர்கள் அனைவருக்கும் அனைத்து உதவிகளையும் அயராது இன்றும் செய்து கொண்டு வருகிறார்.

1981–ம் வருஷம் 22ந் தேதி ஆகஸ்டு மாதம் சுவாமிஜீயின் பழைய குடியாவை மாற்றிப் பெரியதாய் கட்டவேண்டும் என்று ஆரம்பித்தார். குடியாவின் கூரையைப் பிரித்தவுடன் பலத்த மழை தொடர்ந்து பல நாட்கள் விடாமல் பெய்தது.

சுவாமிஜி அமெரிக்காவிலிருந்து இந்தியா வருவதற்கு இரண்டே மாதங்கள் உள்ளன. ரிஷிகேஷில் சரியான

சாமான்களோ ஆட்களோ நாம் தேடும்போது கிடைப் பதில்லை. எல்லா வேலைகளும் சுவாமிஜி வருவதற்குள் முடியவேண்டுமே என்று நினைத்திருக்கும் போது இவருக்கு உடல்நிலையும் சரியில்லாமல் போய்விட்டது. இந் நிலையிலும் இரவு, பகல் பாராமல் இக்கட்டிடத்தைக் கட்டி முடித்தார். நவம்பர் மாதம் மூன்றாம் தேதி ஹோமம் வளர்த்து பூஜை செய்து சுவாமிஜி வந்து தங்குவதற்கு ஏற்றதாய்ச் செய்துவிட்டார். கட்டிடத்தின் அழகையும் அமைப்பையும் பார்த்துசுவாமிஜி மிகவும் சந்தோஷப் பட்டார்.

சுவாமி சிவானந்தா

சுவாமி ரிஷிகேஷ் வந்ததிலிருந்து சுவாமிஜியுடன் இருந்தவர். இன்று வயதான நிலையிலும் சுவாமிஜியைப் பற்றி பெருமையாய் எப்போதும் பேசிக் கொள்வார். இப்போது இங்கு இவ்வளவு பெரிய மஹாத்மாக்கள் வெகு சிலர்தான் உள்ளனர். இவருடைய ஆஸ்ரமத்தில் இருக்கும் பாக்கியம் தனக்குக் கிடைத்திருக்கிறது என்றும் தன்னுடைய கடந்தகால வாழ்க்கையையும் சுவாமிஜியோடு ஏற்பட்ட உறவையும் பற்றி அவர் கூறியதை இனி கவனிப்போம்.

இவருடைய சொந்த ஊர் விஜயவாடாவிற்கு அருகில் உள்ள கிராமம். இவருக்குச் சிறுவயதில் தந்தை இறந்து விட்டார். இதன் பின்பு இவர் ''நான் காசிக்குப் போய்விடப் போகிறேன்'' என்று வீட்டில் கூறிவிட்டு காசிக்கு வந்து விட்டார். அங்கு நாட்டுக்கோட்டை செட்டியார் சத்திரத்தில் இவர் அமர்ந்திருந்தார். பூமாலைகள், கட்டும் வேலை செய்பவர் விசாலாட்சி, வினாயகர் காலபைரவர் முதலிய சுவாமிகளுக்கு மாலைகள் தொடுத்துக் கொடுத்து வந்தார். இதன்பின் அங்குள்ள ஒரு மாணவன் இவருக்கு இந்திக் கற்றுக் கொடுத்தான்.

இதன் பின்பு இவருக்கு விசாலாட்சி அம்மன் கோவில் திறப்பது, பூட்டுவது மாலைகள் தொடுத்துக் கொடுப்பது போன்ற வேலை கிடைத்தது. அந்தக் கோயிலில் ஒரு கிரகஸ்தர் வேதங்கள் படித்துக் கொண்டிருந்தார். அவரிடம் இவர் தனக்குக் கீதை கற்றுக் கொடுக்கும்படி கேட்டார். அவர் 'விஸ்வரூப தர்சன யோகம்' இவருக்குக் கற்றுக் கொடுத்தார். இதன் பின்பு கயாவில் உள்ள நடராஜர் கோவிலுக்கு அனுப்பப்பட்டார். அங்கு ஒரு வருடம் பூஜை செய்து கொண்டு இருந்தார். அதன் பின்பு அயோத்தியாவில் உள்ள ராமர் கோவிலுக்குப் புஷ்பமாலை தொடுக்கும் வேலைக்கு அனுப்பப்பட்டார். அதன் பின்பு அயோத்தியாவில் உள்ள ராமர் கோவிலுக்குப் புஷ்பமாலை தொடுக்கும் வேலைக்கு அனுப்பப்பட்டார். இதன் பின்பு மீண்டும் காசி வந்தார். இங்கும் தனக்கு விருப்பம் இல்லை. ஆதலால் ரிஷிகேஷ் வந்தார். இங்கு காளி கம்பளிவாலா க்ஷேத்திரத்தில் இவர் அமர்ந்திருந்தார். அப்போது அங்கு ஒரு சுவாமி கோபாலனந்தா என்பவர் இவரை நீ யார்? எந்த ஊர்? என்பதெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டு உனக்கு பிரம்மச்சரிய தீக்ஷை தருகிறேன் என்று கங்கைக்கு அழைத்துக்கொண்டு வந்து உபநயனம் செய்து காவி உடை கொடுத்தார். இதன் பின்பு கோபால்சாமி என்ற சாதுவிடம் இவரை அறிமுகம் செய்து பிக்ஷைக்கு ஏற்பாடு செய்தார். சில நாட்களுக்குப் பிறகு பத்ரி, கேதார், கங்கோத்ரி, யமுனோத்ரி முதலிய இடங்களுக்கு யாத்திரை செய்யும்படிக் கூறினார். அதன்படி இவரும் பாதயாத்திரை செய்துவிட்டு மீண்டும் காசியில் ஆறுமாதம் தங்கியிருந்த பின்பு மீண்டும் ரிஷிகேஷ் வந்தார்.

இச்சமயத்தில் தான் சுவாமிஜி பம்பாயிலிருந்து ரிஷிகேஷ் வந்து ஆந்திரா ஆஸ்ரமத்தில் தங்கியிருந்தார். காளி கமபளிவாலா க்ஷேத்திரம், நேபாளி க்ஷேத்திரம் இவற்றில் ஏதாவது ஒன்றுக்கு சுவாமிஜி பிக்ஷைக்கு செல்வார்.

அச்சமயத்தில் சிவானந்தாவிற்கு. சுவாமிஜியோடு பரிச்சயம் ஏற்பட்டது.

புராணா ஜாடியில், குடியா கட்டுவதற்கு சுவாமி சுத்தானந்தாவுக்கு உதவி செய்தார். இதன்பின்பு இவருக்கு சுவாமிஜியிடம் ஓர் அன்பும் நட்பும் ஏற்பட்டது. குடியாவின் முன்பு பள்ளமாக இருந்ததினால் தினம் கங்கையிலிருந்து கற்கள் கொண்டு வந்து போட்டு உயரமாகச் செய்து கொண்டு இருப்பார். ஷேத்திரத்திற்குச் சென்று தினந்தோறும் சுவாமிஜிக்கு பிக்ஷை கொண்டு வந்து கொடுப்பார். இங்கு தங்குவதற்கு இடம் இல்லாததினால் மாயா குண்ட் என்னும் இடத்தில் ராமானந்தாவும் இவரும் தங்கி இருந்தார்கள். ராமானந்தர் சமையல் செய்து கொடுப்பார். இவர் சுவாமிஜிக்குக் கொண்டு வந்து கொடுப்பார்.

சுவாமி சுத்தானந்தா, ராமானந்தா, விசுத்தானந்தா, சிவானந்தா கோபால் சுவாமி முதலியவர்கள் சுவாமிஜி யோடு தொடர்பு கொண்டிருந்தார்கள். இவர்கள் அனைவருக்கும் சுவாமிஜியின் பேச்சைக் கேட்கவும், தொண்டு செய்யவும் தங்களை அறியாமலே ஓர் ஆவல் ஏற்பட்டதாம். சுவாமிஜியின் கையில் பணம் இருந்தாலும் அதைத் தன்னலத்திற்கு என்று உபயோகப்படுத்திக் கொள்ள மாட்டாராம். மற்ற சாதுக்கள் எவ்விதம் எளிமையாக இருக்கின்றார்களோ அவ்விதமே தானும் எவ்வித பேதமும் இல்லாமல் இருந்து வந்தார். தனக்குக் கிடைக்கும் துணிகளை எல்லாம் இவர்களுக்குக் கொடுப்பார் வைத்திய உதவி வேண்டுமானாலும் பண உதவி வேண்டு மானாலும் செய்வார்.

ஒரு முறை பெருமழை பெய்து குடியாவின் பின்புறம் உள்ள சந்திர பாகாவில் வெள்ளம் போய்க் கொண்டிருந்தது. சிவானந்தா சுவாமிகளுக்கு பிக்ஷை எடுத்துக்கொண்டு வரும்போது நீரில் மூழ்கிவிடும் நிலை ஏற்பட்டதாம்.

உடனே கையில் உள்ள டிபன் டப்பாவை மேலே உயர்த்திக் கொண்டு சுவாமிஜி உங்களுக்கு சாப்பாடு எப்படி கொண்டு வருவேன் என்று நினைத்த மாத்திரம் தன்னை அறியாமல் கரை சேர்ந்து விட்டாராம். உள்ளே சென்று சுவாமிஜி சாப்பீட்டீர்களா என்று கேட்டார். இல்லை ஒருவரிடம் சொல்லியிருந்தேன் அவர் கொண்டு வரவில்லை என்று அமைதியாய் அமர்ந்திருந்தார். இவ்விதம் கொண்டு வந்து கொடுத்தால் சாப்பிடுவார் இல்லையென்றால் கேட்க மாட்டார்.

ஒருமுறை பெருமழை பெய்து குடியாவின் பின்புறம் ஓடும் சந்திரபாகாவில் வெள்ளம் வந்து குடியாவினுள்ளும் நீர் புகுந்துவிட்டது. அப்போது சுவாமிஜி புத்தகங்களை எடுத்துக்கொண்டு ஹரித்வார் சென்று மூன்று நாட்கள் தங்கிவிட்டார். சுவாமிஜி மீண்டும் ரிஷிகேஷ் வருவதற்குள் சிவானந்தா குடியாவை நன்றாய் கட்டி வைத்துவிட்டார்.

வெய்யில் காலங்களில் சுவாமிஜி மிசௌரி சென்று தங்குவார். அப்போது சுவாமிஜிக்கு சேவை செய்வதற்கு இவரும் போவார். அங்குள்ள நூலக மேனேஜர் சுவாமிஜிக்கு பழக்கமானார். ஓர் நாள் சுவாமிஜியை உபன்யாசம் செய்யும்படி கேட்டார். அதன்படி அங்கு ஓர் நாள் உபன்யாசம் செய்தார். அங்குள்ளவர்களுக்கு மிகவும் சந்தோஷம். அடுத்த வருடம் எங்களுக்கு யக்ஞா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். சுவாமிஜி அவர்கள் கோரிய வண்ணம் மிசௌரி சென்று அங்கு யக்ஞம் செய்தார்.

ஹரித்துவாரத்தில் Bharat Heavy Electrical Factory யின் மேனேஜராக இருந்த ஜகதீஸ் பிரசாத் என்பவர் சுவாமிஜியை உபன்யாசம் செய்யும்படி அடிக்கடி ஹரித்துவாரத்திற்கு அழைத்துக் கொண்டு போவார். அங்கு சுவாமிஜி உபன்யாசங்கள் செய்வார். இவருக்கு இருந்தது

எல்லாம் சிறிய புற்சூடில் அதனுள் பருக்கைக் கற்களால் ஆனதரை, ஓர் கட்டில், புத்தகங்கள் வைக்கும் சிறிய அலமாரி, ஓர் கமண்டலம், அரிகேன் விளக்கு இவ்வளவுதான். அக்குடியில் பாம்பும் வசிக்கத் தானும் அதில் வசித்து வந்தார். பாம்பு என்றால் படையும் நடுங்கும். இதை நினைக்க நம் மனமும் நடுங்குகின்றது. அஹிம்ஸா தர்மராஜாவான வரை தீண்டுவதற்கு அப்பாம்பிற்கு மனம் இல்லை போலும் ஞான சொருபமாய் புராணாஜாடி மஹாத்மாவாக பயம் அற்று பொறுமையின் சொரூபமாய் இருந்தார். ஓர் சமயம் சுவாமிஜி வெளியில் சென்று குடிலுக்குத் திரும்பும்போது இப்பாம்பு சென்று கொண்டிருந்ததைப் பார்த்து என்னிடம் தங்கள் அறையில் சிட்டுக்குருவிகள் கூடுகட்டி இருக்கின்றது முட்டைகளைச் சாப்பிடப் பாம்பு அறைக்கு வரும் ஆதலால் தாங்கள் குருவிக் கூட்டை எடுத்துவிடுங்கள் என்று சுவாமி சிவானந்தரிடம் கூறினாராம். ஆனால் சுவாமி சிவானந்தா குருவிக் கூட்டைக் கலைக்க மனம் வராமல் விட்டு வைத்தி ருந்தார். ஓர் நாள் பாம்பு அவர் குடிலில் புகுந்துவிட்டது. அப்போது சுவாமிஜி கூறியது எவ்வளவு உண்மை என்பதை உணர்ந்து கூட்டை எடுத்துவிட்டாராம்.

நாளைக்கு இது வேண்டும் என்று எதையும் வைத்துக் கொள்ளும் குணம் இல்லாதவர். சாது என்றால் எப்படி இருக்கவேண்டுமோ அதற்கு உதாரணப் புருஷனாய் எங்களுக்கு வாழ்ந்து காட்டினார் என்று பெருமைப்பட கூறினார் சுவாமி சிவானந்தா அவர்கள்.

பங்க் கிருஷ்ணானந்தர்

பங்க் கிருணானந்தர் என்பவர் நம் சுவாமிஜியை அடிக்கடி வந்து தரிசனம் செய்துகொண்டு போவார். இங்கு ரிஷிகேஷில் சில சாதுக்கள், பங்க் என்னும் பச்சை இலையை அரைத்துச் சாப்பிடுவார்கள். இது ஒருவித போதை தரும்

இத[illegible] தன்னை மறந்து சிலமணிநேரம் அப்படியே இருப்பார்கள். கிருஷ்ணானந்தம் இந்த இலையை நாள் தவறாது சாப்பிடுவார். இது இல்லாமல் இருக்கமாட்டார். ஆகையினால் இவருக்கு பங்க் கிருஷ்ணானந்தர் என்ற பெயர் ஏற்பட்டது. வெய்யிற் காலங்களில் இந்த இலையை சாப்பிட்டுவிட்டு கங்கையில் கழுத்தளவு நீரில் நின்று கொண்டிருந்து விட்டு வெளியில் வருவார். தன்னை ஒரு மகாத்மா என்று கூறிக்கொள்வார். இவர் உடம்பு மிகவும் ஆரோக்கியமாக இருந்தது.

கோடைக்காலங்களில் இந்த பங்க் என்னும் இலை உலந்துவிடும். இவர் இந்த இலையை கோடைக்காலத்திற்கு என்று வாங்கிச் சேர்த்துக்கொள்ள மாட்டார். இதை வாங்கிச் சாப்பிடுவதற்கு இவரிடம் பணம் இருக்காது. இதற்கு நம் சுவாமிஜியிடம் வந்து பணம் கேட்டு வாங்கிக்கொண்டு போவார். அச்சமயம் இவருக்குத் தெரிந்த வேதாந்த வாக்கியங்களைச் சொல்லி சுவாமிஜியை சிரிக்க வைப்பார். மேலும் நம் சுவாமிஜியின் தயை குணத்தையும், இவர் பெரிய மஹாத்மா என்றும் கூறுவார். பங்க் சாப்பிடப் பணம் ஏன் கொடுக்க வேண்டும் என்று சிலர் கேட்டார்கள். அதற்கு சுவாமிஜி பங்க் ஒன்று தான் அவர் சாப்பிடுகின்றார், அதை நிறுத்திவிட்டால் அவர் உயிரோடு இருப்பதே கஷடமாய் விடும் என்று கூறி மனப்பூர்வமாய் அன்போடு அவருக்குப் பணம் கொடுத்து அனுப்புவார். இவர் சாப்பிடுவதைத் தடுக்க மாட்டார். யாருக்கு எது அதிகப்பிரியமோ அதைக் கொடுத்து அவர்களை ஆனந்தப்படுத்துவது இவருடைய உத்தமகுணம். நம் சுவாமிஜி கூறியது போலவே இவர் கொஞ்சம் வருஷத்திற்குப்பின் இந்த பங்க் வாங்கி சாப்பிட முடியாமலேயே இறந்தவிட்டார்.

சுவாமி ராமானந்தர்

இவர் கேரள தேசத்தைச் சேர்ந்தவர். தன் குடும்பத்தில் ஏற்பட்ட சில குழப்பங்கள் காரணமாய் ரிஷிகேஷ் வந்து விட்டார். இங்கு ஒரு ஓட்டலில் தங்கி வேலை பார்த்துக் கொண்டிருந்தார். சரியான சம்பளம் இல்லை. மேலும் சிறிய வயதானதினால் இவர் இருக்கும் சூழ்நிலை இவரை இன்னும் கீழ்நிலைக்கு ஆளாக்கி விடும்போல் இருந்தது.

அச்சமயத்தில் 1965–ல் நம் சுவாமிஜி ஆந்திரா ஆசிரமத்தில் தங்கி இருந்தார். அப்போது காலை வேளைகளில் டீ சாப்பிடுவதற்காக ஓட்டலுக்குச் செல்வார். அங்கு இந்த ராமானந்தா காலையில் இவருக்கு டீ கொடுப்பார். இவருக்கு நம் சுவாமிஜியின் மேல் மரியாதையும், பக்தியும் ஏற்பட்டது. ஒரு நாள் இவர் தன் கஷ்டங்களை எல்லாம் சுவாமிஜியிடம் கூறினார். நீ கவலைப்படாதே நான் இங்கு ஒரு குடியா கட்டப் போகின்றேன். அப்போது என்னோடு வந்த இருந்து விடு என்று கூறினார்.

இதன்பின் சுவாமிஜி தான் கூறியது போல் புராணா ஜாடியில் குடியா கட்டிக்கொண்ட பின்பு, ராமானந்தரும் இவருடன் தங்கிவிட்டார். சுவாமிஜியைப் பார்க்கப் பல ஊர்களிலிருந்தும் அன்பர்கள் வருவார்கள். ராமானந்தர் இவர்களுக்கு எல்லாம் சமையல் செய்து வந்தார்.

இதன் பின் இவருக்கு சுவாமிஜி மந்திர உபதேசம் செய்தார். ராமானந்தா என்று பெயர் சூட்டினார். இவர் எப்போதும் அதிகமாய்ப் பேசிக்கொண்டே இருப்பார். மற்ற சாதுக்களுடன் கோபித்துக் கொள்வார். சப்தமாய்ப் பேசுவார். அதனால் சுவாமிஜி இவரை மௌனம் அனுஷ்டிக்கும்படிக் கூறினார். சுவாமிஜியின் வாக்கு மீறாமல் மௌனமாக ஆறு

வருஷம் இருந்தார். ஆனால் எல்லா வேலைகளும் செய்துகொண்டு இருப்பார். இவ்வளவு நாட்கள் மௌத்திற்குப்பின் தான், எது மௌனம் என்று எனக்குத் தெரிந்தது. அவசியமானால் தான் பேசவேண்டும். இல்லா விடில் பேசக்கூடாது என்ற உண்மை எனக்குத் தெரிந்து விட்டது. இந்த உண்மையைத் தெரிந்து கொண்ட பின்பு நான் மௌனத்தை விட்டுவிட்டேன் என்று இப்போது கூறுகின்றார். மழை, குளிர் எதுவானாலும் தினம் காலை மூன்று மணிக்கே எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு பாகவதம் படிப்பார். பூஜை செய்வார். இவ்விதம் தவறாமல் செய்து வருகின்றார். இவருக்கு வேண்டிய எல்லா சௌகர்யங் களையும் சுவாமிஜி செய்து கொடுத்திருக்கின்றார். எனக்கு இங்கு ஒரு குறையும் இல்லை இங்கேயே இப்படியே இருந்து விட்டு இந்த உடலை இந்தப் புனித ஸ்தலத்தி லேயே முடித்துக்கொள்ள வேண்டும் என்பது என் விருப்பம் என்று கூறுகின்றார்.

''சுவாமி மனீஷானந்தா''

சுவாமிஜி சன்யாசம் கொடுத்த முதல் பெண்மணி இவர். இவருடைய பூர்வாஸ்ரமப் பெயர் கமன். இவர் பம்பாய் நகரத்தைச் சேர்ந்தவர். தாய்மொழி குஜராத்தி, இவர் சிறுவயதிலிருந்தே ஞானத்தில் நாட்டம் உடையவர். இவர்கள் வீட்டில் பகவத் கீதா படிக்கக் கூடாது என்பார்கள் சிறிய வயதில் எதற்கு என்று கண்டிப்பார்கள். இவர் யாருக்கும் தெரியாமல் படுக்கைக்குள் புத்தகத்தை வைத்துக் கொண்டு யாரும் பாராமல் படிப்பாராம். இவருடைய கருத்தும், போக்கும் வீட்டில் உள்ளவர்களுக்குப் பிடிக்க வில்லை. இவருக்கு விருப்பம் இல்லாமல் இருந்தும் பல வந்தமாகத் திருமணம் செய்தார்கள். எட்டு வருஷம் சம்சாரத்தில் இருந்தார். அதன் பின்பு சுவாமி சின்மயானந்தர் உபன்யாசங்களைக் கேட்பது, யக்ஞை சாலையில் புத்த கங்கள் விற்பது, ஆஸ்ரமத்தில் சின்மயானந்தர் எந்த வேலைகள் கூறினாலும் அவற்றைச் செய்வது ஆஸ்ர

மத்திற்காகப் பணம் வசூலிப்பது' ஆஸ்ரமத்திற்கு வரும் அன்பர்கள், சாதக்களுக்குச் சேவை செய்வதுமாக இருந்தார்.

1970–ல் முதல் முறை பம்பாயில் சுவாமி தயானந்தருடைய கீதல யக்ஞா ஏற்பாடு செய்தார்கள். இவருடைய உபன்யாஸம் கேட்டவுடன் எனக்கு அளவற்ற ஆனந்தமும், திருப்தியும் ஏற்பட்டது நான் எதைத் தேடிக் கொண்டிருந்தேனோ அந்த பிர்மவித்தை இவர் மூலம் கிடைக்கும் என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது.

நமக்கு இது குருபாதுகையில் இருந்து கிடைத்த பிரசாதம் பிரசாதத்தை எவ்வளவு பவ்யமாக எடுத்தக் கொள்வோமோ அவ்வளவு பவ்யமாக எடுத்துக் கொள்வோமா அவ்வளவு உயர்வாக நாம் இவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் ஏற்பட்டது. சுவாமி சின்மயானந்தர் சற்குண சொரூபமாகவும் இருப்பது நம் தயானந்த சுவாமி நிர்குண சொருபமாகவும் போன்ற பாவம் இவர்கள் மனதில் ஏற்பட்டது. இதன் பின்பு சுவாமிஜியோடு தன் மனநிலையைக் கூறி ரிஷிகேஷில் ஓர் வீடு கட்டிக்கொண்டு அங்கேயே தங்கி விடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இங்கு ஆஸ்ர மத்தில் சுவாமிஜியின் புல் குடிசையைத் தவிர இரண்டு சாதுக்கள் அறை மட்டும் இருந்தது. பெண்கள் தங்குவதற்கு வசதி இல்லை. ஆதலால் சுவாமிஜி ஆஸ்ரமத்திற்கு சற்று தூரத்தில் 1972–ல் நிலம் வாங்கிக் கொண்டார். 1974–ல்சிறிய வீடு கட்டிக்கொண்டார். சுவாமிஜி அருகில் இருந்து விமரிசையாய் க்ருஹப் பிரவேசம் செய்து வைத்தார். இங்கேயே தங்கி சாஸ்திரம் படித்துக் கொண்டும், சுவாமிஜி ரிஷிகேஷ் வரும் போதெல்லாம் அவருக்கு சேவை செய்து கொண்டும் இருந்தார். 1980 அக்டோபர் மாதம் சுவாமிஜி சன்யாசம் கொடுத்து 'மனீஷானந்தா என்று பெயர் வைத்தார். இதன் பின்பு புராணா ஜாடியிலேயே தங்கி விட்டார்கள்.

1984 மார்ச் மாதம் மூளையில் கட்டி வந்தது. சுவாமிஜியையே நினைத்துக்கொண்டு, நம்பிக்கையோட ஆபரேஷன் செய்து கொண்டேன். எல்லோரும்

ஆச்சரியப்படும் வகையில் எனக்கு விரைவில் குணம் ஏற்பட்டது என்று கூறி ஆனந்தப்படுகின்றார்கள் மனீஷா னந்தா. தன்னால் இயன்ற சேவை செய்து கொண்டு ஆஸ்ரமத்திலேயே இருக்கின்றார்கள்.

''சாந்தானந்த சுவாமிஜி''

காந்தி அய்யர் சென்னையில் சுவாமி சின்மயானந்தா அவர்கள் முதலில் ஆரம்பித்த கீதா ஞான யக்ஞங்களில் கலந்து கொண்டு சேவை செய்து வந்தவர். சுவாமிஜி பிரம்மச்சாரியாய் வோல்டாஸ் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். அச்சமயம் சென்னையில் நிகழ்ந்து கொண்டிருந்த கீதாயக்ஞத்தில் காந்தி அய்யரைச் சந்தித்தார். அக்காலத்தில் காந்தி அய்யர் சத்சங்கர், பாலவிஹார் முதலியவைகள் நடத்திக் கொண்டிருந்தார்.

சுவாமிஜியின் திறமை, புத்தி நுட்பம், சமஸ்கிருத ஞானம் முதலியவைகளைக் கண்டு இவர் சுவாமிஜியை மிகவும் நேசித்தார். அடிக்கடி சுவாமிஜியும், காந்தி அய்யர் அவர்களும் சந்தித்தார்கள். இதன் பின்பு சுவாமிஜியே பாலவிஹார், சத்சங்கங்கள் நடத்த ஆரம்பித்து விட்டார். சென்னையில் கீதா யக்ஞங்கள் நடந்த போதெல்லாம், சுவாமி சின்மயானந்தருக்கு குறிப்பறிந்து நன்கு திறம்பட எல்லா வேலைகளையும் செய்து வந்தார். இதைக் கண்டு காந்தி அய்யர் எல்லாக் காரியங்களையும் செய்கின்றார் என்பதைப் பார்த்து மேலும் மேலும் இவரைப் போற்றி புகழ்வார்.

இதன்பின்பு காந்தி அய்யர் சுவாமி சின்மயானந்தரிடம் சன்யாச தீக்ஷை ஏற்றுக்கொண்டார். சுவாமி சாந்தானந்தா எனப் பெயரிடப்பட்டார். இவர் பல வருடம் சென்னை யிலேயே சின்மயானந்த ஸ்வாமிஜிக்கு எல்லாவித தொண்டு களும் செய்து வந்தார்.

பம்பாய் சாந்தீபனி சாதனாலயா ஆரம்பித்த பின்பு அங்கு சென்று தங்கி இருந்தார். அப்போது சுவாமி தயானந்தரின் பிரம்மச்சாரிகள் பயிற்சி நடத்திக்கொண்டு இருந்தார். இவரும் தவறாமல் எல்லா வேதாந்த வகுப்புகளுக்கும் செல்வார். சுவாமிஜியிடம் மிகுந்த பக்தி, விசுவாசம் கொண்டிருந்தார்.

ஒரு சமயம் சுவாமிஜி ரிஷிகேஷ் சென்றிருந்தார். அச்சமயம் சுவாமி சாந்தானந்தரும் ரிஷிகேஷ் சென்று தன்னுடைய கமண்டலத்தில் நிறைய பசும்பால் விட்டு தான் பெரியவர் என்ற முறையில் அன்புடன் கொடுத்தார். சுவாமிஜியிடம் இவருக்கு அளவற்ற பக்தி. தன் மகனைப் போல் பாவித்தார். சுவாமிஜியிடம் உள்ள தயையும், அன்பும் இவரை மிகவும் கவர்ந்தது. சுவாமிஜியின் தயை நிறைந்த வார்த்தைகளையும் செயல்களையும் அடிக்கடி பேசி மகிழ்வார். ''தயானந்தா'' என்ற சொல்லுக்கு எல்லா வற்றையும் பூர்ணமாய் உள் உணர்வுடன், பார்ப்பவர் என்ற பொருள். தன்னைப் போல் பிறரை நேசி என்ற ஆன்றோர் வாக்கின்படி ஆத்ம சொரூபத்தை தவிர அன்னியமாய் 'நான் வேறல்ல' எல்லாம் பிரம்மம் என்று பார்ப்பவர். பெயருக்கு ஏற்றார்போல் கோபமோ, தாபமோ, நிந்தனையோ கபடமோ, புறங் கூறுதலோ இல்லாது ''தயை'' அல்லது கருணை சொரூபமாய் விளங்கும் மூர்த்தி ஆனது பற்றி தயானந்த சரஸ்வதி என்ற திருநாமம் பெற்றுள்ளார் போலும் என்று கூறி சுவாமிஜி தயை காட்டிய சில சந்தர்ப்பங்களை உதாரணத்திற்கு எடுத்துக் கூறினார்.

ஓர் பிரம்மச்சாரி சுவாமிஜியிடம் பாடம் பயின்றவர் சுவாமிஜியின் கருணையால் தான் நான் திருத்தினேன், சாஸ்திரம் கற்கின்றேன் என்று கூறியவர், பிறகு மனம் மாறி வேறு இடத்திற்குச் சென்றுவிட்டார். சில மாதங்கள் கழித்து சுவாமிஜியைத் தரிசிப்பதற்காக வந்தார். சுவாமிஜி அவரிடம் எப்போதும் போல் ஒன்றும் நடக்காதது போல் அன்பாய் பேசி ஆசீர்வதித்து வழி அனுப்பினார்.

ஓர் யதி சாந்தீபனிக்கு வந்திருந்தார். ஒரு வாரம் தங்கி பிரவசனம் கேட்டுவிட்டு சுவாமிஜியிடம் சென்று தான் உத்திர காசி, ரிஷிகேஷ் இன்னும் பல ஸ்தலங்கள் தரிசனம் செய்யவேண்டும் அதற்கு தாங்கள் தான் உதவி செய்யவேண்டும் என்று கூறவே சிறிதும் தாமதமின்றி அவருக்கு வேண்டிய பொருள் தந்து கருணையுடன் வழியனுப்பினார். இன்னும் இது போல் எவ்வளவோ சந்தர்ப்பங்கள் என்று கூறினார். சுவாமிஜியின் உதார குணத்தைப் பற்றிக் கூறிக்கொண்டே இருக்கலாம் என்றார்.

சுவாமிஜி அயல்நாட்டிற்குச் சென்றபோது சாந்தா னந்தஸ்வாமிஜி சாந்தீபனியிலேயே தங்கி இருந்தார். இவருக்கு வயதாகி விட்டபடியால் சுவாமிஜி இவருக்கு வேண்டிய எல்லாவித சௌகரியங்களையும் கவனித்துக் கொண்டார். தன் இறுதி காலத்தை ரிஷீகேஷில் தங்கி முடித்துக்கொள்ள விரும்பினார். சந்தானந்த ஸ்வாமிஜி. அதன்படி சுவாமிஜி இவரை ரிஷிகேஷிற்கு அனுப்பி எவ் வித குறையுமில்லாமல் கவனித்துக்கொள்ள ஏற்பாடு செய்தார். அவர் விரும்பியது போல் கங்காதீரத்திலேயே சாந்தானந்த ஸவாமிஜியின் அந்திம காலம் முடிவு பெற்றது. மங்களமாய் சுவாமிஜியின் தயையால் ஆனந்தமாய் இவருடைய ஈமச்சடங்குகள் நடந்தேறியது.

''சுவாமி பிரசாந்தானந்தா''

சுவாமி பிரசாந்தானந்தா சிறு வயதிலேயே நல்ல சமஸ்காரத்துடன் வளர்ந்தவர். பிராமணர்கள் வேதம் ஓதி அட்க்ஷதை மந்திரா போட்ட பின்பு தான் இவர் குடும்பத்தினர் சாப்பிவது வழக்கம்.

ஓர் நாள் இவர் சென்னையில் எழும்பூர் பக்கம் சென்றிருந்த போதும் நம் சுவாமிஜி தைத்ரிய உபநிஷத் உச்சரித்துக் கொண்டிருந்த சப்தம் கேட்டது. அக்குரலின் கம்பீரத்தைக் கேட்டு பிரசாந்தானந்தா உள்ளே சென்றார். அப்போது நம் சுவாமிஜியுடன் இன்னும் நால்வர் அமர்ந்து

உச்சரித்துக் கொண்டிருந்தார்கள். இவருக்கு ஸ்ரீ சுவாமி சின்மயானந்தர் நிகழ்த்தும் ஞானயக்ஞா என்று தெரியாது. ஸ்ரீ சுவாமி சின்மயானந்தர் ஓம்... என்று கம்பீரமான குரலில் பிரவசனம் ஆரம்பித்து பேசியது இவர் மனதிற்கு ஆனந்தமாக இருந்தது அப்போதெல்லாம் இருபத்தோரு நாட்கள் யக்ஞா நிகழ்ந்தது. அதில் இவரைஉறுப்பின ராகும்படி கூறினார்கள். ஆதலால் சின்மயா மிஷினில் இவர் உறுப்பினரானார்.

நம் சுவாமிஜியின் தைத்ரிய உபநிஷத் உச்சாரணத்தை கேட்டு இவருக்குத் தானும் அதைப் போல் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. இவரும் வேத பாட சாலை சென்று தைத்ரியம் கற்றுக் கொண்டார். அடுத்து வருடம் ஸ்ரீ சுவாமி சின்மயானந்தா அவர்களின் விவேக சூடாமணி யக்ஞா நிகழ்ந்தது. அதில் உறுப்பினர்களுக்கு மட்டும் என்று எழுதி இருந்தது. இவருக்கு இவ்விஷயம் தெரியாது. மெம்பர்ஷிப் பணம் கட்டாமல் தான் எப்படி உள்ளே செல்வது என்று புரியாமல் வெளியிலேயே உலவிக்கொண்டிருந்தார். ஸ்ரீ சுவாமி சின்மயானந்தர் நம் சுவாமிஜியிடம் அவரை உள்ளே வரச்சொல்லவும் என்று கூறினார். சுவாமிஜி இவரை உள்ளே வருமாறு அழைத்த வுடன் இவர் சென்று நம் சுவாமிஜியின் அருகில் அமர்ந்து விட்டார். அதற்குப் பிறகு இவர்களுக்குள் நட்பு ஏற்பட்டது.

நம் சுவாமிஜி பல இடங்களில் சத்சங்கள் நிகழ்த்தி வந்தார். அதில் தியானம், பகவத்கீதா உச்சாரணம் முதலியவை கற்றுக் கொடுத்து வந்தார். அப்போது ''வால்காட் பிரதர்சில்'' வேலை பார்த்துக் கொண்டிருந்தார் நம் சுவாமிஜி. அப்போது தினந்தோறும் சுவாமிஜியைப் பார்க்க ஆபீசுக்கு சென்று விடுவார் பிரசாந்தானந்தா. அங்கு சுவாமிஜிக்கு மிகுந்த மரியாதை இருந்ததால் இவர் உள்ளே சென்று, சுவாமிஜி

வரும் வரை காத்திருப்பார். அவர் வந்த பின்பு இருவரும் காப்பி சாப்பிட ஓட்டலுக்கு செல்வார்கள். பிரசாந்தானந்தா பணம் கொடுப்பதற்கு முன்பே, சுவாமிஜி தான் பஸ்செலவு முதலியவற்றிற்குப் பணம் கொடுத்துவிடுவார். சுவாமி பிரசாந்தானந்தாவிற்கு சுவாமிஜியின் பேரில் பெரும் மதிப்பும், அன்பும் ஏற்பட்டது.

சுவாமிஜி எங்கு செல்கின்றாரோ அங்கெல்லாம் இவரும் செல்வார். பெரும்பாலும் சத்சங்கங்களுக்கே செல்வார்கள்.

அனந்தராமதீக்ஷிதர் கதைக்கு இருவரும் செல்வார்கள் கதைகேட்டு வந்தபின்பு அனந்தராமதீக்ஷிதர் பேசியது போலவே துளிக்கூட மாற்றம் இல்லாமல் அப்படியே ''மிமிக்ரி'' செய்துகாட்டி எப்படி இருக்கின்றது என்று கேட்பாராம் இவர் செய்யும் மிமிக்ரியைப் பார்த்து ஆனந்தப்பட்டு நன்றாக இருக்கின்றது என்பாராம் பிரசாந்தானந்தா.

ஸ்ரீ சுவாமி சின்மயானந்தர் உபநிஷதங்களை மேடை ஏறிப் பேசுவது அனேக பிராம்மணர்களுக்குப் பிடிக்க வில்லை. அதற்குக் கொஞ்சம் எதிர்ப்பும் இருந்தது. இவ்விஷயம் நம் சுவாமிஜிக்கும் பிரசாந்தானந்தாவிற்கும் தெரியும். இருந்தாலும் ஸ்ரீ சின்மயானந்தர் செய்வது பொருத்தமானது என்று இருவரும் சேர்ந்து இரவு, பகல் சின்மயாமிஷன் அலுவல்களுக்கே முக்கியதுவம் கொடுத்து வந்தார்கள்.

முதல் வருடம் ஸ்ரீ சுவாமிசின்மயானந்தர் நிகழ்த்திய யக்ஞாவில் ஆறுபேர்கள்தான் இருந்தார்கள். அடுத்த வருடம் செய்த யக்ஞாவில் ஆயிரம் பேர்களுக்கு மேலிருந்தார்கள். அதற்கு ஒரு காரணம் நம் சுவாமிஜியின் பஜனை, கீதா உச்சாரணங்கள் முதலியவைகளே. இந்தப் பையன் யார்? எந்தப் பாடசாலையில் படித்தார்? என்று சில சாஸ்திரிகள் கேட்டிருக்கின்றார்கள்.

காலை நான்கு மணிக்கே எழுந்து வேதம் கற்றுக்கொள்ள எக்மோர் செல்வார்கள் இருவரும், இரவு பத்து மணிக்குத்தான் வீடு திரும்புவார்கள். அப்போது வீட்டிலுள்ளவர்கள் உறங்கிவிடுவார்கள். சுவாமிஜிக்குரிய சாப்பாடு வைத்திருப்பார்கள். அதை சாப்பிட்டு விட்டு அங்குள்ள கட்டிலில் உறங்கிவிடுவார் நம் சுவாமிஜி, சுவாமி பிரசாந்தானந்தாவும், நம் சுவாமிஜியும் எப்போதும் சின்மயாமிஷன் வளர்ச்சியை எப்படிப் பெருக்குவது. அதற்கு எப்படி வேலையெல்லாம் என்பது பற்றியே அதிக நேரம் பேசிக்கொண்டிருப்பார்களாம்.

அதன்பின் நம் சுவாமிஜி தியாகி பத்திரிகை வேலையாக பெங்களூர் சென்றார். நம் சுவாமிஜியின் பிரிவு இவருக்குத் தாங்க முடியவில்லை. ஆதலால் அடிக்கடி பெங்களூர் சென்று வருவார். அங்கு சுவாமிஜிக்கு இருந்த சிரமங்களைப் பார்த்து தன்னால் இயன்ற உதவிகள் செய்வார்.

சுவாமி பிரசாந்தானந்தா அவர்கள் ரயில்வேயில் வேலை செய்து கொண்டிருந்தார். நம் சுவாமிஜி செய்யும் தொண்டில் கலந்துகொள்வதும், சின்மயாமிஷன் தொண்டுகளைச் செய்துமாய் நாட்கள் ஓடியது. நம் சுவாமிஜி சாந்தீபனி சாதனாலயாவில் பிரம்பச்சர்ய பயிற்சி ஆரம்பித்த பின்பு தான் செய்துகொண்டிருந்த ரயில்வே வேலையை விட்டுவிட்டார். அதன் பின்பு சாந்தீபனி சாதனாலயா வேலைகளைக் கவனித்துக்கொண்டே சாஸ்திரங்களும் பயின்றார். சுவாமிஜியினோடு நட்பு கொண்டிருந்த இவர் நம் சுவாமிஜியால் சன்யாசதீக்ஷை செய்விக்கப்பட்டு, சுவாமி பிரசாந்தானந்தா என்று திருநாமம் சூட்டப்பட்டது. இன்று திருநெல்வேலியிலும் அதைச் சுற்றிலும் உள்ள சில ஊர்களிலும் பகவத்கீதா உபநிஷத் பாடங்களைப் போதித்து வருகின்றார். இவருடைய குரு பக்தியும், பணியும் சாந்தமும் மிகவம் போற்றுதலுக்குரியது. நம் சுவாமிஜி எதைக் கூறினாலும், அதை அப்படியே ஏற்று நிறைவேற்றும் தியாகபுத்தி உள்ளவர் சுவாமி பிரசாந்தானந்தா அவர்கள்.

‘‘சுவாமி வ்ரஜேஸ்வரானந்தா’’

சுவாமிஜி வ்ரஜேஸ்வரானந்தாவிற்கு, நம் சுவாமிஜியை இருபத்தேழு வருடங்களாகத் தெரியும். சுவாமிஜி சன்யாசம் பெற்றுக்கொண்டு உத்திரகாசிக்குச் சென்று இருந்த போது. அங்கு சுவாமி வ்ரஜேஸ்வரானந்தாவும் இருந்தார். அப்போதிலிருந்து சுவாமிஜியின் நட்பு இவருக்கு ஏற்பட்டது. அப்போதே நம் சுவாமிஜி பேரன்புடையவராக இருந்தார். இவர் பெரும் குணத்தில் முக்கியமானது சிறுவயதில் இவர் யாருடன் பழகினாரோ அவர்களை இன்றுவரை அவர் மறந்ததோ வெறுத்ததோ இல்லை. இவர் குருவுக்கு சேவை செய்வது போல் யாராலும் செய்ய முடியாது. யாரிடம் இவர் பாடம் படித்தாலும், பெரிய மஹான்களைக் கண்டாலும், அவர்களுக்கு மிகப் பிரியமாக அன்புடன் தன்னிடம் உள்ளது யாவையும் கொடுத்து சேவை செய்வார். சேவாபாவம், காருண்யம் நிறைந்தவர், தன்னிடம் இல்லாவிடினும் பிறரிடம் கேட்டாவது வாங்கி மற்றவர்களுக்கு உதவி செய்வார்.

வ்ரஜேஸ்வரானந்தா சுவாமி அபேதானந்தாவின் சிஷ்யர். சுவாமி அபேதானந்தாவிடம் நம் சுவாமிஜிக்கு பெரும் மதிப்பும், பக்தியும் இருந்தது. சுவாமி அபேதானந்தா மரணப்படுக்கையில் இருக்கும்போது கங்காதேவி அவர் கனவில் வந்து கங்காநதி தீரத்தில் மஹாமந்திரஜபம் நிகழ்த்தினால் நன்றாக இருக்கும் என்று கூறியதாக வ்ரஜேஸ்வரானந்தாவிடம் கூறினார். அவ்விதம் மஹாமந்திர ஜபத்திற்கு ஏற்பாடு செய்தால் நல்லது என்று தன் ஆவலைத் தெரிவித்தார் சுவாமி அபேதானந்தா.

இவ்விதம் கூறிய மூன்றாம் நாள் மஹாசமாதி அடைந்தார். அப்போது நம் சுவாமிஜி அமெரிக்காவில் இருந்தார். தன் குருநாதர் சுவாமி அபேதானந்தர் மறைவைக் குறித்தும் அவருடைய இறுதி ஆவலான மஹாமந்திர ஜபத்தைக் குறித்தும் கடிதம் மூலம் வ்ரஜேஸ்வரானந்தா நம் சுவாமிஜிக்குத் தெரிவித்தார்.

அதற்கு நம் சுவாமிஜி உங்கள் குருநாதர் உடல் தான் மறைந்ததே தவிர, அவர் எங்கும் போகவில்லை. அவர் உங்களுடனேயே இருக்கின்றார் என்று பதில் எழுதினார்.

சுவாமி அபேதானந்தா கூறியதுபோல் சுவாமி வ்ரஜேஸ்வரானந்தா ஹரிதுவாரத்தில் ஒரு இடத்தில் மஹாமந்திரஜபம் ஆரம்பித்தார். அதை நடத்துவதில் இவருக்கு, அனேகவிதமான கஷ்டங்கள் ஏற்பட்டன. அதனால் இவர் சுவாமிஜியிடம் என் குருநாதர் விருப்பத்தை நிறைவேற்ற என்ன செய்வது? என்று யோசனை கேட்டார். அதற்கு சுவாமிஜி இங்கு நம் ஆஸ்ரமத்திலேயே நடத்தலாம் என்று கூறினார். அதன்படி ஒரு பெரிய ஹால் கட்டி அதில் ராமர், கிருஷ்ணர், வினாயகர் முதலிய விக்ரகங்களை வைத்து 1986ம் வருடம் மார்ச் மாதம் மஹா மந்திர ஜபம் ரிஷிகேஷிலே செல்வதற்கு ஏற்பாடு செய்தார்.

அச்சமயம் நம் சுவாமிஜி, வ்ரஜேஸ்வரானந்தரிடம் தாங்கள் ஒருவரிடமும் பணம் கேட்டு வாங்கக்கூடாது. பிக்ஷைக்கும் தாங்கள் வெளியே போகக்கூடாது என்று கூறினார். இதைக்கேட்டு வ்ரஜேஸ்வரானந்தாவிற்கு மனக்குழப்பம் ஏற்பட்டது. பணம் இல்லாமல் எவ்விதம் மஹாமந்திரஜபம் நிகழ்த்துவது என்று தன் மனதில் ஏற்பட்ட இந்த குழப்பத்தை சுவாமியிடம் கூறினார். அதற்கு சுவாமிஜி எல்லாம் கடவுள் நடத்துவார். நாம் கருவி தானே என்றார். அவர் கூறியது சத்தியவாக்கு. அதே போல் நாமஜபம் ஆரம்பித்த அன்று ஒரு பெரிய வியாபாரி நானூறு சாதுக்களுக்கு பண்டாரா கொடுத்தார். (பண்டாரா என்றால் சாதுக்களுக்கு அன்னமளிப்பது). பண்டாரா முடிந்த பின்பு அங்கு அமர்ந்து பேசிக்கொண்டிருந்த சுவாமிஜியிடம் நாம் செலவுக்கு வழிதான் செய்து கொண்டிருக்கின்றோம். ஆனால் வருமானத்திற்கு வழி ஒன்றும் இல்லையே என்று வருத்தத்துடன் வ்ரஜேஸ்வானந்தா கூறினார்.

''அது எல்லாம் நடக்கும், நாம் ஒன்றும் நடத்த வேண்டாம்'' என்றார் சுவாமிஜி. அச்சமயத்தில் அங்கு ஓர் தம்பதிகள் வந்தார்கள். அவர்கள் நீங்கள் என்ன பேசுகின்றீர்கள்? என்று கேட்டார்கள்.

மஹாமந்திர ஜபம் நிகழ்த்துவதற்குரிய பணவசதி எப்படி செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று சுவாமிஜி கூறினார். உடனே அத்தம்பதிகள் மஹாமந்திர செலவு அனைத்திற்கும் நாங்கள் கொடுக்கின்றோம் என்று கூறினார்கள் இதைக் கேட்டுக்கொண்டிருந்த வ்ரஜேஸ் வரானந்தாவிற்கு ஆச்சர்யமாக இருந்தது. இவர்கள் செய்த பணஉதவியினால் தினந்தோறும் பத்து சாதுக்களுக்கு உணவு அளித்து மஹாமந்திர ஜபம் இன்றுவரை விடாமல் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

ஓர் சமயம் சுவாமிஜி பக்தர்களுடன் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டு இருக்கும்பொழுது ஒரு பிச்சைக்காரன் வந்து நின்று கொண்டிருந்தான். அச்சமயம் ஒரு சாது அப் பிச்சைக்காரனை இப்போது சாப்பாடு இல்லை; போ என்று கூறி வெளியில் அனுப்பினார். இதை கவனித்த சுவாமிஜி தான் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு பிச்சைக்காரனைக் கூப்பிட்டு சாப்பாடு போடும்படிக் கூறினார். அந்த பிச்சைக்காரன் சாப்பிட்டு போனபின்பு, சாப்பாடு இல்லை என்று கூறிய சாதுவை தன் அருகில் அழைத்து அமரும்படிச் செய்து, நாம் சாதுக்கள், நாமே அவர்களுக்கு பிச்சை கொடுக்காமல் போனால் மற்றவர்கள் எப்படிக் கொடுப்பாரர்கள்? நம்மிடம் கொடுப்பதற்கு நிறைய இல்லாவிடில் நாம் சாப்பிடுவதில் பாதியைக் கொடுக்கவேண்டும். அப்படி இல்லாவிடில் அரிசியாவது கொடுக்கவேண்டும் என்று அன்புடன் அவரிடம் கூறிய பின்பு தான் சுவாமிஜி சாப்பிட்டார். அதன்பின்பு ஆஸ்ரமத்திற்கு யார் சாப்பாட்டு நேரத்தில் வந்தாலும் சாப்பாடு இல்லை என்று கூறுவது இல்லை. இவருடைய தயாள குணங்கள் எவ்வளவோ சொல்லி முடியாத என்று ஆனந்தத்துடன் கூறினார் வ்ரஜேஸ்வரானந்தா.

‘‘சுவாமி கோபாலனந்தா கிரி’’

சுவாமி கோபாலானந்த கிரி தமிழ் நாட்டைச் சேர்ந்த உத்தமமானசாது. இவர் ஆந்திரா ஆஸ்ரமத்தில் இருந்த போது நம் சுவாமிஜியுடன் பரிச்சயம் ஏற்பட்டது. ஆந்திரா ஆஸ்ரமம் திருப்பதி தேவஸ்தானத்திற்குக் கொடுக்கப்பட்ட பின்பு சுவாமி கோபாலானந்தர் இங்கு சுவாமிஜியின் ஆஸ்ரமத்திலேயே தங்கி ஆஸ்ரமக் காரியங்களுக்கு உதவி செய்துகொண்டு வருகின்றார். பொறுப்புடன் கணக்கு வழக்கு களைப் பார்ப்பார். கங்காதேஸ்வரர் பூஜைக்காரியங்களுக்கு சிரத்தையுடன் கவனித்து வருகின்றார். நம் சுவாமிஜியிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் உடையவர்.

நம் சுவாமிஜியைப் பற்றி இவர் குறிப்பிட்ட ஒரு முக்கிய விஷயம். நம் சுவாமிஜி முதன் முதலில் ஆந்திரா ஆஸ்ரமத்தில் தங்குவதற்கு சுவாமி சச்சிதானந்த சரஸ்வதி தன் ஆஸ்ர மத்தில் இடம் கொடுத்தார். ஆனால் ஒரு வேண்டுகோள் விடுத்தார். தினந்தோறும் மாலையில் இங்கு பஜன் நடக்கும். அதற்கு நீங்கள் தவறாமல் வந்து கலந்துகொள்ள வேண்டும் என்று கூறினார். சுவாமிஜி சரி என்று ஒப்புக்கொண்டார். பிறகு சில நாட்களுக்கெல்லாம் சுவாமி சச்சிதானந்த சரஸ்வதி வெளி ஊருக்கு போய்விட்டார். இவர் திரும்பி ஆஷ்ர மத்திற்கு வர ஆறுமாதம் ஆயிற்று. சுவாமிஜி கொடுத்த வாக்கை தவறாமல் சச்சிதானந்த சரஸ்வதி வரும் வரை தினந் தோறும் மாலையில் தொடர்ந்துவிடாமல் பஜனை செய்து வந்தார். இவர் பஜனையைக் கேட்க ஜனங்கள் தவறாமல் வந்து கொண்டிருந்தார்கள். சச்சிதானந்த சரஸ்வதிக்குத் தான் ஆஸ்ரமத்தில் இல்லாத சமயத்திலும் சுவாமிஜி தவறாமல் வாக்கு மாறாமல் பஜனை செய்து வந்தது மிக்க மிகழ்ச்சியை அளித்தது.

திருப்பதி தேவஸ்தானத்தார் ஆந்திரா ஆஸ்ரமத்தில் பெருமாள் கோவில், சிவன் கோவில் கட்ட வைஸ் பிரசிடெண்ட் ராதாகிருஷ்ணன் அவர்களை வரவழைத்து சங்கு ஸ்தாபனம் செய்தார்கள். சங்கு ஸ்தாபனம் செய்து பதினெட்டு வருடங்கள் ஆகியும் கோவில் கட்ட முடியவில்லை. எத்தனையோ முறை திருப்பதி தேவஸ்தான ஆபீசர்களும், பொறியியல் வல்லுநர்களும் வந்துப் பார்த்து ஏதேதோ திட்டமிடுவார்கள். ஆனால் கட்டிடம் மேல் எழும்பவில்லை. அஸ்திவாரத்துடன் நின்றுவிட்டது. ஓர் முறை வாஸ்து சாஷ்ந்திரம் தெரிந்த தேவஸ்தானத்தைச் சேர்ந்தவர் வந்து பார்த்துக் கோவில் கட்டுவதற்கு ஓர் நல்ல சாதுவின் கையால் சங்கு ஸ்தாவனம் செய்தால்தான் இந்த கோவில் கட்டிமுடியும் என்று கூறினார். பிறகு ஓர் மூலையைக் குறிப்பிட்டுட அங்கு உடைத்துவிட்டு சாதுவின் கையால் சங்கு ஸ்தாபனம் செய்யுங்கள். அப்போது இரண்டு வருடத்தில் கோவில் கட்டி முடிக்க முடியும் என்று கூறினார்.

ரிஷிகேஷிற்கு அனுமந்தராவ் என்பவர், திருப்பதி தேவஸ்தான மேனேஜராகக் கோவில் கட்டிட வேலைகளையும் ஆஸ்ரமத்தையும் கவனிப்பதற்காக வந்திருந்தார். அவர் நம் சுவாமிஜியின் சிஷ்யர். அவருக்கு நம் குருநாதர் கையாலேயே சங்குஸ்தாபனம் செய்யவேண்டும் என்று அவா. நம் சுவாமிஜியின் திருக்கரங்களால் சங்குஸ்தாபனம் செய்வித்தார். வாஸ்து சாஸ்திரம் கூறியவர் இரண்டு வருஷங்களில் கோவில் கட்டி முடியும் என்று கூறினார். ஆனால் இரண்டு வருடம் முடிவதற்குள் பெருமாள் கோவில், சிவன் கோவில் இரண்டும் ஆச்சர்யமாகக் கட்டி முடிக்கப்பட்டது. 1972–ஆம் வருடம் நவம்பர் மாதம் 30, தேதி நம் சுவாமிஜி திருக்கரங்களாலேயே கும்பாபிஷேகம் செய்யப்பட்டதும் சுவாமிஜி சங்கல்ப சித்தியும், கைராசியும் உடையுவர் என்று இந்த நிகழ்ச்சியைப் பெருமையுடன் கூறினார் கோபாலனந்தகிரி.

''ரிஷிகேஷ் சாதுக்களுக்கு சுவாமிஜி உதவியது''

சுவாமிஜியின் அடக்கமான பேச்சும் நேர்மையான செயலும், அன்பும், ஞானமும் கண்ட அங்குள்ள சாதுக்களுக்கு இவரிடம் மரியாதையும் மதிப்பும் ஏற்பட்டது. சில சாதுக்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சண்டைகளைச் சமாதானம் செய்யும்படி சுவாமிஜியிடம் வருவார்கள். சிலர் ஜுரம், வயிற்றுவலி ஏதாவது மருந்து கொடுங்கள் என்று வருவார்கள். சுவாமிஜி இவர்களுக்குச் சில மாத்திரைகள் வாங்கிக் கொடுப்பார். சிலர் சாமி உங்கள் கையால் மருந்து கொடுத்தால் வியாதியே போய்விடுகின்றது என்றுகூறி அவர் கையில் மருந்தைக் கொடுத்து எடுத்துக்கொண்டு போவார்கள்.

ஒரு சமயம் ஒரே குடிலுக்கு இரண்டு சாதுக்கள் உரிமை கொண்டாடி என்னுடையது, என்னுடையது என்று சண்டை இட்டுக்கொண்டனர். பஞ்சாயத்திற்கு இவர்கள் இருவரும் சுவாமிஜியிடம் வந்தார்கள் இவர்கள் பேசும் தோரணை யிலேயே குடிலுக்குச் சொந்தமானவர் யார் என்பதை தெரிந்துகொண்டு நீங்கள் அவருடைய குடிலைக் கொடுத்து விடுங்கள். சாதுக்கள் ஆகிய நாம் சண்டையிடுவது நல்லதல்ல. இவ்விதம் விருப்பம் இல்லாவிடில் இருவரும் சமமாய்ப் பகிர்ந்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். ஆனால் இருவரும் ஒரே குடியாவை விட்டுக்கொடுக்காமல் சண்டையிட்டு கொண்டார்கள் சுவாமிஜி தன் செலவில் ஒரு சாதுவிற்குக் குடியா கட்டி கொடுப்பதாய்ச் கூறிச் சமாதானம் செய்து வைத்தார்.

ஒரு நாள் புராணா ஜாடியில் இருந்த நாற்பது சாதுக்களை டேராடூன் சிறையில் கைது செய்துவிட்டார்கள். ஏன் எனில் க்ஷேத்திரத்தில் இவர்களுக்குக் கொடுக்கப்படும் பிக்ஷையை அங்குள்ள மேனேஜர் சரியாகக் கொடுக்கவில்லை. இதைக் கேட்டதினால் அம்மேனேஜர் இவர்கள் மேல் கோபம்

கொண்டு போலீஸ் அதிகாரியிடம் தவறாகப் புகார் செய்து சிறை செய்துவிட்டார். குற்றமற்ற சாதுக்கள் சிறைச் செய்யப் பட்டதை கவனித்த அருகில் இருந்த சாதுக்கள் சுவாமிஜி யிடம் நிகழ்ந்தவற்றைக் கூறி, சாதுக்களைத் தாங்கள் தான் சிறையிலிருந்த விடுதலை செய்விக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள். தன் உதவியை நாடிவந்த சாதுக்களை சுவாமிஜி டேராடூன் அவர்கள் அழைத்துக் கொண்டு போனார். அங்குள்ள ரிப்போர்ட் எழுதும் போலீஸ் அதிகாரி. ஒவ்வொரு சாதுவும் சொல்லும் புகார்களை அவர்கள் முகங்களைப் ப்ார்க்காமலே அசிரத்தையாய் எழுதிக்கொண்டு இருந்தார். சுவாமிஜியை விசாரிக்கும் முறை வந்தவுடன், உம் நீங்கள் கூறுங்கள் என்று குனிந்தபடியே எழுதுவதற்கு ஆரம்பித்தார். உடனே சுவாமிஜி எழுதுவதை நிறுத்தி பேனாவைக் கீழே வைத்துவிட்டு, நான் சொல்வது என்னவென்று என்னைக் கவனியுங்கள் பிறகு எழுதலாம் என்று கூறினார். சுவாமிஜியின் வாக்கில் உள்ள கம்பீ ரத்தையும் கூறும் தோரணையையும் அவர் முகத்தையும் கவனித்தவுடன் போலீஸ் அதிகாரிக்கு ஓ! இங்கு ஓர் உண்மையான சாது இருக்கின்றார் என்று தோன்றியது. இதன் பின்பு சுவாமிஜி கூறியவற்றைக் கவனமாய்க் கேட்டார் இந்த அதிகாரிக்கு சுவாமிஜியின் மேல் தன்னை அறியாமல் அன்பும் நம்பிக்கையும் ஏற்பட்டது. சாதுக்களை உடனே விடுதலை செய்துவிட்டார். விடுதலை பெற்ற சாதுக்களுக்கு எவ்வளவு ஆனந்தமாக இருந்திருக்கும். சுவாமிஜியை இவர்கள் எவ்விதம் போற்றி இருப்பார்கள் என்றுக் கூறவும் வேண்டுமோ!

இதன் பின்பு போலீஸ் அதிகாரி, சுவாமிஜியின் பக்தனாய் ஆகிவிட்டார். ஒரு சமயம் மிசௌரியில் சுவாமிஜியின் உபன்யாசம் ஏற்பாடாயிற்று. அச்சமயத்தில் சுவாமிஜிக்கு மிசௌரி போய் வருவதற்கும் ஜீப் ஏற்பாடு செய்தார். இவர்

தன் இல்லத்திற்கு சுவாமிஜியை வரவேற்று பிக்ஷைக் கொடுத்து உபசரித்தார்.

ஒரு சமயம் ரிஷிகேஷில் உள்ள பாம்பே பேக்டரியில் சுவாமிஜியின் உபந்யாசம் ஏற்பாடாயிற்று. அச்சமயம் கர்மத்திற்கு அதிகாரிகளான நீங்களே மோட்சத்திற்கும் அதிகாரிகள் தான். முறைப்படி நேர்மையாய் பகவத் அர்ப்பணப் புத்தியோடு கர்மம் செய்து கர்மபலத்தையும் தியாகம் செய்யும் புத்தியானது உங்களுக்கு இவ்வுலகில் சுகத்தையும் அதுவே ஞானத்தையும் கொடுத்துப் பரலோகமான மோட்சத்தையும் கொடுக்கும் உயர்வுடையது என்று அங்குள்ளவர்கள் மனதில் பதியும் வண்ணம் எளிமையாகப் பேசினார். அவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்து சுவாமிஜிக்கு குருதக்ஷிணை கொடுத்தார்கள். சுவாமிஜி எனக்கு பணம் தேவை இல்லை. இங்குள்ள சாதுக்களுக்கு ஸ்வெட்டர், தேயிலை வாங்கிக் கொடுங்கள் என்று கூறினார். அதன்படி ஸ்வெட்டர்களும், தேயிலையும் வாங்கிக் கொடுத்தார்கள். சுவாமிஜி அங்குள்ள சாதுக்களுக்கு ஆனந்தமாய் ஸ்வெட்ட்ர்களையும், தேயிலையையும் பகிர்ந்து அளித்தார். அவர்கள் அனைவரும் பவ்யமாய் ஏற்றுக் கொண்டார்கள்.

பழம் பழுத்தால் வௌவாலை வா என்றா அழைக்கும் அழைப்பின்றிப் பழம் உண்ண வரும் பட்சிகளைப் போல் ஞானப்பழத்தைப் புசிக்க, சில சாதுக்களும், முமுட்சுகளும் தேடி வந்தார்கள். இந்தியத் தத்துவம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று வந்திருந்த அயல் நாட்டினர் சிலர் இவருடைய அறிவும், ஆற்றலும், ஞானமும் கண்டு இவரை அடைக்கலம் புகுந்தார்கள். இவர்களுக்கெல்லாம் காலை, மாலை, வேதாந்தப் பாடம் கற்றுக் கொடுத்தார். எக்குலத்தினர் வந்தாலும், பக்தி சிரத்தை உள்ளவர்கள் அனைவருக்கும் இவர்கருணை தப்பாது கிடைக்கும், சோர்வின்றி இவர்கள் கேட்கும் கேள்விகளுக்கும், சந்தேகளுக்கும் பதில்

சொல்லுவார். கேட்பவர்கள் மனதிற்கு சொல்லொணா அமைதியும், திருப்தியும், நம்பிக்கையும் உண்டாகும், சுதந்திர புருஷர்களாய், பெருமிதமாய் வாழ்நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

இவர் இருதயத்தில் உற்பத்தியான ஞான கங்கையை உலக மக்களுக்கெல்லாம் பகிர்ந்து அளிக்கும் நாள், திக்கு, திசை, தெரியாமல் தவிக்கும் மக்களுக்கு அகண்டானந்த தத்துவத்தைப் போதிப்பதற்குரிய நாள் சிரவண ஆனந்தத்தை எண்திசையும் பிரகாசிக்கச் செய்வதற்கரிய நாள், அருகில் இருப்பதைக் குறிக்கும், சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டது. அதுவே சுவாமி சின்மயானந்தா அவர்கள் ரிஷிகேஷிற்கு வந்து சுவாமிஜியை ''கீதாஞானயக்ஞம்'' செய்வதற்கு வருமாறு கூறிவிட்டு சென்றார்.

''கீதா ஞானயக்ஞா ஆரம்பம்''

அயல் நாட்டினர் கீதா ஞானப்பிரச்சாரம் செய்யுமாறு சுவாமி சின்மயானந்தரை மிகவும் வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். இவர்கள் ஆவலைப் பூர்த்தி செய்வதாக வாக்களித்தார். ஆனால் இந்தியாவில் உள்ளவர்கள் தாங்கள் அயல்நாடு சென்றுவிட்டால் எங்களுக்கு யார் ஞானத்தை போதிப்பார்கள்? எங்களுக்கெல்லாம் என்ன விமோசனம் என்று கூறி சின்மயானந்தரைக் கேட்டார்கள். வருந்த வேண்டாம். நம் தயா உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வார் என்று சமாதானம் கூறினார். சுவாமிஜியை அழைத்து நான் அயல்நாடு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆதலினால் நீ இங்குள்ள மக்களின் ஆவலை பூர்த்தி செய்ய ''கீதா ஞானயக்ஞங்கள்'' செய்ய வேண்டும் என்று கூறினார்.

கீதா சாரியனான இவருக்குக் குருவின் ஆணை கிடைத்துவிட்டது. சிறுவயதிலிருந்தே கீதையைத் தன் முதல் ஆச்சார்யனாய்க் கருதி கீதை காட்டிய வழியிலேயே தன்

மனதையும் வாழ்வையும் நடத்தி வந்த இவருக்கு அறியாமையினால் கீதா அமுதத்தையும் பருக முடியாமல் அல்லலுரும் மக்களுக்கும் போதிக்கும் அவகாசம் ஏற்பட்டு விட்டது. கீதையும் உபநிஷத் வாக்யங்களும் இவருக்கு வார்த்தைகள் அல்ல. இவை தன் ஜீவிதமான உரைகல்லில் உரைத்து மாற்றுப் பார்த்து சோதிக்கப்பட்ட விஷயம். இன்று இந்த உயர்ஞானத்தை மக்களுக்கு எவ்விதம் போதித்தால் இந்தப் பூர்ணத்வம் புரியும் என்று அறிந்த புராண புருஷன்.

சுவாமிஜிக்கு இந்த அவகாசம் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் இருந்தது. நம் சொரூபத்தை விளக்குவது என்பது இவருக்கு கை தேர்ந்த கலை. ஏன் எனில் சாஸ்திரமே வாழ்க்கை, வாழ்க்கையே சாஸ்திரம் என்று ஆகி விட்டதினால் எங்கு எவ்விதம் சாஸ்திரத்தை அறிவதற்கு சிரமம் ஏற்படும் என்பது நன்கு அறிந்து போதிக்கும் இயல்பு உள்ளவர். இன்றைய மக்கள் வாழ்விற்கு எவ்வகையில் கீதையும், உபநிஷத்தும் உதவும் என்று நன்கு அறிந்தவர். மஹாக்கங்யம், உபநிஷத்தும் கேட்கக்கூடாது. அறிய முடியாதது வேதாந்தம் வயோதிகர்களுக்கு தான் என்பது போன்ற மனோபாவங்களை எல்லாம் மண்ணாக்கி, மனிதரை மனம் மாற்றி பரிசுத்த நிலைக்கு உயர்த்தி உயிர் உள்ள போதே நான் விடுதலை பெற்றவன், என்று உணரச்செய்பவர் தன் லக்ஷியமாகிய போதனையையும் மக்களுக்கு புகட்ட ஆரம்பித்தார்.

சுயம் ஜோதி சொரூபமாக இவர் தென் இந்தியா, வட இந்தியா எங்கும் சென்று கீதா யக்ஞாக்கள் செய்து வந்திருந்தார். இவருடைய உபன்யாசத்தைக் கேட்டவர்கள் இவர் பெற்றிருக்கும் ஆழ்ந்த சாஸ்திர ஞானத்தைக்கண்டு இவர் ஆச்சார்யர்தான் என்று கூறினார்கள். சாஸ்திர வல்லுநர்களும் பண்டிதர்களும் இவர் உபன்யாசங்களை கேட்டு தாங்களே ஏதோ புதிய விஷயங்களை கேட்பது

போல் உணர்ந்தார்கள். இவருடைய சமஸ்கிருத ஞானம் மிக ஆழ்ந்ததாய் இருந்தது. சமஸ்கிருத வார்த்தைகளுக்கு இவர் அர்த்தம் சொல்லி விளக்குவது வெகுதெளிவாய் எல்லோர்க்கும் புரியும் வகையில் இருந்தது. இவர் வேதாந்த விஷயங்களை விளக்கி கூறும்போது, கேட்பவர்கள் அவ்விஷய சொருபத்தைத் தரிசித்து அதிலேயே மூழ்கிவிடுகிறார்கள்.

செந்தழல் மேனியில் அணிந்த செந்நிற ஆடையும், சந்தனப்பொட்டும் சிவசொருபமாய், மேடையில் அமர்ந்து அமிர்தம் பொழியும் சொற்களால் அன்பர்களை ஆனந்தப் படுத்துவார்! ஒவ்வொரு நாள் உபன்யாசமும் பூர்ணமாக இருக்கும் தத்வமசி மஹா வாக்கியத்திற்கு விளக்கம் கூறும்போது விஷயம் புரியாதவர்கள் புரிகின்றது என்று நினைப்பார்கள். விஷயம் கொஞ்சம் தெரிந்தவர்கள் தான் அதுவாகவே ஆனந்தமாய் இருப்பதாய் உணர்வார்கள். மீண்டும், மீண்டும் எத்தனை முறைகேட்டாலும் கேட்ட அதே விஷயம் நமக்குப் புதியதாகவே தோன்றும் வகையில் விஷயங்களைச் சொல்லுவார். இவைகள் புகழுக்குச் சொல்லும் வார்த்தைகள் அல்ல. கேட்பவர்கள் பெற்ற அனுபவம்.

அகண்டாகார சிவபோகம் பொங்கித் ததும்பி, பூர்ணமாய் ஏக உருவாய் இருக்கின்றது. அள்ளிப் புசிக்கவாரும் ஜெகத்தீரே என்று தாயுமான சுவாமிகள் கூவி அழைத்தார். ஆனால் சுவாமிஜி உலகமெங்கும் சென்று மக்களுக்கு இந்த அகண்டாகாரத் தத்துவத்தைத் தனக்கே உரிய பெரும் தயவினால் எடுத்து ஓதுகின்றார். இதை அறிந்து கொள்வதற்கு சிலருக்கு இயலும் ஒரு சிலருக்கு இயலாது. ஆர்வமுள்ள சிலர் விஷயம் புரியாமல் சுவாமிஜியிடம் வந்து கேட்டால், அவர்களுக்கு அன்புடன் ஆணவம் இல்லாமல் தத்துவத்தைத் தெளிவாய் அவர்களுக்குப் புரியும் வகையில் எடுத்துக் கூறுவார். நாளுக்கு நாள் இவர் உபன்யாசத்தை மக்கள் பெரும் திரளாய்க் கூடிக்கேட்டனர்.

இவர் பிரம்ம சூத்திர பாடம் நடத்தும்போது விஷயம் தெரிந்த பெரிய பண்டிதர்களும், ஆச்சர்யப்படுவார்கள். ஏனெனில் இளம் வயதிலேயே இவ்வளவு சரளமாய் வாக்ய அர்த்தத்துடன், தெளிவாய் போதிக்கும் முறை போற்றத் தக்கதாக இருந்தது. மும்முட்க்ஷிகள் விரும்பும் பிரம்ம சாட் சாத் காரம். அங்கேயே அப்போதே கிடைத்துவிடும்.

1970ம் வருஷம் சுவாமி சின்மாயனந்தருக்கு இருதய வலி ஆரம்பித்து மிகவும் கடுமையாகிவிட்டது. அப்போது மைசூர் ஆஸ்பத்திரியில், சுவாமி சின்மயானந்தர் சிகிச்சை பெற்று வந்தார். அப்போது சுவாமிஜி மைசூரில் தங்கியிருந்து சுவாமி சின்மயானந்தருக்கு வேண்டியவற்றைக் கவனித்தார். ஒவ்வொரு நாளும், வெளி ஊர்களில் இருக்கும் பக்தர்களுக்கு சுவாமிஜியின் உடல்நிலையைப் பற்றி தெரிவித்து வந்தார்.

அச்சமயம் ஒவ்வொரு ஊரிலும் உள்ள சின்மாயமிஷன் அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்தார். ''மிருத யுஞ்சயமந்திரம்'' ஜபித்து, ஹோமம் செய்யுமாறு, அதன்பிறகு சுவாமி சின்மயானந்தரின் உடல் நிலையில் சற்று குணம் ஏற்பட்டது. ஓய்விற்காக பெங்களூர் சென்று கொஞ்சம் நாட்கள் தங்கினார். இவர் உடல்நிலை பலஹீனமாய் இருந்த தினால் யக்ஞா செய்யக்கூடாது என்றும் பூர்ண ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். என்றும் டாக்டர்கள் கூறி னார்கள். இவருக்கு உடலில் இருந்தன மெலிவும்! சோர்வும் போகவில்லை. எழுந்து நடமாடுவதே அரிதாய் விட்டது எவ்வளவு மருந்துகள் சாப்பிட்டும், பூர்ண குணம் இல்லை. இவ்விதம் இரண்டு வருஷம் கழிந்து விட்டது. அயல் நாடு சென்று இவர் உடல்நிலையைக் கவனித்துக்கொள்வது நலம் என்ற நிலை ஏற்பட்டது. சுவாமி சின்மயானந்தா அயல்நாடு போவதற்குச் சித்தமானார்.

குருநாதர் உடல்நிலை தளர்ந்தபோதும் தான் தளராமல், தயையுடன் அன்புத் தொண்டை எடுத்துக் கொண்டார். உடலில் இருந்து ஆடை நழுவும் போது எவ்விதம் நம் கரங்கள் ஆடையைத் தாதமின்றி தானாய் எடுத்து மேல் போட்டுக் கொள்கின்றதோ' அவ்விதம் தன் குருநாதரின் வேலைகளைத் தான் ஏற்றுக் கொண்டார். இந்தியா எங்கிலும் உள்ள சின்மயாமிஷன் கா:ியங்களைக் கவனிக் கவும், கீதா ஞாயக்ஞங்கள் செய்யவும் வேண்டிய பொறுப்பு அதிகமாய் விட்டது சுவாமிஜிக்கு.

சுவாமிஜியின்போதனையால்மாறிய மருத்துவர்

சுவாமிஜியின் கீதா ஞான யக்ஞா விஜயவாடாவில் ஓர் சமயம் ஏற்பாடாகி இருந்தது. அச்சமயம் கீதா, உபநிஷத் உபன்யாசங்களைக் கேட்டு தன் வாழ்க்கையை முற்றிலும் மாற்றி அமைத்துக் கொண்ட ஓர் மருத்துவரின்வாழ்க்கையைக் கவனிப்போம்.

இந்த மருத்துவருடைய வாழ்க்கை, கரடுமுரடாய் ஒழுக்கம் குறைந்ததாக இருந்தது. இவருக்கு எவ்விதம் வாழ்வை அமைதியாய் நடத்துவது என்றே தெரியவில்லை. பணம் படைத்திருந்தும் தன் வாழ்க்கை துக்கமாய் ஒருவித உபயோ கமும் இல்லாததாக இருந்தது. இவர் தன் வைத்தியத் தொழிலில் இருந்து ஒய்வு பெறும் காலமும் நெருங்கிவிட்டது. திசை தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் பிறவிப் பிணிக்கு வைத்தியநாதனாகிய சுவாமிஜியின் தரிசனமும் இவருக்குக் கிடைத்தது.

சுவாமிஜியின் கீதா உபநிஷத் உபன்யாசம் இவர் மனத்தைக் கவர்ந்தது. இளம் துறவியாய் உலக இன்பங்களில்

நாட்டம் இல்லாமல் எப்போதும் ஆனந்தமாய் சேவை செய்துகொண்டு இருப்பதைப் பார்த்த மருத்துவருக்கு ஆச்சர்யமாக இருந்தது. முதுமை பெற்ற என்னால் பெறமுடியாத ஞானத்தை ஞான முதிர்ச்சி பெற்ற இவரிடம். இந்த ஞானத்தின் ரகசியத்தை கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. எனவே அவர் தனிமையில் சுவாமிஜியைச் சந்தித்து தன் நிலையையும் குழப்பத்தையும் கூறினார். சுவாமிஜியும் அவர் உண்மையை உணரும் விதத்தில் அவர் மனதிற்கு ஆறுதலாகப் பதில் கூறினார். சுவாமிஜியின் வார்த்தையில் நம்பிக்கை ஏற்பட்டது இவருக்கு. பின்பு சாஸ்திரம் கற்க ஆரம்பித்தார். அதன் பின்பு இரண்டு வருடம் கழித்து சன்யாசம் ஏற்றுக் கொண்டார். தன் இல்லத்தையே மாற்றி தத்தாத்ரேய மடம் என்ற பெயர் வைத்து துறவறம் நடத்தினார். சில வருடங்கள் கழித்து இவருக்குக் கேன்சர் என்ற வியாதி வந்துவிட்டது. அப்போதும் மனம் தளராமல் சாஸ்திரங்களை வரவழைத்து காலை, மாலை கீதை இராமாயணம் கேட்டுக்கொண்டே இந்த வியாதியின் கடுமையைத் தாங்கி வந்தார். மரணத் தருவாயிலும், மனம்தளராமல் முடிவை ஏற்றுக் கொண்டார். சுவாமிஜி யால் இவர் வாழ்க்கை எவ்வளவு ஆச்சர்யமாய் மாறி பலன் உள்ளதாயிற்று என்பதைக் கேட்க ஞானதாதாவின் மகிமை நம் மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

சுவாமிஜி, ஓய்வு இல்லாமல் ரயிலில் பிரயாணம் செய்து, பற்பல நகரங்களிலும் கீதா ஞானயக்ஞாக்கள் செய்து வந்தார். இரவும், பகலும் பல அன்பர்கள், சாஸ்திர விஷயங்களில் தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளைப் பற்றிக் கேட்பவர்களும், அனேகர் இவரைச் சூழ்ந்து கொண்டார்கள். அனேகர் இவருக்கு சிஷ்யர் ஆனார்கள். தாங்கள்

வாழ்க் கையைப் பற்றிக் கவலை இல்லாமல் சுவாமிஜியின் அன்பில் கண்டுள்ளவர்களாய், ஞான வளர்ச்சி பெற்று வந்தார்கள். மேலும், மேலும், இவர்கள் கீதா ஞானத் தொண்டிலும் கலந்துகொண்டு, தொண்டு செய்ய ஆரம்பித்தார். காலையில் உபநிஷத் பாடங்களும், மாலை வேலைகளிலும் பகவத்கீதை உபன்யாசங்களும் செய்து வந்தார். இவற்றில் கலந்து கொள்ளமுடியாத பெண்களும் ஊக்குவித்து, சின்னக் குழந்தைகள், பெரியகுழந்தைகள் வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு வாருங்கள் என்று கூறி அவர்களுக்கு ஓய்ந்த நேரத்தில் ஞானத்தைப் போதித்து வந்தார்.

''சாந்தீபனி சாதனாலயா புத்துயிர் பெற்றது''

ஆதி சங்கரருக்குப் பின்பு அத்வைத தத்துவம் வெளிப் படையாய் பொதுமக்களுக்கு பிரகாசிக்காமலும், எல்லோருக்கும் போதிக்கப்படாமலும் இருந்தது. இத்தத்து வத்தை நன்கு அறிந்தவர்களும் வெளிப்படையாய் யாவருக்கும் போதிப்பது இல்லை. மறைந்திருக்கும் மாபெரும் இம்மறையின், மகிமை உலகம் அறியவேண்டும், இதற்கு தகுதி உள்ள மும்முட்க்ஷீகளுக்கு வேண்டிய வசதி களைச் செய்து ஞானத்தைப் போதிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக சாந்தீபனி சாதனாலயா அமைக்கப்பட்டது. ஆனால் இந்த திவ்ய நோக்கம் நிறைவேறாமல் சாதனாலயா உறங்கிக் கொண்டிருந்தது. இதற்குக் காரணம், சுவாமி சின்மயானந்தா அவர்களின் உடல் நலம் இல்லாமையும், சுவாமிஜிக்கு கீதா ஞானயக்ஞங்களைக் கவனிப்பதற்கே சரியாயிந்ததும்தான்.

சுவாமி சின்மயானந்தா அவர்கள், சாந்தீபனி சாதனாலயாவை பாரதீய வித்யா பவனுக்குக் கொடுத்து

நடத்தும்படிக் கூறலாமா? வேறு எவ்விதம் செய்வது என்று சுவாமிஜியை ஆலோசனை கேட்டார்.

ஏன்? நாம் சாந்தீபனி சாதனாலயாவை நடத்தலாம். ''தங்களுடைய திவ்ய நோக்கமும், விருப்பமும், வீணாக வேண்டாம். என்னால் இயன்றதைச் செய்கின்றேன்.'' என்று சுவாமிஜி உறுதி கூறினார். உலகிற்கு குரு, சிஷ்யன் என்ற வேற்றுமை இருந்தாலும், இவர்களுக்குள் எவ்வித வேற்று மையும் கிடையாது. ஒருவர் கூறுவதை ஒருவர் மறுப்பது இல்லை. சின்மயாமிஷன் ஆரம்பத்தில் இருந்து சுவாமிஜி, தன் சுகத்தை எல்லாம் தன் குருவிற்கும், உலகமக்களின் நன்மைக்கும், அர்ப்பணித்து கடமைகளைச் செய்து வந்தார்.

இரு பெரிய மஹாத்மாக்கள் இதைப்போல் இவ்வுலகில் எப்போதுமே இணைந்து தொண்டுகள் செய்தது இல்லை. இது இவ்வுலகமே கண்டிராத அதிசயம்! நம் சிதைந்து போன சனாதனா தர்மத்தைக் காப்பதற்கு தோன்றிய மஹா புருஷர்கள். இவர்கள் அற்புதங்கள் செய்வது இல்லை. ஆனால் மனித மனதில் தோன்றும், அற்ப இயல்புகளை அழித்து அற்புத ஆனந்தத்தை அளிப்பவர்கள். மனித சுதந்திரத்தை எடுத்துக் கூறி சுகவாழ்க்கை வாழ வழி செய்பவர்கள்.

மங்கி இருந்த இந்து தர்மம் செய்த பாக்யம், சுவாமிஜி, சாந்தீபனி சாதனாலயாவின் நோக்கமான, மாணவர்களைப் பயிற்றுவிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். சாதனா லயாவில் பயிற்று விக்கப்போகும் முறைகளையும், அதற்கு எவ்வித மாணவர்கள் வேண்டும் என்பதையும், பல நகரங் களில் உள்ள பத்திரிகைகளில் விளம்பரம் செய்வித்தார். இந்த விளம்பரத்திற்கு ஆயிரம் மனுக்கள் வந்தன. சுவாமிஜி ஒவ்வொரு நகரத்திற்கும் தானே நேரில் சென்று, மனு தாரர்களுக்கு அழைப்புக்கொடுத்து, அவர்களின் மனோ

நிலையையும் பக்குவத்தையும் சோதித்துத் தேர்ந்தெடுத்தார். அயல்நாட்டிலிருந்து சுவாமிசின்மயானந்தா அவர்கள் 6 பெண்களையும் 4 ஆண்களையும் அனுப்பினார். நம் தேசத்திலிருந்து ஐம்பது மாணவர்கள் தேர்ந்து எடுக்கப் பட்டார்கள். இவ்விதம் சாதனாலயா புத்துயிர் பெற்றது.

சாந்தீபனியில் குருகுலம்
பாசத்தை நீக்கிப்பானோடு தன்னையும்
நேசத்து நாடி மலம் அற நீக்குவோர்
ஆசற்ற சற்குரு ஆவோர் அறிவற்றுப்
பூசற்கிரங்குவோர் போதக் குரு அன்றே.

ஜீவர்களின் அக்ஞானமலத்தை நீக்கி, உலக ஆசை களால் கலக்கம் ஏற்படும்போது, அதற்காக மனம் நெகிழ்ந்து, அன்புடன், மும்மலம் அகற்றி ஜீவபிரம்ம ஐக்ய ஞானத் தைப்பெற வழி தேடித்தருபவரே ஞான குரு ஆவார் என்ற திருமூலர் கூறிய ஞானகுரு இவர். உத்தம குருவைப் பெற்றுவிட்டால் ஞானம் பெற்றுவிடலாம். இதில் குருவுக்குத் தான் பொறுப்பு, சிஷ்யனுக்ஞ ஒன்றும் இல்லை, ஞானத்தைப் போதித்து அவனைப்பக்குவம் அடையச் செய்வதில் குருவின் பங்குதான் அதிகம் என்று தைர்யமாகக் கூறும் உத்தமர். சிஷ்யன் பக்குவசாலியானால் குரு ஞானத்தைக் கொடுப்பார் என்பதுதான் முறை.

ஆனால் இங்கு சுவாமிஜி அலாதியான தனிப்பெரும் குணம் உடையமஹான், தயாநிதி, தன்னை அண்டினவர்கள் மீண்டும் பயப்பட வேண்டியது இல்லை. ஆச்சார்யவான் புருஷோ வேத என்ற வேதவாக்யத்தை முரசு அறைபவர். இவரைச் சரண் அடைந்த, சிஷ்யர்கள் எவ்விதம் தோல்வி அடைய முடியும் சோகம், மோகம் முக்தி பெற்றுவிடும் இவருடைய போதனா சக்தியினால்.

கணபதிஹோமம், குருபூஜை, செய்து 1972ம் வருஷம் அக்டோபர் மாதம் 14ன்காம் தேதி சாந்தீபனில் வித்யா

ஆரம்பமாகியது. யசோதாலயா என்ற விடுதியில் பெண்களுக்கும், பழைய பிரம்மச்சாரிணிகளுக்கும் தங்க வசதி செய்தார்கள். ஆண்களுக்கு என்று அமைந்த விடுதியில் மாணவர்களும், சாதுக்களும் தங்கி இருந்தார்கள்.

சாதனாலயாவில் அமைந்திருக்கும் அழகிய ஜகதீஸ்வரர் கோவில். இக்கோவிலில் ஐநூறு மக்கள் அமர்ந்து தியானம் செய்யத்தகுந்த விசாலமான ஹால் உண்டு. இங்கு காலை ஐந்து மணிக்கு, தியானம் என்பது என்ன? அதை எப்படிச் செய்வது என்று சுவாமிஜி கற்றுக்கொடுப்பார். இதன்பின்பு ஆறுமணியிலிருந்து ஏழுமணிவரை வேத அத்யயனம். இதன் பின்பு தத்வபோதம் பாடம் கற்றுக் கொடுப்பார். காலை சிற்றுண்டி எட்டுமணிக்கு. இதன்பின்பு பத்து மணிக்கு சமஸ்கிருதம் பாடங்கள். அதன்பின்பு மத்தியான உணவு. சுவாமிஜி, சாதுக்கள், பிரம்மச்சாரிகள், கிருகஸ்த சிஷ்யர்கள், நண்பர்கள் யாவரும் வரிசையாக அமர்ந்து பகவத்கீதை பதினைந்தாம் அத்யாயம் கூறியபின்பு, பிரம்மார்ப்பணம் செய்துவிட்டு சாப்பிட ஆரம்பிப்பார்கள். சாப்பாட்டின் இடையிலும், முடிவிலும், ஒவ்வொரு பிரம்மச்சாரியும், சிறு, சிறு பாடல்களும், ஸ்லோகங்களும் கூறி உணவை முடித்துக் கொண்டு போகும் அழகு பார்த்து அனுபவிக்க வேண்டிய ஒன்று.

சிறிது ஓய்விற்குப் பின், மூன்று மணிக்கு டீ கொடுக்கப் படும். மீண்டும் நான்கு மணியிலிருந்து ஐந்து மணி வரை சுவாமிஜி, கீதை கற்றுக்கொடுப்பார். ஆறு மணியிலிருந்து, ஏழு மணிவரை ஜகதீஸ்வரர் கோவிலில் பஜனை ராமாயணம் போன்ற ஏதோ ஒன்று இருக்கும். எட்டு மணிக்கு இரவு உணவு. இதன் பின்பு சுவாமிஜி வரண்டாவில் சாய்வு நாற்காலியில் வந்து அமருவார். பிரம்மச்சாரிகளும், பிரம்மச்சாரினிகளும், கிருகஸ்தசிஷ்யர்கள் அனைவரும்

சூழ்ந்து கொள்வார்கள். எத்தனையோ ருசிகரமான விஷயங்களைப் பற்றி பேசிக்கொண்டு இருப்பார்கள். பிரம்மச்சாரிகள் தங்களுக்கு அன்று நடத்திய பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களைக் கேட்டு, தெளிவு பெறுவார்கள். சிலர் தங்களுக்கு உண்டாகும் மனக்குழப்பம், சண்டை சச்சரவுகளைப்பற்றி கேட்பார்கள். ஒவ்வொருவர் நிலையிலும் நின்று, அவரவர் மனப் பக்குவத்திற்கு ஏற்றவாறு அவர்களுக்குச் சமாதானம் கூறி ஆனந்தப்படுத்துவார். ஒருவர் மேலும் குறை சொல்ல மாட்டார். எப்போதும் உயர் இயல்பைப் பற்றியே பேசுவார். ஒருவர் மேல் ஒருவர் குறை குற்றம் கூறினாலும், அதை உடனே ஏற்றுக்கொள்ள மாட்டார். அவனிடம் இந்த உயர்குணம் இருக்கின்றதே? இக்குறை எப்படி இருக்க முடியும்? ''அதெல்லாம் ஒன்றும் இருக்காது'' நான் கவனித்துக் கொள்கின்றேன் என்று சமாதானம் கூறி அந்தக்குற்றம் புரிந்தவரை பிறர் அறியாவண்ணம் தனிமையில் விசாரித்து, சுவாமிஜி, நம் குற்றத்தை விசாரிக்கின்றார் என்ற விஷயமே தெரியாமல், அவரிடமே விஷயத்தை கேட்டு, உண்மையைத் தெரிந்து கொண்டு இருதரப்பினரும் அமைதி பெறும் வகையில் சமாதானம் செய்வார். ''நடுவு நின்றார் சிலர் ஞானிகளாவார்'' நடுவு நின்றார் சிலர் தேவரும் ஆவார்'' என்று திருமூலர் கூறியதுபோல் இவருடைய நடுநிலைமை போற்றத் தகுந்தது.

ஆஸ்ரமத்திற்குப் போதிய வருமானம் இல்லை. சரிவர நிர்வாகம் செய்பவர்களும், இல்லாமல் இருந்தது. இதனால் அனுமந்தராவ் என்பவரை மேனேஜராகச் செய்தார். ஆபீஸ் சம்பந்தமான வேலைகள், சமையல் சம்பந்தமானது, ஆஸ் ரமத்திற்கு வருபவர்களை வரவேற்பது இவ்விதம், ஒவ்வொரு வேலைக்கும் இவர்கள் அனைவரும் சுவாமிஜி ஏற்றுக்கொண்ட தொண்டிற்காக எவ்வித ஊதியமும் இல்லாமல் உண்மையாகத் தொண்டு செய்தார்கள். மாதம்

இருபதாயிரமாக இருந்த வருமானம் ஒரு வருடத்தில் இரண்டு லக்ஷம் ஆனது, அடுத்த வருடம் பன்மடங்காகியது. இவ்விதம் சுவாமிஜி வருமானத்தை உயர்த்தி மாணவர் களுக்கு உணவு, சுத்த ஜலம் குடிப்பதற்கு பால் அருந்துவதற்கு என்று பலப்பல மேன்மையான சௌகர்யங்களைச் செய்தார். மேலும் சமையலுக்கு கேஸ் அடுப்புகள், பாத்திரங்கள் எல்லாம் புதிது, புதிதாய் வாங்கினார். அயல்நாட்டிலிருந்து வந்திருந்த மாணவர்களுக்கு நம்முடைய உணவு காரம் ஆனதினால் இவர்களால் சாப்பிட முடியவில்லை, அதனால் இவர்களுக்கு வேண்டிய விதத்தில் கொடுக்குமாறு ஏற்பாடு செய்தார். மாதா, பிதாவை விட்டு வந்துள்ள மாணவ, மாணவிகளுக்கு எவ்வித குறையும் இல்லாமல் பார்த்துக் கொண்டார். இதனால் எல்லோருக்கும் சுவாமிஜியின் மேல் தெய்வீக பற்று ஏற்பட்டது. இவருடைய செய்கை யிலும் வார்த்தையிலும் மாணவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

ஆஸ்ரம வேலை ஆட்கள் ஒரு நமஸ்காரம் போட்டு விட்டு சுவாமிஜி, இன்று கேஸ் இல்லை, அரிசி இல்லை, பதார்த்தம் இல்லை இன்னும் அது இல்லை இது இல்லை என்று கூறுவதைப் புன்னகையுடன் கேட்டு அவைகளைத் தீர்ப்பது. பிறகு கணக்குப் பார்ப்பவர் வந்து அந்தக் கணக்கை எப்படி எழுதுவது? இந்த வேலை ஆளுக்கு என்ன பணம் கொடுப்பது? வரவு இவ்வளவு. செலவு இவ்வளவு. இன்னும் செலவிற்கு வேண்டிய இவ்வளவு, அதற்கு என்ன செய்வது? என்று கேட்கும்பொழுதும் அன்புடன் அவற்றை எதிர் நோக்குவது சுவாமி சின்மயானந்தர் கூறும் விஷயங்களை எல்லாம் செயலாக்குவது, அயல்நாட்டு உள்நாட்டுக் காரியங்கள், பழைய பிரம்மச்சாரிகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிப்பது, அப்பப்பா பயங்கர வியபகாரம்! பத்து நபர் இருந்தாலே அக்குடும்பம் நடத்துவது எவ்வளவு கஷ்டம்? எப்போது அகமும் முகமும் மலர எப்படி இவ்வளவு காரியங்களையும் கவனிக்கின்றார்? அசம்சாரியான இந்த மஹாத்மாவினுடைய பயங்கர சம்சாரம், நமக்குப் பெரும்பாடம்.

சுவாமிஜி தாங்கள் எவ்விதம் இவ்வளவு காரியங்களைச் செய்கின்றீர்கள்? தங்களுக்குக் கஷ்டமாக இல்லையா என்று, அன்பர்கள் கேட்டால், அதற்கு சுவாமிஜி என்னைக் கஷ்டப்படுத்த இந்த உலகத்தில் உள்ள எந்தப் பொருளாலும் முடியாது என்று ஆனந்தமாய பதில் கூறுவார். இவ்வித திட ஞானம் இல்லாவிடில் தன்னை அண்டினோர்க்கு எவ்விதம் இந்த அமிர்தத்துவத்தைப் போதிக்க முடியும்?

மாணவனிடம் மின்மினிப் பூச்சிப்போல் இருக்கும் முமுக்ஷுத்வ உணர்வை, அன்பான போதனையாலும், இதமான கருணை மொழியாலும் தன்னுடைய தியாகச் செய்கைகளினாலும் தீவிரமாக்கினார். நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம், பாடம் கேட்கும் நேரத்தல் உங்கள் மனதை மட்டும் என்னிடம் கொடுத்து விடுங்கள். நான் கவனித்து கொள்கிறேன் என்று கூறுவார் அவர். சுவாமிஜியை தரிசிக்க வருபவர்கள், கிருகிஸ்த சிஷ்யர்கள், பம்பாய் நகரவாசிகள், ஆஸ்ரமத்தில் வேலை பார்ப்பவர்கள் அனைவரும் தவறாமல் சுவாமிஜி, பாடம் நடத்தும்போது வந்துவிடுவார்கள். யாராவது இவ்விதம் வரத்தவறினால் மறுநாள் அவர்கள் ஏன் வரவில்லை என்று மறவாமல் கேட்பார். இதனால் சுவாமிஜி நம்மைக் கவனிக்கின்றார் என்று அன்பினால், சிரத்தையோடு வருவார்கள். சுவாமிஜி மேடைக்கு வருவதற்கு முன்பு உபநிஷத் உச்சாரணமோ அல்லது தோத்திரஸ்களோ கூறிக்கொண்டு இருப்பார்கள், குறித்த நேரம் தவறாமல் பாடம் நடத்துவதற்கு சுவாமிஜி மேடைக்கு வரும் காட்சி அலாதியானது. ஞானபிழம்பாய், ஜோதி சொருபமாய் அடக்கத்துடன் வந்து அமர்வார்.

இன்றைய நாகரீக பாஷையான ஆங்கிலத்திலும் சமஸ்கிருதத்திலும் வேதாந்ததைப் போதித்தார். ஆங்கிலத்தை மிலேச்சபாஷை என்று கூறுவார்கள். இவ்வித மிலேச்சபாஷையை பாப்பிரம்ம ஞானத்தை மக்களுக்கு

போதிப்பதற்குள் தகுதி உடையதாய்ச் செய்தார். ஆங்கிலேயர்களே பிரமிக்கும் வகையில் இவருடைய பிரம்ம வித்யா போதனை ஆங்கிலத்தில் அமைந்தது. சங்கரரே தான் எழுதிய பாஷ்யங்களின் நுணுக்கங்களை உலகமக்கள் அனைவரும் உணர்ந்து உய்வு பெறவேண்டும், உயரவேண்டும் என்று இவ்வுலகில் தோன்றியது போல் இருக்கின்றது. இவருடைய போதனா முறை மிக உயர்ந்ததாய் கேட்பவர்கள் புரிந்து கொள்ளும் விதமாக இருந்தது. வெளிநாட்டு மாணவர்களும் சமஸ்கிருதம் கற்றுக் கொண்டார்கள். இதனால் இவர்களுக்கு இம்மொழியின் மேன்மையையும், சாஸ்திரத்தின் மகத்துவத்தையும் உணர முடிந்தது. இதனால் சுவாமிஜியின் மேன்மையை உணர்ந்தார்கள்.

தான் பன்னிரெண்டு வருடம், பல மஹாத்மாக்களிடம் கஷ்டப்பட்டு கற்றதை, வருடகாலத்தில் பிரம்மச்சாரிகளுக்கு கற்றுக்கொடுத்து விட்டார். இது சாமான்ய கலை அல்ல. வினாடிகளுக்கு வினாடி மாறும் இயல்புள்ள மனத்தை தத்துவத்தை அறியச் செய்வது என்பது ஓர் அபூர்வக்கலை சம்பிரதாய முறை தவறாமல் தத்துவத்தை எளிமையாய்ப் புரிந்து கொள்ளும் வகையில் போதித்தார். ஒவ்வொரு மாணவனும் புரிந்து கொண்டானா இல்லையா என்று கவனித்துக் கூறுவார். தான் கூறியது யாருக்குப் புரியவில்லை என்று சுவாமிஜிக்குத் தோன்றுகின்றதோ, அந்த மாணவன் தன் அருகில் வரும்போது அதைப் பற்றிக் கேள்வி கேட்டு அவனுக்கு ஏற்படும் சந்தேகத்தை விளக்குவார். தன்னுடைய திவ்யஞானத்தை சக்தியால் ஒவ்வொரு மாணவனும் ஞானத்திற்குத் தகுதி உடையவனாகச் செய்தார். உள்ளுணர்வைப் பக்குவப்படுத்தி, தெய்வமனிதனாய் மாற்றுவது, இது பிரம்மஞானியால் அல்லது, வேறு சாதாரணமான மனிதர்களால் முடியுமா? பிரம்மசாரிகள் ஒவ்வொருவரும் சுவாமிஜியிடம் வேதாந்தம் கற்றுக் கொள்ளும் பாக்யம் கிடைத்ததைப் பற்றி மிகவும் பெருமை கொண்டார்கள்.

சென்னை, பம்பாய், டில்லி முதலிய இடங்களில் இருந்து கிரகஸ்த அன்பர்கள் சிலர் ஆஸ்ரமத்தில் வந்து சில காலம் தங்குவார்கள். இவர்களும் நல்ல முமுக்ஷுக்கள் மாணவர் களோடு இவர்களும் வேதாந்தபாடம் கேட்பார்கள். சாஸ்திர ஞானத்தினால் இல்லறத்தில் இருந்தவர்களும் தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொண்டார்கள், உயர்ந்த நெறியில் ஆஸ்ரமத்தில் தங்கிவிட்டு, தங்கள் இல்லங்களுக்குச் சென்றால், இவ்வளவு நாட்கள் நாம் எங்கிருந்தோம்? இரவு, பகல், இன்பம், துன்பம், நாள், கிழமை, என்பதே தெரியாமல், எவ்வளவு ஆனந்தமாயிருந்தோம் என்று ஆச்சர்யப்படுவார்கள். சதா வேதாந்தபாடமும், வேத சப்தங்களும் கேட்டுக்கொண்டே சுவாமிஜியோடு இருந்தது விட்டு வெளி உலகத்திற்கு வந்தவுடன் யாவும் புதியது போல் இனம்தெரியாத, விளக்க முடியாத மனோபாவம் ஏற்படும். இவ்விஷயத்தை அன்பர்கள் ஒருவருக்கொருவர் பேசி மகிழ்ச்சி அடைவார்கள்.

ஜகதீஸ்வரர் கோவிலில், சிற்சில மாதங்களுக்கு ஒரு முறை சங்கீத கச்சேரி, வாத்ய கச்சேரி நடக்கும், பரதநாட்டியம் பயின்ற கிரகஸ்த அன்பர்களின் பிள்ளைகள் சுவாமிஜி யின் முன்பு ஆடி மகிழ்வார்கள். மாவணர்களும் பார்த்து மகிழ்ச்சி யடைவார்கள். இந்திர ஜாலம் (மேஜிக்) தெரிந்தவர் அதைச் செய்து காட்டுவார். யாவும் தெய்வ சந்நிதியில் தெய்வீகமாய் ஒளி வீசிற்று.

பிரம்ம சாரிகளுக்காக ஆஸ்சிரமத்தில் வினாயக சதுர்த்தி, கிருஷ்ண ஜெயந்தி, சிவராத்திரி, சரஸ்வதி பூஜை முதலியவைகள் செய்வார்கள். இதில் சிவராத்திரி மிகவும் சிறப்பாய் நிகழும். காலை ஆறுமணி முதல் இரவு பன்னிரெண்டு மணிவரை அகண்டநாமசங்கீர்த்தனம் செய்வார்கள். ஞானத்தைப் போதிக்கும் திருவாயினால் சுவாமிஜி ''ஓம் நமசிவாய'' ஓம் நமசிவாய, ஓம் நமசிவாய

என்று மதுர நாதம் செய்யும் போது நாம் கைலாயத்தில் இருப்பதுபோல் இருக்கும். கருவி, கரணங்கள் கடந்த துரீயத்தில், சிவத்தில் மனம் லயமாகிவிடும். இந்த உடல் பெற்றதனால் ஆயபயன் கிடைத்துவிடும். மும்முறை ருத்திர அபிஷேகம் செய்த இரவு பன்னிரெண்டு மணிக்கு நடக்கும் பூஜையின் போது எல்லா பிரம்மச்சாரி, பிரம்மச் சாரிணிகளும் சேர்ந்து வேத மந்திரங்களைக் கூறி, மந்திர புஷ்பம் தீபாராதனை செய்வார்கள். சுவாமிஜி தன் திருக்கரத்தினால் அனைவர் மீதும் கங்கை ஜலம் தெளித்து ஆசீர்வாதம் செய்வார். பரமேஸ்வரனே யாவரையும் சில சொரூபமாகச் செய்வது போலிருக்கும். சிவராத்திரி பூஜையை எப்போது நினைத்தாலும் ஆனந்தம்தான்.

''பிரம்மச்சாரிகளுடன், ரிஷிகேஷில் ஓர் மாதம்''

அன்னையினும் இனிய தயவுடைய தயாநிதியின், பராமரிப்பில் பிரம்மசாரிகள் ஒருவருடம் காலம் போனது தெரியாமல், வெளி உலக நினைவே இல்லாமல் கழித்து விட்டார்கள். சுவாமிஜியோடு எப்போதும் இருந்தும், அவர் மேல் எவ்வித வெறுப்பும் மாணவர்களுக்கு ஏற்படவில்லை. எனினும் புதுமையோடு புதியதாகவே இருந்தார். குழந்தைகள் தாயைச் சுற்றுவது போல் சுற்றிவந்தார்கள். இவ்வித குழந்தைகளுக்கு, மேலும் ஆனந்தம் அளிக்க விரும்பினார் சுவாமிஜி. ரிஷிகேஷ் சென்ற ஒரு மாதம் குருகுல வாசம் செய்வது, என்று யாவரை யும் அழைத்துச் சென்றார்.

எலி வளையானாலும் தன்வளை என்று பெருமை படக்கூறுவது போல் ரிஷிகேஷில் சுவாமிஜிக்கு ஒருபுல் குடில் மட்டும் இருந்தது. இயற்கைத்தாயால் அலங் கரிக்கப்பட்ட இடம் அகன்ற நீலவானம். வான் அளாவிய இமயமலை, ஓம்கார கீதம் பாடிச் செல்லும் கங்கா தேவி. அடர்ந்து உயர்ந்த சீசம் மரங்களின் பசுமையான தோற்றம்.

இயற்கை ஆசனமாய், கங்கைக் கரையில் அமைந்த பலவர்ண எழில் பாறைகள் வாருங்கள். என் மடியில் அமர்ந்து சும்மா இருங்கள். சுகம் பெறுவீர்கள் என்று கூறுவதுபோல். மஹாத்மாக்களும் முனிவர்களும் தபஸ்செய்த இடம். இவ் வித திவ்யச்சூழ்நிலை. தபோ பூமியின் அழகை எடுத்துக் காட்டும், சப்தபரணி என்ற மரம்! தழைத்து வளர்ந்த அம் மரத்தடியில் சுவாமிஜி வந்து அமர்வார். ஞானஒளிவீச அவர் முன்னிலையில் மாணவர்கள் அமர்ந்து கொள்வார்கள். இக்கலியுகத்தில் காணமுடியாத காட்சி. இந்த குருகுல வாசமும் சாதனா போதனா முறையும் ஆதியும் அந்தமும் இல்லாத தத்துவத்தை அனந்த மறைகளின் சாரத்தை, அழியாத நிலைபெறுவதற்குப் போதித்தார்.

இந்த தெய்வ குருவிடம் வேதபாடம் கேட்க என்ன பாக்யம் செய்தார்களோ? ஒவ்வொரு மாணவனும் இந்த சந்தர்ப்பம் தனக்குக் கிடைத்த, மாபெரும் பாக்யமாகவே கருதினார்கள், அச்சமயத்தல் காஞ்சி சுவாமி ஜயேந்திர சரஸ்வதி அவர்களை வந்திருந்தார். ரிஷிகேசத்திற்கு ஓர் நாள் அவர் புராணாஜாடிக்கு வந்தபோது மாணவர்கள், மந்திர புஷ்பம் கூறி வரவேற்றார்கள். அப்போது மாணவர்கள், வேத மந்திரங்களை உச்சரிக்கும் விதமும், அவர்கள் சாஸ்திரத்தை சிரத்தையுடன் கற்றும் விதமும் பார்த்து ஜெயேந்திர சரஸ்வதி மகிழ்ச்சி அடைந்தார். மாணவரர்களைப் பாராட்டி நீங்கள் மேன், மேலும் சாஸ்திர அறிவில் உயரவேண்டும் என்று ஆசீர்வதித்தார்.

சுவாமி தாரானந்தா பிரம்ம சூத்திரபாடம் சுவாமிஜிக்கு கற்றுகொடுத்தவர், ஓர்நாள் ஆச்சிரமத்திற்கு வந்தார். இன்று தன் மாணவர், அனேக பிரம்மசாரிகளுக்கு முறை தவறாமல் சாஸ்திரம் கற்று கொடுக்கின்றார். தாயைப் போல் ஆதரித்து அவரகள் சுக துக்கத்தைப் பகிர்ந்து கொண்டு, கருணை காட்டி நடத்துவதைக்கண்டு ஆனந்தப்பட்டார். சாகாத கல்வியான சாஸ்திரத்தின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறி, ஞானத்தில் முன்னேற்றம் பெற ஆசீர் வதித்தார் மாணவர்களை.

சுவாமி வித்யானந்ததீர்த்தர், கைலாச ஆஸ்ரமத்தின் மண்டலாதிபதி வந்திருந்தார் புகழ் மங்கி இருக்கும் சமஸ்கிருத பாஷையைக் கற்றுக்கொண்டு, வேதங்களை ஸ்வரம் தவறாமல் பிரம்மசாரிகள் அழகாய் உச்சரிப்பது கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார். குறுகிய காலத்தில் இவ்வளவு ஞானத்தைப் போதிக்கும் திறமை எளிது அல்ல. சுவாமிஜி செய்யும் இந்த ஞான வேள்வி மிகச் சிறந்தது. இதற்கு இமயத்தைப் போல் பொறுமையும், வைராக்யமும் வேண்டும். இந்த நல்ல பண்புள்ள ஆச்சர்யரிடம் நீங்கள் பயிற்சி பெறுவது நம் மதத்திற்கே செய்த தொண்டு. இதற்கு தகுதி உள்ளவர்களாக உங்களை மாற்றிக் கொள்வது பெரும் பாக்யம். இப்பெரும் பாக்யத்தை நீங்கள் பெறவேண்டும் என்று ஆசீர்வதித்தார் சுவாமி வித்யானந்தர்.

சிவானந்த ஆஸ்ரமத்தில் இருந்து சுவாமி சிதானந்தா ஓர்நாள் வந்திருந்தார். சுவாமிஜியின் வித்யாதான தொண்டைப் பாராட்டிப் பேசினார். பிரம்மச்சாரிகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து ஆசீர்வதித்தார். இவ்விதம் ரிஷிகேஷில் உள்ள பெரிய மண்டலாதிபதிகளும், பண்டிதர் களும் சாதுக்களும் இந்த குருகுல முறையையும், சுவாமிஜி யையும் பாராட்டினார்கள். சமஸ்கிருதத்தைத் தவிர வேறு மொழிகளில் இதுவரை போதிக்கப்படாத வேதம், இன்று ஆங்கிலத்தில் பிரம்ம சூத்ர பாஷ்யமும் போதிக்கப் படுகின்றது. இவ்விதம் ஆங்கில மொரழியில் போதிப்பது எளிய காரியம் அல்ல, ஆங்கில மொழியில் போதனை செய்யப்படுவதினால் வெளிநாட்டு மாணவ, மாணவிகளும், நம் வேதத்தைக் கற்க முடிகின்றது. வேதத்தின் கருத்தை மாறாமல் தெரிந்து கொள்வதற்காக சமஸ்கிருத மொழியும் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. இவர்களுக்கு, கசடு அற வேதத்தைக் கற்கும் பயிற்சியை சுவாமிஜி அளித்தார். எதிர்கால பாரதத்தின் ஆச்சார்யர்கள் அல்லவா இவர்கள்?

தபோ பூமியின் சிகரமான இமாலயத்தில் நிகழ்ந்த, இமாலய சாதனாகாலத்தை, வாழ்நாளில் என்றும் யாரும் மறக்க முடியாது. பிரம்மசாரிகள் இந்த ஞான சாதனைக்குப் பின்பு மீண்டும் சாந்தீபனிக்குத் திரும்பினார்கள்.

''பிரம்ம சூத்திர பாடம்''

வேதாந்த சாஸ்திரம் கற்பதும் அதன் அர்த்தத்தைத் தெளிவாய் தெரிந்து கொள்வதும் எளிது அல்ல, கீதை உபநிஷத் எல்லாம் கற்ற பின்பு, பிரம்ம சூத்திரப் பாடம் நடத்தப்படும். ஏன் எனில் பல உபநிஷத்துகளும் பிரம்மனைப் பற்றிக் கூறும்போது இந்த சத்தியத்தை வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் போதிக்கின்றது. ஒவ்வொரு உபநிஷத்திலும் கூறப்பட்ட தத்துவத்தின் உண்மை என்ன? இது எவ்விதத்தில் பொருத்தமானது? இது என்ன கருத்தை தெரிவிக்கின்றது? ஏன் இவ்விதம் இந்த இடத்தில் இச்சமயத்தில் கூறுப்பட்டது? பலவித அர்த்தங்கள் ஓர் வாக்கியத்திற்கு இருக்கும்போது, இந்த ஓர் அர்த்தம் தான் இந்த சமயத்தில் பொருத்தம் என்பது எவ்விதம்? வேறு அர்த்தத்துடன் ஏன் கூறக்கூடாது? என்பது போன்ற சந்தேகங்களை அகற்றுகின்ற ஞானம்தான் மோட்ச சாதனம், கர்மம் மோக்ஷ சாதனம் அல்ல, என்பது எவ்விதத்தில் பொருந்தும்? என்பது போன்ற விஷயங் களைத் தெளிவாக விசாரித்து சந்தேகம் இல்லாமல் வேதாந்தத்தின் கருத்தை அறவிப்பது, அத்வைத ஞானத்திற்கு பலமதக் கருத்துக்கள் எவ்விதம் பொருத்தம் அற்றது என்பதையும் விளக்குகின்றது. கூர்த்தமதியும், நல்ல அனுபவ ஞானமும் உள்ளவர்களால் தான் இந்த பிரம்மசூத்திரத்தைப் போதிக்க முடியும்.

இந்த பிரம்மசூத்திர விளக்கத்தை கற்காவிடில், பிரம்மச் சாரிகள் மற்றவர்களுக்கு சாஸ்திரத்தின் தத்துவத்தைக் குற்றம் இல்லாமல், நிச்சய ஞானத்தோடு போதிக்க இயலாது

எந்த இடத்தில் எவ்வித சந்தேகம் ஏற்பட்டாலும் பிரம்ம. சூத்திரம் கற்றால் அதை எளிதில் விளக்கமுடியும். பிரஸ் தானத்திரயம் என்றும் இந்த கீதை, உபநிஷத் பிரம்ம சூத்திரம் மூன்றையும் சுவாமிஜி பிரம்மசாரிகளுக்கு ஸ்திரஞானம் ஏற்படவேண்டும் என்தற்காக, கற்றுக் கொடுக்கத் தீர்மானித்தார். பிரம்மசாரிகளும் இச்சாஸ்தி ரத்தைக் கற்பதில் ஆர்வம் காட்டினார்கள்.

பிரம்மசூத்திர பாட ஆரம்ப தினத்தன்று பிரம்மச்சாரிகள் சுவாமிஜியின் குடியாவின் முன்பு சூழ்ந்து நின்றார்கள். பல்லக்கில் சுவாமிஜியை ஏற்றிக்கொண்டு போவதற்காக. அச்சமயத்தில் தன்னைக்காட்டிலும் வயதில் பெரியவரான சுவாமி பிரேமானந்தர் தனக்கு முன்பு இருப்பதைப் பார்த்து, அவருக்கு சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்தார். அதன் பின்பு பிரம்மச்சாரிகள் சுவாமிஜியைப் பல்லக்கில் அமரச் செய்து பக்திபூர்வமாக, பரவசத்தோடு, ஜகதீஸ்வரர் கோவிலுக்கு எடுத்துக்கொண்டு போய், அங்கிருந்து சரஸ்வதி நிலையத்திற்கு எடுத்துச் சென்றார்கள். சுவாமிஜியை அழகிய ஆசனத்தில் அமரச் செய்தார்கள். இதன் பின்பு தக்ஷிணாமூர்த்தி தோத்திரம் கூறி அனைவரும் அன்போடு சுவாமிஜியை நமஸ்கரித்துக் கொண்டார்கள். பிரம்ம சூத்திர பாஷ்யபாடம் ஆரம்பமாயிற்று.

சொல்லவல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. (குறள்)

வார்த்தை சொல்ல வல்லன் திடவானாகில் அவனை மாறுபட்டு வெல்ல யார்க்கும் அரிது என்ற வள்ளுவர் கருத்துப்படி சொல்ல வேண்டுவதனை துணிந்து கருத்து மாறாமல் மறவாமல் அக்கருத்திற்கு லக்ஷணமாய் கற்கும் பிரம்மச்சாரிகள், கருத்தில் படியும் வண்ணம், பிரம்மச் சூத்திர பாடத்தைக் கற்பித்தார். பாடம் கேட்கும்போது ஒவ்வொரு மாணவனும் உயர்நிலையில் இருந்தார்கள்.

இவர் இத்தத்து வத்தை விளக்கிச் சொல்லும்போது பரப் பிரம்ம சொருபமாய்த் திகழ்ந்தார். கேட்பவர்கள் அனைவரும் பிரம்மானந்த நிலையை அனுபவித்தார்கள். அனிர்வசனீயப் பொருளை அனிர்வசனீயமான சுவாமிஜி போதித்த முறையை எவ்விதம் கூறுவது?

சங்கர பாஷயத்துடன் நான்கு சூத்ரங்களையும், தெளிவாய்க் கற்றுக் கொடுத்தார். பிரம்மச்சாரிகளும் அன்று கற்றுக் கொடுத்த பாடத்தில் ஏதாவது நன்கு தெரியவில்லை என்றால், சுவாமிஜி ஓய்வாக அமர்ந்து இருக்கும் இரவு நேரத்தில் அவற்றைக் கேட்டு சந்தேகம் இல்லாமல் தெரிந்து கொள்வார்கள். இவ்விதம் கேள்வி கேட்பதினால் பிற பிரம்மச் சாரிகளுக்கும், அந்த சந்தேகம் தெளிந்து விடும், இவ்வளவு காலம் கற்ற உபநிஷத்தும், அதன் கருத்தும் நன்கு அறிந்து, தெளிவடைந்தார்கள்.

பிரம்மசர்ய தீக்ஷை

பிரம்மச்சாரிகளின் குருகுல வாசமான 3 வருட காலம் முடிவடைந்து விட்டதினால், ஜகதீஸ்வரா கோவிலில், பூஜை அபிஷேக ஆராதனைகள் செய்தார்கள். இதன் பின்பு ஒவ்வொருவருக்கும் மஞ்சள் வேஷ்டியும் அங்கவஸ்திரமும் கொடுத்தார். புதிய திருநாமத்தைச் சூட்டினார். ஈஸ்வர சைதன்யா, யக்ஞசைதன்யா, அனந்தசைதன்யா, ஆனந்த சைதன்யா, ஆத்மசைதன்யா, சுபசைதன்யா, ஆப்தசைதன்யா, பிரமோத்சைதன்யா, விஸ்வசைதன்யா என்று பலப்பல நூதன நாமங்களை 60 பிரம்மச்சாரிகளும் சூட்டினார். அன்று பம்பாய் நகரவாசிகளும், ஆஸ்ரமத்தைச் சேர்ந்தவர்ளும், அடியார்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

இந்த மஞ்சள் வர்ணம் மங்களத்தைக் குறிப்பது ஆடைக்கும் மனதிற்கும் சம்பந்தம் உள்ளது. இந்த ஆடை அணிவதினால், உங்கள் மனதிலும் ஓர் நல்ல மாற்றம் ஏற்படும். இந்த பிரம்மசர்ய ஆஸ்ரமத்திலேயே இருந்தது, மனோபலம் பெற்று நன்கு ஸ்திரப்பட்டால், சன்யாசத்திற்குத் தகுதி உடையவர்களாய் ஆகலாம்! மனோபலம இல்லாவிடில் இல்லறம் மேற்கொள்ளலாம் என்பதே இப்பெயர் மாற்றம், ஆடை மாற்றத்தின் நோக்கம் என்று சுவாமிஜி பிரம்மச்சாரிகளுக்குக் கூறினார்.

பிரிவு உபசாரத்தின் போது சுவாமிஜி கூறியது

1975ம் வருடம் ஏப்ரல் மாதம் 6ம் தேதி பிரிவு உபசார நிகழ்ச்சி ஏற்பாடாயிற்று. அச்சமயத்தில் சுவாமிஜி பிரமம்மச்சாரிகளுக்கு கூறிய அறிவுரை இவ்வளவு நாட்களாய் நீங்கள் கற்றதைப் பிறருக்கு கற்றுக் கொடுக்க ஏற்பட்ட அவகாசமாக இதை எடுத்துக்கொள்ள வேண்டும். இதுவே பிரம்ம அப்பியாசம் ஏன் எனில் சிரவணத்திற்குப் பின் ஏற்பட்ட இந்த சந்தர்ப்பம் மனைம், நிதித்யாசனமாகும். கூறுபவர்களுக்கு மனைமாகும் கேட்பவர்களுக்குச் சிரவணமாகும். நீங்கள் மேலும் ஞானத்தைத் திடப்படுத்திக் கொள்வதற்கும், கற்பதற்கும் இந்த அவகாசம் உபயோகப்படும்.

உங்கள் போதனை மூலம் பிறரைக் காப்பாற்ற முடியும் என்று நினைக்காதீர்கள். வியாசர், சங்கரர் முதலியவர்கள் சாஸ்திரங்களை விளக்கிக் கூறினார்களே தவிர, எவ்விதமான புதிய மதங்களையும் ஸ்தாபிக்கவில்லை. இவர்கள் சாஸ்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் இதனால் குருசிஷ்ய பரம்பரையை வளர்த்தார்கள். புதிய மதஸ்தாபகம் எதுவும் இவர்கள் செய்யவில்லை. சார்க்யம் வைவேஷிகம் முதலிய மதங்கள், குறிப்பிட்ட ஒரு மதத்தை போதிக்கின்றன. ஆனால் வேதாந்தம் நேரிடையான ஞானத்தைக் கொடுப்பது.

வேதாந்தம் கேட்க வருபவர்கள் முமுசுக்களதான் தாங்கள் முமுட்சுக்கள் என்று இப்பெயர் அவர்களுக்குத் தெரியாததே தவிர, அவர்கள் இந்த ஞானம் வேண்டும் என்று ஆவலுடன் வருகின்றார்கள். தத்துவங்களைக் கற்கவும் அதன் அர்த்தம் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள். நீங்கள் போதிப்பது கேட்பவர்கள் இருதயத்தைத் தொடவேண்டும். நீங்கள் கூறப்போவதை மனக்கண்ணால் பார்த்து, பிறரையும் பார்க்கச் செய்ய வேண்டும். உயரப்பறந்தாலும் கழுகின் பார்வை பூமியில் வஸ்துவின்மேல் இருப்பதுபோல. உங்கள் மனம் சாஸ்திரத்தைப்பற்றியும் நீங்கள் போதிக்கப்போகும் விஷயத்தைப்பற்றியதாகவும் இருக்க வேண்டும்.

சிறிது நேரம் பேசினாலும் சம்பிரதாயப்படி பேச வேண்டும். கேட்பவர்களுக்கு சாஸ்திரம் விளங்காமற் போனால் அதற்குப் பொருத்தமான வார்த்தைகள் மூலம் விளக்கிக்கூற வேண்டும். ஜீவ, ஜகத், ஈஸ்வர ஞானம் பற்றி பலவித அபிப்ராயங்கள் பலவித மக்களால் பலவிதமாகக் கூறப்படுவதால் அதில் ஏற்படும் சந்தேகங்களைப் போக்கி, உண்மையை விளங்குமாறு போதிக்க வேண்டும். என்னை (சுவாமிஜியை) ஓர் சமயம் நீ என்ன போதிக்க வந்திருக்கின்றாதய் என்று கேட்டபோது, ''நான் எதையும் போதிக்கவில்லை நான் உண்மையைக் கூற வந்திருக்கின்றேன்'' எவ்வளவு மந்தனாக இருந்தாலும் அவனுக்கு உண்மையைக் காட்டுவதே என்னுடைய வேலை. அஞ்ஞானத்தை விலக்குவதே என் ஜீவிதம். நான் இளமையிலேயே உபன்யாசம் செய்யும் பழக்கம் உள்ளவன் என்று கூறினேன் என்றார் மாணவர்களுக்கு.

பிறருக்கு உண்மையையும், சத்தியத்தையும் நாம் எடுத்துக் கூற முற்படும்போது, தெய்வசக்தி நமக்கு உதவும் நம் முயற்சியும், நேர்மையும் மக்கள் மனதில் நம்பிக்கை தரும். அவர்களுக்கு நமக்கு உதவிசெய்வார்கள். நாம் போதிக்கும்

போது நமக்குப் புரியாத சில வார்த்தைகளோ கருத்துகளோ தனக்குத் தானாக விளக்கம் வந்து விடும். இந்த நிலை நம் சுத்த அந்த காரணத்தினாலும் நேர்மையினாலும் தான் வரும்.

பெரிய கூட்டத்தைத் திரட்டி, குரலை உயர்த்தி அடுக்கு மொழிகள் கூறித்தான் உபன்யாசம் செய்யவேண்டும் என்பது இல்லை. உன்னை யாராவது சந்தேகம் கேட்டால், உடனே பதில் கூறவேண்டும் என்பது இல்லை. பிறகு கூறுகின்றேன் என்று சரியான விடையைத் தெரிந்து கொண்டு சொல்ல வேண்டும். இம்முறை இன்றும் ரிஷிகேசத்தில் உள்ளது.

சிற்பம் செய்பவன் மனதில், சிற்பத்தின் உருவம் எப்படி அவன் திருஷ்டியில் இருக்கின்றதோ, அவ்விதம் சொல்லப் புகும் விஷயம், உங்களுக்கு நன்றாகத் தெரிந்து இருக்க வேண்டும் பாடம் கேட்பவர்கள் மனநிலையை உணர்ந்து, அன்பினால் அவர்களுக்கு, கவர்ச்சி அளிக்கும் வகையில் கூறவேண்டும். நீங்கள் கூறிய உண்மையை, அவர்கள் உணருமாறு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு நாளும் நீங்கள் போதிப்பது முழுமையாக இருக்க வேண்டும். குழப்பம் அற்ற எளிய வார்த்தைகளால் போதிக்கவேண்டும். எளிமை, அன்பு, பணிவு, அடக்கம் உடையதாக உங்கள் வாழ்க்கை இருக்கவேண்டும். நீங்கள் போதிப்பதினாலேயே உங்களை மற்றவர்கள், போற்ற வேண்டும் என்பது இல்லை. இவ்வித எண்ணம் உங்களுக்கு ஏற்பட இடம் கொடுக்காதீர்கள். குணங்களை உங்களுக்குரிய செல்வமாகச் செய்து கொள்ளுங்கள்.

இரண்டரை வருஷமாக நீங்கள் கற்றுக்கொண்ட வேதாந்தம், இப்போது உங்களுக்கும், மற்றவர்களுக்கும் உபயோகப்படும் நேரம் வந்துள்ளது என்பதை அறிந்து செயல்பட வேண்டும். புதிய சூழ்நிலை, புதிய மக்கள், பலவித

மனோபாவங்கள், வேற்றுமைகள் எல்லாம் இருக்கும். அதற்கு கலங்க வேண்டாம். உறுதியான உள்ளத்தோடு, தூய்மை யோடு பற்றின்றி பணி செய்யுங்கள். உங்களுக்கு வேண்டிய உதவி, தானே கிடைக்கும். யாருடைய தொண்டையும் உலகம் எதிர்பார்க்கவில்லை. உங்களை உய்வித்துக் கொள்ள ஏற்பட்ட இனிய சந்தர்ப்பம் இது என்று எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் நடத்தை மற்றவர்களுக்குப் பாடமாக இருக்க வேண்டும். நீங்கள் போதிக்கும் ஒவ்வொரு பாடமும், எளிமையாக, ஆரம்பம் முடிவு தெளிவாகப் புரியுமாறு இருக்கவேண்டும். நாம் பெரிய ஆளாக வேண்டும் என்று ஆசைப்படாதீர்கள். நம்மிடம் பேரியல்பு, பண்பு இருந்தால், அதற்குரிய மரியாதையும் தானாகக்கிடைக்கும்.

நீங்கள் எங்கு இருந்தாலும், நான் அங்கு இருப்பேன். உங்கள் நலத்திற்கு வேண்டிய எல்லாம் செய்வேன் என்று, தங்கள் மக்கள் நலத்தில் கருத்துள்ள வீரத்தாயைப் போல், ஆசியும் அறிவுரையும் கூறினால் சுவாமிஜி.

இதன் பின்பு ஒவ்வொரு மாணவனும் எந்தெந்த நகரத்தில் எங்கெங்கு தங்கி பிரசாரம் செய்யவேண்டும் என்பது பற்றிக் கூறினார். அயல் நாட்டினர் தங்கள் தேசத்திற்குச் சென்று, அங்கு எவ்விதம் பிரசாரம், செய்ய வேண்டும் என்று அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்.

இரண்டரை வருடம் தங்கள் சுக, துக்கத்தில் தாயைப் போலும், அறிவுரையில் ஆச்சார்யனாகவும், தோழனாகவும், வைத்யனாகவும், வழி காட்டியாகவும் இருந்த குருநாதரைப் பிரிய மனம் இல்லாமல் வாடிய, ஒவ்வொருவரையும் தனிமையில் அழைத்து, அவர்கள் மனதில் உள்ள குறைகளைக்கேட்டு அதற்குத் தகுந்த மார்க்கம் கூறி, அவர்களை ஆனந்திக்கச் செய்து வழி அனுப்பினார்.

இவ்விதம் தம் குருநாதருடைய, பெரும் விருப்பமாகிய சாந்தீபனி சாதனாலயாவின் பெரும் நோக்கத்தை வெற்றி கரமாக பூர்த்தி செய்தார்.

''ரிஷிகேஷில் சிவலிங்கம் பெற்ற விதம்''

சந்திர மௌளி என்ற பிரம்மச்சாரி ரிஷிகேஷ் போயிருந்தபோது இந்த ஆஸ்ரமத்தில் ஓர் சிவலிங்கம் இருந்தால் அழகாய் இருக்கும். சுவாமிஜி ஓர் சிவலிங்கம் கொண்டு வந்து வைக்கவேண்டும் என்று அடிக்கடி கூறி வந்தார். அதற்கு சுவாமிஜி சிவலிங்கம் வைத்தால் பூஜை எல்லாம் ஒழுங்காகச் செய்ய வேண்டும். அதற்கு ஓர் ஆள் வேண்டும், பிறகு பார்க்கலாம் என்று கூறி விட்டுவிட்டார்.

ஓர் நாள் சுவாமிஜி கங்கைக்குப் போகும் போது, மூன்றடி நீளமுள்ள அழகிய சிவலிங்கம், ஓர் மரத்தின் வேருக்கு அடியில் இருப்பதைப் பார்த்து, சந்திர மௌளியையும், அங்கு இருந்த இன்னும் மூன்று சாதுக்களையும் அழைத்து சற்று தூரத்தில் கங்கைக் கரையில் உள்ள ஓர் மரத்தின் வேருக்கிடையில் ஒரு சிவலிங்கம் உள்ளது. கோணிப்பை எடுத்துக்கொண்டு போய் நால்வரும் சேர்ந்து அச்சிவலிங்கத்தை எடுத்துக்கொண்டு வாருங்கள் என்று கூறினார்.

நால்வரும் தங்களால் இயன்றவரை முயற்சித்தும், லிங்கத்தை வெளியில் எடுக்க முடியவில்லை. சுவாமிஜியிடம் சென்று நாங்கள் எவ்வளவு முயற்சித்தும் லிங்கத்தை எடுக்க முடியவில்லை. வேரை வெட்டித்தான் எடுக்க வேண்டும் போலிருக்கின்றது என்றார்கள். சரி நான் வந்து முயற்சித்து பார்க்கின்றேன் என்று கூறி சுவாமிஜி லிங்கம் இருக்கும் இடத்திற்குச் சென்று, தொட்டு எடுத்தவுடன் லிங்கம் வெளியில் வந்துவிட்டது. இவ்விதம் உரியவர்கள் வந்து தொட்டவுடன் வெளியில் வந்ததினால் இதை எஜமான லிங்கம் என்று கூறுவார்கள்.

லிங்கத்தைக் கொண்டு வந்து ஆஸ்ரமத்திற்கு முன் ஓர் ஆவுடையார் கட்டி அதில் வைத்தார்கள். பிறகு தகரத்தால் கோபுரம் போல் சிறியதாக அமைத்து பூஜை செய்து

வந்தார்கள். இந்த லிங்கத்தை பிரதிஷ்டை செய்த கொஞ்சம் நாட்களில், கிணறு எடுத்து ஆஸ்ரமத்திற்கு வேண்டிய தண்ணீர் வசதி செய்தார்கள். இதன் பின்பு அடியார்கள் அமர்ந்து உண்ணவும் இருக்கவும் வேண்டிய வசதிகள் செய்தார்கள்.

சுவாமிஜி இருந்த குடில் பருக்கைக் கற்களைத் தரையாக உடையது கூரையில் கொடிய கருநாகம் குடி இருந்தது. இக்குடிலை மாற்றி சற்றுப் பெரியதாய் பழைய குடில் அமைப்பிலேயே சிமெண்டினால் கட்டினார்கள். இவ்விதம் மேன்மேலும் பலவித நன்மைகளை இந்த லிங்கேஸ்வரன் அளித்து வந்தார் ஆஸ்ரமத்திற்கு.

ரிஷிகேஷத்தில் உள்ள ஆந்திரா ஆஸ்ரமத்தின் மேனேஜராக இச்சமயத்தில் அனுமந்தராவ் என்பவர் இருந்தார். இவர் சுவாமிஜியிடம் அபார பக்தி உடையவர். சுவாமிஜியை ஈஸ்வரனாகவே பாவிப்பார். உண்மையான சாதுவான இவர் ஆஸ்ரமம் நன்கு வளர்ச்சி பெற வேண்டும் என்ற ஆவலும் பெரும் நோக்கமும் உள்ளவர். ஆஸ்ரமத்திற்கு வரும் அன்பர்கள், பக்தர்கள் மூலம் ஆஸ்ரம காரியங்களுக்காக நிதி வசூல் செய்தார். இவர் சாந்தீபனி சாதனாலயா பிரம்மச்சாரிகள் பயிற்சியின் போது மேனேஜராக இருந்தார். ‘சாந்தீபனி ஆஸ்ரமத்திலேயே தங்கி கணக்குகள் பார்த்து வந்தார். பழைய வரவு, செலவு கணக்குகளை ஒழுங்கு செய்தார். இரண்டு லட்ச ரூபாய் வருமானமாக இருந்ததை 20 லட்சம் ரூபாயாக வருமானத்தை உயர்த்துவதற்கு சுவாமிஜியுடன் ஒத்துழைத்தார். அனுமந் தராவ் உண்மையான ஊழியர், ஏமாற்றும் குணமோ பிறர் செல்வத்தில் ஆசையோ அற்றவர். தார்மீக சிந்தை உள்ளவர் குருபக்தி உடையவர்.

திருப்பதி தேவஸ்தானத்தார், சிவன், பெருமாள் இருவருக்கும் ஆந்திரா ஆஸ்ரமத்தின் பக்கத்தில் இரண்டு கோவில்கள் கட்ட ஏற்பாடுகள் செய்தார்கள். அக்கோவில் திருப்பணி நிகழ்ந்து கொண்டு இருந்தபோது, அங்கு வேலை செய்த கொண்டிருந்த ஊழியர்களிடம், சுவாமி ஜியின் ஆஸ்ரமத்தில் உள்ள சிவலிங்கத்திற்கு சிறிய கோவில் ஒன்று அமைக்க வேண்டும், அதற்கு நீங்கள் அனைவரும் ஸ்ரமதானம் செய்யவேண்டும் என்று வேண்டி கொண்டார் அனுமந்தராவ் (ஸ்ரமதானம் என்றால் தங்கள் உடலால் தங்களுக்கு முடிந்த அளவு உழைப்பது, பணம் பெற்றுக் கொள்ளாமல் தங்கள் சரீர ஸ்ரமத்தைத் தானம் செய்வது இது.)

இந்த ஊழியர்கள் அங்கு ஆந்திரா ஆஸ்ரமகோவில் வேலை முடிந்த பின்பு இங்கு சிவலிங்கத்தின் கோவிலுக்காக ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் தினந்தோறும கோவில் கட்டிட வேலைகள் செய்தார்கள். எட்டடி சுற்றள வுள்ள கர்ப்பகிரகம் அமைத்து, அதற்குத் தகுந்த வட்ட வடிவ விமானம், அழகிய வேலைப்பாடுகளுடன் கட்டி முடித்தார்கள்.

கொஞ்ச நாட்களுக்குப் பின் ஆந்திரா ஆஸ்ரமத்தார் கோவிலை ஒட்டினாற்போல் 'ஸ்னான் காட்'' ஒன்று சிறிய அழகிய படிக்கட்டுகள் கங்கைக்குப் போவதற்கு அமைத்தார்கள். இது கங்காதரரைப் பூஜிப்பதற்கு, கங்கா தேவி ஏறி வருவதற்காக இப்படிகட்டுகள் அமைந்தன போலிருக் கின்றன. இறைவன் கங்கையை நோக்கிய வண்ணம், அமர்ந்திருப்பது கண்களையும், கருத்தையும் கவரும் காட்சி, உதய சூரியன் லிங்கத்தின் மேல் படும் அழகிய காட்சி, ஆயிரம், ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அழியாப் புகழுடன், விளங்கும் கன்யா குமரிதேவியைப் போல், இன்று

இமாசலத்தில், கங்காதரர் அமர்ந்திருக்கும் அழகு மங்காது ஒளி வீசுகின்றது. வற்றாகங்கையின் ஓம்கார கீதத்தைப் போல், இமயத்தைப் போல் உலகெங்கும் சுவாமி தயானந்த சரஸ்வதியின், புகழும், கருணைப் பிறவாகமும் பெருகப் போவதற்கு அறிகுறியாக அமைந்தது இத்திருக் கோவில்.

லிங்க பிரதிஷ்டை

ஜூன் மாதம் நான்காம் தேதி கங்காதீரத்தில் லிங்க பிரதிஷ்டை செய்ய நாள் குறிப்பிடப்பட்டது. ஜூன் மாதத்தில், டில்லி, ரிஷிகேஷ் முதலிய இடங்களில், ஆந்தி என்னும் சுழல் காற்று மண்ணை வாரி வீசும். இங்கு உஷ்ணமும், தாங்க முடியாததாக இருக்கும்.

இச்சமயத்தில் கும்பகோணம், சென்னை, பம்பாய், டில்லி இன்னும் பல ஊர்களில் இருந்து பக்தர்கள் இப்பிரதிஷ்டையில் கலந்து கொள்வதற்கு வருவதாக இருந்தது. இவர்கள் அனைவரும் எவ்விதம் இந்த ரயில் பிரயாணம் செய்யப் போகின்றோம். ரிஷிகேஷில் எவ்விதம் தங்குவது? என்று பக்தர்கள் கலக்கத்துடன் சுவாமிஜியைக் கேட்ட போது, என்ன செய்யலாம் இந்த நாள் தான் பிரதிஷ்டைக்கு அமைந்துள்ளது, பார்ப்போம் என்று அமைதியாக சிவன் செயலில் சித்தத்தை வைத்துக் கூறினார்.

அப்போது நிகழ்ந்த அதிசயம்! ஞானிகள் செயலுக்கு ஈஸ்வரனும், இயற்கையும் எவ்விதம் அருள் செய்கின்றது என்பதை பிரத்யக்ஷமாகப் பார்த்து அனுபவிக்க முடிந்தது. கும்பகோணம், சென்னை, ஹைதராபாத் முதலிய இடங்களில் இருந்து, ரயிலில் ரிஷிகேசத்திற்கு பிரயாணம் செய்தபோது, சூரிய பகவான் பக்தர்கள் கோபத்திற்கு

ஆளாகக்கூடாது என்று மேகத்தில் ஒளிந்து கொண்டார். இவ்விதம் நான்கு நாட்கள் வரை உஷ்ணம் இல்லாமல் குளிர்ந்த காற்று வீசிற்று. வசந்த காலம்போல் இருந்தது இந்த அற்புத காலநிலையைப் பார்த்த அனைவரும் இதையே நினைந்து நினைந்து பேசி அகமகிழ்ந்தார்கள், ஆச்சர்யப்பட்டாரகள்.

சுவாமிஜி சென்னையில் யக்ஞா முடித்துக்கொண்டு டில்லி வந்து, அங்கிருந்த காரில் ரிஷிகேசத்திற்கு வந்து கொண்டு இருந்தார். கார் ஹரித்துவார் எல்லையில் வந்தவுடன், மழை பெய்யத் துவங்கி விட்டது. பஞ்ச பூதங்களும் மனமகிழ்ச்சி அடைந்து, சுவாமிஜியின் காரியத்தில் உதவி செய்தது. வேதமே சுவாமிஜி வடிவத்தில் வந்து செயல்படுவது போல் இருந்தது இந்த நிகழ்ச்சி ஆஸ்ரமத்தில் அனைவரும் சுவாமிஜி வரும்போதே மழையைக் கொண்டு வந்துவிட்டார் என்று கூறினார்கள்.

சண்முகம் என்ற சுவாமிஜியின் சிஷ்யர், கங்காதரர் சிலையை, கணபதி ஸ்தபதியின் சகோதரர் வள்ளியப் பஸ்தபதி மூலம் இச்சிலையை செய்தார். சுவாமிஜி ஹைதராபாத் சென்ற போது சிலை எவ்விதம் அமைய வேண்டும் என்பதை கூறினார். அதன்படி சிலை தயார் செய்து எடுத்துக்கொண்டு ரிஷிகேஷிற்கு வந்தார். சிலை கொண்டு வருவதற்கு சற்று முன்தான், சுவாமிஜியும் ரிஷிகேஷ் வந்தார். பிரதிஷ்டைக்குரிய வேலைகள் என்ன என்ன பாக்கி உள்ளது என்று சுவாமிஜி விசாரித்தார். அப்போது இன்னும் சிலை வரவில்லை என்று கவலை யோடு கூறினார்கள். சிலை வந்துவிடும் கவலை வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போது, திரு சண்முகம் அவர்கள் சுவாமிஜியின் எதிரில் நின்றார். சிலை இதோ வந்தாச்சே என்று தன் பக்கத்தில் அமர்ந்திருந்த வர்களிடம் கூறி சந்தோஷப்பட்டார்.

வேதாகம பிரதிஷ்டை செய்வதற்காக, சுவாமிஜி பிறந்த ஊராகிய மஞ்சகுடியிலிருந்து ஸ்ரீமான் ராஜகோபால சாஸ்திரிகள் வந்தார். இவர் கதா காலக்ஷேபம் செய்வதில் சிறப்பு பெற்றவர். பெரிய பண்டிதர் இவர் பிரம்ம ஸ்ரீ ராஜகோபாலச்சாரிகள் என்ற பட்டம் பெற்றவர். இவர் ஓர் முறை ரிஷிகேசத்திற்கு வந்தபோது கோவில் திருப்பணி நிகழ்ந்து கொண்டிருந்தது. லிங்கப் பிரதிஷ்டை ஆகாம லிருந்ததை சாஸ்திரிகள் பார்த்து, சுவாமிஜியிடம் இந்த சிவலிங்க பிரதிஷ்டை செய்யும் பாக்யம் தனக்கு அளிக்கு மாறு வேண்டிக் கொண்டார்.

சுவாமிஜி அவர் விருப்பத்தை நிறைவேற்ற இச் சந்தர்ப்பம் அளித்தார். ரிக், யஜுர், சாம, அதர்வண வேத பண்டிதர்கள் அனைவரையும் வரவழைத்து, கலசங்கள் வைத்து ஹோமம் வளர்த்து, காலை, மாலை பூரண ஆகுதி செய்து, பிரசாதங்கள் வழங்கினார்கள். பெண்கள் கீர்த் தனைகள் பாடுவதும், வேதவித்துக்கள் வேத உச்சாரணம் செய்ததும் பார்க்கப் பார்க்க பரமானந்தமாக இருந்தது. இடை இடையில் ராஜகோபால சாஸ்திரி அவர்கள் என்ன பாக்யம் செய்தேன் என்ன் பாக்யம் செய்தேன் இச்சந்தர் பத்தில் கலந்து கொள்வதற்கு என்று வாய்விட்டுக் கூறி ஒவ்வொருவரையும் அந்நிலையை உணர செய்தார்.

கர்ப்பக்கிருகத்தில், லிங்கப் பிரதிஷ்டை செய்ய, ஆவுடையார் கட்டாமல் இருந்தது முன் நாள் மாலையி லிருந்து எத்தனை முறை கட்டினாலும் லிங்கம் பெரியதாக இருந்ததினால், ஆவுடையார் மேல் லிங்கம் வைத்தவுடன், சரிந்து, சரிந்து விழுந்துவிட்டது. காலையில் கும்பாபிஷேகம் என்ன செய்வது? சுவாமிஜி அன்று இரவு பூராகவும் கண்விழித்து, அருகிலேயே இருந்து லிங்கப்பிரதிஷ் டைக்குத் தயார் செய்தார். இரவு தூங்காமல் இருந்தும் காலையில் சுவாமிஜி முகமலர்ச்சியுடன் சோர்வற்று மகிழ்ச்சியாகவே இருந்தார்.

குறிப்பிட்ட முகூர்த்தம் வந்ததும் சுவாமிஜி கோபுரத்தின்மேல், ஆரஞ்சு வர்ண பட்டு வேஷ்டியும் அங்கவஸ்திரமும் அணிந்து கொண்டு, நெற்றியில் சந்தனப் பொட்டு, ஞானத்தினால் ஒளிவீசும் திருமுகம். சூரியனே இறங்கி வந்து கோபுரத்தின்மேல் நிற்பதுபோல் இருந்தது அக்காட்சி பண்டிதர்கள் மந்திரம் கூற, வாத்ய ஒலி முழங்க, கும்ப ஜலத்தை கலசத்தில் விட்டு அபிஷேகம் செய்தவுடன் வர்ண பகவானும் ஆசீர்வதித்தார். இது சாதாரண ஆசீர்வாதம் அல்ல. மனதை வென்ற மஹான்கள், செய்யும் செயலின் உண்மையை மக்களுக்குக் காட்டுவது ஈஸ்வரககிரகம் இது. பஞ்சஜேந்திரியங்களை கட்டுப்படுத்துவது எளிது அல்லவாயினும் புலன் வென்றவர்களின் பூர்ணத்வதை நிருபிப்பது இக்கருணை மழை. இச்சம்பவத்தை நினைக்க நினைக்க, நெஞ்சத்தில் கருணை மழை பொழிந்து, நம் மனதின் மலத்தை அகற்றுகின்றது இது தெய்வீக அத்தாட்சி பெற்ற காட்சி. சுவாமிஜியின் உயர்ந்த தபசின் பிரகாசம் இது.

இத்திவ்யக் காட்சியை பார்த்துக்கொண்டு கோபுரத்தை சுற்றி நின்ற அடியார்கள், அன்பர்கள் அனைவர் மேலும் கும்பஜலத்தைத் தெளித்து ஆசீர்வாதம் செய்தார். இதுவரை கங்காதேவியை கண்டிராத அற்புதப் பிரதிஷ்டை மங்களமாக நடந்தேறியது.

பிரதிஷ்டை முடிந்தவுடன் மத்யானம் 700 சாதுக்களுக்கு பண்டாரா ஏற்பாடு செய்திருந்தார். (சாதுக்களுக்கு பிச்சை கொடுப்பதற்கு பண்டாரா என்று பெயர்) பெரிய பந்தல் போட்டார்கள். குவியல், குவியலாக லட்டும், கச்சோரியும் செய்திருந்தார்கள். எல்லாவித காய்களும் சேர்த்த கறி, அம்ருத் என்னும் சட்னி, பாயசம் முதலியவற்றோடு பிச்சை தயார் செய்திருந்தார்கள்.

காவி உடுத்திய சாதுக்கள் வரிசை வரிசையாக அமர்ந்த காட்சி, கண்களுக்கு விருந்தாக அமைந்தது. பலர் ஞானம் பெறாதவர்களாக இருந்தாலும் எவ்வளவோ கதாகால க்ஷேபங்கள் செய்யலாம். ஆனால் பிரம்ம ஞானியாகத் திகழ்வது என்பது எளிது அல்ல. ஞானியாக இருந்தாலும் இவ்விதம் அனேக காரியங்களைச் செய்வது எளிதல்ல என்றார்.

சுவாமிஜி இவரை உபன்யாசம் செய்யுமாறு கூறினார் சிவபெருமான் குணங்களையும் அவரைத்தொழும் அடியார்கள் பெரும் பாக்யங்களைப் பற்றியும் பேசினார். ஸ்ரீ ராஜகோபால சாஸ்திரிகள் இவ்விதம் ஹைமவதி சமேத கங்காதரர் பிரதிஷ்டை சிறப்பாக நடந்தேறியது. வயிற்றுக்காக சாது வேஷம் போட்டவர்கள் ஆனாலும், அவர்கள் உடைக்கும், ஒழுக்கத்திற்கும் நாம் மரியாதை கொடுக்க வேண்டும் என்று எப்போதும் கூறுவார். சுவாமி அவர்களை அன்புடன் தன் பக்கத்தில் அமர்த்திக்கொண்டு பேசுவார்.

இன்று வரிசையாக பிக்ஷைக்கு அமர்ந்த சாதுக்கள் ஒவ்வொருவருக்கும் சுவாமிஜி நெற்றியில் சந்தனம் வைத்துக்கொண்டு வரும்போது, பக்கத்திலேயே சுத்தானந்த சுவாமிஜி தட்க்ஷிணை வைத்துக்கொண்டு வர, இன்னும் மற்ற சாதுக்கள் பரிமாறிக் கொண்டு வந்தார்கள். இனிப்புப் பண்டம் என்றால் சாதுக்களுக்கு மிகவும் பிரியம். சுவாமிஜி தன் இருகரங்களினாலும் லட்டுகளை பரிமாறி இன்னும் வேண்டுமா, வேண்டுமா என்று கேட்டு உபசரித்தார். இடையிடையில் ஒவ்வோர் சாதுவாய், ஸ்தோத்ரம், ஸ்லோகம் கூறினார்கள். சிலர் உரத்த குரலில் சுவாமிஜியின் குணங்களைப் பாடினார்கள். அப்போது நீல வானத்தில் உள்ள பலகோடி தாரகைகளுக்கு நடுவில் பிரகாசிக்கும் பூர்ண சந்திரன் போல், பூர்ணரான இந்த மஹாத்மா

பிரகாசித்தார். பிக்ஷை முடிந்தவுடன் ஹர ஹர நமப் பார்வதியே பதேயே என்று ஒன்று சேர்ந்த குரலில் கூறிய ஒலியால் உடல் புல்லரித்தது. கைலாசம் என்பது என்ன என்பதை அன்பர்கள் அனுபவித்தார்கள், கைலாய மலை அடிவாரத்தில்.

அப்போது ஸ்ரீ ராஜகோபால சாஸ்திரிகள் உடல் உணர்வு கடந்த நிலையில் சம்போ... சம்போ... கங்கை கரையில் வேதாச்சாரணம் செய்து கங்காதரை பிரதிஷ்டை செய்ய நான் என்ன பாக்யம் செய்தேன்? நான் என்ன பாக்யம் செய்தேன்? என்று அவர் அடிக்கடி கூறி உருகி, குழைந்த காட்சி மறக்க முடியாது. தன் கண்முன் குழந்தையாய் விளையாடித் தன் கரத்தால் பூணூல் அணிவித்த குழந்தை, இன்று மஹாத்மாவாய் மாபெரும் காரியங்களைச் செய்த, பிரம்ம ஞானியாய், அண்டி னோர்களுக்கு அருள் புரியும் அற்புதத்தைக் கண்டு நெகிழ்ந்தார். அங்கு வந்திருந்த அன்பர்களிடமும், பக்தர் களிடமும் சுவாமிஜியின் பெருமைகளைப் பேசினார்.

சுவாமிஜியின் போதனையின் மகிமைகளை மாணவர்கள் கூறுகின்றார்கள்

ராதா

சுவாமிஜியைப் பற்றி எவ்வளவு நான் கூறவேண்டும் என்று நினைக்கின்றேனோ அவ்வளவையும் இந்த பேனா வினால் எழுதமுடியவில்லை. அதுவும் மௌனமாய் விடுகின்றது. ஏன் எழுத முடியவில்லை என்றால் எழுதப் படும் வார்த்தைகளோ அல்லது சப்தங்களோ என் குருநாதர் கருணை குணத்தை பிளக்கும சக்தி அற்றவை ஆகிவிடு கின்றன. எந்த அக்ஞானத்தினால் நான் துக்கப்படுகின் றேனோ அந்த அக்ஞானத்தை அழிக்கும் வீரர் அவர். ஆகையால் இவர் மீது எனக்கு அளவற்ற பிரேமை.

பிரம்மசாரினி ராதா.

ராமரத்னம்

சுவாமி தயானந்தா என் குரு. சுவாமி தயானந்தரை நினைக்கும்போது என் மனம் 21 வருடங்களுக்கு முன் நடந்ததை நோக்கி பறக்கின்றது. 1953 வருஷம் மே மாதம் நிகழ்ந்த சுவாமி சின்மயானந்தரின் யக்ஞத்திற்கு சூர்யா ஸ்ரமத்தில் நடராஜன் என்ற பெயர் கொண்ட சுவாமிஜியும் நானும் செல்வோம். அந்த பிரவசனத்தைக் கேட்டு மிகவும் உற்சாம், சிரத்தை ஏற்பட்டது. ஆனால் எங்கள் இருவருக்கும் ஏற்பட்ட உற்சாம் சிரத்தையில் பேதம் உள்ளது. என்னை விட மிக விரைவில் சித்தத் தெளிவும் வைராக்யமும் வந்து விட்டது. அதனால் 1962ம் வருஷம் சன்யாசம் வாங்கிக் கொண்டார். நான் இன்றும் அவர் திருவடிக்கீழ் அமர்ந்து வேதாந்தம் படித்துக்கொண்டு இருக்கின்றேன்.

எவ்விதம் கீதையில் கண்ணன் கிருஷ்ணனுக்கு சினேகி தனோ அதேபோல் எனக்கு சுவாமிஜி சினேகிதன் ஞானி, வழிகாட்டி என் வாழ்க்கைக்கு. அந்த சிறுவயதிலிருந்து எங்கள் சினேகம் மாறாமல் பெருகிக்கொண்டே இருக்கின்றது. மேலும் மேலும் வேகமாய் அவர் ஞான வாழ்க்கையில் செல்வதைப் பார்க்க எனக்கு ஆச்சர்யமாக இருக்கின்றது. இந்த ஞானலக்ஷணத்தின் அறிகுறிகள் பூர்வாஸ்ரமத்திலேயே எங்களுக்குத் தெரிந்தது. அப்போதே அவர் பஜனை செய்வதில் பாடங்கள் நடத்துவதில் எப்போதும் இவரே முதன்மையானவர்.

குரு என்ற வார்த்தைக்கு அக்ஞான இருளை அகற்றுபவர் என்று அர்த்தம். கு என்றால் இருள். ரு என்றால் அந்த இருளை அகற்றுபவர் என்று அர்த்தம். குரு இந்த இருளை அகற்றியவுடன் நித்த சித்த ஆத்மா பிரகாசிக்கின்றது. சுவாமிஜிக்கு அத்வைத வேதாந்த ஞானம் தெளிவாய்

ஸ்திரமாக உள்ளது. எவ்வளவு கடினமான விஷயமானாலும் மந்தனும் எளிதில் புரிந்து கொள்ளும் விதம் எடுத்துக் கூறுவார். யாரும் எடுத்தக் கூற முடியாத திறமை இவருக்கு உள்ளது. எந்த சாதனம் ஆனாலும் அந்தக்கரண சுத்திக் காகவே என்று கூறுவார். இந்த சுத்த அந்தக்கரணம் இருந்தால் தத்வமசி பாக்ய அர்த்தம் அறியப்படும் என்று கூறுவார். பக்தி, வைராக்யம், கர்மம் இது எதைப் பற்றிப் பேசினாலும் இது யாவும் ஆத்ம ஞானத்தைப் பெறுவதற்கே என்று கூறுவார்.

இவர் தன் பெயருக்கு ஏற்றார்போல் தயாமூர்த்தி, தவறு செய்தவர்கள் மீது கூட அவருக்கு தயையே உண்டாகும். இவர் குணத்திற்கு தகுந்த பெயரை சுவாமி சின்மாயனந்தர் எவ்விதம் தேர்ந்து எடுத்தார் என்று ஆச்சர்யமாக இருக்கின்றது. இவர் எப்பொழுதும் புன்னகையுடன் ஆனந்தமாக இருப்பார்.பக்தர்களின் சந்தேகங்களை எப்போதும் விளக்குவார். இவருடைய மிக்கக் கருணையை மற்றவர்கள் பலஹீனமாய் நினைத்து அதை துஷ்பிரயோகம் செய்வார்கள். இவ்விதம் இவர்கள் செய்தாலும் தயையோடு தான் இருப்பார் இதுவே இவர் சக்தி.

என் குருவாகவும் சினேகிதனாகவும் உள்ள இவரிடம் நான் அனேக விஷயங்களைக் கற்றுக்கொண்டேன். நீண்ட ஆயுளையும் நோயற்ற வாழ்வையும் அளிக்கும்படி ஜகதீஸ்வரனை பிரார்த்திக்கின்றேன்.

வேதாந்த குருவுக்கு மங்களம்

வெங்கடரத்னம்.

யக்ஞ சைதன்யா

நமக்குத் தெரியாத வஸ்து ஒன்று உள்ளது என்று தெரிந்தாலொழிய அதை அறிய வேண்டும் என்று கோரிக்கை ஏற்படாது. இந்த அறியாமை என்னவென்று

ஆச்சர்யமாய் பார்ப்பார்கள். ஆனால் அதை அறிந்து கொள்வதற்கு மட்டும் பிரயத்தனம் செய்யமாட்டார்கள். அந்த அறியாமையை அறிந்தவர்கள் எவ்வளவோ பேர்கள் இந்த உலகில் உள்ளார்கள் அவர்களே அதை அறிந்து கொள்ள எனக்குக் கோரிக்கையை ஏற்படுத்தினார்கள். அதற்காக சாஸ்திரத்தை கற்கவேண்டும் என்று கூறினார்கள். அதற்காக நான் ரிஷிகேஷ் சென்றேன். அங்கு எனக்குத் தகுதியானவர்கள் எவரும் கிடைக்கவில்லை. அப்போது எனக்கு நிராசை ஏற்பட்டது.

அப்போது இவ்விதம் ஒரு அறியாமை என்பது உள்ளதா என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். அப்போது என் பிரயத்தனம் வீண் போகவில்லை. இறுதியில் எனக்கு சுவாமிஜி கிடைத்தார். அப்போதிலிருந்து என் வாழ்க்கையே மாறிப் போய்விட்டது. என் வாழ்க்கை அர்த்தமுள்ளதாய் விட்டது.

பிரமோத சைதன்யா

எனக்கு மனதில் பலவித சந்தேகங்களும் சாந்தி இன்மையும் அதிகமாக இருந்தது. எவ்வளவு சாதனை செய்தாலும் அது விலகவில்லை. சாஸ்திரம் படிக்க வேண்டும் என்று கோரிக்கை ஏற்படவே சாந்தீபனி சாதனாலயாவில் சேர்ந்தேன். சுவாமிஜியின் போதனையால் என் சந்தேகங்கள் எல்லாம் தீர்ந்துவிட்டது. அந்த ஞானத்தைக் கொடுக்கும்தயாள மனம் சுவாமிஜியிடம் பரிபூர்ணமாக உள்ளது. அதனால் என்னை சுவாமிஜியின் பாதத்திற்கு புஷ்பமாய் சமர்ப்பித்துக் கொள்கிறேன். நான் ஆசிர்வதிக்கப் பெற்றவன்.

மோஹந்தி

நான் முதல் முறையாக சுவாமிஜியை கல்கத்தாவில் பார்த்தேன். அதிலிருந்து என் வாழ்க்கையே மாறிப் போய்விட்டது. நான் அவரை சந்தித்த போது சாதாரண மாகவே பேசினேன். அப்போது சுவாமிஜி பேசியது எனக்கு மிகவும் பிடித்தது. கடவுள் என்பதின் மீது உள்ள பாவனைகளை விட்டு விட்டு சாஸ்திரம் கேட்டால் எல்லா சந்தேகங்களும் போய்விடும் என்றார். அப்போது நான் சாந்தீபனியில் சேர்ந்துவிட்டேன். சுவாமிஜியின் மகிமை அறிந்து கொண்டால் உலகமே சுபீட்ஷமடையும். இவ்வளவு மகிமை உள்ள சுவாமிஜிக்கு என் நமஸ்காரம்.

பரத்திரிபாடி

சுவாமிஜியைப்பற்றி எழுத வேண்டும் என்றால் வார்த்தைகளே வரவில்லை சுவாமிஜியே, என்குரு அவரிடம் கற்றுக் கொண்டேன் என்பதே எனக்கு கர்வம். சுவாமிஜி சாஸ்திரத்தில் உள்ளபடியே, யாவருக்கும் அர்த்தமாகும்படி சொல்லுவார். அவர் தயாசாகரம் எல்லா வித யோக்யதையும் பொருந்திய போதகர். நான் எங்கு சென்றாலும். எதைப் பார்த்தாலும் சுவாமிஜியே என் நினைவாக இருக்க வேண்டும்.

பிரம்மசாரினிவித்யா

1969 செப்டம்பர் மாதம் குருவை தேடிக்கொண்டு இந்தியாவிற்கு வந்தேன். அக்டோபர் 1969ல் சுவாமி தயானந்தசரஸ்வதி ரூபத்தில் அவரைக் கண்டேன். குரு வென்றால் எப்படி இருக்கவேண்டும் என்று நான் கற்பனை செய்துகொண்டு இருந்தேனோ அதைவிட அதிகமான குணங்களுடன் அவர் இருந்தார்.

அவரை கண்ட ஆனந்தத்தில் இருதய பூரிப்பையும் என் மனம் எவ்விதம் பேசியது என்பதையும் கூறுகின்றேன்.

மனித உருவத்தில் தெய்வீக குருவே தன் திருவடியை அளவில்லாத கருணையை என் மேல் வைத்தார். மகாபலி தலையில் பகவான் மூன்றாவது அடியை வைத்தது போல் என் சிரசின் மேல் வைத்தார் தன் திருவடியை. என்னுடைய நன்றியை அறிவிக்க வார்த்தைகள் இல்லை. ஒவ்வொரு வினாடியும் அவருடைய ஞானம்ருதம் வருகின்றது அதை நான் என் தாகம் தீரும் வரை பருகிக்கொண்டே இருப்பேன்.

ஐந்து வருஷமாய் எப்போதும் ஏதோ ஒன்று தேவை என்று தேடிக் கொண்டிருந்தேன். என்னை அறிந்து கொண்டால் (பூர்ணத்வம்) அமைதி ஏற்படும் என்பதை அறிந்து கொண்டேன் என்று சுவாமிஜிக்கு 1970ல் எழுதினேன்.

ஆனந்தத்திற்காக சிரவளம் செய்கிறோம் அநத ஆனந்தமே குரு வார்த்தை. இந்த இரண்டு வருஷம் சாந்தீபனியில் பயிற்சி பெற்றதனால் என்னை பாக்ய சாலியாகக் கருதுகிறேன்.

வித்யானந்த சரஸ்வதி

சுவாமி தயானந்தா ஒரு ஞானி. இவர்கள் தன்னை அறிந்து கொண்டவர் சர்வாத்ம பாவத்திலேயே எப்போதும் இருப்பவர். நாம் அலையைக் கடலாய் நினைப்பது போல் நாம் சரீரம், மனம் அகங்காரம் தான் நாம் என்று நினைப்பதும் பெரிய தவறு. நம் அக்ஞானத்தை

விலக்குவதற்காக குரு மனித உருவத்தில் வருகின்றார் குரு மனிதர்களுடைய சந்தேகங்களை விலக்குகின்றார். குரு கூறும் விஷயங்களை சிஷ்யன் திறந்த மனத்தோடு கேட்கவேண்டும். சூரியன் இருளை விலக்குவது போல் அக்ஞானம் என்ற மறைப்பை குரு விலக்குகிறார். அவருடைய வாக்கு அமைதி தருகின்றது. அவர் போதனை செய்யும் போது நம்மை அவர் ஆத்ம சொரூபத்திலேயே லயிக்கச் செய்வார்.

உலகத்தில் நம்மை ஆத்ம ஞான வழியில் செல்வதற்கு உற்சாகப்படுத்த வந்திருக்கின்றார். ஆத்ம சொரூபம் தெரியாமல் உறங்கிக் கொண்டிருக்கும் நமக்கு ஆத்ம சொரூபத்தை விளக்கிக் கூறுகின்றார். இதை கிரகிப்பது எவ்வளவு பேருக்கு இயலுமோ? எங்களுக்கு அவர் பேசும் தெய்வம்.

சிஷ்யர்களுக்கு அன்பும் ஆதரவும் காட்டுவது தன் கடமையாய் நினைத்துக் கொண்டிருக்கின்றார். சுவாமிஜி தத்துவத்தை நன்றாய் தெரிவிக்கின்றார். சாஸ்திரத்தில் சிறந்த வித்வான். சாஸ்திரத்தில் உள்ள வாச்யார்த்தம் லக்ஷியார்த்தம் இரண்டையும் நன்கு விளக்குகின்றார். அவருடைய ஜீவிதமே பெரிய படிப்பினை தருவது நமக்கு நேரிடையான ஞானஒளியால் நம்மை இருட்டில் தவிர்க்க விடாமல் வழிகாட்டுகின்றார். ஈஸ்வரனே குருவாய் வந்து அவன் அந்த காரணத்தை சுத்தி செய்து உள்முகமாய நோக்கச் செய்கின்றார், என்று ரமண மகரிஷியே கூறி இருக்கின்றார்.

மரணத்தில் இருந்து அம்ருத தத்வத்திற்கு எடுத்துச் செல்கிறார். இருளிலிருந்த ஒளிக்கு எடுத்துச் செல்கிறார். அசத்தியத்திலிருந்து சத்தியத்துக்கு அழைத்துச் செல்கிறார்.

கோவிந்த சிங்

சாதாரணமாக கல்லில் சிற்பத்தை செதுக்குபவன் உயர்ந்த சிற்பி அதேபோல் வீணையில் உயர்ந்த இசையை உண்டாக்குபவர் வித்துவான். ஆனால் குருவினிடம் இருந்து கற்கும் பாக்கியம் வர்ணிக்கமுடியாது. இப்படிப்பட்ட குருவின் மகிமை வாயால் கூறவோ மனதினால் நினைக்கவோ முடியாது.

அதிகம் கூற வேண்டுமானால் பகவான் கருணையுடன் இவ்வித உயர்ந்த குருவை நமக்குக் கொடுத்திருக்கின்றார்.

பிரம்ம சாரினி போனிடா I

ஆறுகள் சமுத்திரத்தைத்தேடி ஓடுவது போல் நான் பூர்ணத் தைத்தேடி இந்தியாவிற்கு ஓடிவந்தேன். ஹரித்துவார் வந்து கங்கையைப் பார்த்தேன். அதைப் பார்த்தவுடன் என் லக்ஷ்யத்தை அடைய அதிக தூரம் இல்லை என்று அறிந்தேன். எல்லோரும் கங்கை கல்கத்தாவில் சமுத்திரத்தில் கலப்பதாய் கூறுவார்கள். நான் ரிஷிகேஷில் இருக்கும் பூர்ண ஞானமும் அன்பும் நிறைந்த கருணா சமுத்திரத்தைக் கண்டேன். இவரைக் காட்டிலும் உயர்ந்தது எதுவும் இல்லை என்று பிறவி லக்ஷ்யத்தை அடைந்தேன்

அன்னபூர்ணா

மூன்று வருடங்களுக்கு முன் இந்தியாவிற்கு வந்தேன் சத்தியத்தைத்தேடி இமாலயத்திற்கு வந்தேன். குரு, சத்தியம் என்றால் இவ்விதம் தான் இருக்க வேண்டும் என்று கற்பனை செய்து கொண்டு வந்தேன். அப்போது சுவாமிஜி கூறியவைகள் என் மனதிற்குள் ஒன்றும் புரியவில்லை மீண்டும் ஆறுமாதங்கள் கழித்து, அவரைக் கண்டபோது, நான் என்னை அக்ஞானி என்று அறிந்துக் கொண்டேன்.

உலகம் என்ன? ஈஸ்வரன் என்பது என்ன? வாழ்க்கை என்பது என்ன, என்று கேள்விகள் என் மனதில் ஏற்பட்டு, இதை அறிந்து கொள்ளமுடியாமல் இருக்கின்றதே என்ற துக்கம் தான முடியாமல் இருந்தது. மற்றவர்கள் கூறிய பதில் என் ஞானப் பசியை தீர்க்கவில்லை. இவ்வித தீவிர மனோபாவம் உள்ளவர்களுக்குத் தான் சுவாமிஜியின் மனோபாவம் தெரியும்.

நான் தனிமையில் ஒன்றும் தெரியாமல், தவிக்கும் வேதனையை குருவினால் தான் தீர்க்க முடியும். என் குருவைப் பற்றி எழுதவேண்டுமானால் முழு வேதாந தத்தைத் தான் விளக்க வேண்டும். இவர் இப்படிப்பட்டவர் என்ற கூற முடியாது. இவர் உண்மையே வடிவானவர். சுத்த ஆத்ம சொரூபமானவர். அவரை அறிந்தவர்களுக்கும் அவர் குணங்களையும் வர்ணிக்க முடியாது என்பது தெரியும். எவ்வித கொள்கைக்கும் உட்பட்டவர் அல்ல. ஆயிரம் துதிகள் செய்தாலும் குறைபட்டதே.

அம்சானந்தா

புகழுக்குரிய என் குருவைப் பற்றி ஒரு வார்த்தையும் நினைவும், என் குருவின் மகிமையைப் பற்றி என்ன வென்று எழுதுவது? இக்காலத்தில் புகழ்ச்சியும், உயர்த்திப் பேசுவதும், தரமற்றதாய் விடுகின்றது. எவ்வளவு உயர்ந்த வார்த்தைகளால் அவர் புகழைக் கூறினாலும் அந்த வார்த்தைகள், அர்த்தமற்றதாய் விடும். இதனால் நான என்ன சொல்வது? இவ்வளவு உயர்ந்தவரை என் குருவாக ஏற்றுக் கொண்டேன். அவர் மேல் எனக்கு பூரண நம்பிக்கை உள்ளது. என் வாழ்வின் உண்மையை அறிந்து கொள்வதற்காக, என் வாழ்க்கைக்கு வழிகாட்டுவார் என்று அவரை நம்புகின்றேன். அவரைப் போல் நான் இருக்க விரும்புகின்றேன். வார்த்தைகளுக்கும், புகழ்ச்சிக்கும் அப்பாற்பட்ட வரானதினால், அவரைப் புகழ்ந்து பேசுவது, புகழைக் குறைப்பதாய் விடும். இவர் என் குரு என்பது ஒன்று தான் என்னால் கூறமுடியும்.

பிரபு சைதன்யா

பீடர் என்ற நாமம் உடைய பிரபு சைதன்யா, அமெரிக்கா தேசத்தைச் சேர்ந்தவர் நல்ல செல்வமுள்ள குடும்பத்தில் பிறந்தவர் பம்பாய் சாந்தீபனியில் வேதாந்தம் சுவாமி ஜியிடம் கற்றுக் கொண்டார். பிரம்மசார்ய தீக்ஷை அளித்த போது, இவருக்கு பிரபு சைதன்யா என்ற பெயர் சூட்டினார். பீடர் தன் மனதில் எழுந்த சில கேள்விகளுக்கு பதில் கேட்டார். எங்கும் சரியான விடை கிடைக்கவில்லை இறுதியில் சுவாமிஜியின் சிஷ்யர் ஆனார் சாஸ்திரம், சமஸ்கிருதம் முதலியன கற்றுக் கொண்டு, சுவாமிஜிக்கு தன்னால் இயன்ற உதவியைச் செய்து வருகின்றார். இவர் தன் அனுபவத்தை கூறுகின்றார் கேளுங்கள்.

நான் சிறியவனாக இருந்த போதே விஷயங்களினால் ஏற்படும் சுகங்களில் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. சுகங்கள் வருவதும் போவதும், ஒரே துக்கம், சுகம் வந்தாலும் க்ஷண காலம் தான். இதனால் எனக்கு பிரதி தினம் நாம் ஏன் பூரண ஆனந்தமாக இருக்கக் கூடாது, என்ற கேள்வி எழும். இன்னும் என் மனதில் எவ்வளவோ கேள்விகள். இவை அனைத்திற்கும் பதில் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நிச்சயித்துக் கொண்டேன்.

1. கடவுள் என்பது என்ன?
2. சிருஷ்டி என்றால் என்ன?
3. இந்த சிருஷ்டி ஏன் எதற்காக ஏற்பட்டது?
4. என்னுடைய நிஜ சொருபம் என்ன?
5. வாழ்க்கையை எதற்காக ஏன் வாழவேண்டும்?

இவ்விதம் என் மனதில் அனேக கேள்விகள் விடை புரியாமல் என்னை பாதித்து வந்தது.

நான் பைபிளை எவ்வவோ முறை படித்துப் பார்த்தும் என்னுடைய இக்கேள்விகளுக்கு பதில் கிடைக்கவில்லை, பைபிளில் அங்கங்கு சில வாக்கியங்கள் என்னுடைய கேள்விகளுக்குத் தெளிவில்லாமல் இருந்தது. இன்னும் வேறு சில மதபுத்தகங்களைப் படித்துப் பார்த்தேன், அவைகளில் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை.

ஏதோ ஓர் அனுக்கிரகத்தினால் நான் மிக உத்தமரான புகழ் பெற்ற சாஸ்திர சம்பிரதாய விதிப்படி, கற்றுக் கொடுக்கும் சுவாமிஜி தயானந்தரின் சன்னதியை அடைந்தேன் அவரிடம் நான் சமஸ்கிருதம் படித்தேன். மூல கிரந்தமான கீதை, உபசிஷத் பிரம்ம சூத்திரம் கற்றுக் கொண்டேன். சுவாமிஜியிடம் சங்கர பாஷ்யம் கேட்கக் கேட்க என்னுடைய சந்தேகங்கள் எல்லாம் விலகிவிட்டது. சாஸ்திரத்திலேயே நம் மனதில் எழும் எல்லா கேள்வி களுக்கும் பதில்கள் உள்ளது.

நித்ய ஜீவிதத்தை அனுபவ ஆதாரமாக உள்ள தர்க்கம், சப்த பிரணங்கள் மூலம் சுவாமிஜி போதிக்கும் முறையே வேதாந்தம் என்று கூறுவது.

சாஸ்திரத்தை சிரமமாய் சந்தேகமற நன்கு கற்று, நான் அந்த பிரம்மனே என்ற ஞானத்தில் நிலைத்தவரே சம்பிரதாய குரு, என்பார்கள் இவ்வித இயல்புள்ள குரு உபதேசம் செய்தால், சிரத்தை பக்தி உள்ள சிஷ்யனுக்கு, தானே அந்த பரிபூர்ண பிரம்மம் என்ற ஞானம் ஏற்படுகின்றது.

நான் ஒன்பது வருஷமாய் சுவாமிஜியின். போதனை களை கேட்டுக்கொண்டு இருக்கின்றேன். ஓர் முறையாவது, தான் கூறிய வார்த்தையை மீண்டும் திருத்திக் கொள்வதோ!

சரி இல்லை என்று மாற்றிக் கொள்வதோ இல்லை. அவர் வாக்குத் தெளிவாக இருக்கும். அவர் போதனையின் ஒவ்வொரு படிதரத்திலும், நான் அந்த பூர்ணத்தை தவிர வேறு இல்லை. என்ற தாத்பர்யமே இருக்கும்.

எந்த மதமும், எந்த தத்வமும் எந்த சாஸ்திரமும், இந்த சனாதனா தர்மத்திற்கு இணையில்லை.

பிரணவசைதன்யா

1972ம் வருஷம் நவம்பர் மாதம் ஓர் நாள் மாலை சுவாமிஜியை சந்தித்தேன். அந்த நாள் என் வாழ்க்கையில் மிகச் சிறந்த நாள். என் சொந்த புத்தியால், என் வாழ்வின் லக்ஷ்யத்தை அடைய முடியாது என்று அறிந்திருந்தேன். அதனால் எனக்கு ஒருவழிகாட்டி தேவையாக இருந்தது. என் அதிருஷ்டத்தினால் சுவாமிஜியை என் குருவாகப் பெற்றேன். நான் சாந்தீபனிக்கு வந்து இருபது மாதங்கள் ஆகின்றது. அவர் எங்களுக்கு சாஸ்திர சம்பிரதாயத்தை, நன்கு தெரிவித்துள்ளார். ஆதலினால் நான் அவருக்கு மிக்வும் கடமைப்பட்டவன்.

என் உள்ளத்தில் என்ன அன்பு, பக்தி, சிரத்தையை எவ்விதம் விளக்கிக் காட்டுவது, கூறுவது என்றே எனக்குப் புரியவில்லை.

அச்சுத சைதன்யா

சூரிய ஒளியின் முன்பு நெருப்பு குச்சிபோல் பிரகாசிக்கும் நான் என் குருவைப்பற்றி என்ன சொல்வது? சமுத்திரத்தின் அலைகள் எழுந்து எழுந்த மடிவது போல், பிறவி எடுத்து எடுத்து இறக்கும் நமக்கு என்னகதி. இதில் இருந்து தப்புவது எப்படி? என்ற கேள்வி என் உள்ளத்தில், எப்போதும் எழுந்து கொண்டே இருக்கும்

இதை விளக்கிக் கூறு யாராலும் இயலவில்லை. என் குடும்பம் தெய்வ வழிபாட்டிலும் மந்திரங்கள் சொல்வதிலும் ஜபம், தியானம் முதலியவைகளை செய்பதிலும் ஒழுங்குடையது. ஆனால் நான் யார்? நாம் அடைய வேண்டிய லக்ஷியம் என்ன? என்பது போன்ற என் கேள்விகளுக்கு பதில் கூற முடியவில்லை. இந்த உண்மையை விளக்க சக்தியில்லை. இதை தேடிக்கொண்டிருந்த எனக்கு, சுவாமிஜியின் ''நான் யார்'' என்பதைப் பற்றிய உபன்யாசம் என் மனதைத் தொட்டது. இந்த விசாரணை எனக்கு மிகவும் ஏற்றதாய், என் மனதின் தாகத்தைத் தீர்ப்பதாய் இருந்தது. இதனால் இன்று என் குருவின் திருவடியின் கீழிருந்து பாடம் கற்று, கரை காணமுடியாத சம்சாரத்தின், கரையைக் கண்டுவிட்டேன்! விதியை வென்றுவிட்டேன். என் வாழ்க்கை உயிர் பெற்றுவிட்டது. ஆனந்தம். இந்த லக்ஷிய வாழ்க்கையை எனக்கு அளித்த என் குரு வாழ்க!

சத்குரு சுவாமி விதிதாத்மானந்தா

பகவான் சங்கராச்சார்யார் ஓரிடத்தில் குருவை வர்ணிக்க முயற்சிக்கும்போது ''குருவிற்கு உபமானமாக ஒன்றுமே இல்லாததால் தனக்கு வார்த்தைகள் கிடைக்க வில்லை'' என்று சொல்கிறார். மூவுலகங்களில் நாம் தேடினாலும், குருவிற்கு உவமையாக நாம் ஒன்றுமே பார்க்க முடியாது. ஸ்பர்சம் என்னும் மணியானது உவமையாக இல்லையா என்று கேட்கலாம். அது இரும்புத்துண்டை பொன்னாக மாற்றுகிறது. உபயோகமற்ற வஸ்துவை விலை மதிக்கமுடியாத பிரகாச வஸ்துவாகச் செய்கிறது என்பது உண்மை. இதனால் ஸ்பரீச மணி உயர்ந்தது. ஆனால் அதை சத்துருவிற்கு உவமையாக சொல்லுமளவிற்கு உயர்ந்ததில்லை ஏனென்றால் குருவானவர் தன்னை சரணடைந்த சிஷ்யனை தன்போல் ஆக்கிவிடுகின்றார். இதனால்

குருவானவர் ஒப்புவமை இல்லாதவர் இந்த உலகிற்கு அப்பாற்பட்டவர்.

அந்த காரத்தை நீக்குபவர்:-

நாங்கள் குருவினிடம் சென்றபோது இரும்பு துண்டை விட உயர்ந்தவர்களாக இருக்கவில்லை. வாழ்க்கையின் குறிகோளோ தத்துவமோ, எதுவுமே தெரியாதவர்களாக இருந்தோம் ஆனால் சாஸ்திரத்தின் உண்மைகளை, குரு எடுத்துரைத்த போது ஒரே வியப்பாக இருந்தது.

இதுவரை நீ எதைத் தேடிக் கொண்டிருந்தாயோ அந்த வஸ்து உண்மையில் நீதான். உன்னிடம் உள்ளதை அறிந்து கொண்டு அந்த அறிவை நிலைக்கச் செய்து கொள்வது தான் அது வாழ்க்கையில் செய்வதற்கென்று ஒன்றும் இல்லை. தன்னைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்ளுவதற்குத் தான் உள்ளது. நீ அடைவதற்கு ஒன்றும் இல்லை ஆத்மா வினுடைய அக்ஞானத்தினால் தவறுதலாக அடைந்துள்ள பலவித எண்ணங்களையும், அகங்காரத்தையும் விட்டு விடவேண்டியது அவசியமாகிறது.

அடைவதிலும், அடைந்ததைக் காப்பதிலும், போராட் டங்கள், மனக்கிளர்ச்சிகள், சக்தி விரயம் முதலானவைகள் இருக்கின்றன. நீ ஏற்கனவே நிறைவுடையவன. அப்படிப்பட்ட நீ உன்னை மறுத்துக் கொள்ளாமல் இருந்தாலே போதும் இந்த சுதந்திரத்தையும், ஆனந்ததையும், முழுமையையும் நாம் நம்முள் காண வேண்டும். ஆகையால் வெளியில் தேடுவதை விட்டு விடவேண்டும். ஸ்வதந்திரம் என்பது ஆத்மாவாக ஆத்மாவிலேயே இருப்பது.

மேற்சொன்ன நேர்முகமான அடிப்படை உபதேசமானது. அக்ஞானத்திரையை நீக்கியது. உடனே வாழ்க்கையில் அர்த்தம் இருப்பதாகத் தெரிந்தது. மனதில் இருந்த கனமானது நீங்கியது. மனது ஆத்மாவை அறிவதற்கு

பூஜ்ய சுவாமிஜி குரு என்ற பதத்திற்கு நிறைவைக் கொடுப்பவதாக இருக்கின்றார். ''கு'' என்ற எழுத்து இருட்டையும். ''ரு'' என்ற எழுத்து ஞானபிரகாசத் தையும் குறிப்பதாக சொல்லப்படுகின்றது. குருவானவர் சிஷ்யனுடைய அக்ஞான அந்தகாரத்தைப் போக்குபவர் இதற்கு குரு ச்ரோத்ரியராகவும், பிரம்ம நிஷ்டராகவும் இருக்க வேண்டும். ச்ரோத்ரியர் என்பது சாஸ்திர ஒழுக்கம் உள்ளவரையும் அந்த ஞானத்தை தெளிவாக எடுத்துச் சொல்லக்கூடிய திறமை உள்ளவரையும் குறிக்கும். பிரம்ம நிஷ்டர் என்ற பதம் அந்த சாஸ்திர உண்மையில் நிலையாக நிற்பவரையும் குறிக்கும். உண்மையை உணர்ந்த அவருடைய வார்த்தைகளிலும், செய்கைகளிலும் அதன் பிரதிபலிப்பைக் காணலாம்.

உண்மைய்யை எடுத்துச் சொல்வது என்பது குருவிற்கு பெரிய காரியம் இல்லை. ஏன் என்றால் அவர் தானே உண்மையின் சொரூபமாக விளங்குவதால், சிஷ்யன் குருவினால் தன்னுடையது ஆத்மாவே விளக்கப்படுவதைக் காண்கின்றான். குருவினுடைய வார்த்தைகளில் தானே பிரதி பலிக்கப்படுவதைப் பார்க்கின்றான். வார்த்தைகளில் மட்டும் என்ன? குருவே உண்மையின் சொரூபமாக விளங்குகிறார். இந்த அம்சம் நம் சுவாமிஜியிடம் பரிபூர்ணமாக இருக்கின்றது. சுவாமிஜி, சிஷ்யர்களுக்கு முன்னால் அவர்கள் நாடும் வஸ்துவாக நிற்கின்றார். உதாஹரண புருஜராக, முன்னால் சுவாமிஜி இருந்ததால் சிஷ்யர்களான எங்களுக்கு அதிகமான முயற்சி தேவை யில்லை. சுவாமிஜியிடம் இந்த ஆனந்தமும் தெளிவும் சிஷ்யர்களுக்குப் பாடமாகவும் ஜீவிதத்தை நடத்திக் கொள்ள தேவையானதாகவும் இருந்தது.

சுவாமிஜி இப்படிச் சொல்வதுண்டு. ''ஞானம் பெறுவதற்கு எப்படிப்பட்ட மனம் வேண்டும், என்பது மிகவும் நன்றாக தெரிய வேண்டும். சுவாமிஜியின் மனதைப்பார் அது நன்றாகத் தெரிந்து விடும். உண்மையில் உங்களுடைய மனமும் அப்படியே. ஏனென்றால் அடிப்படை எல்லோருடைய மனமும், ஒரே ஸ்வரூபம் உடையதாக இருக்கின்றது. ஆகையினால் நீங்களும் அப்படிப்பட்ட மனதை வெளிக் கொண்டு வரலாம். ஒரு சமயம் ஒருவர் சுவாமிஜியை இப்படிக் கேட்டார். சுவாமிஜி மஹாத் மாவானவர் எப்படி தோற்றமளிக்கின்றார்?'' அதற்கு பதிலாக சுவாமிஜி சொன்னது. ''நீ அவருள் ஒருவரையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்''

கருணா சாகரம்:–

இப்படிப்பட்ட மஹாத்மாவை எது தொடர்ந்து போதனை செய்யவும் பலவித உயர்ந்த காரியங்களைச் செய்யவும் காரணமாக இருக்கின்றது? அவருக்கு ஞானத்தின் மேலுள்ள நிரதிசயமான அன்பே காரணம், இந்த ஞானமானது அதை விரும்புகின்ற எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்ற மனமார்ந்த ஆவல் உடையவர். இவ்விதம் புதுமை யையும், மகிழ்ச்சியையும் ஆர்வத்தையும் எங்கும் பரப்பும் மஹாத்மாவிற்கு என்ன காரணத்தை, நாம் எவ்விதம் சொல்ல முடியும் என்று ஆச்சார்யர் சங்கரரே வர்ணிக்கின்றார்.

'குருவின் பெருமை'
''பரமார்த்த சைதன்யா''

மனிதனாய் பிறப்பது அபூர்வம். இதைவிட கடினம் மோக்ஷம் பெறுவதில் ஆசை. இதிலும் அபூர்வம் குருவின் போதனை மோக்ஷம் பெறுவதற்கு குரு மிகவும் அவசிய மானவர். பந்தம் என்பது நாமே ஏற்படுத்திக் கொள்வது.

மோக்ஷம் என்பது நம்மை நாமே விடுதலை செய்து கொள்வது என்ற உண்மையை நாமே நினைத்தும் பார்க்க முடியாதது. குருவின் துணை இல்லாமல் இந்த சிக்கலை விலக்க முடியாது. இதற்கு குருவின் துணை வேண்டும் என்று எல்லா சாஸ்திரங்களும் கூறுகின்றது.

இந்த ஞானத்தை குருவை சரணமடைந்துதான் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இதற்கு சரியான குருவை தேர்ந்தெடுப்பது கடினம். குருவில் இவர் சிறந்தவர் என்று கண்டு பிடிப்பதற்கு வழி கிடையாது. கடவுள் மேல் நம்பிக்கை வைத்துதான் ஒருவரை நம்பவேண்டும். நல்ல குருவைப் பெறுவது அதிர்ஷ்டம் தான். இவ்விதம் உயர்ந்த குரு நமக்கு கிடைத்தால் நாம் இருபங்கு ஆசீர்வதிக்கப் பட்டவர்களாவோம்.

சுவாமி தயானந்தா ஞானகங்கை. மந்திரம் செய்பவரோ, மேஜிக் செய்பவரோ, வெறும் போதனை செய்பவரோ குருவாக மாட்டார். குரு என்பவர் சாஸ்திர உபதேசம் செய்து ஞானஒளியைக் கொடுப்பவர். நிறைய படித்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் உபதேசம் செய்வது இல்லை. நிறைய போதகர்கள் இருக்கின்றார்கள். ஆனால் சாஸ்திரம் போதிக்க மாட்டார்கள். ஆனால் சாஸ்திரம் போதிக்க மாட்டார்கள். ஆனால் இங்கு சுவாமிஜி போதனையும் செய்து மக்களுடன் தொடர்பும் கொள்ளுவார்.

சிலர் சாஸ்திரம் கற்கமாட்டார்கள். சிலர் சாஸ்திரம் கற்று அதிலேயே இருந்துவிடுவார்கள். சாஸ்திரத்திலேயே மூழ்கிப் போகாமல் மற்றவர்களுக்கு சாஸ்திர ஞானத்தைப் பகிர்ந்து கொடுக்கும் அற்புதமான குரு.

ஞானத்தைப் பெறுவதற்கு சாஸ்திரம் தான் பிரமானம். சாஸ்திரத்தைப் பிரமாணமாக எடுத்து அதன் உண்மையை

எடுத்து இடம், காலம் பொருட்படுத்தாமல் கற்றுக்கொடுப்பது தான் ஒரு குருவின் வேலை. சுவாமிஜி இதை எவ்விதக் கஷ்டமும் இல்லாமல் செய்கின்றார். சாஸ்திரப் பிரமாணத்தை புதிய விதமாக மாற்றிக் கூறமுடியாது. சாஸ்திரம் தனி சிறப்புடையது. இதை சம்பிரதாய முறையில் போதிக்க வேண்டும். இந்த உலகத்தில் இவ்விதம் சாஸ்திரம்தை போதிக்கும் குருமார்கள் மிகவும் குறைவு. இதில் சுவாமிஜி ஒரு சிறந்த மஹாத்மா.

நம் மனிதன் அக்ஞானம், பலஹீனம், நம் நேர்மையான குணம் என்ன, என்று வேதாந்தம் மூலம் சுவாமிஜி நமக்கு தெரிவிக்கின்றார். சில குருமார்கள் தங்கள் ஞானத்தில் பெரியவர்கள் என்றும் சிஷ்யனை சற்று தூரத்திலேயே வைப்பார்கள். இதனால் சிஷ்யனுக்குக் கற்று கொடுக்க வேண்டியதை கற்று கொடுக்காதவர்களாகின்றார்கள். உண்மையான ஒரு சிஷ்யனை கடைத்தரமானவன் என்று நினைக்க இடம் தராமல் உயர்ந்த ஞானத்திற்குத் தகுதி உடையவர்களாகச் செய்பவர்கள். ஒரு கஷ்டமும் இல்லாமல் நான் எவ்வளவு சாஸ்திரம் கற்றுக் கொண்டேன் என்று அந்த சிஷ்யனே உணர்வான். இவ்வித வேதாந்த போதனை செய்யும் குரு அபூர்வம்.

வேதாந்தம் சமஸ்கிருதத்தில் தான் கற்றுக்கொடுப்பார்கள். அதுவும் சிலருக்குத்தான், அவர்கள் தகுதியை உயர்ந்து கற்றுக்கொடுப்பார்கள். பொதுஜனங்களுக்கு சாஸ்திரத்தைப் போதித்தால் அதன் மகிமை குறைந்துவிடும் என்று ஒரு நம்பிக்கை இருந்தது. ஆனால் இன்று சுவாமிஜி பொது ஜனங்களும் புரிந்து கொள்ளும் வகையில் உபன்யாசம் மூலமாக அனைவருக்கும் தெளிய வைக்கின்றார்.

குரு கடவுளுக்கு சமமானவர். அவர்கள் செய்யும் உதவியை நாம் திரும்பி கொடுக்க முடியாது. நாம் அவர்களுக்கு நேர்மையாக இருக்கலாம்.

ஒரு சிஷ்யன் குருவை சரணடைந்தால் அவன் துக்கத்திற்கு காரணமே, அஞ்ஞானம்தான் இதை சாஸ்திர மூலம் விலக்கலாம் என்று கூறுவார். அதன் பின்பு அவனுக்கு ஆத்ம ஞானத்தை கொடுப்பார். சுத்த அந்த கரணத்தோடு ஆத்ம ஞானத்தை கொடுக்கும் ஆத்ம சொருபமான சுவாமிஜிக்கு என் நமஸ்காரங்கள்.

குருவின் மகிமையை எழுதிய பரமார்த்த சைதன்யாவான இவர். இன்று குருவின் மகிமையால் சன்யாசம் பெற்று, பரமார்த்தானந்த சரஸ்வதி என்று திருநாமம் பெற்று, அனேக மக்களுக்கு தன் குருவின் மகிமை குறையாத வகையில் போதனை செய்து வருகின்றார்.

''குரு அவசியம்''
''சுத்த சைதன்யா''

குரு, போதகர், ஆச்சார்யா என்று எந்தப் பெயரில் வேண்டுமானாலும் அழைக்கலாம் சுவாமிஜியை. ஒவ்வொருவர் ஜீவிதத்திற்கும் இவர் அவசியம் தேவை. ஏன் என்றால் உலகத்திற்கும் சாஸ்திரத்திற்கும் உள்ள சம்பந்தத்தைத தெரிவிப்பதற்கு தானாக இந்த உண்மையைக் கற்றுக் கொள்வது சிரமம். இதை குரு தான் சிரமம் இல்லாமல் கற்க முடியும்.

மற்றவர்களுக்கு நம்மைப் பற்றி அதிகம் தெரியும் நம்மை விட, உதாரணத்திற்கு நம் வீட்டை எடுத்துக் கொள்வோம். இஞ்ஜினீயர்க்கும் மேஸ்திரிக்கும் வீட்டைப் பற்றித் தெரிந்த அளவு நமக்குத் தெரியாது. அதே போல் கார், காரை நாம் ஓட்டினாலும், காரைப்பற்றி, கார் பழுது பார்ப்பவருக்கு அதிகம் தெரியும். அதே போல் நம் உடம்பை எடுத்துக் கொண்டால் நாம் சொல்வது போல் செய்கின்றது.

ஆனால் நம் உடம்பைப் பற்றி டாக்டருக்கு அதிகம் தெரியும். என் மனம் தான் ஆனால் அது வேலை செய்வது என்னை விட குருவுக்குத் தெரியும்.

பிரம்ம வித்யா குரு உபதேசம் `மூலம் மனதைவிட உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லுகின்றார். நம்மை உலக சுக, துக்க அனுபவங்களை எல்லாம் நாம் மறந்து விட்டு, மேலான நிலையில் இருக்க குரு உதவி செய்கின்றார். குரு, சிஷ்ய பரம்பரையின் புனித உறவு இந்த மேலான விடுதலையைப் பெறுவது என்பதே. இந்த சம்பிரதாயத்தின் சின்னம்குரு. குரு இல்லை என்றால் உலக வாழ்க்கையே இன்பமாக இருப்பதற்குப் பதிலாகத் துன்பமுடையதாகி விடும். வாழ்க்கையில் ஆனந்தம் அடைய வேண்டு மானால் குரு அவசியம் தேவை.

பிரம்மச்சாரி சுத்த சைதன்யாவாக இருந்த இவர் இன்று சன்யாசம் ஏற்றுக் கொண்டார். சுவாமி சுத்தானந்த சரஸ்வதி என்ற திருநாமம் சூடிக்கொண்டார். ''தயானந்தா குருகுலம்'' என்று தன் குருவின் திருநாமம் வைத்து, சென்னை பெசன்ட் நகர் கடற்கரை, அருகில் பெரிய ஆஸ்ரமம் அமைத்து நடத்தி வருகின்றார்.

''இரண்டாவது பிரம்மசர்ய ஆஸ்ரமப் பயிற்சி ஆரம்பம்''

முதல் மூன்று வருஷம் பிரம்மச்சாரிகளை முறைப்படி. திறம்படப்பயிற்சி அளித்து வெற்றிகரமாய் இத்திட்டத்தை முடித்தார். இம்மாணவர்கள் பல நகரங்களில் உள்ள சின்மயாமிஷனில் வெற்றிகரமாகப் பிரசாரங்கள் செய்து

வந்தார்கள். வெளிநாட்டு மாணவர்களும் தங்கள் தேசத்தில் வேதாந்த பிரசாரம் நன்கு செய்து வந்தார்கள். சுவாமி சின்மயானந்தர் மீண்டும் ஓர் முறை பிரம்மச்சர்ய பயிற்சி அளிக்கவேண்டும் என்று தன் விருப்பத்தை சுவாமிஜியிடம் தெரிவித்தார். குறிப்பும் விருப்பமும் அறிந்து செயல்படும் சுவாமிஜி அவர் விருப்பத்திற்கு இசைவு கொடுத்தார். ஞானத்தின் சிறப்பை அறிந்த ஞானி. பயிற்சி ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ஆரம்பித்தார்.

தபோவன் பிரச்சாரத்தில், வேதாந்தம் கற்க ஆவல் உள்ளவர்கள் மனுச்செய்து கொள்ளும்படி விளம்பரம் செய்தார். அதற்கு 2500 மனுக்கள் வந்தன. அதில் இருந்து சில மனுக்களைத் தேர்ந்தெடுத்து, மனுதாரர்களுக்கு குறிப்பிட்ட நாள் இன்டர்வியூ என்று அறிவித்தார். தான் குறிப்பிட்ட நாளில் அந்த அந்த நகரத்திற்குச் சென்று இன்டர்வியூ செய்தார். அதில் மனப்பக்குவம் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்தார்.

1976ம் வருடம் 7ம் தேதி ஆரம்பவிழா ஏற்பாடாயிற்று பல மாநிலங்களிலிருந்து பல இன மாணவர்கள், சாந்தீ பனிக்கு வந்து சேர்ந்தார்கள். தலைமை ஆச்சார்யரான சுவாமிஜி, பொக்கிஷதாரர்கள், பம்பாய் நகர அன்பர்கள், பல சிஷ்யர்ககள் இந்த விழாவிற்கு வந்திருந்தார்கள். ஜெகதீஸ்வரர் கோவிலில் கணபதி ஹோமத்துடன் பயிற்சி பெற்ற பிரம்மச்சாரிகள் வேத மந்திரங்கள் முழங்க, சுவாமி சின்மாயனந்தரின் பாதுகையை வைத்து மலர்கள் தூவி வெகு விமரிசையாய் வழிபாடு செய்தார்கள்.

இந்த ஆரம்பவிழாவில் சுவாமிஜி செய்த சொற்பொழிவு. எக்காரியத்தை ஆரம்பித்தாலும், அது வெற்றி பெற மூன்று காரணங்கள் உள்ளன. அதுவே பிரயத்தனம், காலம், தெய்வம்

என்பது. பிரயத்தனமும், காலமும், எல்லோராலும் அறியப் படுவது. ஆனால் மூன்றாவது காரணமானது தெய்வம். பிரயத்னம், காலம் இருந்தாலும், நான் செய்யவேண்டும் என்று நினைத்த கார்யத்தின் பலன் தெய்வத்தின் மீது ஆதாரமாக உள்ளது. மூன்றாவது காரணமான தெய்வானு கூலம் இருந்தால் தான் கர்மம் வெற்றி பெறும். அதற்காகவே, எக்காரியம் நாம் செய்தாலும் ஈஸ்வரப் பிரார்த்தனை அவசியம்.

ரிஷிகேஷ் முதலிய இடங்களில் ஏழு அல்லது எட்டு வருடங்களில் படிக்கும் வேதாந்தப் பாடங்களை, இங்கு சாந்திபனியில் இரண்டரை வருடங்களில் கற்று கொடுப் படுகின்றன. நம் முகத்தைக் கண்ணாடியில் எவ்வளவு முறைப் பார்த்தாலும் எப்படி நமக்குச் சோர்வு ஏற்படுவது இல்லையோ, அதேபோல் இங்கு உபதேசிக்கப்படும் ஞானமும், சலிப்போ, சோர்வோ தராது. சாஸ்திரம் நம் முன் இருக்கும் கண்ணாடி போன்றது. இந்த சாஸ்திரம் சப்த ரூபமானது. இவ்வித சப்த ரூபமான (சாஸ்திரம்) கண்ணாடி, ஆத்ம சொரூபத்தைப் பிரகாசிக்கச் செய்கின்றது. எவ்வித சொரூபத்தை? பூர்ணம், ஆனந்தம் சாந்தமான நம் சொரூபத்தை, பிரகாசிக்கச் செய்கின்றது. நமக்கு நம்மைப் பற்றிய உண்மையை அறிவிக்கின்றது. சாஸ்தி ரத்தில் உள்ள சப்தம் வேறு அர்த்தம் வேறு என்று நினைத்துக் கொள்கின்றார்கள். அப்படி அல்ல, சப்தத்தின் அர்த்தம் புரிந்து கொண்டு பார்த்தால், அர்த்தமும் சப்தமும் பிரிக்க முடியா தவை, ஒன்றே என்ற உண்மை தெரியும். ஆகையினால் தான் சப்தமும் கண்ணாடியைப் போல், நம் சொரூபத்தைக் காட்டுகின்றது. சாஸ்திரங்களே கண்ணாடி போன்றது, நம் பூர்ண சொரூபத்தைக் காட்டுவது, என்று கூறி பூர்ணரான சுவாமிஜி அன்றைய விழாவை மங்களமாய் நிறை வேற்றினார்.

''பிரம்மச்சர்ய பயிற்சியின் போது நிகழ்ந்தவைகள்''

இந்தப் பயிற்சியில் மொத்தம் எழுபது பேர்கள் சேர்ந்தார்கள். இதில் அயல்நாட்டினர் இருபத்தைந்து பேர்கள் இருந்தார்கள். பெண்கள் முப்பது பேர்களும் ஆண்கள நாற்பது பேர்களும் இருந்தார்கள்.

காலை மணி	5லிருந்து	6வரை	வேத அத்யயனம்
	6.30க்கு		தேநீர்
	7லிருந்து	8வரை	பாடம்
	8.30க்கு		காலை ஆகாரம்
	10லிருந்து	11வரை	சமஸ்கிருதம்
மத்யானம்	12மணிக்கு		பகல் உணவு
மாலை மணி	3க்கு		தேநீர்
	4லிருந்து	5வரை	பாடம்
	6லிருந்து	6.30வரை	கோவில் பூஜை
	7லிருந்து	8வரை	பாடம் or பஜனை
	8.30க்கு		இரவு ஆகாரம்

ரவிசந்தர் என்பவர் வேத அத்யயனம் கற்றுக் கொடுத்தார் இது தினம் தோறும் காலை ஐந்து மணிக்கு. இதன் பின்பு ஸ்வாமிஜி அவர்கள் தினந்தோறும் ''தத்வபோதம்'' கற்றுக் கொடுத்தார். இது வேதாந்தம் கற்பதற்கு அடிப்படையானது. முதல் ஒரு மாதம் வரை வேதாந்தம் ஏன் கற்க வேண்டும்? கற்பவர்கள் பெறும் பயன் என்ன? அதற்கு எவ்வித மனநிலை வேண்டும்? மற்ற சாஸ்திரங்களைப் படிக்கும்போது நீ வேறு பாடம் வேறு. விஷயம் நம்மைவிட வேறானது. இங்கு வேதாந்த சாஸ்திரம் உன்னைப்பற்றியது. உனக்கும் உலகத்திற்கும், ஈஸ்வரனுக்கும் உள்ள சம்பந்தம் பற்றிப் பேசுவது. மனம்

என்றால் என்ன? ஞானம் என்பது என்ன? அஞ்ஞானம் என்பத என்ன என்று? இந்த ஞானம் பெற்றபின்பு அடைய வேண்டியது வேறு ஒன்றும் இல்லை. பூர்ணமாய் தன்னில் தானாக இருப்பதுவே இந்த ஞானம். துக்கம், பயம் விலக்கு வது என்றும் இந்த ஞானத்தை எவ்விதம் கற்க வேண்டும் என்பதும், இதற்கு குணங்களால் ஏற்படும் நன்மையும், குணங்களின் முக்கியத்துவத்தையும் முன்னுரையிலேயே தெளிந்த, ஸ்திரஞானம் ஏற்படுவதற்கு வேண்டிய வகையில் போதித்தார் தத்வபோதம் கற்கும்போதே அனைத்து வேதாந்தமும் கற்றுக் கொடுத்தது போலாகி விட்டது. இதற்குப் பின்பு ஸ்வாமிஜி அவர்கள் மஹரிஷியின்'' ''உபதேச சாரம்'' எடுத்தார். ஜடமான கர்மமும் சைதன்ய சொரூபமான ஞானமும் ஒன்று சேரமுடியாது. ஒரு கர்மத்தைக்காட்டிலும் மற்ற கர்மம் பூஜை, ஜபம் என்ற முறையில் சிறந்ததானாலும் ஞானத்திற்கு இணை வேறு இல்லை என்பதை நன்கு போதித்தார். இதற்குப் பின்பு கடோபநிஷத், பாஷ்யத்தோடு கற்றுக் கொடுத்தார். இதன் பின்பு கைவல்ய உபநிஷத், முண்டக உபநிஷத், மாண்டூக்ய காரிகை, தைத்ரிய உபநிஷத், அத்வைத மகரந்தம் பஞ்சதசி, வேதாந்தசாரம், பகவத்கீதை, சாதனா பஞ்சகம், பிரம்ம சூத்திரம் சங்கரபாஷயத்துடன் கற்றுக் கொடுத்தார்.

தான் பன்னிரெண்டு வருஷம் சிரமப்பட்டு, எத்தனையோ மஹாத்மாக்களிடம், குளிர், காற்று, மழை என்று பாராமல் ரிஷிகேஷில் சிரமப்பட்டுக் கற்றுக் கொண்ட பாடங்களை, இரண்டரை வருடங்களில் மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் நன்கு பயிற்று வித்தார். கற்றுக் கொண்டதை மாணவர்கள் எவ்வளவு தூரம் புரிந்து கொண்டார்கள். என்பதை அவர்களைக் கேள்விகள் கேட்டு எங்கு, எங்கு மாணவர்களுக்குச் சந்தேகம் ஏற்படுகின்றது என்பதை உணர்ந்து, அவற்றை எளிய முறையில், பாடம் புகட்டும் போது விளக்கி அவர்கள் சந்தேகங்களை விளக்கினார்.

மாணவர்கள் மேடையில் பேசுவதற்கு தைரியம் உடையவர்களாகச் செய்ய வேண்டும், என்பதற்காக, ஒவ்வொரு நாள் ஒருவர், கீதையில் ஓர் குறிப்பிட்ட ஸ்லோகத்திற்கு, விளக்கம் கூறவேண்டும் என்று ஏற்பாடு செய்தார். இரவு சுவாமிஜி பல ஊர் அன்பர்களுடன் வராண்டாவில் ஓய்வாய் அமர்ந்திருக்கும் நேரத்தில் மாணவர்கள் தாங்கள் கற்றுக் கொண்டதைப் பேசுவார்கள். மாணவர்களின் அறிவாற்றல் வளர்ச்சியில் தான் ஏற்றுக் கொண்ட இப்பணியில் சுவாமிஜி எடுத்துக் கொண்ட முயற்சி போற்றத்தகுந்தது.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யும் ஆறே''

இறைவன் என்னை நன்றாகத் தமிழ் மொழியில் ஆகமங்கள் அறிவிக்க நன் முறையில் படைத்தனன், என்று திருமூலர் கூறியது போல், இறைவன் சாஸ்திர போதகர்களை உலகில் உருவாக்க சுவாமிஜியை நன்கு படைத்தனன் போலும்.

தயையின் இருப்பிடமான சுவாமிஜி உத்தம, மத்யம, மந்த அதிகாரிகள் எல்லோரிடமும் ஒன்றுபோல் அன்பு காட்டினார். எவ்வளவோ குண வேறுபாடுகள், மாணவர்களுக்குள் இருந்தாலும், பத்து குழந்தைகளை உடையவராய் எவ்விதம் பலஹீனமான குழந்தையை அதிக கவனத்துடன் கவனித்தும், மற்ற குழந்தைகளுக்கும் வேண்டியதை எவ்வாறு பிரதிபலன் எதிர்பார்க்காமல், அவர்கள் முன்னேற்றம் ஒன்றையே குறியாக வைத்து, வரும் கஷ்டங்களை எல்லாம் தாங்குகின்றாளோ, அவ்விதம் இருந்தார் சுவாமிஜி.

ஒவ்வொரு மாணவனிடமும் உயர்ந்த குணம் ஒன்று, விரும்பத்தகாத குணம் ஒன்று இருக்கும். இதில் குணத்தை

எடுத்துக்கொண்டு, குறையை விலக்க முயற்சித்தார். பாடம் போதிப்பது மட்டும் அல்லாமல் அவர்கள் வாழ்க்கையிலும் தான் புகுந்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய நன்மை களைச் செய்தார். சில மாணவர்கள் குடும்பம் வறுமை உடையதாக இருக்கும், அவர்களுக்கு மிக முக்கியமான சந்தர்ப்பம் வரும்போது பண உதவி செய்வார். தாய் தந்தை ஒத்துழைக்காமல் மாணவன் உயர் பண்புள்ளவனாக இருந்தால், அவன் பெற்றோர்களை ஆஸ்ரமத்திற்கு வரவழைப்பார். சில நாட்கள் ஆஸ்ரமத்திலேயே தங்கும் படிச் செய்து, தன் பெற்றோர்களைப் போல் அவர்களைக் கவனித்து வேண்டியன செய்வார். பின்பு அவர்கள் மன நிலையை மாற்றி உயர்ந்த மனோபாவம் ஏற்படும்படிச் செய்வார். இனி எங்களுக்குக் கவலை இல்லை. எல்லாம் சுவாமிஜி பார்த்துக் கொள்வார், சரியான ஆச்சார்யனிடம் தன் மகன் வந்து சேர்ந்துள்ளான், என்று கூறி சுவாமிஜியை வணங்கிச் செல்வார்கள், பலர்.

சில குடும்பங்களில் மாணவரின் சகோதரன், கல்வி கற்காமல், பெற்றோர்களும் போதிய வருமானம், இல்லாதவர்களாக இருப்பார்கள், அவர்களுக்குத் தன் கிரகஸ்த சிஷ்யர்கள் மூலம் வேலை, பண உதவி முதலியன தன்னால் இயன்ற அளவு செய்து அவர்கள் வாழ்க்கை சீர்பெறச் செய்வார். சுவாமிஜியின் துணைபெற்ற குடும்பத்தார் எவரும் துன்பம் அடைந்தது இல்லை. இயற்கையான மரணம் முதலியவை தவிர்க்க முடியாதது. ஆனால் செயற்கையாய் ஏற்படும் எத்தனையோ வித சிக்கல்களை நிவர்த்தி செய்ய தன் அருகில் வரவழைத்து அவர்களிடம் பேசியே, தீர்வு கண்டு இருக்கின்றார்! இவ்வளவு கார்யங்கள் செய்தும், தான் செய்ததாக வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார். அதை வெளியில் யாரிடமும் கூறுவதும் கிடையாது. இதைக் கவனித்தவர்களோ உதவி பெற்றவர்

களோ அல்லது மற்றவர்கள் கூறினாலொழிய, இவ்விஷயங்கள் வெளியே தெரியாது. இவர் செய்த உதவிகள், குடும்பத்தார்கள் பெற்ற நன்மைகள் எழுதி முடியாது. கருணை சமுத்திரமான இவரைப் பார்த்துத்தான் அனுபவிக்க வேண்டும்.

வெறும் சாஸ்திர போதகர் மட்டும் அல்ல சுவாமிஜி, அதிசயமானவர். வேதாந்தம் என்பது நம்மைப் பற்றிய ஞானம் தருவது, நம்மை வாழ்வாங்கு வாழவைப்பது, என்ற உண்மையை உணர்த்தினார் எவ்வளவோ சிறுவயது சகோதரர்களும், சகோதரிகளும் சுவாமிஜியிடம் அளவற்ற அன்புடன் வருவார்கள். சிலர் ஆஸ்ரமத்திலேயே தங்கி தங்கள் அமிர்த மொழியைக் கேட்கவேண்டும் என்பார்கள். நானும் துறவியாகி விடுகின்றேன் என்று சிலர் கூறுவார்கள். ஆனால் சுவாமிஜி பலருடைய, பலரக உணர்ச்சிகளைக் கவனித்து யாருக்கு எங்கு எப்போது எவ்விதம் கூற வேண்டுமோ, அவ்விதம் கூறி, அவர்கள் வாழ்க்கை, மேன்மை பெற வழி செய்தார். சில உத்தம அதிகாரிகளானவர்களை ஆஸ்ரமத்தில் சில காலம் தங்கவும் சாஸ்திரம் கற்கவும் வழி செய்தார்.

நாம் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரைப் பார்த்தது இல்லை. அவர் போட்டோவில், பல பக்தர்கள் செடி, கொடிகள், மிருகம் யாவும் ஆனந்தம் பெற்றது போன்ற காட்சி வரைந்திருக்கும், இது போல் மக்கள் சுவாமிஜி முன்னிலையில் ஆனந்தம் பெற்றார்கள். வாழ்க்கையின் பல கோணங்களில் அல்லலுற்ற, சகோதர, சகோதரிகள் சுவாமிஜியிடம், தங்கள் மன வருத்தங்களையும், சிக்கல்களையும் கூறுவார்கள். அவர்கள் வாழ்க்கையிலும் நிறைவை ஏற்படுத்தினார், சில சகோதர சகோதரிகள், தாம்பத்ய தொடர்புகள் கர்மவசத்தால் வெற்றிகரமாக அமையாவிடிலும், அவர்கள் வாழ்க்கை

யையும், மனதையும் எவ்விதம் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறி அவர்களைப் பக்குவம் செய்தார். ஆதரவான மொழிகளைக் கூறி அன்பாகப் பேசுவார். இவருடைய பேச்சில், அன்பில் இவர்கள் தங்கள் வாழ்க்கயில் ஏற்பட்ட, தோல்வியையும் பொருட் படுத்துவதில்லை. யாருக்கு எந்த வார்த்தை எப்போது எவ்விதம் கூறினால் அவர்கள் ஆனந்தப்படுவார்கள், என்று நன்கு தெரியும் சுவாமிஜிக்கு. குழந்தையைப்போல் ஆணவம் இல்லாமல் இருந்தார். யாவரையும் பிரம்ம சொருபமாகவே பார்ப்பவர் எவரையும் கட்டுப்படுத்த மாட்டார். ஒவ்வொருவரையும் சுதந்திரமாக இருந்து சிந்திக்குமாறு செய்வார். அவர் நடுநிலையான மனப் பக்குவம் யாருக்கும் எளிதில் வராது.

இதனால் தான் ஆயிரக்கணக்கான மக்கள், முதியோர், வறியோர், செல்வந்தர், பெரிய டாக்டர்கள், நியாயாதி பதிகள் இவ்விதம் பலரக மக்கள், வந்தாலும், யாவருக்கும் திருப்தி கொர்டுக்கும், பேச்சுத்தான் பேசுவார். பேசும்போதே தன்னிடம் பேசுபவர்கள் எவ்வளவு பக்குவம் உள்ளவர்கள், என்று அறிந்து அவர்கள் ஏற்றுக்கொள்ளும் முறையில் உண்மையைப் புரியவைப்பார்.

ஓர் சமயம் சாந்தீபனியில் தோட்ட வேலை செய்ய ஆள் இல்லாமல் இருந்தது, இந்தத் தோட்ட வேலையை சேவை மனப்பான்மையோடு, செய்யும்படி மாணவர் களுக்கு, கூறினார் சுவாமிஜி. ஒவ்வொரு நாள் சில மாணவர் கள் சேர்ந்து சுத்தம் செய்து கொண்டு வந்தார்கள். அவ் விதம் சுத்தம் செய்த குப்பைகளை எல்லாம் போட்டு, ஓர் மரத்தடியில் எரித்துக் கொண்டு இருந்தார்கள். அச்சமயம் அங்கு சென்று கொண்டு இருந்த சுவாமிஜி, மாணவர்களைப் பார்த்து ''ஏய் என்ன செய்கின்றீர்கள்? உயிருள்ள மரம் அதன் அடியில் நெருப்பிடலாமா? என்று கேட்டார்?''

அப்போது தான் மாணவர்களுக்கும் தாங்கள் செய்யும் காரியம் சரியானது அல்ல என்று உணர்ந்தார்கள். புல், பூண்டு, புழு எதுவும் ஹிம்ஸை செய்யப்படுவதை விரும்பா தவர் சுவாமிஜி என்பதை இச்சம்பவம் நன்கு தெரிவிக்கின்றது.

சுவாமிஜிக்கு கோபம் வராது. கோபம் வராது என்றால் அது பெரிய ஞானத்தின் அறிகுறி இது மனோபலத்தை அறிவிப்பது சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள், புத்தி ஹீனமாக நடந்து கொண்டாலும் சுவாமிஜி அவற்றிற்காக கோபம் கொள்ளாமல், சாந்தமாகவே பேசி அவர்களை தங்கள் குற்றத்தை உணரும்படிச் செய்வார்.

முதல்வெளிநாட்டுப்பயணம்

முதன் முறை வேதாந்தப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற, பிரம்மச்சாரிகள் அமெரிக்கா, ஹவாய் முதலிய நாடுகளில் பிரச்சாரம் ஆரம்பித்து வெற்றிகரமாய் நடத்தி வந்தார்கள் சுவாமிஜி தங்களுக்குக் கொடுத்த ஞானம், போதிக்க போதிக்க வளர்வதைக்கண்டு ஆனந்தித்தார்கள். இவர்கள் அடிக்கடி சுவாமிஜியை அமெரிக்கா வரும்படி வேண்டிக் கொண்டே இருந்தார்கள். இவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி அயல்நாடு செல்வதற்கு ''பாஸ்போர்ட்'' வைத்திருந்தார் சுவாமிஜி.

1976ம் வருஷம் ஜூலை மாதம் நான்காம் தேதி நியூ யார்க்கில் பராட் காலேஜில் சுவாமி சின்மயானந்தா அவர்கள் வேதாந்த கேம்பிற்குப் போவதாய் முன்னதாகவே, ஏற்பாடாகி இருந்தது. அச்சமயம் சுவாமி சின்மயானந்தர் அவர்களுக்கு, அயல்நாடு செல்வதற்கான ''விசா'' கிடைக்க வில்லை. நியூயார்க்கில் முன்னதாகவே எல்லா ஏற்பாடு களும் செய்திருந்தபடியால், கேம்ப் தள்ளிப்போட முடிய

வில்லை. அதனால் சுவாமிஜியை நியூயார்க் கேம்பை நடத்தும்படி ஸ்ரீ சுவாமி சின்மயானந்தர் கூறினார். இவ்விதம் அயல்நாட்டு மாணவர்ளின் விருப்பம் ஈஸ்வர கிருபையால் கூடி வந்துவிட்டது சுவாமிஜியும் அமெரிக்கா செல்ல நினைத்திருந்தது செயலாக்கப்பட்டது. ஜூலை மாதம் இரண்டாம் தேதி நியூயார்க் செல்வதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன.

சுவாமிஜியைப் பார்க்காமல் இருக்கமுடியாது என்ற அளவு அன்பு காட்டிய சில சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு ஒருபுறம் வருத்தம், மறுபுறம் உயர்ந்த நோக்கத்திற்காக, சுவாமிஜி போகின்றார் என்ற சந்தோஷம். இவரை நியூயார்க் அனுப்புவதற்காகப் பல ஊர்களிலிருந்து அன்பர்கள் பம்பாய் வந்துவிட்டார்கள். சாந்தீபனியின் நிர்வாகப் பொறுப்பு யாவையும் கவனித்து வந்ததை, அதன் அதன் வேலைக்கு தகுந்தவர்களுக்கு, பொறுப்பை ஒப்புவித்து செய்ய வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்தார். ஒவ்வொரு பிரம்மசாரியையும் அழைத்து அவர்களுக்கு என்ன என்ன கூற வேண்டுமோ அவற்றை எல்லாம் கூறி, எவ்விதம் தான் இல்லாதச் சமயத்தில் இருக்க வேண்டும் என்பதைக் கூறினார். இவர்கள் கற்க வேண்டிய பாடத்தைக் கற்றுக் கொடுப்பதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்தார்.

தன்னை வழி அனுப்ப வந்திருந்த அன்பர்கள் ஒவ்வொருவரையும் அழைத்து அன்புடன் பேசி தன் பிரிவை உணரா்மல் இருக்கச் செய்தார். அன்று இரவெல்லாம் உறக்கமே இல்லை சுவாமிஜிக்கு. சுவாமிஜியின் குடியாவின் முன்பு அன்பர்கள் அனைவரும் ஆனந்தமாக அமர்ந்து இந்த கோலாகல நிகழ்ச்சியையும், சுவாமிஜி ஒவ்வொருவரிடமும் காட்டும் பரிவையும் பார்த்து மகிழ்ச்சி அடைந்திருந்தார்கள்.

ஜூலை இரண்டாம் தேதி, பிரம்மச்சாரிகளும், அன்பர்களும் வெகு கோலாகலமாய் வழி அனுப்பினார்கள். சுவாமிஜி தன் அறையிலிருந்து வெளியிற் சென்று, காரில் அமர்ந்தவுடன், அனைவரும் சுவாமி தயானந்தருக்கு ஜெய்! சுவாமி தயானந்தருக்கு ஜெய்! என்று ஒரே ஆரவாரம் செய்யும் போது சிறு தூரல் போட்டு வருண பகவான் ஆசீர்வதித்தார். இது மங்களமான அறிகுறி வரும் காலத்தில் உலகம் எங்கும் சுற்றி இந்த ஞானத்தை போதிக்கப்போகும் வெற்றிக்கு நல்ல சகுனமாக இருந்தது, இந்த நிகழ்ச்சி, பஞ்ச பூதங்களும் ஞானியின் செயலுக்கு அனுகூலமாக இருக்கும, என்ற உண்மையை நேரில் பார்க்க முடிந்தது.

பார்ட் காலேஜ் (Bord College) உயர்ந்த மலைகளும் காடுகளும், அட்சண் நதியாலும், அலங்கரிக்கப்பட்ட இடம். மிகவும் ரம்யமான சூழ்நிலையில் கேம்ப் ஏற்பாடாகி இருந்தது. இச்சமயத்தில் அமெரிக்காவின் 200வது சுதந்திர தினவிழாவும் ஏற்பாடாகி இருந்தது, ஜூலை நான்காம் தேதி ''பந்தம் மோட்சம் என்று மனதின் உள் இருக்கும் கட்டில் இருந்து விடுபடுவதே சுதந்திரம் என்று எப்போதும் கூறுவார்'' சுவாமிஜி. அமெரிக்க மக்களுக்கு உள்ளும் புறமும் அற்று நம்முள்ளேயே இருக்கும் சுதந்திரத்தைப்பற்றிப் பேசுவதற்கு ஏற்ற சமயமாய் அமெரிக்காவின் சுதந்திர தினமும் அமைந்தது பொருத்தமே.

சுவாமி சின்மயானந்தரின் உபன்யாசங்களையே கேட்டுப்பழகி அவர் மேல் மிகவும் விருப்பம் கொண்டிருந்த பெரும்பான்மையானவர்கள் அக்கேம்பிற்கு வந்திருந்தார்கள். எப்போது சுவாமி சின்மயானந்தரைப் பார்ப்போம் என்று பேராவலோடு காத்திருந்தார்கள். இச்சமயத்தில் சுவாமி சின்மயானந்தர் வரவில்லை. அதற்குப் பதிலாக அவருடைய முக்கிய முதல் தர சிஷ்யர் சுவாமி தயானந்தர்

வருகின்றார், என்ற விஷயத்தை குசுகுசு வென்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். இவ்விஷயம் காட்டுத்தீ போல் பரவி பெரும்பான்மையான, அன்பர்களிடம் குழப்பத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியது. இந்த நிலைமை எப்போது மாறும் என்று கேம்ப் ஏற்பாடு செய்தவர்களும் ஏற்பாடு செய்தவர்களும் குழம்பிக் கொண்டிருந்தார்கள்.

நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. வரப்போகும் சுவாமி எப்படி? யார் இவர்? என்று ஒவ்வொருவரும் ஆவலோடு காத்திருந்தார்கள். குறிப்பிட்ட நேரத்தில் சுவாமிஜி சலனமற்ற பிரகாசமான முகத்தோடு அனைவரையும் அன்புடன் பார்த்து (At least one Swami has come) எப்படியோ ஒரு சுவாமி வந்துவிட்டார் என்று கூறியவுடன் ஒரே சிரிப்பொலி எழுந்தது. அனைவரும் சிரித்து விட்டார்கள்.

வாக்கும் சப்தமும் வர்ண ஜாலம் செய்து விட்டது. ஒவ்வொருவர் முகத்திலும் திருப்தியும் ஆனந்தமும் பிரகாசித்தது கேள்வி பதில் ரூபமாய் வேதாந்தம் பற்றியும், மனதின் அழுக்கினால் எவ்விதம் இந்த ஞானம் யாவராலும் புரிந்துகொள்ள முடியாமல் போய் விடுகின்றது என்பதுப் பற்றியும் பேசினார். இவருடைய தாக்க ரீதியான பேச்சைக் கேட்டு மக்கள் இவர் என்ன Modern Plato வா என்று ஆச்சர்யப்பட்டார்கள்! எவ்விதம் பேசி சூழ்நிலைகளைச் சமாளிக்க வேண்டும் என்பது சுவாமிஜிக்கு கைவந்த கலை. இளமையிலிருந்தே எதிர்ப்புகளைச் சமாளித்து அனைவரையும் தன்வயம் செய்து, ஆனந்தப்படுத்துவது இவர் இயல்பு, ஆனதினால் இந்தச்சந்தர்ப்பமும் அவருக்குச் சாதகமாகவே முடிந்தது.

மலைச்சரிவில், மரங்கள் அடர்ந்த இடத்தில் இருந்த குடிலுக்கு சுவாமிஜியை அழைத்துக் கொண்டு போனார்கள். அங்கு அமெரிக்கர்கள் உண்ணும் உணவு வழங்கப்பட்டது அவற்றை எல்லாம் ஆனந்தமாய் உண்டார். தன்னைப் பார்க்க

வந்த ஒவ்வொருவரையும் அன்புடன் விசாரித்தார். ஒவ்வொருவர் கேட்கும் சந்தேகங்களுக்கும், எளிமையில் புரிந்து கொள்ளும் வகையில் திருத்தமாய்த் தெளிவாய்ப் பதில் கூறினார். இதைக் கேட்க அனைவருக்கும் ஒரே ஆனந்தம்.

மறு தினம் காலை 5.30 மணிக்கு தியானம். நான் சாந்தன் என்றும், அந்த சாந்தம் அமைதி, மௌனமே நம் சொரூபம் என்றும், இதை அறிந்து அடைவதே எல்லையற்ற ஆனந்தம் என்றும், தியானத்தின் தத்துவங்களை விளக்கினார். பிரசாந்தமான காலை நேரத்தில் சுவாமிஜியின் இனிய கம்பீரமான குரல் அனைவர் உள்ளங்களையும் சிலிர்க்கச் செய்தது, மெய்மறக்கச் செய்தது.

காலை 8.30 முதல் 10 வரையும் மீண்டும் மாலை 4 மணி to 5 மணி, இரவு 7 மணிமுதல் 9.30 வரையும் வேதாந்தப் பாடங்களைக் கற்றுக் கொடுத்தார், இவ்விதம் ஒருவாரம் வெற்றிகரமாய் எல்லா நிகழ்ச்சிகளும் நடந்தன. ஜூலை 10ம் தேதி பல அன்பர்கள் சேர்ந்து, இந்திய உணவு தயார் செய்து உணவு விடுதியை அலங்கரித்து சுவாமிஜிக்கு பெரிய விருந்து அளித்தார்கள். அப்போது அவருடன் அமர்ந்து உண்ட ஒவ்வொருவரையும் பார்த்துப் பரிவோடு பேசி மகிழ்ந்தார். ஜூலை 12ம் தேதி கேம்ப் முடிந்தது. இந்தியர்களும் அமெரிக்கர்களும் புதிய ஆனந்தமும் சுதந்திரமும் பெற்றது போல் உணர்ந்தார்கள். சுவாமிஜியின் வார்த்தைகள், தத்துவங்கள் தர்க்கரீதி முதலியவைகளை நினைத்து நினைத்து ஒருவருக்கொருவர் மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டார்கள்.

சுவாமி சின்மயானந்தரை எதிர்பார்த்திருந்த அமெரிக்க மக்கள். சுவாமி தயானந்தருடைய உபன்யாசத்தை எப்படி ஏற்றுக் கொள்வார்களோ என்று இங்கு இந்தியாவில்

எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கு, ஒவ்வொரு இடத்திலும் அவருக்கு வெற்றிமேல் வெற்றி என்ற செய்தியும் வந்தது. கடிதங்களைப் பார்த்த அன்பர்கள் ஆனந்தப்பட்டார்கள். மேலும் சுவாமி சின்மயானந்தருக்கு சிலர் பாராட்டுக் கடிதங்கள் எழுதினார்கள்.

சில அமெரிக்க அன்பர்கள் எழுதிய கடிதங்கள்

அவர் வந்தார், அவர்கள் கேட்டார்கள், பிறகு அவர் ஜெயம் பெற்றார் என்று தலைப்பில் தபோவன் பிரஸாத் புத்தகத்திற்கும் சுவாமி சின்மயானந்தர் அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள்.

RHOD AVER BACH NEW YORK ல் இருந்து எழுதியது.

பார்ட் காலேஜில் நிகழ்ந்தது எங்களுக்கு அற்புதமான அனுபவத்தையும், ஆச்சர்யத்தையும் கொடுத்தது. சுவாமி தயானந்தா பெரிய ஆச்சார்யர். இவரைப் பற்றியும் இவர் சொல்லிக் கொடுக்கும் முறையை பற்றியும் வார்த்தைகளால் விளக்க முடியாது. ஆகையால் தாங்கள் இவ்வளவு உயர்ந்த ஆச்சார்யரை அனுப்பி வரமுடியாத சந்தர்ப்பத்தில், நாங்கள் ஏமாற்றமடையா வண்ணம் செய்ததற்கு நன்றி, நன்றி. நாங்கள் இவரை ஏற்றுக் கொள்வது மட்டும் அல்ல அவரோடு ஒவ்வொரு நிமிடமும் இருப்பதில் ஆனந்தப்படுகின்றோம் நீங்கள் இருவரும் பெரிய ஆச்சார்யர்கள் இதில் யார் வந்தாலும் ஒன்றுதான்.

சுவாமி தயானந்தர் எங்களிடம் மிகுந்த அன்போடும் பொறுமையுடனும் அழகாய்ப் பேசுகின்றார் எங்களுடைய

தவறான கொள்கைகளையும், குழப்பம், பயம், சந்தேகங்கள் யாவற்றையும் விலக்கிவிட்டார் இனிய குரலில் பாடி எங்களைப் பரவசப்படுத்தினார். தன்னில் தானாய் இருக்கும் அனுபவத்தையும் எங்களுக்குத்தந்தார்.

Dr. NAIMPALLY OF ONTARIO CANADA

டாக்டர் நெய்ம்பல்லி கன்னடாவில் இருந்து எழுதுவது. சுவாமி சின்மயானந்தரே சுவாமிஜியின் உள்ளிருந்து பேசுவது போலிருந்தது தியானத்திலிருந்து உபன்யாசங்கள் சத்சங்கங்கள் முதல் யாவும் உயர்தரமாய் இருந்தது. குரு, சிஷ்ய பரம்பரையின் உயர்வையும் புகழையும் வர்ணிக்க முடியாது.

SUSHEEL OF MATTAPAN , MAIN

சுசீல், என்பவர் மட்டாபனிலிருந்து எழுதுவது இன்று கேம்பின் இறுதி நாள். ஒரே வஸ்துவை பல ரக சீசாக்களில் வைப்பது போல், சுவாமிஜி அவர்கள் பலப்பல விதத்தில் வர்ணிக்கின்றார். இந்த கேம்ப் வெற்றி கரமாய் இருக்கின்றது. இதனால் என்னுடைய அறிவு ஆழ்ந்த ஞானத்தைப் பெறுகின்றது.

BEELA SOLARNO OF NEW YORK

பெல்லோ செலரினோ நியூயார்க் எழுதுவது கேம்ப் மிகவும் அழகாய் இருந்தது. அற்புதமான அனுபவம் ஏற்பட்டது எனக்கு. ஒரு சிஷ்ய உறவு என்பது என்ன? எவ்விதம் குருவின் மூலம் ஆத்ம ஞானம் சிஷ்யனுக்கு ஏற்படுகின்றது, ஏன் குருவினிடம் சிரத்தை வைக்க

வேண்டும்? அதே சமயத்தில் எவ்விதம் உலகப்பற்றிலிருந்து விலகிக் கொள்ளவேண்டும்? என்பனவற்றை அறிந்து கொண்டேன். சுவாமி தயானந்தா அவர்கள் முன் என்னையே மறந்து விடுகின்றேன். அவர் இருப்பே எனக்கு ஆனந்த மாயிருக்கின்றது. இந்த ஆத்மஞானம் தங்களிட மிருந்து வந்தாலும அல்லது மெஹர் பாபாவிடமிருந்து வந்தாலும், சுவாமி தயானந்தாவிடமிருந்து வந்தாலும் ஒன்றே.

Mrs. SRIMANI OF MONTREAL, CANADA

சாய்நானி. மாண்ட்ரியலில், இருந்து எழுதுவது சுவாமிஜிக்கு விசா கிடைக்கவில்லை அதனால் அவர் உத்திர காசிக்கு இரண்டு மாதம் போயிருக்கின்றார். அவர் வராததினால் நீங்கள் ஏமாற்றம் அடைந்திருப்பீர்கள். எப்படியோ ஒரு சுவாமி வந்திருக்கிறார் என்று எளிமையாய் அன்பாய் கனிவான கண்பார்வையோடு அவர் பேசியது அனைவரையும் கவர்ந்து விட்டது. அவருடைய கூர்ந்த அறிவும், ஜொலிக்கும் கண்களால் எதையும் ஒரு வினாடியில் புரிந்து கொள்ளும் திறமை உடையவரான இவர் தொடர்பு நம்பிக்கை தருவதாக உள்ளது. எங்கள் அன்பு சுவாமியாகிய தாங்கள் வராதது, ஏமாற்றமானாலும் ஈடு செய்ய முடிகின்றது. இவர் எவ்வளவு பெரிய ஆச்சார்யன் எவ்வளவு பெரிய மஹாத்மா என்று அறிகின்றேன் என்பது போன்ற பல கடிதங்களை சுவாமி சின்மயானந்தருக்கு பல அன்பர்கள் எழுதினார்கள். இதன் பிறகு இந்தக் கேம்ப் முடித்துக் கொண்டு, கன்னடாவிலுள்ள ஒட்டாவா என்ற இடத்திற்குச் சென்றார். சுவாமிஜியின் உபன்யாசத்தைக் கேட்ட பின்பு சுவாமி சின்மயானந்தர் வரவில்லை என்ற ஏமாற்றம், குழப்பம் எல்லாம் மக்களிடமிருந்து விலகிவிட்டது. இதன் பின் ஒட்டாவா என்னும் இடத்தில் கேம்ப்பிற்குச் சென்றார் அங்கும் வெற்றி தான். ஒலிம்பிக் . விளையாட்டுக்

காரர்களும், இந்தியாவின் ஹாக்கி விளையாட்டுக் காரர்களும், வர்ணஜாலம் நிறைந்த வீதி ஊர்வலம் வந்ததைப் பார்த்தார். இந்த ஊர்வலம் பார்ப்பதற்கு அற்புதமா யிருக்கின்றது என்றார்.

இதன் பின் பிட்ஸ்பர்க் என்னும் ஊரில் உள்ளே கோவிலுக்குச் சென்றார்.

சுவாமிஜியின் உபதேசம் பைபிளை விடப்புராதனமானது என்று WEEK END என்னும் அமெரிக்க பத்திரிக்கையில் பிரசுரித்தார்கள்

19 – 9 – 1976

நான் முதலில் சுவாமி தயானந்த சரஸ்வதியைப் பார்த்த போது ஏற்பட்ட அனுபவம் என்னவெனில், அவர் எப்போதும் பிரசாந்தமாய், யார் என்ன கேள்வி கேட்டாலும் பதில் சொல்லவும், போதனை செய்யவும் தயாராக இருந்தார்.

நான் ஆற்பன் குறைபட்டவன் என்று ஒவ்வொருவரும் எண்ணிக் கொண்டிருக்கும் மூல சந்தேகத்தைப் பற்றி சூட்சு மமாய் விசாரித்து விளக்குவார். எவ்வளவு இருந்தாலும் எவ்வளவு செய்தாலும் எண்ணில் ஏதோ குறை உள்ளது, என்று நினைப்பதுவே ஒவ்வொருவருடைய சம்சயம் என்று சுவாமிஜி கூறினார். சுவாமிஜியின் போதனையின் தனித்தன்மை என்னவெனில் தனக்கும், ஜகத்திற்கும், ஈஸ்வரனுக்கும் உள்ள யதார்த்த சம்பந்தம் என்னவென்று தெளிவாய் யாவரும், சுலபுமாய்த் தெரிந்து கொள்ளச் செய்வதே.

இன்றைய உலக வழக்கில் தன்னைத் தான் நிந்தித்து கொள்ளல், தாழ்மையாக எண்ணிக் கொள்ளல், சக்தி யற்றவன் என்று துக்கப்படுதல் உள்ளது. இது சுவாமிஜியின் பிரவசம் கேட்டபின் விலகிவிடுபடுகின்றது. மனத்தெளிவு கொடுக்கின்றது புராதனகாலமாய் உள்ள பவித்ரா சிரந்தம் வேதம். அந்த வேதத்திலிருந்து உபதேசிக்கும் ஞான சம்பிரதாயமே வேதாந்தம். சுவாமிஜி இந்த வேதாந்தத் தையே பிரவசனம் செய்வார்.

அமெரிக்கா முதலிய மேற்கு நாட்டிலுள்ளவர்களுக்கு வேதம் வேதாந்தம் பற்றிய ஞானத்தில் அதிக குழப்பமும் சந்தேகங்களும் உள்ளது. இதை விளக்க எப்போதும் ஸ்பஷ்ட ஞானத்தை மக்களுக்குத தெரிவிப்பதிலேயே முக்கியத்துவம் கொடுப்பார். இவ்வித தெளிந்த ஞானத் தின் மூலம் உலகத்தோடு எவ்விதம் சம்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு வாழ்க்கையை நடத்துவது என்று தெரிந்து விடும் மக்களுக்கு.

மதப்பிரசாரகர்கள் பலவந்தமாய் விஷயங்களைப் புகுத்துவது போல ஸ்வாமிஜி அவர்களைக் குருட்டுத் தனமாய் நம்புங்கள் என்று கூறவில்லை. இவருடைய போதனா முறை விஷயங்களைச் சரியாக அறிந்து கொள்ளச் செய்வதே, பலவந்தமாய் ஒப்புக்கொள்ளுமாறு கூறுவது இல்லை. இதைக் கேட்கும் மக்களுக்கு இவ்விஷயம் தெளிவாய்ப் புரிந்து விடும், தினம் நல்லது, கெட்டது என்ற நிகழ்ச்சிகள் வாழ்க்கையில் ஏற்பட்டுக் கொண்டே இருப்பதை மனதை பாதிக்காமல் வைத்துக்கொள்ள பிரசாந்தமாக மனதை வைத்துக் கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும் என்பது போன்ற உயர் போதனைகள் செய்கின்றார் என்று பிரசுரித்தார்கள்.

இதன் பின் HUMBOLDT என்னும் ஊரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் கேம்ப். இந்த இடம் மிக உயர்ந்த தேவதாரு மரங்களால் சூழப்பட்டது. இந்த மரங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம், எவ்வளவு பார்த்தாலும் போதாது நமக்கு இமயமலையைப் பார்த்துப் பார்த்து எவ்வளவு ஆனந்தம் ஏற்படுகின்றதோ அதுபோல் இம்மரங்களும் மனதைக்கவரக்கூடியது. ஆயிரம் அடி உயரம் உள்ள மரங்கள் அதற்கு ஏற்ற பருமன். சுவாமிஜி அவர்களுக்கு இம்மரங்களைப் பற்றி வர்ணிப்பதில் மிகவும் ஆனந்தம் இம்மரங்களைப் பற்றி வர்ணிப்பதில் மிகவும் ஆனந்தம் இம்மரங்களைப் பற்றி பேசிக் கொண்டே இருப்பார். தமோ பூமி போன்ற இந்த இடத்தில் கேம்ப்பிற்கு பல திசைகளிலிருந்தும் மக்கள் வந்தார்கள். அவர்களெல்லாம் சுவாமி சின்மயானந்தர் வரவில்லையாமே! அவருடைய சிஷ்யர் வந்திருக்கிறாராமே என்று பேசிக் கொண்டார்கள். யார் அந்த சிஷ்யர்? பார்க்க வேண்டும் என்று ஆவலோடு காத்திருந்தார்கள். இறுதியில் சுவாமிஜி அறிமுகம் செய்யப்பட்டார்.

சுவாமி சின்மயானந்தர் விசா கிடைக்காததினால் வரவில்லை உத்திரகாசிக்குச் சென்றுள்ளார். சௌக்யமாயிருக்கின்றார் என்றும் அதனால் நான் இங்கு வந்திருக்கின்றேன் நீங்கள் எல்லாம் ஆச்சர்யம்படும்படி என்று கூறி அனைவரையும் மகிழ்வித்தார். இங்கும் எல்லா நிகழ்ச்சிகளும் வெற்றிகரமாய் நடந்தது.

முன், பின் அறியாத அயல் நாட்டு மக்களின் மனநிலை உணர்ந்து, அவர்கள் பக்குவத்திற்கும் நாட்டின் கலாச் சார்த்திற்கும் ஏற்ற வகையில் கீதை, உபநிஷத் கூறும் உண்மைகளை எளிய முறையில், மக்கள் மனம் மகிழும் வகையில் போதித்தார். மனித மனத்தின் சஞ்சலத்தன்மையை

அகற்றி அமைதியாய் அவரவர் காரியங்களை அவ்விதம் செய்ய வேண்டும் என்று அறிவுரை கூறினார். இவருடைய போதனை அங்குள்ளவர்களுக்கு மனத்திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளித்தது. இவ்விதம் அமெரிக்கா, கனடா, ஹவாய் முதலிய தேசங்களின் பிரயாணத்தை வெற்றியோடு முடித்துக்கொண்டு, பம்பாய் சாந்தீபனி வந்து சேர்ந்தார்.

தாயைப் பிரிந்த கன்றுபோல் காத்திருந்த மாணவர்கள் சுவாமிஜியை வெகுவிமரிசையாய் அன்புடன் பூர்ண கும்பத்துடன் வரவேற்றார்கள். மாணவர்கள் மனமகிழும்படி தன் அயல் நாட்டுப் பிரயாணத்தைப் பற்றி சோர்வில்லாமல் சுவாமிஜி அனைவருக்கும் கூறினார்.

சுவாமிஜியின் வெற்றிகரமான அயல்நாட்டுப் பிரயாணமும் சொற்பொழிவும் நடந்த பிறகு, மக்களுக்கு சுவாமிஜியிடம் மேலும் பயம், பக்தி, சிரத்தை வளர்ந்தது. மேலும் பல நூற்றுக்கணக்கான மக்கள் சுவாமிஜியின் அறிவுரை கேட்க சதா ஆஸ்ரமத்திற்கு வந்து கொண்டே இருந்தார்கள். ஆஸ்ரமத்திற்கு வருபவர்கள் சில நாட்கள் தங்கி சுவாமிஜி கீதை, உபநிஷத் பாடங்கள் போதிப்பதைக் கேட்டு மகிழ்வார்கள். இவ்வித உயர்ந்த சத்சங்கமும்' பிரசன்ன வதனத்துடன் எப்போதும் அன்புடன் பேசி ஆனந்தம் அளிக்கும் சுவாமிஜியின் தரிசனத்தால் அனேகர் வாழ்க்கையும் அமைதி பெற்றது.

முதல் முறை பிரம்மச்சர்ய பயிற்சியைவிட இந்த இரண்டாவது பயிற்சியின்போது உணவு, சுகாதாரம், உடை முதலிய சௌகர்யங்களை அதிகம் செய்தார். ஆஸ்ரமத்திற்கு வருமானத்தை பல லட்ச ரூபாய்களுக்கு உயர்த்தினார்.

''கீதா மஹா யக்ஞம்''

1978ம் வருஷம் ஜனவரி மாதம் 28ம் தேதியிலிருந்து பிப்ரவரி மாதம் 15ம் தேதி வரை பம்பாய் சௌபாத்தி கடற்கரையில் நடத்தினார். வெளியூர் அன்பர்கள் அனேகர் சுவாமிஜியின் இந்த மஹா யக்ஞத்தைக் கேட்க ஆஸ்ரமத்திற்கு வந்து விட்டார்கள். யக்ஞசாலைக்குச் செல்ல மூன்று பஸ்களை ஏற்பாடு செய்தார்கள். பிரம்மசாரிகளும், வெளி ஊர்களில் இருந்து வந்த அன்பர்களும் தினம்தோறும் பகவான் நாமத்தையும், குருவின் மகிமையையும் பஜனை செய்த கொண்டு பரவசத்துடன் சென்றார்கள். கடல் அலையை மிஞ்சும் ஞான அலை. சுவாமிஜியின், மதுரமான கம்பீரத் த்வனியில் சொற்பொழிவு நடந்தது. பூரணத்திற்கு உபமானமான கடற்கரையில், பூரண ஞானத்தை யாவரும் அனுபவிக்கும் வண்ணம் புதுமையாகப் புகட்டினார். சமுத்திரத்துடன் போட்டி இட்டது ஜன சமுத்திரம். திரளான மக்கள் இந்த 19 நாட்களும் கீதாம்ருதத்தைப் பருகி மகிழ்ந்தார்கள். கீதையின் முழுமையான கருத்து என்ன என்பதை இந்த ஒரு யக்ஞத்தினாலேயே மக்களால் உணர முடிந்தது!

இந்த கீதா மஹா யக்ஞத்தைப் பாராட்டி பத்திரிகைகள் புகழ்ந்தன. இந்த மஹா யக்ஞத்தில் கலந்து கொண்ட பக்தை கமலாம்பாள் அம்மாள் என்பவர்கள் எழுதிய பாடலைக் கீழே காணலாம்.

கலியுகக் கண்ணன் என்று கண்டவர் புகழ்ந்து போற்ற
சங்கரர் தான் என்று சகலரும் பணிந்து போற்ற
நான்மறை போற்றுகின்ற ஞானியே என்றுணர்ந்து
வானோரும் மகிழ்ந்து வானின்று மலர் பொழிய
பூவுலகத்தோரும் புகழ்ந்து பணிந்தேத்த

தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறவேண்டி
தன் நிலை நின்ற தானறிந்த உண்மையினை
தனக்குவமை இல்லாமல் தரணி தனக்கெடுத்தோதும்
வல்லமையை சொல்லவல்ல வார்த்தைகள் இருக்கின்றதோ!
வாக்கினிற்கெட்டாத வள்ளல் பெருநிதியே!
சொல்லுதற்கரிய ஜ்யோதிச் சுடரொளியே!
எவராலும் எடுத்தோத இயலாத தத்துவத்தை
கீதா சாஸ்திரத்தை கேட்பவர் வியந்து போற்ற
பதினெண் நாட்களில் பாமரரும் உணரும் வண்ணம்
பண்டிதரும் அதிசயிக்கப் பாரிலுள்ளோர் புகழும் வண்ணம்
சாதித்த நும்பெருமை சரித்திரப் புகழ் பெற்றதுவே!
எண்ணுகின்ற போதே என் நெஞ்சம் பூரித்து
வாக்கெல்லாம் நின்ற அந்த வரையற்ற ஆனந்தம்
என்னென்று சொல்லுவேன்! என்னிறைவா! நின்னடி
போற்றுகின்றேன்!
சாக்ஷியாய் நீ இருந்து சாக்ஷியத்தைப் பாரென்றும்
உனக்கயலாய் ஒன்றும் உலகத்தில் இல்லை யென்றும்
தன்னையறிவதே தான்தேடும் சுகமென்று
வேதத்தின் உட்பொருளை போத பானுவாய்
புனித நல்லுருளுறப்புனைந்து வந்து
தன்னலங் கருதாது பிறர் நலம் பேணிக்காக்கும்
தன்னைத் தந்து எம்மை யாட்கொண்ட தெய்வமே!
கமல மலர் நிகர்த்த நின் கழலிணை தொழுவதன்றிக்
கைம்மாறு என்செய்வேன் கருணைக்கடலே!
வானுள்ளளவும் நின் அருள்மழை பொழிந்து
அள்ளக் குறையாத அகண்டானந்தத்தை
என்றென்றும் அளித்தருளி, குன்றாநலம்பெற்று
என்னுள்ளும் ஆட்கொண்டு அருள் புரிய வேண்டுமென
அடிமலர் பணிந்து அனந்த நமஸ்காரம்
அவைரதம் செய்கின்றேன்.

இந்த மஹா யக்ஞம் வெற்றிகரமாய் நிகழ்ந்தது. பல ஆயிரம் ரூபாய் குரு காணிக்கையாக வந்தது.

இதன் பிறகு சென்னை, பெங்களூர், கல்கத்தா, கோயம்புத்தூர், முதலிய இடங்களில் உள்ளவர்களும், தங்கள் ஊர்களில் கீதாமஹாயக்ஞம் வேண்டும் என்று விரும்பினார்கள், இவர்கள் விருப்பப்படி அங்கு எல்லாம் கீதா மஹாயக்ஞம் வெற்றிகரமாய் நிகழ்த்தினார். இவ்விதம் தான் பெற்ற குருகாணிக்கைகள் எல்லாவற்றையும் பிரம்மசாரிகளின் பயிற்சிக்காகவே உபயோகித்தார்.

இதன் பின்பு பிரம்ம சூத்ர பாடம் கற்றுக் கொடுத்தார். சுவாமிஜியின் போதனை ஒவ்வொருவர் உள்ளத்திலும் பாடம் நன்கு பதியும்படியாகவும் மேலும் எதிர்காலத்தில் இவர்களுக்கு சாஸ்திரத்தில் சந்தேகம் சிக்கல் ஏற்படாமல் இருக்கும்படியாகவும் தெளிவாய்ப் போதித்தார்.

பிரம்மச்சார்ய தீக்ஷை

ஜூன் மாதம் பத்தாம் தேதி பிரம்மச்சார்ய தீக்ஷை கொடுக்க ஏற்பாடு செய்தார். ஒன்பதாம் தேதியே நல்ல மழை பெய்து பம்பாய் நகரம் முழுவதும், சுத்தமாயும், குளிர்ந்தும் விட்டது. சுவாமிஜி செய்யும் ஒவ்வொரு சுய காரியத்திற்கும், வருணபகவான் ஆசி அளிப்பது பிரதயக்ஷமான காட்சி.

ஒன்பதாம் தேதியே பூஜை, ஹோமம் செய்வதற்காக சென்னையிலிருந்து குருக்கள் வரவழைக்கப்பட்டார்கள். பத்தாம் தேதி காலையில் ஜகதீஸ்வரர் கோவிலில் பூஜை, ஹோமம் செய்தார்கள். ஈஸ்வரர் கோவிலில் பூஜை, ஹோமம் செய்தார்கள். ஈஸ்வர சன்னிதானத்தில் காயத்ரி உபதேசமும், யக்ஞோப வீதமும் நடைபெற்றது. இதன் பின்பு சுவாமிஜி மஞ்சள் வர்ண வேஷ்டியும், அங்கவஸ்திரமும், பிரம்மசாரிகளுக்குக் கொடுத்து, ஒவ்வொருவருக்கும் ஓர் புதிய பெயர் வைத்தார். முக்தசைதன்யா, சொருபசைதன்யா,

நித்யசைதன்யா, சத்யசைதன்யா, கேவலசைதன்யா, கிருஷ்ண பிரேம்சைதன்யா, இவ்விதம் அனேக சைதன்யா என்ற நாமங்களைச் சூட்டினார்.

நாம, ஞபம் அற்ற சைதன்யம், நாம, ஞபம் உடையது போல் தோற்றமுற்று, நாம, ஞபம் அற்ற நிலையில் சுத்த சைதன்யமாக இருக்கும். உண்மையைப் போதிக்கவும், தாங்கள் சச்சிதானந்த சொரூபம் என்பதை மறவாமல் லட்சிய வாழ்க்கை வாழும் வகையில் நாமங்களைச் சூட்டினார் சுவாமிஜி. இத்திருநாமங்கள் சுவாமிஜியின் ஞானத்தின் மாண்பைத் தெரிவிப்பதாக இருந்தன.

இதன்பின் மஞ்சள் ஆடை கொடுத்து, யக்ஞோப வீதம் செய்ததின் கருத்து என்ன என்பதை விளக்கினார். முப்புரிநூல் என்பது மூன்று வேதம். ரிக், யஜுர், சாமத்தைக் குறிப்பது. வைதீக தரிமத்தை அனுஷ்டிப்பவன், பிரம்ம ஞானத்தைக் கொடுக்கும் காயத்ரி மந்திரஜபம் செய்யக் கூடிய அதிகாரி என்பதை விளக்குவதே இந்நூல் அணிவதின் நோக்கம். இந்த மூன்று நூலும் சேர்த்து மூடிபோடுவது பிரம்மனைக் குறிக்கின்றது. மஞ்சள் ஆடை அணிவதின் நோக்கம், இந்த உயர்ந்த ஞான சாதனைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன் என்பதைக் குறிக்கும் சாதகன் மனம், வாக்கு காயம் மூன்றும் ஒன்று பெற்றவனாக இருக்க வேண்டும். இதுவே நேர்மை என்ற கீதா சார்யன் கூறியுள்ளார், கீதையில். ஆனால் இந்த மஞ்சள் வர்ண உடையே சாதகனை ஆர்ஜவம் உள்ளவனாகச் செய்ய முடியாது. இது ஞானத்திற்கு மதிப்புக் கொடுத்து, மன வலிமை தருவதற்கு ஒர் சாதனமே தவறு. இதுவே குணம் ஆகாது. சாதகன் ஆரம்பத்தில் குணங்களைத் தன் மன வலிமையாலும் பழக்கத்தாலும் பக்குவம் செய்து கொண்ட பின்பு, அதுவே அவனுக்கு ஆபரணமாய், தன் இயல்பாகி விடும் என்று விளக்கம் கூறினார்.

இச்சந்தர்ப்பத்தில் சிவானந்த ஆஸ்ரமத்தின் தலைவர் சுவாமி சிதானந்த அவர்கள் சாந்தீபனிக்கு வந்திருந்தார் பிரகாசிக்கும் மஞ்சள் வர்ண ஆடை அணிந்து, மங்களமாய் ஞானத்தோடு பிரகாசிக்கும், பிரம்மசாரிகளைப் பார்த்து ஆனந்தப்பட்டார். அச்சந்தர்ப்பத்தில் அவர் கூறியது ''பீடமஹாகுரு சுவாமி சிவானந்தா மஹராஜ், சுவாமியின் மயானந்த மஹராஜ் ஆச்சர்யா சுவாமி தயானந்த மஹராஜ் மூவராலும் நீங்கள் ஆசீர்வதிக்கப் பெற்றவர்கள். சுவாமி தயானந்த மஹராஜ் உங்களுக்கு ஞானத்தை மட்டும் கொடுக்கவில்லை. உங்களுக்குத்தன் ஆயுளின் ஒரு பாகத்தையும் கொடுத்து உங்களைப் பக்குவம் செய்துள்ளார், ஆகையால் ஈஸ்வர கிருபையும், ஆச்சார்ய கிருபையும் உங்கள் லக்ஷ்யத்தை அடைந்து மனிதகுலத்திற்கு உயர்ந்த சேவை செய்வீர்கள் என்று ஆசி கூறினார். அன்றைய நிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறியது.

பிரம்மச்சர்ய குருகுலம் முடிவுநாள்

ஜுலை மாதம் பதினைந்தாம் தேதி பிரம்ம சூத்ர பாடம் முடிவுபெற்றது அன்று மாலை பிரம்மச்சாரிகள், சுவாமி ஜியையும், ஆஸ்ரமவாசிகளையும் மகிழ்விக்கும் வகையில் பல நாடக நிகழ்ச்சிகள் நிகழ்த்தினார்கள். இதன் பிறகு ஒவ்வொரு பிரம்மச்சாரியும் இந்தப் பயிற்சிக்காலத்தில் தாங்கள் பெற்ற நன்மைகளைப் பற்றியும் சுவாமிஜியின் மகிமையையும் கூறினார்கள். யாரும் பெறமுடியாத பாக்யம் பெற்றோம் மனிதனை மாமனித னுக்கு வேதாந்தத் தத்துவத்தை எங்களுக்கத் தாய்ப் பால் புகட்டுவது போல், அன்போடு தயையோடு புகட்டினார். நாங்கள் அறிவீனத்தால் செய்த தவறுகளைப்பாராதது போலும், பாராட்டலும் இருந்து எங்களைப்பக்குவம் செய்தார். பயிற்சிக்காலத்தில் நாங்கள் பக்குவம் அற்ற வர்களாக இருந்தோம். மண்ணுக்குச் சமமாக இருந்த எங்களை மாணிக்கமாகச் செய்தார் என தாங்கள், தாங்கள் பெற்ற அனுபவத்தைக் கூறி மகிழ்ந்தார்கள்.

கல்லூரிகளில் சான்றுப் பத்திரிகை கொடுப்பது போல் இங்கு வேதாந்தப் பயிற்சியில் வெற்றிப் பெற்றதைக் குறிக்கும் சான்றுப் பத்திரிகைகளை, சுவாமிஜி அனைவருக்கும் அளித்தார்.

சௌராஷ்டிரா ஜினாகட், பெராம்பூர், பெல்லாரி, மைசூர், சென்னை, பெங்களூர், பம்பாய், கோயம்புத்தூர், பூனா, இந்தூர், ஆமதாபாத், இமாசல்பிரதேஷ், திருப்பதி என இவ்விதம் 29 பிரம்மசாரிகளையும் ஓர், ஓர் குறிப்பிட்ட ஊர்களில் பிரசாரம் செய்து கொண்டு இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். சீயோட்டில், சான்பிரான்சிஸ்கோ, பிட்ஸ்பர்க், போர்ட்லண்டு, நியூயார்க், பாஸ்டன், போனிக்ஸ், டோரண்டோ, ஜெனீவா, பிரேசில், தென்ஆப்ரிக்கா, ஸிட்னடி, ஆஸ்திரேலியா, முதலிய தேசங்களுக்கு அயல்நாட்டு பிரம்மச்சாரிகள் சென்றார்கள்: அங்கு அவர்கள் தங்கள் தொழிலைச் செய்து கொண்டே, வேதாந்தம், சமஸ்கிருதம் முதலியவற்றைக் கற்றுக் கொடுக்கும் பணியைச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தார்.

வேதாந்த போதனை செய்ததோடு அல்லாமல், ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையைத் திறம்பட நடத்தி கொள்ளும் விதத்தில் பயிற்சியையும், பக்குவத்தையும், தேடிக்கொடுத்த சுவாமிஜியின் திறத்தை யோசிக்கும் போது ஓர்துறவி வாழ்க்கையில் எவ்வளவு மேலான செயல் செய்ய முடியும் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுவது போலிருந்தது! யான், எனது என்பதைத் துறந்ததினால் யாவும் தானாகி விட்ட தயா சொரூபம்.

இவ்வளவு சிறப்பாய் இரண்டாவது பயிற்சியை முடித்த பின்பு சுவாமி சின்மயானந்தா அவர்கள் அயல்நாட்டில் மீண்டும் இதேபோல், பயிற்சி ஆரம்பிக்க விருப்பம் உள்ளதாகத் தெரிவித்தார்கள். இரண்டு பிரம்மச்சர்ய பயிற்சியை நடத்தி வெற்றி கண்ட சுவாமிஜிக்கு, அயல்

நாட்டில் குருகுலம் நடத்துவதில், எவ்விதத் தடங்களும் இல்லை. ஆகையால் சுவாமி சின்மாயனந்தா அவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதாய்க் கூறினார்.

மேற்கத்திய நாட்டில் சாந்தீபனி சாதனாலயா ஆரம்பம்

1977ல் கன்னடா, நியூயார்க் முதலிய இடங்களில் சுவாமிஜி சாதனா கேம்புகள் நிகழ்த்தினார். அச்சமயம் அனேக மக்கள், இந்த ஞானத்தைத் தொடர்ந்து கற்றுத் தெளியவேண்டும் என்ற அவா உள்ளவர்களாய் இருந்தார்கள். இவர்கள் மனநிலையை உணர்ந்த சுவாமிஜி, உங்களுக்கு விருப்பமானால், இங்கு ஓர் சாதனாலயா நடத்துவதற்குத் தகுதி வாய்ந்த இடத்தைப்பாருங்கள், நான் உங்களுக்கு வேதாந்தம் கற்றுக்கொடுக்கின்றேன் என்று இவர்கள் மனதில் சாதனாலயா ஆரம்பிப்பதற்கான விதையை விதைத்து விட்டார், அச்சந்தர்பத்திலேயே சுவாமிஜியின் சிறந்த போதனைக்கும், அன்பிற்கும் கட்டுப்பட்டவர்கள் சாதனாலயா அமைப்பதற்குத் தகுதியான இடத்தைத் தேடும் முயற்சியை மேற்கொண்டார்கள். பயிற்சியைக் காரணமாக வைத்து சுவாமிஜி நம்மோடு அதிக காலம் இருப்பார் என்று விரும்பியவர்கள் பலர்.

1978ல் இந்தியாவில் நிகழ்ந்து கொண்டு இருந்த, சாந்தீபனி சாதனாலயா பயிற்சி முடிவடைந்த பின்பு. சுவாமிஜி கனடா பிரேசில் முதலிய இடங்களில் கேம்புகள் நிகழ்த்தி டிசம்பர் மாதம் இந்தியாவிற்குத் திரும்பும் சமயத்தில், ஸான்பிரான்சிஸ்கோ என்ற இடத்திலிருந்து, 200 மைல் தூரத்தில் உள்ள பியர்ஸ்சி என்னும் இடத்தில், ஓர் வேனிற் காலத்தில் மட்டும் மக்கள் தங்கும் விடுதி (HOTEL) ஒன்றைத் தேர்ந்தெடுத்தார்கள்.

ஜூன் மாதம் 1979ம் வருடம் ஒரு லக்ஷம் டாலர் நிதி திரட்டி இந்த இடத்தை விலைக்கு வாங்கினார்கள்.

இந்த விடுதி ஆஸ்ரமம் அமைக்க வேண்டியது போல் இல்லை. முதன் முறை பிரம்மச்சார்யப் பயிற்சியில் வேதாந்தம் கற்ற அமெரிக்க மாணவியான ராதா என்பவர், இதற்குப்பெரும் முயற்சி எடுத்தக்கொண்டார். மேலும் இவர் இங்கு அனேக மக்களுக்கு வேதாந்தம் போதித்து வந்தார். இவரிடம் வேதாந்தம் பயின்று கொண்டிருந்தவர்களும், சுவாமிஜியின் வேறுசில சிஷ்யர்களும் அங்கு அவ்விடுதி யிலேயே தங்கி, ஆஸ்ரமம் எவ்விதம் இருக்க வேண்டுமோ அவ்விதம் மாற்றி அமைத்தார்கள். ஒருவர் பொறிஇயல் வல்லுனர். இவர் கட்டிட வேலைகளை கவனித்துக் கொண்டார். ஒருவர் தச்சு வேலை, ஒருவர் மின்சார வசதிக ளைச் செய்தார். இவ்விதம் ஒவ்வொருவரும் தன் திறமையை குருவின் சேவைக்கு உபயோகப்படுத்தினார்கள். இவர் களுக்கு இருந்த குருபக்தி அபாரமானது. ஆகையினால் வேலைகள் மிகவும் சிறப்பாயும், ஆனந்தமாகவும் நடந்தது. இதில் வெயிற்காலத்திற்கு, ஏற்றாற் போலும் குளிர் காலத் திற்கு ஏற்றாற் போலும், சீதோஷ்ண கட்டுப்பாடுகளுடன் அறைகள் அமைத்தார்கள்.

சமையல் அறை மிகவும் நவீன வசதிகளுடன், சுகாதாரத்தைப் பாதிக்காத வகையில் அமைத்தார்கள். பாத்திரங்களை அலம்புவதற்கு ஓர் இயந்திரம். அதை நீராவியினால் கிருமிகளை நாசம் செய்ய ஓர் இயந்திரம். கார்கள் வைப்பதற்கு வேண்டிய இடம், அவைகளைப் பழுது பார்ப்பதற்கு வேண்டிய சாமான்களை வைப்பதற்கு ஓர் இடம். ஒவ்வொரு சாமானும் அழகாய் வரிசையாய் ஒழுங்கு தவறாமல் வைத்து இருந்தது, பார்க்க கண்காட்சி சாலை போலிருந்தது. இவ்விதம் இரவு, பகல் என்று பாராமல் ஆஸ்ரமம் நடத்தவதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்து விட்டார்கள்.

இந்த ஆஸ்ரமம் அமைந்த இடம் புராணங்களில், தெய்வலோகம் என்று வர்ணனை கூறுவார்களே, அதை நேரில் பார்த்தால் எவ்விதம் இருக்குமோ அவ்விதம் இருந்தது. சுற்றிலும் பெரிய மரங்கள் வானளாவும் தேவதாரு மரங்கள் (Red Wood Trees) கிறிஸ்து பிறப்பதற்ககு முன்பே இருந்ததாய் கூறப்படும் மரங்கள் அங்குள்ளது. தெய்வீக அழகுவாய்ந்த இந்த தேவதாருமரங்கள் பார்க்கப்பார்க்க சலிப்பு ஏற்படுவது இல்லை. இவ்விதம் அடர்ந்த மரங்களுக்கிடையில் ஈல் என்னும் நதி ஓடுகின்றது. சிறு கூழாங்கற்கள் நிறைந்த மணல் மேல் தெளிந்த நீர் ஓட்டம் உள்ளநதி, இதன் அருகில், மலைகள். எங்கு பார்த்தாலும் பசுமையான செடி கொடிகள், இயற்கை அன்னையின் எழில் மிகுந்த தோற்றத்தின் இடையில் இந்த சாந்தீபனி சாதனாலய அமைந்தது. சாந்தீபனி மஹரிஷியைப் போல் சுவாமிஜி அமர்ந்து போதனை செய்வதற்குப் பொருத்தமாக இருந்தது.

ஆகஸ்டு மாதத்தில் பிரம்மச்சர்ய பயிற்சிக்குத் தேர்வு நடத்தி அதில் சிலரைத் தேர்ந்து எடுத்தார். நவம்பர் மாதம் ஏழாம் தேதி நீண்ட நாட்கள் சங்கல்பரூபமாக இருந்த சாந்தீபனி குருகுலம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று காலை கணபதி ஹோமம் செய்தார்கள். பிறகு ரிஷிகேஷிலிருந்தது வரவழைத்த கங்கா ஜலத்தை ஈல் நதியில் ஊற்றி கங்கா தோத்திரம் பாடி ஈல் நதியை கங்கா தீரமாக்கினார்கள். இதன் பின்பு பாடம் போதிக்க ஆரம்பித்தார்.

எழில் மிகுந்த இந்தச் சூழ்நிலையில் குருகுலம் அமைந்தது. அங்கு வந்தவர்கள் அனைவருக்கும் மிகவும் ஆனந்தமாக இருந்தது. சுவாமிஜியின் கவனிப்பும், அன்பு விசாரணையும் சமதிருஷ்டியும் அனைவரையும் ஒன்றாய்ச் செய்தது. இந்தியர், அமெரிக்கர் என்ற வேறுபாடுகள் எவர் உள்ளத்திலும் ஏற்படவில்லை. இதில் பன்னிரெண்டு இந்தியர்கள். நான்கு இந்திய தம்பதிகள், அமெரிக்க தம்பதிகள்

மூன்று பேர்கள் ஆஸ்திரேலியா, கன்னடா, சுவிட்சர் லாந்து, அமெரிக்காவின் பலபாகங்களில் இருந்து வந்த வர்கள் ஆக மொத்தம் ஐம்பத்து ஐந்து பேர்கள் இங்கேயே தங்கி இருந்தார்கள். இவர்களில் அனேகர் தாங்கள், தாங்கள் செய்து கொண்டிருந்த தொழிலுக்கு மூன்று வருடம் விடு முறை எழுதிக் கொடுத்துவிட்டு வந்திருந்தார்கள்.

சட்டம் பயின்றவர்கள், பொறியியல் வல்லுனர்கள், வைத்யர்கள், சைன்டிஸ்ட்கள், காலேஜ் படித்துக் கொண்டிருந்தவர்கள் இவ்விதம் நல்ல நிலைமையில் இருந்தவர்களும், வசதியான குடும்பங்களில் இருந்தவர் களும் இங்கு தங்கி இருந்தார்கள்.

இங்கு மாதச்சம்பளத்திற்கு வேலை செய்பவர்கள் ஒருவரும் இல்லை. மாதம் நூற்று இருபத்து ஐந்து டாலர் சாப்பாட்டிற்காகக் கொடுத்தார்கள். ஒரு லக்ஷம் டாலர் தர்ம நிதி திரட்டினார் சுவாமிஜி. மாதம் இருபது ஆயிரம் டாலர் செலவாகி வந்தது.

ஒவ்வொருவரும் இங்கு தினம் முறைப்படி, இரண்டு மணிநேரம் குறிப்பிட்ட வேலைகளைச் செய்யும்படி, முறை வகுத்தார்கள். இன்று சமையல் ஒருவர் செய்ய வேண்டும். அதற்கு உதவியாக ஒருவர், பாத்திரம் சுத்தம் செய்பவர் ஒருவர், அதற்கு உதவியாக இருப்பவர் ஒருவர், தோட்டவேலை, துடைப்பது, கடைக்குச்சென்று காய்கறிகள், மளிகை சாமான்கள் வாங்குவது, என்று எல்லா வேலை களையும் பகிர்ந்து கொண்டு செய்து வந்தார்கள். இதில் எந்த வேலையையும் ஏற்றத் தாழ்வு என்பதில்லாமல் அன்போடும், உற்சாகத்தோடும் செய்து வந்தார்கள். வாரத்தில் ஒருநாள் இந்திய சமையல் மற்ற நாட்களில் அமெரிக்க சமையல் செய்வார்கள்.

அமெரிக்கப் பெண்கள் தென்னிந்திய சமையல் கற்றுக் கொண்டார்கள். சுவாமிஜிக்கு பிரியமானதை சமைத்த பரிமாறி அவர் சுவைத்துச் சாப்பிடுவதைப் பார்த்து மகிழ்வார்கள். ராமசுவாமி என்பவர் அமெரிக்கப் பெண்மணிகளுக்கு, தென்னிந்திய சமையலை நன்கு சமைக்க கற்று கொடுத்து விட்டார். சுவாமிஜியின் ஒவ்வொரு வார்த்தையும், செயலும் கண்டு, இவர்கள் அளவற்ற மகிழ்ச்சி பெற்று எல்லாக்காரியங்களையும் அன்பினாலேயே ஆயாசம் இன்றிச் செய்து வந்தார்கள்.

உணவருந்தும் அறையின் மேஜை மேல், பால், வெண்ணெயில் பலவிதம், பலரகஜாம், நெய், தேன், பாதாம், திராட்சை ஆப்பிள் இவ்விதம் யாவையும் பல அழகிய பாத்திரங்களில் எப்போதும் நிறைத்து வைப்பார்கள். அங்குள்ளவர்கள் எந்த நேரத்திலும் எதை வேண்டுமோ அவரவர் விருப்பம்போல், சாப்பிடுவார்கள். சாப்பிடக் கட்டுப்பாடு என்பதே இல்லை. டீ வேண்டுமோ அல்லது புதிய காபி பொடியை, ஒரு நொடியில் தயாரித்து செய்யும் காபி வேண்டுமா? அல்லது பால், பழரசம் வேண்டுமா? அப்பப்பா எதைச் சாப்பிடுவது? எதை விடுவது என்றே நமக்குத் தெரியாது. அவ்வளவு உயர்ந்த ஆகாரம் அனைவருக்கும் கொடுக்கப்பட்டது!

உடலுக்கு, உணவு எவ்வளவு சிறப்பாக இருந்ததோ அவ்விதம் மனதிற்கும், சுவாமிஜியின் போதனைகள் மேன்மையாக இருந்தது. ஒவ்வொருவரும், தாங்கள் பெற்ற, இந்தச் சூழ்நிலையும், போதனையையும் பெரும் பாக்யமாகவே கருதினார்கள். இதுவரை வாழ்க்கையில் தாங்கள் காணாத மகிழ்ச்சி, பெற வேண்டியதைப் பெற்று அடைய வேண்டியதை அடைந்த பேரானந்தம் ஒவ்வொருவர் வாக்கிலும், முகத்திலும் தெரிந்தது.

சுற்றுப்புற ஊர்களில் இருந்து சில இந்தியக் குடும்பத்தினர், அமெரிக்கக் குடும்பத்தினர் அடிக்கடி வந்து சில நாட்கள் தங்கிச் செல்வார்கள். ஏன் எனில் சுவாமிஜியின் போதனையும் அன்பும் இவர்கள் மனதிற்கு அமைதியையும் ஆனந்தத்தையும் அளித்ததினால் சிலர் தங்கள் குடும்பச் சிக்கலை எவ்விதம் தவிர்ப்பது என்பதையும், சிலர் உத்யோகத்தில் ஏற்படும் குழப்பங்களை எவ்விதம் தவிர்ப்பது என்றும், சிலர் வியாபாரத்தில் எவ்விதம் முன்னேறுவது என்றும், இன்னும் எத்தனையோ விதமான சிக்கல்களுக்கு ஆலோசனை கேட்பார்கள். சுவாமிஜியின் ஆலோசனைப் படி நடந்து தங்கள் வாழ்க்கையை மேன்மை உள்ளதாகச் செய்து கொண்டார்கள் எவ்வளவோ மக்கள்.

ஒவ்வொரு மாதத்திலும் கடைசி வாரத்தில் ஓர் கேம்ப் ஏற்படுத்தி, பகவத்கீதாவில் ஓர் அத்யாயம் போதிப்பார். இந்தக் கேம்ப்பிற்கு சுமார் நூற்றி இருபது பேர்கள் வருவார்கள். அமெரிக்க விடுமுறை நாட்களான வேனிற்காலம், கிறிஸ்துமஸ் முதலிய சமயங்களில் தனிப்பட்ட கேம்ப்புகள் நிகழ்த்தினார். இதனால் அனேக மக்கள் பயன் பெற்றார்கள்.

இந்தியக் கலாசாரப்படி பூஜை செய்வதற்காக, இந்தியாவிலிருந்து. நடராஜர் சிலையும், ரிஷிகேஷில் இருந்து ஓர் அழகிய நர்மதேஸ்வரர் சிவலிங்கமும் வரவழைத்தார். காலை, மாலை இருவேளைகளிலும் பூஜை ஆரத்தி; பால், பழம், நெய்வேத்தியம் செய்தார்கள். வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள் முதலிய நாட்களில் ருத்திரம் பாராயணம் செய்தார்கள்.

பம்பாய் சாந்தீபனியில் பயிற்சி பெற்ற ராதா, ராமசுவாமி, கல்யாணி, அன்னபூர்ணா முதலியவர்கள் சுவாமிஜிக்கு உதவியாக இருந்தார்கள். ராமசுவாமி என்பவர் சமஸ்கிருதம்

பரணினிசூத்ரம் வேத அத்யானம் முதலியவைகளைக் கற்றுக் கொடுத்தார் ஆஸ்ரமத்தில் இருந்த ஒவ்வொரு வருடைய தொண்டும் பேருதவியாகவும், பாராட்டத் தக்கதாகவும் இருந்தது. லக்ஷ்மணன் என்ற ஆஸ்திரேலிய பிரம்மச்சாரி, சமஸ்கிருதம் நன்கு கற்றுக் கொண்டார். புருஷசூக்தம் முதலிய வேதடச்சாரணம் பிழை இன்றி ஸ்வரம் தவறாமல் உச்சரிப்பார.அமெரிக்கர்கள் எல்லாம் சமஸ்கிருதத்தில் நல்ல பயிற்சி பெற்றார்கள்.

குரு பூர்ணிமா

ஆடி மாதத்தில் வரும் பௌர்ணமியை, குருபூர்ணிமா அல்லது வியாச பூஜை என்று கூறுவார்கள். சதாசிவனில் இருந்து வியாசர், சங்கரர் முதல் தனக்கு வேதாந்தம் போதிக்கும் குருவரையில், பரம்பரையாக வந்த குருமார்களையும் நினைத்துத் தன் குருவிற்கும் பூஜை செய்யும் முக்கியமான நாள். இந்த குருபூர்ணிமா 1982ம் வருடம் 6ம் தேதி ஜூலை மாதம் வந்தது. அன்றைய தினத்தை குருஸ்துதிகள் கூறி, பாதபூஜை செய்து வர்ண, வர்ண மலர்மாலைகளை அணிவித்து சுவாமிஜியை பணிவன்புடன் தொழுதார்கள். அன்று நடராஜருக்கு பூஜை அபிஷேகம் செய்தார்கள். மாலையில் பரதநாட்டிய நிகழ்ச்சி, எல்லோர் உள்ளத்திலும் பூர்ண மகிழ்ச்சி, ருசிகரமான சாப்பாடு, அன்று இரவு சுவாமிஜியை சுற்றி அனைவரும் அமர்ந்து ஆனந்தமாயப் பேசிக்கொண்டு இருந்தார்கள். பூர்ண சந்திரனின் அழகில் பிரகாசித்த குருகுலம். [illegible] சந்திரனின் அழகில் பிரகாசித்த குருகுலம் நம் பண்[illegible] கால் ரிஷி சாந்தீபனி மஹரிஷியையே ஞாப[illegible] போல் இருந்தது!

இருந்த

ஜூலை மா[illegible] பதினைந்தாம் தேதி சாந்தீபனி குரு குலப் பயிற்சி முடிவடைந்தது. பிரிவுபசார நிகழ்ச்சி ஏற்பா

டாயிற்று பெரிய துணியால் பந்தற் போட்டு, அழகிய புஷ்பங்களால் அலங்காரம் செய்தார்கள். கலிபோர்னியா, நியூயார்க், ஸான்பிரான்சிஸ்கோ முதலிய இடங்களிலிருந்து அனேகர், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்திருந் தார்கள். பயிற்சி பெற்ற பிரம்மச்சாரிகள் அனைவருக்கும் சுவாமிஜி சான்றுப்பத்திரிகை அளித்தார். இதன் பின்பு சில அறிவுரைகள் கூறினார்

நீங்கள் எதை போதிக்கின்றீர்களோ அதன் அர்த்தம் உங்களுக்கு நன்கு தெரிய வேண்டும். அப்போது தான் உங்கள் போதனை கேட்பவர்களுக்கு மனத்தெளிவையும், ஆனந்தத் தையும் கொடுக்கும். (Hunter is around be careful) வேடன் சுற்றிக் கொண்டு இருக்கின்றான் ஜாக்கிரதை என்று கிளிப்பிள்ளைக்கு கற்றுக்கொடுத்தால் , கிளிப்பிள்ளை அதன் அர்ததம் தெரியாமல் வளையில் அகப்பட்டுக் கொண்ட பின்பும் (Hunter is around be careful) வேடன் சுற்றிக் கொ்ணடு இருக்கின்றான் ஜாக்கிரதை என்று வளைக் குள்ளிருந்தே சப்தமிடுவதுபோல் நீங்கள் வேதாந்த வார்த்தைகளையும், கருத்துகளையும் தெரிந்து கொள்ளாமல் போதனை செய்யக்கூடாது. மற்றவர்களுக்கு ஏற்படும் மனக் குழப்பத்தை அகற்றி மனத்தெளிவு தரவேண்டும், உயர்வு, தாழ்வு மனப்பான்மையை அகற்ற வேண்டும்.

நீங்கள் போதிப்பது உங்கள் நன்மைக்காவே தத்கதனம், தத்சிந்தனம், தத்பிரபோதனம் என்பது பிரம்மாப்யாசம். அதாவது பிரம்மத்தையே சிந்திப்பது, பிரம்மத்தைப் பற்றி பேசுவது பிரமத்தைப் பற்றியே போதிப்பது, என்பதாகும். இவ்விதம் செய்வதினால் உங்கள் மனம் [illegible]ளிவுபெற்று ஞானம் திடமாகும். உங்கள் நன்[illegible]ற ராதா [illegible]ட்ட அவகாசமாக எடுத்துக் கொள்ளவே[illegible], உங்களைப் பெரிய போதகர்களாய் நினைத்துக் கொள்ளக்கூடாது. [illegible]ங்கள் சேவை உண்மை நேர்மை உடையதானால்,

உங்களுக்கு வேண்டிய போது உதவி கிடைக்கும் உங்களிடம் மக்களுக்கு நல்ல மதிப்புண்டாகும் என்று அறிவுரை கூறினார்.

சின்மயா மிஷனிலிருந்து விலகிக்கொண்டது

முப்பது வருஷமாய் ஒரே நோக்கத்திற்காக சுவாமி சின்மயானந்தா அவர்களுடன் தொண்டு செய்து வந்தார் இவ்விதம் தொண்டு செய்யும் காலத்தில், ஒவ்வொரு இடத்திலும், இவருக்குப் போதிய வசதிகள் இல்லாமல், கருத்து வேற்றுமைகளும், கஷ்டங்களும் உண்டு. இவைகளைப் பொருட்படுத்தாமல், எல்லோரிடமும் வேற்றுமை பாராட்டாமல் அன்புடன் தன் தொண்டை நடத்திக் கொண்டு வந்தார்.

ஒவ்வொரு ஊரிலும், இரு சுவாமிஜிகளுக்குமிடையில் உயர்வு, தாழ்வு பார்ப்பவர்கள் கருத்து வேற்றுமை கொண்டவர்கள், சிலர் இருந்தார்கள். சுவாமிஜி இவைகளைப் பாராட்டாமல் மௌனமாகவே தன்னை விரும்பாதவர்களையும் தன் அருகில் அழைத்து அன்பு காட்டி, அவர்கள் உள்ளத்தில் எழும் பேதங்கள் உண்மையானது அல்ல என்று எடுத்துக்காட்டி, அவர்களையும் தன்னுடனே வைத்துக் கொண்டு சின்மயா மிஷன் நோக்கத்தையே செயலாக்கிக் கொண்டு வந்தார். எதிர்ப்புகளை மனம் கோணாமல் ஏற்றுக்கொண்டு, எதிர்ப்பவர்களையும் தனக்குரியவனே என்ற பாவனையோடு எல்லாவித கார்யங்களையும் சோர்வின்றிச் செய்துவந்தார்.

இவ்விதம் இருந்த போதிலும், அடிப்படையாக போதனா முறையிலும் சாஸ்திர திருஷ்டியிலும், வேற்றுமைகள் இருக்கத்தான் இருந்தன. இந்த வேற்றுமைகள் நாளடையில் பக்தர்களிடையே மனசஞ்சலத்தை உண்டாக்கியது. அந்த

சஞ்சலம் மிஷன் கார்யங்களைப் பாதிக்கத் தொடங்கியது. அதனால் கலிபோர்னியாவில் நிகழ்ந்த கொண்டிருந்த பிரம்மச்சர்யப் பயிற்சி முடிந்தவுடன், சுவாமிஜி சின்மயா மிஷனிலிருந்து விலகிக் கொண்டார். விலகுவதற்கு முன்பு கடிதங்கள் மூலமும், நேரிடைப் பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் பிரிவைத்தடுக்க எவ்வளவோ முயற்சித்தும் ஒன்றும் பயனளிக்கவில்லை. ஆதலால் ஒரு Board Meet -ingகில் தான் விலகிக்கொள்வதாக, பெருந்தன்மையோடு தானே தெரிவித்து விடுதலைப் பத்திரத்தைக் கொடுத்தார். சுவாமி சின்மயானந்தரும் அதை ஏற்றுக்கொண்டார்.

பெரிய கஷ்டங்களும் மாற்றங்களும் வாழ்க்கையில் ஏற்படும் போதெல்லாம், சுருதி வாக்யங்களையே, நினைவு கூர்வதும், அதன்படி செயல்படுவதும் இயல்பாக உடையவர். முன்பு ஓர் சமயம் ரிஷிகேஷில் தங்கி இருந்த போது தன் குடிலில் தீப்பற்றிக் கொண்டதைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்துக்கொண்டே கௌடீன வந்த கலு பாக்யவந்தஷா என்று கூறி வாய்விட்டுச் சிரித்தார், பூர்ண சன்யாச லக்ஷணத்தையுடைய சுவாமிஜி, இன்று விடு பட்டவனுக்கு விடுதலை என்று கூறினார்.

அன்று பிரம்மச்சாரிகளுக்குப் பாடம் போதிக்க வந்து அமர்ந்த போது சுவாமிஜியின் முகத்தில் எப்போதும் உள்ள சாந்தமே பிரகாசித்தது! மனம் சலனமற்று இருந்தது தான் பூர்ண துறவி என்பதின் அழகை, அவர் வார்த்தைகளால் கூறாவிடிலும், மற்றவர்களால் சுவாமிஜியிடம் உள்ள பூர்ண வைராக்கியத்தை உணரமுடிந்தது. அச்சமயம் சுவாமிஜி, பிரம்மச்சாரிகளுக்கு அரிச்சந்திரன் கதையைக் கூறினார். அதைக் கேட்டவர்களுக்கு, அரிச்சந்திரன் போன்ற தன் நிலையைக் கூறாமல் கூறி தான் சத்யத்திற்காகவே பாடுபடும் நிலையை அறிவுறத்தியது போல் இருந்தது.

நாட்டவர் பழிப்புரையை, எவ்வித மனக்கோணலும் இல்லாமல் ஆபரணமாய் அணிந்து கொண்டதாய், மாணிக்கவாசகர் பாடியது போல் இருந்தது சுவாமிஜியின் போக்கு. ஞானிகளுக்கும் இவ்விதச் சோதனைகள் வருவது சகஜம் போலும் முப்பது வருஷகாலமாக, இரவு, பகல் போல் மாறி மாறி வந்து கொண்டிருந்த மாற்றங்கள், தூற்றுதல் சுக துக்க அனுபவங்கள், இகழ்ச்சி, புகழ்ச்சி, போற்றுதல் உங்கள் பேதங்கள் யாவும் திருஷ்டி சிருஷ்டியே எனக்கு பேதம் இல்லை என்று எதிலும், எவ்வித பாதிப்பும் இல்லாமல் தன் சேவையிலேயே காலத்தைக் கடத்திவிட்டார்.

மறுதினம் காலையில் சில அன்பர்கள் கேட்க தான் செய்துவந்த ஞான போதனையைத் தொடர்ந்து செய்யப் போவதாய்க் கூறினார்.

''ஆர்ஷ வித்யா பீடம்''

ஆர்ஷ வித்யா என்றால் ரிஷிகளின் வித்தை என்று அர்த்தம். ஆர்ஷ என்றால் ரிஷிகள். வித்தை என்றால் ஞானம் ரிஷிகள் அந்த ஞானம், பீடம் என்றால் இருப்பிடம் ரிஷிகள் போதித்த ஞானத்திற்கு இருப்பிடம், ரிஷி என்றால் புலன்கள். புலன்களை வெல்லும் ஞானம் என்றும் இது கூறப்படும், புலன் வெல்லும் கதை சொல்லப் பிறந்தான், எம்பெருமான் என்று ஆரம்பத்தில் எழுதப்பட்ட, நாலடியின் கருத்து இச்சமயத்தில் பொருத்தமாய்விட்டது.

எப்போதுமே சுவாமிஜி, ஓர் விஷயத்தை ஆணவம் இல்லாமல் கூறுவார். நாம் இந்த உலகத்தில் எந்தப் புதிய ஞானத்தையும், கண்டு பிடிப்பது இல்லை. யாவும் வேதத்தில் உள்ளது. ரிஷிகளால் கூறப்பட்ட உண்மைகளே. இவைகளை நாம் புரிந்த கொண்டு பிறருக்குப் போதிப்பதற்கே அபார திறமை தேவையாக உள்ளது. இந்தப் பேருண்மைகளை

அறிவதே நாம் செய்ய வேண்டியது. இதில் நாம் புதியதாக ஏதும் செய்வதற்கோ அல்லது வேதத்தை மேன்மை செய்வதற்கோ ஒன்றும் இல்லை. வேதத்தை உள்ளபடி உணர்ந்த போதிப்பதே நாம் செய்யும் பேருதவி என்று தற்பெருமை இல்லாமல் கூறுவார். இவ்விதம் தற்பெருமை அற்றவர், தத்வபோதனையை ஆர்ஷவித்யா பீடம் என்ற பெயரால் போதிப்பதையே தன் செயலாக நிச்சயித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்.

இதன் பின்பு அமெரிக்கா தேசம் முழுவதும் சுற்றி யக்ஞாக்கள் இரண்டு மாதங்கள் வரை செய்துவிட்டு, செப்டம்பர் மாதம் முப்பதாம் தேதி டில்லி, விமான நிலையத்திற்கு பகல் பன்னிரெண்டு மணிக்கு வந்து சேர்ந்தார். கும்பகோணம், சென்னை, ஐதராபாத், பம்பாய், டில்லி முதலிய ஊர்களிலிருந்து பக்தர்கள் விமான நிலையத்திற்கு சுவாமிஜியை வரவேற்பதற்காக வந்திருந்தார்கள். டில்லி அன்பர்கள் பிரம்மச்சாரிகள் அனைவரும் மாலைகள் இட்டு, மலர்கள் தூவி வரவேற்றார்கள். டில்லி அன்பர் சுவாமிஜியை விமான நிலையத்திலிருந்து பிஷைக்கு அழைத்துச் சென்றார். அங்கு பிக்ஷை முடித்துக்கொண்டு அழைத்துச் சென்றார். அங்கு பிக்ஷை முடித்துக்கொண்டு ரிஷிகேஷ் ஆஸ்ரமம் வந்து சேர்வதற்கு இரவு எட்டு மணியாகி விட்டது.

தோரணங்கள் கட்டி மேளவாதியத்துடன் சுவாமிஜியை பல ஊர்களில் இருந்து வந்தவர்களும், ஆஸ்ரம வாசிகளும் வரவேற்றார்கள். தென்னிந்திய ஏலக்காய் வியாபாரி ஒருவர் ஏலக்காயில் சரிகை வைத்துத் தயார் செய்த அழகியமாலையை அணிவித்தார். பிரகாசமான சுவாமிஜி திருமுகம், பூர்ணசந்திரன் போல் மேலும் பிரகாசித்தது. ஆஸ்ரமம் பூராகவும் ஒளிவீச ஆரம்பித்தது. அன்பும் பரிவும் கலந்த வார்த்தைகளால் அங்கு வந்திருந்த அன்பர்

ஒவ்வொருவரையும் விசார்த்தார். ஒவ்வொருவரும் இவர் என் தெய்வம் என் தெய்வம் என்று கொண்டாடும் வகையில், அந்த் காட்சி என்று மறக்க முடியாததாக இருந்தது.

மறுதினம் ஹரி துவாரத்தில் இருந்த சுவாமி தயானந்தரை ஹரித்துவாரத்தில் தர்சனம், செய்தார். அவருடைய பாடம் கேட்டவராயிருந்தாலும், ஸ்வாமிஜி யின் பால் அவருக்கு மதிப்பும் உண்டு. தன்னிடம் வரும் சில சிஷ்யர்களை சுவாமி தயானந்தர் உயர்ந்த சாது என்று கூறி சுவாமிஜியிடம் அனுப்புவார். சுவாமிஜியும் தன் சீடர்களை அவரிடம் அனுப்புவார்.

சன்யாச தீக்ஷை

மூன்றாம் தேதி சரத் பூர்ணிமா அன்று அனந்த சைதன்யா என்ற பிரம்மச்சாரிக்கும், ஆனந்த சைதன்யா என்ற பிரம்மச்சாரிக்கும், சாஸ்திர முறைப்படி ஹோமங்கள் வளர்த்து, கங்கா ஸ்நானம் செய்வித்து கங்காதீரத்திரல் சன்யாச தீக்ஷை அளித்தார். அன்று இரவெல்லாம் உறங்காமல் மந்திரங்கள் ஜெபித்துக் கொண்டு, அக்னியை வளர்த்துக்கொண்டு இரண்டு பிரம்மச்சாரிகளும், பக்தி சிரத்தையுடன் இருந்து சன்யாசம் ஏற்றுக் கொண்ட காட்சி மிக அழகாக இருந்தது. சன்யாசம் ஏற்றுக் கொண்ட சிஷ்யர்கள் சுவாமிஜிக்கு பாத பூஜை செய்து பின்பு ஆஸ்ரமத்திற்கு வந்திருந்த நூற்றுக்கணக்கான அன்பர் களுடன் பிக்ஷை அருந்தினார்கள். இச்செயல் மூலம் நம் சாஸ்திரத்தின் சம்பிரதாயத்தின் அழகும், உயர்வும் மேலும் சோபை பெற்று விளங்கிற்று. இந்தச் சன்யாச தீக்ஷை சந்தர்ப்பத்தில், பல நகரங்களில் சத்சங்கங்கள் நிகழ்த்திக் கொண்டிருந்த பிரம்மசாரிகள் எல்லோரும் வந்திருந்தார்கள்.

சுவாமிஜி அவர்கள் எல்லா பிரம்மச்சாரிகளுக்கும் ஓர் கடிதம் எழுதினார். நீங்கள் சின்மயாமிஷன் சேவகர்களாயும் போதகர்களாயும் தொடர்ந்து வேலை செய்யுங்கள். நான் சின்மயாமிஷனிலிருந்து விலகிக் கொண்டேன் என்பதற்காக நீங்கள் விலகவேண்டாம். நீங்கள் ரிஷி கேஷ் வந்தால் எக்காரணத்தால், எந்த வித சூழ்நிலை ஏற்பட்டதினால், நான் சின்மயாமிஷனிலிருந்து விலகிக் கொண்டேன், என்பதை உங்களுக்குக் கூறுகின்றேன். அதனால் உங்கள் மனதில் ஏற்பட்டிருக்கும் குழப்பம், விலகும் அதன் பின்பு நீங்கள் உங்கள் கடமையை நன்கு செய்ய முடியும் இதனால் உங்களுக்கு வேண்டிய இடத்திலிருந்தே சேவை செய்யலாம்.

நீங்கள் என்னிடம் சாஸ்திரப் பயிற்சி பெற்றவர்கள் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு, தன் குடும்ப சம்பிரதா யத்தை அளிப்பது போல், குரு சிஷ்யனுக்கு இந்த சாஸ்திர சம்பிரதாயத்தை கொடுப்பது. ஒவ்வொருவரும் இந்த சம்பிரதாயம் விட்டுப் போகாமல், தன்வேலைகளைக் சுதந்திரமாய் கட்டுப்பாடு இன்றிச் செய்து கொள்வதற்கும் சௌகரியமாக இருக்கும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த அறிக்கையின்படி சுவாமிஜியைச் சந்தித்து, அவர் ஆலோசனையைக் கேட்பதற்காக பிரம்மச்சாரிகள் ரிஷிகேஷிற்கு வந்திருந்தார்கள். சுவாமிஜி பிரம்மச்சாரிகள் அனைவருடனும் பேசி இந்தப் பிரிவு ஏற்பட்டதற்குரிய சில காரணங்களைக் கூறி அவர்களைத் தன்னைப் புரிந்து கொள்ள வைத்தார். அதன் பின்பு பிரம்மச்சாரிகளிடம் எனக்கென்று தனி ஆர்கனைசேஷன் இல்லை. ஆதலால் நீங்கள், உங்கள் விருப்பப்படி உங்கள் சேவையைச் சுதந்திரமாகச் செய்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

அதன் பின்பு பிரம்மச்சாரிகள் சிலர் சின்மாயமிஷனில் சேவை செய்யச் சென்றார்கள். சில பிரம்மச்சாரிகள்

முன்பே தாங்கள் சேவை செய்த கொண்டிருந்த நகரங்களில் சுவாமிஜியின் ஆலோசனையும், உதவியும் பெற்று சுதந்திரமாக வேலை செய்வதற்குத் தயாரானார்கள்.

''கங்காதரேஸ்வரா டிரஸ்ட்''

சுவாமிஜி சின்மயா மிஷனிலிருந்து விலகிக் கொண்டதும். எவ்வித பக்க பலமும் இல்லாததினால். புதியதாய் ஆஸ்ரமம் ஆரம்பித்து நடத்துவதற்குப் பண நெருக்கடி ஏற்பட்டது. உடனே சுவாமிஜியின் சிஷ்யர் ஹைதராபாத் திரு. சண்முகம் என்பவர் முன் நின்று பணம் திரட்டும் வேலையை ஆரம்பித்தார். சுவாமி சுத்தானந்தாவின் உதவியுடன், ரிஷிகேஷ் ஆஸ்ரமத்தைப் பலர் வந்து தங்கும் வசதி உள்ளதாக மாற்றினார். சில அன்பர்கள் அறைகள் கட்டுவதாக ஏற்றுக்கொண்டார்கள். சில அன்பர்கள் பத்தாயிரம் பத்தாயிரம் என்று கொடுத்தார்கள். ஆஸ்ரமத்திற்கு வந்திருந்த பக்தர்கள் அனைவரும் தங்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தாற்போல் நிதி உதவி செய்தார்கள் முதலில் இருந்த ''குடியா'' கோவில் நிலத்தில் இருந்து அதைப் பெரியதாய் ஆஸ்ரமம் செய்ய அன்பர்கள் பண வசதி செய்து கங்காதரேஸ்வரா டிரஸ்டு என்று சுவாமி கங்காதரர் பெயரில் ரிஜிஸ்தர் செய்தார்கள். ஆஸ்ரமத்திற்கு ''ஆர்ஷ வித்யா பீடம்'' என்று பெயர் வைக்கப்பட்டது.

இவ்வித திடீர் மாற்றத்தாலும், பிரிவினையினாலும் பிரம்மச்சாரிகள் நிலைத்து இருப்பதற்கு வேண்டிய இடவசதி பண வசதி முதலியவைகளுக்குப் பலவித இடையூறுகள் ஏற்பட்டன சுவாமிஜி பிரம்மசாரிகளுக்கு மனோபலத்தைக் கொடுத்தார். ஒவ்வொரு நகரத்திற்கும் சென்று யக்ஞாக்கள் செய்து, அங்கு வரும் யக்ஞ காணிக்கையை பிரம்மச்சாரிகளுக்குக் கொடுத்தார். மேலும் பல அன்பர்கள் உதவியால், இவர்கள் ஆஸ்ரமம் அமைத்துக் கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். இரவு பகல் ஓயாமல்

தன் சிஷ்யர்கள் நலனுக்காகப் பாடுபட்டார். இவ்விதம் ஒன்பதே மாதத்தில் இந்தியா எங்கும் உள்ள நகரங்களில் இருப்பவர்கள் அனைவருக்கும், சுதந்திரமாய் வாழ வழி செய்து நிலை நிறுத்தினார். பல எதிர்ப்புகளுடன் போராடி வெற்றிபெற்றால் இன்று ஒவ்வொரு நகரத்திலும் உள்ள பிரம்மச்சாரிகள் சன்யாச தீக்ஷை, சுவாமிஜியால் செய்விக்கப்பட்டு பெரிய, பெரிய ஆஸ்ரமங்கள் அமைத்துக் கொண்டு, பல பள்ளிகளும், கீதா உபநிஷத் போதனைகளும் திறம்படச் செய்து வருகின்றார்கள்.

''சில குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்''

சுலபா (சூசன்)

சூசன் என்பவர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இளம் பெண். இவருக்குத் தாய், தந்தை உடன் பிறந்தவர்கள் என்று யாரும் இல்லை. அன்பு அரவணைப்பு இல்லாத வாழ்க்கையில் தோல்விபெற்ற இவருக்கு, வாழ்க்கையின் நோக்கம் என்ன? ஏன் வாழ வேண்டும் எப்படி வாழ்நாளைக் கழிப்பது என்று தெரியவில்லை? வாழ வழி காட்டு பவரைத்தேடி அலைந்து கொணடு இருந்தார். ஆத்ம ஞானம்தான் சாந்தி தரும் என்கின்றார்களே, இந்த ஆத்மஞானத்தை யார் கொடுப்பார்கள் என்று தெரியாமல் சிங்கபூர், மலேசியா, தாய்லாந்து, பர்மா, லங்கா முதலிய இடங்களைச் சுற்றி விட்டு இந்தியாவிற்கு வந்தார் பல சாதுக்களைச் சந்தித்து தனக்குள்ள சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள முயற்சித்தார். சென்ற இடம் எல்லாம் சூசனுக்குத் திருப்தியான பதில் கிடைக்கவில்லை.

திருப்பதிக்குச்சென்று வெங்கடேசப் பெருமானைத் தரிசனம் செய்து கொண்டு வெளியில் வந்தபோது,

சுவாமிஜியின் ''கீதா ஞான யக்ஞா'' விளம்பரங்கள் இவர் கண்களில்பட்டது. அச்சமயம் சுவாமிஜியின் யக்ஞா அங்கு நிகழ்ந்து கொண்டிருந்தது. சூசன் விளம்பரத்தில் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று சுவாமிஜியைச் சந்தித்து, தன் மனதிலுள்ள சில சந்தேகங்களைக் கேட்டார். சுவாமிஜி கூறிய பதில் திருப்தியாக இருந்தது. மேலும் அவளுக்கு சுவாமிஜியின் கருணையும், அன்பும் நிறைந்த வார்த்தைகளைக் கேட்டு அவர் மேல் தன்னை அறியாத பக்தி ஏற்பட்டது. தான் தேடிய உயர்ந்த உண்மையை, இவரே காட்டுவார் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. சூசன் தன் எதிர்காலத்தை தயாநிதியிடம் ஒப்படைத்து விட்டாள் அவரையே சரணாகதி அடைவதாகவும், தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்றும் மனமுருகி வேண்டிக் கொண்டாள்.

சுவாமிஜியும் அவளுக்கு ஆறுதல் கூறினார். தன்னுடன் தங்கி, தான் செய்யும் யக்ஞங்களைக் கேட்கவும், ஏற்பாடுகள் செய்தார். அன்னையிலும் இனிய அன்பைப் பெற்று, அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாள்.

சூசன் உள்ளத்தில் உள்ள ஞானக்கனலை வளர்த்துப் பெரியதாக்க சுவாமிஜி எண்ணம் கொண்டு, சாந்திபனியில் இரண்டாவது பிரம்மச்சாரிகள் பயிற்சியில் சேர்த்துக் கொண்டார். எல்லா பிரம்மச்சாரிகளுடனும் சேர்ந்து ஞான போதனையைக் கேட்டு வந்தாள். சமஸ்கிருதம் நன்றாய்படிக்க எழுதக் கற்றுக் கொண்டாள் தனக்கு ஏற்படும் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு செய்து கொள்வாள்.

இந்தப் பரந்த உலகில், எனக்கு உறவு என்பது சுவாமிஜி ஒருவர்தான். என் வாழ்க்கையை வளம் செய்து வழிகாட்டினார் என்று மனமுவந்து அன்புடன் கூறுவாள்

சூசன். இரண்டரை வருஷம் வேதாந்த சிரவணம் முடிந்த பின்பு, சூசன் ''சுலபா'' என்ற நாமம் சூட்டப்பெற்று பிரம்மசாரிணியானாள்.

பிறகு ஆஸ்திரேலியா சென்று அங்குள்ளவர்களுக்குத் தான் சுவாமிஜியிடம் கற்றுக்கொண்ட வேதாந்தத்தைப் போதித்து வருகின்றாள் சுலபாவின் எளிய போதனைகளைக் கேட்டு சந்தோஷித்த மாணவிகள், இவ்வளவு நன்கு பயிற்சி அளித்த சுவாமிஜியைப் பற்றிக்கேட்டு சுவாமிஜியின், தரிசனம் பெற ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியா வந்தார்கள். சுவாமிஜியைத்தரிசித்து அவர் யக்ஞாக்களைக் கேட்டதன் பின்பு ஆஸ்திரேலியாவிலும் கீதாயக்ஞா செய்ய ஏற்பாடுகள் செய்தார்கள்.

அயல் நாட்டினர் என்றோ, தனக்குப் பழக்கம் இல்லாதவர்கள் என்றோ பேதம் இல்லாமல் தான் போதிக்கும் ஞானத்தின் சொரூபமாகவே திகழ்பவர் சுவாமிஜி என்பதை இச்செயல் காட்டுகின்றனது.

சுலபாவைப்போல் எத்தனையோ மெலிந்த பெண்களுக்கும், ஆண்களுக்கும் வாழ்க்கையைப் பயனுடையதாகச் செய்துள்ளார். அவைகளை எழுதிமுடியாது.

சுலபா சுவாமிஜியின் தனிப்பெரும் குணத்தைக்கூறி எப்போதும் ஆனந்தப்படுவாள்.

''ஓர் ஏழைத்தையற்காரனுக்குச் செய்த உதவி''

பூனாவில் சுவாமிஜியின் யக்ஞா நிகழ்ந்து கொண்டிருந்தது. ஓர் தையற்காரன், சுவாமிஜியைத் தரிசித்துக் கொள்ள வேண்டும் என்று மிகவும் ஆவலுடன் அங்குள்ள சில பக்தர்களை வேண்டிக்கொண்டான். சுவாமிஜியைத் தரிசிக்க ஓர் பக்தர் உதவி செய்தார்.

சுவாமிஜியின் பாதங்களில் விழுந்து சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்துகொண்டு சுவாமிஜி தாங்கள் தான் என் கஷ்டத்தைத் தீர்த்து வைக்க வேண்டும்'' நான் கடுமையான வறுமையால் வருந்துகிறேன் உண்ண உணவும் இல்லை. இருக்க இடமும் இல்லை. குழந்தைகளைக் காப்பாற்றவும் வழி இல்லை என்று முறை இட்டான் தன் குறைகளைத் தீர்த்து வைக்கும் பெருமானாக அவன் மனதிற்குத் தோன்றியது போலும் தாங்கள் தான் என்கஷ்டம் தீர வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

அப்போது சுவாமிஜி நீ என்ன வேலை செய்கின்றாய்? ஏன் உனக்கு வருமானம் போதவில்லை என்று கேட்டார் அதற்குத் தையற்காரன் நான் கூலிக்கு தினம் ரெக்சின் பைகள், மணிபர்சுகள் தைத்துக் கொடுக்கின்றேன். அதற்கு அவர்கள் தினக் கூலி கொடுக்கின்றார்கள். அது எனக்குப் போத வில்லை. எனக்கு இரண்டு மனைவிமார்கள் இருக்கின்றார்கள் என்றான்.

இரு மனைவிகளை வைத்துக்கொண்டு கூலிக்கு தைத்துக் கொண்டு இருந்தால் உன் கஷ்டம் எவ்விதம் தீரும்? எவ்விதம் தீர்க்க முடியும்? ஏன் நீயே மிஷின் வாங்கி வைத்துக் கொண்டு தைத்தால், அதிகப்பணம் வராதா? என்று சுவாமிஜி கேட்டார்.

பணம் வரும், ஆனால் மிஷின் வாங்கப்பணம் வேண்டும் ரெக்சின் வாங்கவேண்டும் அதற்குத் தேவையான சாமான்களை வாங்க என்னிடம் பணம் இல்லை பைகளும், மணிபர்சுகளும் தைத்துக்கொடுத்தால் எனக்கு லாபம் தான் அதற்கு வேண்டிய மூலதனம் என்னிடம் இல்லையே, என்ன செய்வது என்று கூறினான் ''சரி பிறகு பார்க்கலாம்'' என்று கூறினார் சுவாமிஜி.''

தன் குறைகளைத் தீர்த்துவைப்பார் சுவாமிஜி, என்று நம்பிக்கையுடன் தொடர்ந்து வந்து தரிசித்துச்

சென்றான். சுவாமிஜியும் அவன் கஷ்டத்தை எவ்விதம் தீர்க்கலாம் என்று யோசித்து, நான் கூறுவதுபோல் நீ செய்கின்றாயா என்று கேட்டார். அவனும் சுவாமிஜி தாங்கள் எவ்விதம் கூறுகின்றீரோ அவ்விதம் செய்கின்றேன். உங்கள் தயை என்று கூறினான். அப்போது சுவாமிஜி தன் அருகில் அமர்ந்திருந்த சுவாமி பிரசாந்தானந்தா அவர்களை அழைத்து, இவர் தைப்பதற்கு மிஷினும், இன்னும் வேண்டிய எல்லா சாமான்களையும் வாங்கிக் கொடுங்கள் என்று கூறினார். அவரும் தையற்காரனை அழைத்துச்சென்று அவனுக்கு வேண்டிய எல்லா சாமான்களும், தையல் மிஷினும் வாங்கிக்கொடுத்தார்.

தையற்காரனுக்கு ஒரே ஆனந்தம்! சுவாமிஜி கூறியது போல், அவன் சொந்தமாகப் பைகள் தைத்து விற்று நல்ல லாபம் பெற்றான் சுவாமிஜி அடுத்த முறை பூனா சென்ற போது, அங்கு தரிசனத்திற்கு வந்திருந்தவர் களில் தையற்காரன் இருப்பதைப்பார்த்து, ஆச்சரியத்துடன் என்ன சௌக்யமா என்று கேட்டார்?

அவனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவே இல்லை. இப்போது நான் நிறைய லாபம் சம்பாதிக்கின்றேன் என் இரு குடும்பங்களையும் காப்பாற்ற வேண்டிய அளவு வருமானம் எனக்குக் கிடைக்கின்றது என்று மகிழ்ச்சி யுடன் கூறி சுவாமிஜிக்கு மாலை இட்டு நமஸ் கரித்துக் கொண்டான். ஒரு கஷ்டத்திற்கு எவ்விதம் உதவிசெய்தால் தீரும், அந்த உதவி அவர்களுக்கு நிரந் தரமா இருக்க என்ன வழி உண்டு என்று ஆலோசித்துச் செய்வதில் கைதேர்ந்தவர். தனக்கு வேண்டியவர் வேண்டாதவர் ஏழை, பணக்காரன் என்று வேறுபாடு இன்றி எல்லோரிடமும் ஒரே விதம் அன்பாய் நடந்துக் கொள்ளுவார் ''ஆரவாரமான சபையில்' பேசக்கூடியவர் நூற்றுக்கு ஒருவர்தாம் கல்வி மான்களாக விளங்கக்கூடியவர்

ஆயிரத்திற்கு ஒருவர்தாம் வார்த்தைகளை அளந்து உபயோகிக்கக் கூடியவர் பதினாயிரத்திற்கு ஒருவர் தான். ஆனால் தாராள மனப்பான்மை உள்ள வள்ளலாய் விளங்கக்கூடியவர் கோடி பேருக்கு ஒருவர்தாம், என்று ஔவையார் கூறியது சுவாமிஜிக்குத்தான் பொருந்தும். மேலும் ஔவையார் கூறிய சகல குணங்களும் சுவாமிஜி யிடம் பொருந்தி இருந்தன.

தையற்காரனுக்கு உதவியதுபோல், எத்தனையோ பேர்களுக்குச் செய்துள்ளார். அவற்றை சுவாமிஜி வெளியில் கூறுவது இல்லை. ஆகையால் நமக்கு அனேக விஷயங்கள் தெரியாது. ஆனாலும் பயன் பெற்ற சிலர் தாங்களாகவே சுவாமிஜியின் தயைபற்றிக் கூறுவார்கள். இதுபோல் எவ்வளவோ உதவிகள், அவைகளை எல்லாம் குறிப்பிட ஏடு போதாது.

''சொல் மாறாமை''

ஜாதி, நீதி, குலம் வேற்றுமை பாராமல், அன்பும் பண்பும் உள்ளவர்களிடம் சுவாமிஜி காட்டும் மரியாதை போற்று தலுக்குரியது. பத்து வருடங்களுக்கு முன்பு, தான் ஓர் வெள்ளை வேஷ்டி சாதுவை வாளமர் கோட்டை என்ற கிராமத்தில், இருப்பவரைச் சந்தித்தார். சேவை மனப் பான்மையும், பக்தியும் உடையவர் காத்தையா சுவாமிகள்.

சுவாமிஜியைக் கண்டவுடன், பரமேஸ்வரன் தரிசனம் கூட பெற்று விடலாம். ஆனால் ஓர் பிரம்ம ஞானியைத தரிசிக்க முடியாதுஇன்று நான் என்ன பாக்கியம் செய்தேன்! ஞானச் சுடரான இந்த மஹாத்மாவை தரிசனம் செய்து கொள்வதற்கு என்று அன்புததும்பதக்கூறி, பக்தியுடன் வரவேற்று பாதபூஜை செய்து மகிழ்ந்தார்.

காத்தையா சுவாமி, பிறர் உதவியின்றித்தான் ஒருவனாகவே பணம் வசூலித்து, சந்திரேஸ்வரர் கோவிலைக் கட்டிக்கொண்டு வருவதுபற்றிக் கூறி கோவிலில் நடந்து

வரும், கட்டிட வேலைகளைக் காட்டி கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்று கூறினார். இவர் ராமலிங்க சுவாமிகளின் பக்தர். பக்தியும் உண்மையும் யாரிடம், உள்ளதோ அவர்களுக்கு, சுவாமிஜி, மிக முக்கியத்துவமும் மரியாதையும் கொடுப்பார். இவர் அன்பைக் கண்டு மகிழ்ந்த சுவாமிஜி, அன்று இந்தக் கோவில் கும்பாபிஷேகத்தை, நானே அருகில் இருந்து நடத்தி வைக்கிறேன் என்று கூறினார். இவ்வார்த்தை கூறி பத்து வருடங்கள் ஓடிவிட்டன.

சுவாமிஜி இந்தியாவில் இருக்கும்போதே, காத்தையா சுவாமிகள் கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்று இரண்டு முறை நாள் குறிப்பிட்டார். ஆனால் அவர் குறிப்பிட்ட தேதியில் கும்பாபிஷேகம் செய்யமுடியவில்லை பல காரணங்களினால் இதனால் சுவாமிஜி அமெரிக்கா சென்றுவிட்டார் இதன் பின்பு இரண்டு மாதங்கள் கழித்து கும்பாபிஷேகம் செய்யப்போவதாய் காத்தையா சுவாமிகள் கூறினார். சுவாமிஜி அன்று தான் கொடுத்த வாக்கை, மாறாமல், கும்பாபிஷேகத்திற்கு அமெரிக்காவில் தனக் கிருந்த அவ்வளவு வேலைகளையும் விட்டுவிட்டு, சரீரக் கஷ்டம், பணக்கஷ்டம் என்று எதையும் பொருட்படுத்தாமல் தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றி வைக்க, காத்தையா சுவாமிகளுடன் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டார். அன்பும், பக்தியும் உடையவர்கள் செயலுக்கு சுவாமிஜி மேலும் மேலும் அன்பும் ஆதரவும் கொடுத்துப் பாராட்டும் பெரும் பண்பு இதனால் விளங்குகின்றது.

''மஞ்சக்குடியில் சிவன் கோவில் கும்பாபிஷேகம்''

சுவாமிஜி சிறுவயதில் பூஜித்து வந்த சிவன் கோவில் மிகவும் பழுதடைந்து சீர்செய்பவர் இல்லாமல் இருந்து அக்கிராமத்தில் உள்ளவர்கள் யாரும் இக்கோவிலைப் புதுப்பிக்க முன்வரவில்லை. மேலும் ஓர் வதந்தி என்ன

வென்றால் அக்கோவில் கும்பாபிஷேகம் முன்நின்று செய்பவர்கள், இறந்து விடுகின்றார்கள் என்பது. சுவாமி ஜியின் தகப்பனார் அவ்வீதியில் இருந்த மற்றும் இருவர்கள் முன்நின்று கும்பாபிஷேகம் செய்த பின்பு இறந்து விட்டார்களாம், இதனால் சிவன்கோவில் கும்பாபிஷேகம் இல்லாமல் நாற்பது வருஷங்களுக்கு மேலாய் விட்டது.

சுவாமிஜி இந்த மூடநம்பிக்கைக்கு மதிப்பு கொடுக்காமல் இக்கோவிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்தார் ராஜகோபுரம் கட்டினார், பழுதடைந்த சுவர்கள் எல்லாம் பழுது பார்த்து, கோவிலை பன்மடங்கு அழகாய்ச் செய்தார் சுவாமிஜியின் திருக்கரங்களாலேயே கும்பாபிஷேகம், அன்னதானம் முதலியவை நிகழ்ந்தது, வெகு விமரிசையாக இக்கும்பாபிஷேகத்திற்குப் பல ஊர்களிலிருந்து பக்தர்கள் வந்து கலந்து கொண்டார்கள். சுவாமிஜி தான் பிறந்த வளர்ந்த ஊரில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சிக்கு, அவ்வூரில் உள்ளவர்கள் தங்கள் கிராமம் பெற்ற பாக்யமாய் நினைத்து வீதியெல்லாம் குருத்தோலை மாவிலை தோரணங்கள் கட்டி மேளவாத்யத்துடன் சுவாமிஜியை அனேகர் இல்லங்களில் வரவேற்று, பாத பூஜை செய்தகொண்ட காட்சி, மெய்சிலிர்க்கச் செய்தது. பிறந்த ஊரில் ஞானிகளுக்கு மதிப்பு கிடைப்பது அரிது. ஆனால் இன்று அந்த வீதியில் உள்ளவர்களும், ஹரிஜனங்களும் சுவாமிஜியை குதுகுலத்துடன் தங்கள் பாக்யமாய் நினைத்து வரவேற்றார்கள்.

இக்காட்சி பெரியவர்களுக்கு கிடைக்காத பாக்யம் என்பதை நினைவுருத்தியது. ஏன் என்றால் பிறந்த ஊரில் மகான்களுக்கு மதிப்பு இல்லை. அவருக்கு வெளிதேசங் களில் தான் பெயரும், புகழும் உண்டாயிற்று. ஆனால் சுவாமிஜியை இன்று பிறந்த ஊரிலும், வெளிநாடு, உள்நாடு முழுவதும், எவ்வித வேற்றமையும் இல்லாமல், வரவேற்றது ஆச்சர்யம் தான்

சுவாமிஜி பிரம்மச்சாரியாக இருந்த் போது நிகழ்ந்த சில நிகழச்சிகள்

சுவாமிஜி பிரம்மச்சாரியாக இருந்தபோது, சென்னை யிலிருந்து ஓர்சமயம் ''டில்லி'' க்குப் பிரயாணம் செய்த கொண்டிருந்தார். அவர் அமர்ந்த ரயில் பெட்டியில் வேறு இருவர் இருந்தார்கள். சுவாமிஜி ஓர் மூலையில் அமர்ந்திருந்தார். அவர் முன்னால் வேறு இருவர் இருந்தார்கள் சுவாமிஜி அமர்ந்திருந்த வரிசையில் இறுதியில் ஒருவர் பகவத் கீதா புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்து மற்றவன் நீ என்ன படிக்கின்றாய். என்று கேட்டான். கீதா என்று கூறினார்,

(கேள்வி) கீதா என்றால் என்ன?

(பதில்) கீதா ஓர் சாஸ்திரம்.

(கேள்வி) இச்சாஸ்திரம் யார் கூறியது?

(பதில்) கிருஷ்ண பகவான் என்பவர் கூறியது.

(கேள்வி) கிருஷ்ணன் என்பவர் யார்?

(பதில்) கடவுள்?

(கேள்வி) கடவுளா ராமன் யார்?

(பதில்) ராமனும்! கடவுளே.

(கேள்வி) சிவன் யார்?

(பதில்) அவரும் கடவுளே.

(கேள்வி) நாராயணன் என்பவர் யார்?

(பதில்) நாராயணனும் கடவுளே.

(கேள்வி) கணேசா முதலியவர்கள் யார்?

(பதில்) அவர்கள் யாவரும் தெய்வங்களே.

(கேள்வி) அப்படியானால் உங்களுக்கு எவ்வளவு தெய்வங்கள்?

(பதில்) அவனுக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் எங்களுக்கு அனேக தெய்வங்கள் உள்ளார்கள் என்றான்.

(கேள்வி) ஏன் உங்களுக்கு இவ்வளவு தெய்வங்கள் இருந்தால் குழப்பம் ஏற்படாதா? என்று கேட்டான்.

(பதில்) எங்களுக்கு எவ்விதக் குழப்பமும் இல்லை. பூஜை அறையில்.

எல்லா தெய்வப் படங்களும் உள்ளன, நான் பூஜை செய்யும்போது எல்லாவற்றிற்கும் பூஜை செய்கின்றேன். இதனால் எனக்கு எவ்விதக் குழப்பமும் இல்லை.

(கேள்வி) அது எப்படி? உனக்குக் குழப்பம் ஏற்பட்டுத்தான் தீரும் என்றான்!

(பதில்) எனக்கு எவ்விதக் குழப்பமும் ஏற்படவில்லை.

(கேள்வி) அப்படி அல்ல, தவறாமல் உனக்கு குழப்பம் ஏற்பட்டே தீரும், என்று பிடிவாதமாகப் பதில் கூறினான். நான் ஓர் கதை கூறுகிறேன் கேள், என்று ஒரு கதையை இவ்வாறாகக் கூறினான்.

ஓர் கிருஸ்துவனும், இந்துவும் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். வழியில் பெரிய நதி இருந்தது. இவர்கள் இருவருக்கும் நீச்சல் தெரியாது. தண்ணீரில் கொஞ்சம் ஆழமே உள்ளது. நடந்து போய்விடலாம் என்ற

நினைத்துத் தண்ணீரில் இறங்கி நடந்து சென்று கொண்டிருந்தார்கள். திடீர் என அங்குள்ள அணை உடைந்து தண்ணீர் வேகமாய் உயர்ந்து கொண்டே வந்தது. இவர்கள் இடுப்பளவு, மார்பளவு என்று உயர்ந்து கழுத்தளவு வந்துவிட்டது. இவர்கள் இருவரும் வெள்ளத்தின் மத்தியில், நீரில் மூழ்கி இருக்கும் நிலை வந்து விட்டது அச்சமயத்தில். இந்த பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தான் ''ஓ ராமா எங்கு இருக்கின்றாய் என்னைக் காப்பாற்று'' என்று கூறினான் ராமர் இவன் கூப்பாடு கேட்டு உதவி செய்ய வந்தார் ராமர் வருவதற்குள் பொறுமை இழந்து கிருஷ்ணா காப்பாற்று என்று கூப்பிட்டான். கிருஷ்ணன் காப்பாற்றுவார் என்று ராமர் போய்விட்டார். கிருஷ்ண பகவான் வந்து காப்பாற்றுவதற்குள், சிவா என்னை காப்பாற்று என்று கூறினான், இதனால் சிவன் காப்பாற்றுவார் என்று கிருஷ்ணர், சிவா, நாராயணா, கணேசா என்று ஒருவர் பின் ஒருவராகக் கூப்பிட ஆரம்பித்தான், இவ்விதம் இவர்கள் ஒவ்வொருவரும் வந்து உதவி செய்வதற்குள், நீரில் மூழ்சி இறந்து விட்டான்.

ஆனால் கிறிஸ்தவனைப்பார் அவன் ஓ கிருஸ்துவே என்னைக் காப்பாற்று என்று கூப்பிட்டவுடன், ஓர் மரக் கட்டை நீரில் மிதந்து வந்தது. அதன் உதவியால், கரை சேர்ந்து பிழைத்து விட்டான். இந்துவோ கடவுள்களின் மேல் உள்ள குழப்பத்தினால் இறந்து விட்டான். ஒரே கடவுள் ஆன கிறிஸ்து இருப்பதினால், அவர் இவனைக் காப்பாற்றிவிட்டார், என்று கூறினான்.

கீதை படித்தக் கொண்டிருந்தவன் இக்கதையைக் கேட்டு என்ன பதில் கூறுகூது என்று தெரியாமல் குழம்பிவிட்டான். அச்சமயத்தில் அக்கிருஸ்தவன், சுவாமிஜியை இடை இடையில் பார்த்துக் கதையைச் சொல்லிக் கொண்டுவந்தான். இறுதியில் இக்கதையைக் கூறி தான் வெற்றி பெற்றதாய் பெருமையாகச் சிரித்தான் சுவாமிஜியைப் பார்த்து.

உடனே சுவாமிஜி ஓ இது வெகு ஆச்சர்யமான கதை என்று கூறினார். சுவாமிஜியின் அருகில் வந்து அமர்ந்தான். அப்போது சுவாமிஜி பிரம்மச்சாரியாய் வெள்ளை ஆடை உடுத்து தாடி வைத்திருந்ததினால், இவனுக்கு இவர் நமக்கு சரியான ஆள் என்று நினைத்து, பார்த்தீரா இவ்வளவு தேவதைகள் இருந்தால் எவ்வளவு குழப்பம் உள்ளது என்று கூறினான்.

அப்போத சுவாமிஜி ஓ இக்கதை மிகவும் நன்றாக இருக்கின்றது. இக்கதை எப்பொழுது நடந்தது? என்று கேட்டார். அவன் எப்போது என்று கூறமுடியாமல் விழித்தான் உடனே சுவாமிஜி பரவாயில்லை. ஓர் நாள் வெள்ளிக்கிழமை நான்கு மணிக்க நடந்ததாய் வைத்துக் கொள்வோம், ஆமாம் இவ்வுலகில் எவ்வளவு கிருஸ்து வர்கள் இருக்கின்றார்கள் என்று கேட்டார். ஓ எத்தனையோ கோடி மக்கள் உள்ளார்கள் என்றான்.

ஓ சரி இதே வெள்ளிக் கிழமை நான்கு மணிக்கு லண்டனில் உள்ள, கிருஸ்துவன் கார்விபத்தில் சிக்கி, ஓ கிருஸ்து காப்பாற்று என்று கூப்பிடுகின்றான். பிரேஸிலில் ஓர் கிருஸ்துவன் கத்தியால் குத்தப்பட்டு ஓ இயேசுவே என்னைக் காப்பாற்று என்று பிரார்த்திக்கிறான். அதே சமயத்தில் தென்ஆப்பிரிக்காவில் ஜோகன்ஸ்பர்க்கில், உள்ள ஆஸ்பத்திரியில் பிரசவ வேதனையால் துடிக்கும் பெண் இயேசுவே என்னைக் காப்பாற்று என்று பிராத்திக்கின்றாள். இவர்கள் யாவரும் இயேசு பக்தர்கள். இவ்விதம் அனைவரும் கூப்பிட்டால் ஒரே சமயத்தில், ஒரே இயேசு கூப்பிடுகின்ற அனைவரிடமும் எவ்வித ஒருவரைக் காப்பாற்ற இயேசு போனால் மற்றவர்கள். இறந்து விடுவார்கள். இங்கே பார், இந்துக்களாகிய எங்களுக்குக் கவலை இல்லை. ராமன் ஓர்பக்கம் போவார் கிருஷ்ணன் ஒருபக்கம் போவார், சிவன் ஒருபக்கம் கணேசா ஒருபக்கம், என்று வெவ்வேறு திசைகளில்

போவார்கள் இவ்விதம் இவ்வளவு தேவதைகள் இருப்பது, எவ்வளவு அற்புதமாக உள்ளது! என்று கூறினார். இதைக் கேட்டவுடன் அவனுக்கு என்ன பதில் கூறுவது என்றே தெரியாமல் விழித்தான். இதற்குள் அடுத்த ஸ்டேஜன் வந்தவுடன் இறங்கிப் போய்விட்டான், பதில் கூறமுடியாமல் தவித்துக்கொண்டு இருந்த கீதை படித்தவன் மிகவும் சந்தோஷப்பட்டான்.

இதில் என்ன வெளிப்படுகின்றதென்றால் அவனுடைய யுக்திக்கு, சுவாமிஜியுடைய யுக்தி வாதம் குறைந்ததாக இல்லை. யுக்திவாதம் போற்றத்தக்கது அல்ல. ஆனாலும் அவன் கூறிய அர்த்தமற்ற யுக்தியைப்போலவே சுவாமிஜி கூறி யுக்தியும் அர்த்தமற்றதே இயேசு என்றாலும், ராமா கிருஷ்ணா என்றாலும், எப்போது எவ்விதம் கூப்பிட்டாலும், அவர் ஒருவரே, அவர் வருவதற்கு நேரம் பிடிக்குமா, சர்வவியாபியான தெய்வத்திற்கு? இதனால் ஈஸ்வரனை எந்த ரூபத்தினாலும் எந்த நாமத்தினாலும் பூஜை செய்யலாம்.

''பால மஹோற்சவம்''

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்;

–திருக்குறள்

தன்னைத் தான் காக்காவிடினும்; சினத்தைக் காக்க வேண்டும் என்ற உண்மையை உணர்ந்த ஓர் சந்தர்ப்பம் சுவாமிஜி பிரம்மச்சாரியாக இருந்தபோது ஏற்பட்டது.

சென்னையில் பால மஹோற்சவம் செய்ய ஏற்பாடு செய்திருந்தார், அதற்கு பெங்களூரிலிருந்து நூறு பிள்ளைகளை சென்னைக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும், முன்னேற்பாடாகத் தனக்கு தெரிந்த

ரயில்வே ஆபீசரிடம். ஒரே ரயில்பெட்டியில் பிள்ளைகளுக்கு இடம் ரிசர்வ் செய்து தருமாறு கேட்டார். அவரும் அப்படியே செய்து தருவதாகக் கூறினார்.

மீண்டும், மீண்டும் சிலமுறை அந்த ஆபீசரைச் சந்தித்து ரிசர்வேஷன் செய்துவிட்டீர்களா? என்று கேட்டார். ஓ, அதற்கென்ன நீங்கள் கவலைப்படாதீர்கள். நான் எல்லா ஏற்பாடுகளும் செய்து விடுகின்றேன், என்று கேட்ட போதெல்லாம் கூறினார். சுவாமிஜியும் இவர் நிச்சயம் நன்றாக ஏற்பாட செய்து தருவார் என்று நினைத்துக் கொண்டார்,

குறிப்பிட்ட நாள் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு பெங்களூர் ஸ்டேஷனுக்குச் சென்றார் சுவாமிஜி. அந்த ஆபீசரைப் பார்த்து எந்த போகியில் ரிசர்வ் செய்து இருக்கின்றீர்கள் என்று கேட்டார்? அவர் இரண்டு, மூன்று போகிகளைக் குறித்து இங்கு எல்லாம் ரிசர்வ் செய்திருக்கின்றேன், மூன்று போகியிலும் பிள்ளைகளைப் பகிர்ந்து, அனுப்புங்கள் என்று கூறினார்.

சுவாமிஜிக்கு கோபம் வந்துவிட்டது நான் தனியாக பிள்ளைகளை அழைத்துக்கொண்டு போகும்போது ஒரே இடத்தில் இருந்தால் நல்லது பிள்ளைகளைக் கவனித்துக் கொள்ளமுடியும் என்று தானே முன்னதாகவே இவ்வளவு ஏற்பாடுகளும் செய்தோம், கேட்கும் போதெல்லாம், நான் எல்லாம் செய்து விடுகின்றேன், ரிசர்வ் செய்து விடுகின்றேன் என்று கூறினவர். இன்று இப்படி ஒவ்வோர் போகியில் கொஞ்சம் கொஞ்சம் பேர்களுக்கு என்று ஏற்பாடு செய்திருக்கின்றாரே, நான் எப்படி இவர்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வது என்று தாங்கமுடியாத கோபத்தினால் அந்த ஆபீசரை இப்படித் தானா ஏற்பாடு செய்வது? நான் ஏன் முன்பே தங்களுக்கு கூறினேன் பிள்ளைகளை சௌக்கியமாக பாதுகாப்பாக அழைத்துச்

செல்லலாம் என்று அல்லவா? இப்படிச் செய்தால் நன்றாக இருக்கின்றதா என்று கேட்டார்.

உடனே அந்த ஆபீசருக்கும் கோபம்வந்து விட்டது. நீ பிரம்மச்சாரியாயிற்றே உனக்கு இவ்வளவு கோபம் வரலாமா? என்று கேட்டுவிட்டார். அவ்வளவுதான் சுவாமிஜியின் மனதில் தான் இனிமேல் கோபம் கொள்ளக்கூடாது என்ற எண்ணம் தோன்றியது. இச் சந்தர்ப்பத்தை ஓர் பாடமாக எடுத்துக் கொண்டார். அதன்பின்பு சினத்தை வென்று, தன்னிடம் இருந்த சினேக மனப்பான்மையை மேலும் வளர்த்துக் கொண்டார்.

''மடாதிபதியாகச் செய்ய நோக்கம்''

சுவாமிஜி பிரம்மச்சாரியாக இருந்தபோது ஓர் சமயம் நாசிக் அருகில் உள்ள கர்வீர் மடத்திற்கு அழைத்திருந்தார்கள். அந்த மடத்திற்குச் சிறந்த சாஸ்திரம், கற்றவர்களை தேர்ந்தெடுத்து மடாதிபதியாகச் செய்ய வேண்டும் என்பது அவர்கள் நோக்கம். அதற்காகச் சுவாமிஜியை அங்கு வரவழைத்து சாஸ்திரத்தில் அனேக கேள்விகள் கேட்டார்கள். சுவாமிஜி கேள்விகளுக்கெல்லாம் சரியான பதிலைக் கூறினார். அவரிடம் பொலிந்த புத்திக் கூர்மை, சாஸ்திரத்திறமை முதலியவற்றைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து அங்குள்ள சுவாமிஜி. நாங்கள் தங்களை மடாதிபதியாகச் செய்ய விரும்புகின்றோம். தங்கள் விருப்பம் என்ன என்று கேட்டார்கள். ஆனால் சுவாமிஜி தனக்கு மடாதிபதியாகும் விருப்பம் இல்லை என்று கூறி தன் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொண்டார்.

ஹரே ராமா ஹரே ராமா ராம, ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண விதரே கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

இந்த மந்திரம கவிசந்திரண உபநிழத்தில் உள்ளது. இதை ஜபித்தால் பாபம் போகும் என்பார்கள்.

ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா என்ற மந்திரத்தின் அர்த்தம் சுவாமிஜிக்கு வெகுநாட்கள் புரியாமல் இருந்தது. இது என்ன மந்திரம்? என்று சந்தேகம் இருந்து வந்தது. இந்த சந்தேகத்தை நிவர்த்திக்க கூடிய ஓர் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அது எவ்விதம் என்றும் சுவாமிஜியின் சிந்திக்கும் ஆற்றல் எப்படிப்பட்டது என்றும் கவனிப்போம்.

சுவாமிஜி கூறும் விளக்கம்:– இந்த மந்திரத்தில் ஹரி, கிருஷ்ணா, ராமா, என்று மூன்று சப்தம் உள்ளது. இது மூன்றும் கூப்பிடுவது போன்ற சப்தமாக உள்ளது. கடவுளைக் கூப்பிட்டப்பின் இது வேண்டும. அது வேண்டும் கொடு என்று கேட்க வேண்டும். ஒன்றும் கேட்காமல் கடவுளைக் கூப்பிடுவதினால் என்ன பயன்? இவ்வித கருத்து அடங்கிய இந்த மந்திரம் அர்த்தம் இல்லாமல் உள்ளது. உதாரணத்திற்கு ஒருவரை நாம் நம்மிடம் வரும்படி கூப்பிட்டு விட்டு அவரிடம் ஒன்றும் சொல்லாமல் இருந்தால், அந்த மனிதரை அவமானம் செய்ததுபோல் இருக்கின்றது. அதேபோல் கடவுளைக் கூப்பிட்டுவிட்டு ஒன்றும் கேட்காமல் இருந்தால், அது அவரை அவமானம் செய்தது போல் உள்ளது. அதனால் இந்த மந்திரம் நன்றாக இல்லை. என்று நினைத்துக் கொண்டார் சுவாமிஜி.

ஒரு சமயம் சுவாமிஜி மதராசிலிருந்து டில்லி போகும் போது ரயிலில் நிகழ்ந்த சம்பவம் பற்றிக் கூறுகின்றார். விஜயவாடாவரை காபி, டீ, பேப்பர் என்ற சப்தத்துடன் விற்றுக்கொண்டே போவான். காசிபெட் தாண்டிய பின், ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் பேப்பர் வாலா, காபி வாலா, சாய் வாலா, என்று சப்தம் செய்து கொண்டு போவார்கள் காபி வாலா என்னும்போது தன்னை விற்கவில்லை. நான்

காபி விற்பவன் என்று மட்டும் தெரிவித்துக் கொள்கின்றான். ஒரு பிரயாணி காபி விற்பவனைக் கூப்பிட்டான். உடனே அவன் காபியை கொடுத்து விட்டு, பணத்தைப் பெற்றுக் கொண்டு போய்விட்டான்.

இவர்கள் இருவர் மத்தியிலும் எவ்வித பேச்சும் ஏற்படவில்லை. ஏன் எனில் பேச்சு அவசியம் இல்லை. அவனைக் கூப்பிட்டது எதற்காக? காபிக்காக அதனால் காபியைக் கொடுத்து விட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டு போய்விட்டான்.

இந்த சந்தர்ப்பத்தை பார்த்த எனக்கு, அதிக நாட்களால் அர்த்தம் தெரியாமல் இருந்த மந்திரத்தின் அர்த்தம் நன்கு தெரிந்தது.

ஹரி என்றால் பாவத்தைத் தீர்ப்பவர் அதனால் வேற, ஹரே என்று கூப்பிட்டால், அவர் வந்து நம் பாபத்தை நசிக்கச் செய்கிறார். நான் எதுவும் பேசவேண்டியதோ கேட்க வேண்டியதோ இல்லை காபிவாலா, சாயாவாலா போல்.

எவ்விதம் முனிசிபாலிடி குப்பைகளை எடுத்தச் செல்லும் லாரிக்காரன் வந்து, நமக்கு வேண்டாத குப்பைகளை எடுத்துக்கொண்டு போகின்றேனோ அது போல், எனக்கு வேண்டாததான பாபம், ரோகம், துக்கம், மோஹம் போன்ற வேண்டாத இந்த குப்பை விஷயங்களை எடுத்துக் கொண்டு போவார். அதனால் நான் எதுவும் பேச வேண்டியது இல்லை.

ராமா என்று கூப்பிட்டால் ராமர் வருவார். ஒன்றும் கேட்க வேண்டியது இல்லை. ராமா என்ற சப்தத்திற்கு அர்த்தம் ஆனந்தம். எது கிடைத்தால் எல்லோருக்கும்

சுகம் கிடைக்கின்றதோ, அது ராமா. எல்லோரும் விரும்புவது ஆனந்தமே. எவரும் துக்கத்தைக் கேட்பது இல்லை. விரும்புவது இல்லை. அதனால் ராமா என்று கூப்பிட்டால் நான் விரும்பும் ஆனந்தத்தைத் தருகின்றார் வேண்டாத துக்கத்தை எடுத்துக்கொண்டு போகின்றார்.

கிருஷ்ணா என்றால் யார்? யார் ஆக்ரஷணம் செய்கின்றாரே அவர் கிருஷ்ணர். எது ஆக்ரஷணம் செய்வது? ஆனந்தம். அதனால் கிருஷ்ணா என்றால் கிருஷ்ணர் வருவார் ஆனந்தம் கொடுப்பார் என்பது பொருள்.

இங்கு கிருஷ்ணா என்று அழைத்த போது, ஆனந்தம் கொடுப்பார் என்றால், துக்கம் போய் விடுகின்றது. அதனால் கூப்பிட்டபின், நாம் எதுவும் கேட்கவேண்டியது இல்லை என்பது பொருள் ஆகையால் இந்த நாமத்தின் மகிமை பாவத்தை விலக்கி ஆனந்தம் தருவது என்று நான் அறிந்து கொண்டேன் என்றார்.

சுவாமிஜி சில அன்பர்களுக்கு எழுதிய வெண்பாக்கள்

இவ்வெண்பா 'அ' வில் ஆரம்பித்து 'ஃ' முடிகின்றது.

அசையாது	அசையும்
ஆளாது	ஆளும்
இயங்காது	இயங்கும்
ஈயாது	கொடுக்கும்
ஏலாது	ஏலும்

ஐயிலாது	ஐயாகும்
ஒட்டாது	ஒட்டும்
ஓடாது	ஓடும்
ஔவிலது	சேறாம்
ஃகருக்கும்	ஃகாம்

இப்பாடல் நிஷகிரிய நிர்குண பிரம்மத்தை விளக்குகின்றது. எல்லா கிரியைகளிலும் கிரியையற்ற ஆத்மாவைக் குறிக்கின்றது.

ஒடுது என் மனம் ஒடுது என்றான்
ஒடுது உன் மனம் எதிலே
ஓடும் மனது ஒடுது ஓடட்டும்
ஓடட்டும் ஓடட்டும் ஓடட்டுமே.

இப்பாடல் சுவாமி தாயுமானவர் கருத்தை ஒத்துள்ளது. ஒன்றைவிட்டு ஒன்றை நினைத்து ஓடும் மனம், எல்லாம் நீயே என்று அறிந்தால், எங்கே இயங்கும் பராபரமே என்றது போல் ஓடும் இயல்புள்ள மனம், எல்லாம் பரப்பிரம்மமே, மனதின் ஓட்டும் பரப்பிரம்மத்தில் தான் என்று அறிந்தவர்களுக்கு ஏற்படும் மனநிலை அது.

ஆண்ட அரசு அவ்வளவும் அற்று நிற்க
நீண்டதொரு காலம் நடுவே நின்றுபோக
பூண்டபல வேடமும் பட்டெனத் தெரித்துஓட
சான்ற மறைக்கொப்ப சத்தியம் நின்றது பார்.

உயர்ந்த மறை ஞானத்தின் சத்தியத்தை உணர்ந்த பின்பு, வாழ்க்கையின் அரசாட்சி, காலம், பல உறவுகளாகிய வேடங்கள் யாவும் ஒடி மறைந்துவிடும். இது அப்ரோக்ஷிக்ஷ ஞானம் பெற்ற நிலையைக் குறிக்கும்.

போனது தான் அவ்வளவும், புதிதாய் வந்து சேர
ஆணவமாம் அக்காலன் அடி பணிந்து துதி பாட
மோமைதாம் உருக்கொண்டு வேடங்கள் பல தரிக்க
ஊமைதாம் இவ்வாழ்வில் உவகைதான் என்னே காண்.

ஆணவம் என்ற அக்ஞான காலன் ஞானம் ஏற்பட்ட தினால் அடிபணிந்து துதிபாடுகின்றான். மோன சொரு பமான, சைதன்யமே சிவமே பல உருவங்களும் வேடங் களும் தரிக்கின்றது என்ற உண்மை அறிந்தபின் ஊனம் நிறைந்த இந்த வாழ்வில், உவகையோ தான் இதுவே ஆச்சர்யம்,

எங்கும் அவனிருக்க பங்கம் தான் வந்திடுமா
ஓங்கும் உறுதியோடு உள்ளே இருந்திடம்மா
கூட்டிலிருந்தாலும் பூட்டியா இருக்கின்றது?
இருட்டிலிருந்தாலும் கருமையாகவா இருக்கின்றது?

எங்கும் பரம்பொருள் இருப்பதினால் குறைவு வராது. நல்ல உறுதியோடு மனதை உள்ளே நிறுத்து, கூடுபோன்ற இந்த உடலில் இருந்தாலும் சைதன்யம் பூட்டியா இருக்கின்றது? இருளையும் பிரகாசிக்கச் செய்கின்ற சைதன்யத்திற்கு கருமை இல்லை.

அசையாது இருந்தாலும் அசைவெல்லாம் அவனே தான். சாட்சியாயிருந்தாலும் சாட்சியெல்லாம் அவனேதான்.

ஆத்ம சைதன்யம் அசையாமல் இருப்பது ஆனாலும், அசைவெல்லாம் அதன் இருப்பினாலேயே ஏற்படுகின்றது. சாட்சியாய் யாவற்றையும் அறிந்துகொண்டு இருப்பதும் சர்வசாட்சியாகிய ஆத்மா என்பது.

உண்டென்று உறுதி கொண்டு
கண்டுணர்ந்தவர் அடி பணிந்து
தொண்டுகள் பலபுரிந்து

சென்ற அவன் வழி சென்று
வென்ற மனது கொண்டு
ஒன்றதனை அடைவாய் அப்பா.

உண்மைப் பொருளான ஆத்மா உண்டு என்ற நிச்சயத்தோடு, இந்த உண்மையை அறிந்தவர்களை, பணிவு, அன்புடன், தொண்டுகள் பல செய்த அவர் வாழ்ந்து காட்டும் நெறி நின்று, வைராக்யத்தால் விஷயங்களை வென்ற மனத்தோடு, ஒன்றி, ஏகம், சிவம் அத்வைத ஞானத்தின் உண்மையை அறிவாய் என்பது.

ஆயகலை அறுபத்து நான்கினையும்
தூயக் கற்றாலும் துறவறம் பூண்டாலும்
பாசமதை அறுத்தாலும் பாவத்தை வென்றாலும்
பரமதனில் சேராமல் செல்வ தென்ன பயனே

உலகில் உள்ள அறுபத்தினான்கு கலைகளையும் நன்கு தெளிவாய் கற்றாலும், துறவறம் ஏற்றுக் கொண்டாலும், வெல்ல முடியாத பாசத்தை வென்றாலும், அழிக்க முடியாத பாவக் கூட்டத்தை அழித்தாலும், பரம் என்று கூறப்படும் மேலான ஆத்ம ஞானத்தைப் பெறாவிடில் மேல் கூறிய பயன்கள் எல்லாம் பயன் அற்றதாய் விடும்.

மனமென்னும் குரங்கைக்களமேனும் நிறுத்தி
அகத்தினுள் இரங்கு பரத்தினை அடையவே

மேலான பரம் பொருள் ஞானத்தைப்பெற ஓர் களமாவது மனக் குரங்கை நிறுத்தி, மனதைக் கட்டுப் படுத்தினால் பரம்பொருளை அடையலாம்.

படித்தவர் பதுமை யாவர்
பார்த்தவர் குருடராவார்
பெற்றவர் பிள்ளை யாவார்
அற்றவர் அனைத்துமாவார்

பெறுவதற்கரிய ஞானப் பேற்றைப் பெற்றவர் பிள்ளை யாவார். அழயாராகத் திகழ்வார். துவந்தங்கள் அற்ற உள்ளத்தை அடைவார்கள். இந்த ஞானம் பெற்றபின் அனைத்தும் ஆவார். பிரம்ம சொரூபமாவார்.

பாலில் சென்ற பானை நீர்
பாலாய் மாறி நிற்பது போல்
தன்னில் களித்து இருப்பவர் முன்
தானாய் களிக்கக் கண்டீரோ.

பாலில் கலந்து விட்ட பானை நீர் பால் மயமாகி இருப்பதுபோல, தனக்குத்தான் ஆனந்தமாக இருப்பவர் முன், யாவும் ஆனந்தமாக இருக்கும்.

சுவாமிஜி எழுதிய பாடல்

ஹானலூலு அவாய் நாட்டில் டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை, கோடைக்காலம். கோடைக்காலம் என்றால் இவர்களுக்கே ஒரே கொண்டாட்டம் தான். பால் போன்ற தங்கள் மேனியின் வர்ணத்தை விரும்பாத இவர்கள், கடற்கரையில் தங்கள் உடலை சூர்ய உஷ்ணத்தினால் தழும்புகள் ஏற்பட்டுத் தாங்கள் உடல் வர்ணம் மாற வேண்டும் என்பதற்காக, நீண்ட நேரம் கடற்கரை மணலில் படுத்துக்கொண்டு இருப்பார்கள். உடலை மறைத்தும், மறைக்காததுமான ஆடைகளை அணிந்து சூர்ய ஒளியில் தங்களைக் காய்த்துக் கொண்டு இருப்பார்கள். உடலை மறைத்தும், மறைக்காததுமான ஆடைகளை அணிந்து சூர்ய ஒளியில் தங்களைக் காய்த்துக் கொண்டு இருப்பார்கள். இவர்கள் இவ்விதம் படுத்துக்கொண்டும், புரண்டு கொண்டும் இழுக்கம் காட்சியை காரில் செல்லும் போது சுவாமிஜி பார்க்க நேரிட்டது. அப்போது தான் சுவாமிஜியின் உள்ளத்தில் ஓர் அற்புதமான பாடல் எழுந்தது.

ஹே கோவிந்த ஹே கோபால
உத்தரமாம் தீனம் அதிதீனம் பலஹீனம்–ஹே கோவிந்த!
விஹித விஹீனம் விபர்யய ஞானம்
கன்சித சர்வ கலுஷ கலாபம்–ஹே கோவிந்த!
வேதம் ந ஜானே வேத்யம் ந ஜானே
தியானம் ந ஜானே த்யேயம் ந ஜானே
மந்திரம் ந ஜானே தந்திரம் ந ஜானே
பத்யம் ந ஜானே கத்யம் ந ஜானே–ஹே கோவிந்த!

இப்பாடலின் கருத்து மிகவும் அற்புதமானது. ஹே கோவிந்தா ஹே கோபாலா என்னை மேலே தூக்கிவிடு. பலஹீனன் நான். மிகவும் பலஹீனன், ஒன்றுக்கும் உதவாதவன்.

செய்ய வேண்டிய கர்மங்களைச் செய்யாததினால் ஞானம் இல்லை. அக்ஞானியாக இருக்கின்றேன்.

சஞ்சித கர்மத்தால், விருப்பு வெறுப்பு என்ற துவேஷ மூட்டையாக இருக்கின்றேன்.

எனக்கு வேதம் என்னவென்று தெரியாது. வேதம் என்ன கூறுகின்றது என்பதும் தெரியாது. தியானம் தெரியாது எதை தியானிப்பது என்பதும் தெரியாது. பூஜைக்குரிய மந்திரமும் தெரியாது. தந்திரமும் தெரியாது, பகவானைப் புகழ்ந்தாவது பாடத் தெரியுமா என்றால் அதுவும் தெரியாது. அவன் புகழ் படிக்கவும் தெரியாது, ஹே கோவிந்த! இவ்விதமான குணம் உள்ள என்னைத் தூக்கிவிடு.

என்ற இப்பாடல்தான் சுவாமிஜியின் மனதில் ஏற்பட்டது. இவ்விதம் மக்கள் தன்னை உடலாகவும், உலகமாகவும் நினைத்திருக்கும் தீன நிலையைப் பார்த்து கருணையின் பிரவாகத்தால் இப்பாடல் எழுந்தது சுவாமிஜி எழுதிய அனேக பாடல்களில் இது ஓர் சிறந்த பாடம்.

''பாரதீய வித்யா பவனில் நிகழ்த்திய உபன்யாசம்''

நீரளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண்ணறிவு மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம்

நுண்ணறிவு தரும் நூல்களைப் பயின்ற ஆச்சார்யனான சுவாமிஜி, அனேக மாணவர்களைத் தன் அறிவினால், பிரகாசிக்கச் செய்தவர், ஆகையால் சுவாமிஜி எந்த ஊரில் கீதாயக்ஞம் நிகழ்த்தினாலும், தங்கள் பள்ளிகளுக்கு வந்து அறிவுரை கூறுமாறு, பள்ளி ஆசிரியர்கள் கேட்டுக் கொள்வார்கள். அவ்விதம் ஹைதராபாத் பாரதீய வித்யா பவனில் நிகழ்த்திய அறிவுரை இது.

சிற்பி ஒருவன் தன் சினேகிதர்களுடன் சென்று கொண்டிருந்தவன், ஒரு கல்லை பார்த்துக்கொண்டு இருந்தான். இதைக் கவனித்து சினேகிதன் ஏன் இவ் விதம் கல்லைப் பார்த்துக் கொண்டிருக்கின்றாய். இந்த கல்லில் என்ன இருக்கின்றது? என்று கேட்டான். அதற்கு சிற்பி இக்கல்லை என்னுடைய சிற்பச்சிலைக்கு எடுத்துக்கொண்டு போகவேண்டும் என்று கூறினான். அதைப் போலவே சிற்பச் சாலைக்குக் கல் எடுத்துக் கொண்டு போகப்பட்டது.

பிறகு சில மாதத்திற்குப் பின், சிற்பியின் முன் அழகான புல்லாங்குழலோடு, அழகிய கண்கள், கரங்களுடன் பிரகாசித்து, கிருஷ்ணவிக்ரகத்தைப் பார்த்துச் சினேகிதன் ஆச்சர்யப்பட்டான்!

சினேகிதனுக்குப் பல கோணங்களில் இந்த விக்கிர கத்தின் எழிலை விளக்கிக் காட்டினான். சினேகிதன் இந்த விக்கிரகம் எப்போது கொண்டு வந்தாய் என்று கேட்டான்.

இது நாம் கொண்டு வந்தது தான் என்றான் சிற்பி. இவனுக்கு ஆச்சர்யம் நாம் கல் அல்லவா கொண்டு வந்தோம். இந்த கல்லில் விக்ரகம் செய்வார்களா? என்று கேட்டான்? ஆம் அந்த கல்லே தான் இது. இன்று கிருஷ்ணனாக இருக்கின்றது என்று கூறினான்.

அந்தக் கல்லில் கிருஷ்ணனைப் பார்த்த சிற்பி கிருஷ்ணனைச் செய்ய என்ன செய்தான்? சிற்பியின் கற்பனையிலிருந்த உருவத்தை, தன் மூடி இருந்த வேண்டாத இடங்களைச் செதுக்கி எடுத்தான், தன் அறிவுத் திறமையால், இதனால் தன் கற்பனையில் இருந்த சிற்பத்தை நன்றாய் செதுக்கி வெளிப்படுத்தினான். இது போல் மாணவர் உள்ளத்தில் உள்ள வேண்டாததை விலக்கி உள்ளதை தெளிவுபடுத்த வேண்டும். குடத்தை தெரியாதவனுக்கு இது குடம் என்று காட்டியதும் எவ்விதம் தெரிந்து கொள்ளு கின்றான்? அஞ்ஞானத்தினாலா? ஞானத்தினாலா? ஞானத்தால் தெரிந்துகொள்ளுகின்றான். இந்த ஞானம் அஞ்ஞானத்தில் மூடப்பட்டுள்ளது. இதை விலக்குவதே ஞானம் குரு என்றால் இருளை விலக்கி ஒளியைத் தருபவர். இருளில் உன் மோதிரம் இருந்தால் அது தெரியுமா? அதை எவ்விதம் தெரிந்து கொள்வது? தீபத்தின் ஒளி மோதிரத்தை ஏற்படுத்தியதா? எப்போதும் உள்ள மோதிரத்தை ஒளி காட்டியது. அதுபோல் ஞானம் எப்போதும் உள்ளது. அதை மூடியுள்ள அக்ஞானத்தை விலக்கி ஞானத்தால் உள்ளதைக் காட்ட வேண்டும். ஆகையால் உள்ள ஞானத்தையே நீ விளக்குகின்றாய். பிள்ளைகள் நமக்கு என்று கூறு முடியாது. ஏன் எனில் நீ கற்று கொடுக்கும் முறையில் ஏதோ சரி இல்லை என்பது தான் உண்மை.

எப்போதும் பிள்ளைகளைக் கண்டனம் செய்யக்கூடாது பிள்ளைகளிடம் அன்பு வேண்டும். நல்ல உறவு வேண்டும்.

தாய் வேலைக்காரி, தந்தை வேலைக்காரன், மனைவி வேலைக்காரி என்பது இல்லை. இதுயாவும் நாம் கொள்ளும் உறவு மூலம் ஏற்படுவது. இதுபோல் ஆசிரியர், மாணாக்க உறவும். மாணாக்கர்கள் உன்னிடம் ஞானத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். நீ பணத்திற்காக வேலை செய்வதாய், நினைக்கவோ, செய்வதோ கூடாது பணம் கொடுத்துத் தாய், மனைவியைப் பெறமுடியாது. வியாபாரம் ஆனால் எதையும் வாங்கலாம்.

ஞானம் நாம் ஏற்படுத்துவது அல்ல. நாம் சிருஷ்டித்தது அல்ல. அக்ஞானத்தை விலக்குவது. மாணாக்கனுக்கு அக்ஞானம் இருந்தால் அதை விலக்குவதே ஞானம், 2 + 2 = 4 என்று பிள்ளைகளை நம்பும்படிச் செய்வது அல்ல. இது நம்பிக்கை அல்ல. இதன் உண்மையை அறிவிப்பதே, ஞானம். ஞானம் எப்போதும் உள்ளதே அதை விளக்குவதே, ஆசிரியர் வேலை.

சிற்பி சிற்பத்தை எதில் செய்கின்றான்? கல்லில், இங்கு உன் ஆசிரியர் எதில் செய்வார்? உங்கள் மனதில் செய்ய வேண்டும். கல் நகர்வது இல்லை. அதில் எளிதில் செய்யலாம். ஆனால் நீங்கள் மனதை பாடத்தில் வைக்காவிடில் எவ்விதம்? அதனால் பாடம் படிக்கும் போதும், போதனையின் போதும் மனதை பாடத்தில் இருந்து அகற்றாமல் வைக்க கற்றுக் கொள்ளவேண்டும். அப்போது பாடம் நன்கு புரியும். யாரும் பிறக்கும் போது ஞானியாவது இல்லை. அக்ஞானிதான். ஞானத்தைப் போல் உலகில் உயர்ந்தது இல்லை. ஆகையால் ஞானத்திற்கு நீங்கள் உயர்வு கொடுக்க வேண்டும்.

''பென்சில் வேனியாவில் ஆர்ஷ வித்யா குருகுலம்''

இந்தியா முழுவதிலும் உள்ள நகரங்களில், ஓர் வருட காலம் வரை சுற்றி யக்ஞாக்கள் செய்த பின்பு, சுவாமிஜி அமெரிக்கா கன்னடா முதலிய தேசங்களுக்குச் சென்று யக்ஞாக்கள் செய்து வந்தார். இதன் இடையில் அமெரிக்க அன்பர்களும், சுவாமிஜியிடம் பயிற்சி பெற்ற சிஷ்யர்களும், தங்கள் நாட்டில் மீண்டும் பிரம்மச்சர்ய பயிற்சிக் குரிய குருகுலம் ஆரம்பிக்க வேண்டும் முன் போல் என்று அதற்குத் தகுதியான இடத்தை தேடிக்கொண்டிருந்தார்கள்.

பென்சில்வேனியா என்னும் ஊருக்கு அருகில் ''செயலஸ்பர்க்'' என்றும் கிராமத்தில் ஆஸ்ரமம் அமைப்ப தற்குப் பொருத்தமான இடம் அமைந்தது, பொக்கனோ மலைசரிவில் வேனிற்காலத்தில் மட்டும் மக்கள் வந்து தங்கும் இடமாக இருந்தது. இங்கு நூற்று ஐம்பது அடி உயரம் உள்ள பைன் மரங்கள் அடர்ந்து வளர்ந்த அழகிய வனம். ஆஸ்ரமம் அமைப்பதற்கு வனம், மலை, நதிதீரம் பொருத்தமானது என்பதற்கு ஏற்ப அமைந்தது. இங்கு கரடி, மான், முயல் முதலியவைகள் சர்வசாதாரணமாக உலவு கின்றன. இதில் பதினான்கு சமைக்கும் வசதிகளுடன் கூடிய சிறிய, சிறியவீடுகள் இருந்தன. பதினான்கு ஏக்கர் வீஸ்தீ ரணம் நிலப்பரப்புள்ள இடம். இதில் ஒரு நீச்சல் குளம் உள்ளது.

சுவாமிஜியின் மேல் அன்புள்ள பக்தர்கள் இந்த இடத்தை வாங்குவதற்கு வேண்டிய பணத்தைக் கடனாகவும் அன்பளிப்பாகவும் கொடுத்தார்கள். சுவாமிஜி பல தேசங்கள் சென்று யக்ஞாக்கள் செய்து பணம் திரட்டினார் ஆனால் இங்கு உடனடியாக ஆஸ்ரமம் அமைப்பதற்கு வேண்டிய வசதிகள் இல்லை. இதற்கு சுவாமிஜியின் சிஷயர்கள் பலர்

இங்கேயே தங்கி இரவும் பகலும் ஓயாமல் பலவித சேவைகள் செய்யத் தயாரானார்கள். சூடு, குளிர்சாதனக் கட்டுப்பாடுகள் உள்ள அறைகள் அமைப்பது சமையல் அறை அதற்குரிய நவீன சாதனங்கள், சாப்பாட்டு அறை, பாடம் போதிக்கும் அறை தக்ஷிணாமூர்த்தி கோவில், அதைச் சேர்ந்தாற் போல் பெரிய ஹால் இவ்விதம் எல்லா வசதிகளையும், இவர்களே சிறப்பாய் தயார் செய்தார்கள், ஒன்று பட்டமனதுடன் இந்தச் சீரமைக்கும் வேலை செய்து முடிக்க ஓர் வருடம் ஓடிவிட்டது.

அதற்குப் பின் 1987ம் வருடம் ஜனவரி மாதம் குரு குலம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் நாற்பத்தி ஐந்து பேர்கள் சாஸ்திரம் கற்கின்றார்கள். அமெரிக்கர்களும் அமெரிக்க தம்பதிகளும் ஒருசில இந்தியர்களும் உள்ளார்கள். ஆஸ்ரமத்திலேயே தங்கி பயிற்சி பெறமுடியாத பல தொழில் செய்பவர்கள் கிருகஸ்தர்கள் முதலியவர்களுக்கு ஒவ்வொரு வார முடிவிலும், இரண்டு நாட்கள் கேம்ப் ஆஸ்ரமத்திலேயே தங்கி பகவத்கீதா. உபநிஷத் முதலியவைகளை சிரவணம் செய்கின்றார்கள். தத்துவத்தின் உண்மையை யாவரும் உணரும் வகையில், தன் சொந்த வாழ்க்கையிலும் வாழ்ந்து காட்டி வருகின்றார். இவர் தன் இந்திரியங்களை வெற்றியோடு நடத்தி ஜெயம் கண்டதினால் தான் மற்றவர்களுக்கு இந்திரியங்களை வசப்படுத்தும் பக்குவத்தை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளும் வகையில், போதிக்கும் திறமை பெற்றுள்ளார். இந்த வேதாந்தப் பயிற்சியில் சேர்ந்தவர்கள் அனைவரும், அயல் நாட்டினர் ஆயினும், சுவாமிஜியிடம் மிகுந்த மரியாதை, வணக்கம் உரியவர்களாக இருக்கின்றார்கள். இந்தப் பணிவும் சிரத்தையும் இருப்ப தினால் தான், சுவாமிஜியின் போதனையை இவர்கள் நன்கு கற்று உணரமுடிகின்றது.

இவர்கள் புருஷ சூக்தம், ருத்ரம், தைத்திரியம் முதலியவை களை ஸ்வரத்துடன் உச்சாரணம் செய்வது பார்க்க இவர்கள்

என்ன பாக்கியம் செய்தார்களோ என்று ஆச்சர்யமாக இருக்கும் கர்மயோகிகளைப் போல் கர்மங்களைச் செய்து கொண்டும், சாதுக்களைப் போல், வாழ்க்கை நடத்திக் கொண்டு வரக்கூடிய மனோ பக்குவத்தையும், பயிற்சியையும் சுவாமிஜி இவர்களுக்குக் கொடுக்கின்றார்.

மார்க் பெரியன் என்ற மாணவர், மின்சாரப் பொறி வல்லுனர், ஆஸ்ரமத்தில் மின்சார சம்பந்தமான வேலை களைக் கவனித்துக் கொண்டு சாஸ்திரப் பயிற்சியிலும், நன்கு தேர்ச்சி பெற்றவர். பயிற்சிக் காலத்தில் தனக்கு ஆர்ஷவித்யா குரு குலத்தில் ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுகின்றார் இதைக் கவனிப்போம்.

''திறமை உள்ளவர் கையில் சாஸ்திரம்''

The Sastra in His skillfull Hands Mark Barian

ஆர்ஷ வித்யா குருகுலத்தில் பயிற்சி பெற்ற அமெரிக்க மாணவர் தன் அனுபவத்தை இவ்விதம் கூறுகின்றார்.

நான் இதை எழுதும் போது சுவாமிஜியால் நடத்தப்பட்ட ஒரு வருஷ பிரம்மசர்ய சாஸ்திரப் பயிற்சி முடிந்து மூன்று மாதங்கள் தான் ஆகி உள்ளன இந்தப் பயிற்சியில் பங்கு பெற்ற என்னுடைய மனதில் பயிற்சியின் போது நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் இன்னும் பசுமையாகவே உள்ளன. பயிற்சியின் முடிவு நாளன்று என் மனதில் இனிப்பும், கசப்பும் கலந்ததாயும் அதே சமயம் துக்கமும், பெருமை யுடன் கூடிய சந்தோஷமும் என் மனதில் எழுந்தது.

இந்தப் பயிற்சியின் அனுபவம் என் வாழ்நாட்களில் குறிப்பிடத்தக்கது. சுவாமிஜியின் போதனையினாலும், அவர் துணை நின்று வழி நடத்திச் செல்லும் சாமர்த்தி யத்தாலும், என்னால் வாழ்க்கையின் குழப்பங்களையும், கஷ்டங்களையும் கடந்து பூர்ண சுதந்திர வாழ்க்கையை அடைய முடிந்தது.

பயிற்சியின் இறுதி நாளான பிரிவுபசார, நிகழ்ச்சியின் போது, என் மனதானது பின்னோக்கிச் சென்றது. இந்த கடந்த மூன்று வருடங்களில் ஏற்பட்ட அனுபவங்களை, நினைத்த போது, நன்றி உணர்ச்சியிலும் ஆனந்தத்திலும் மனம் மூழ்கியது.

இருந்தபோதிலும் மனதில் ஓர் மூலையில் எனக்கே விளங்காத ஓர் துக்க உணர்ச்சியும் ஏற்பட்டது. இந்த மூன்று வருடங்களும் ஏதோ ஒரு மாயாவியால் மயக்கப்பட்டவன் போல் எப்போதும் ஆனந்தத்தையும் அமைதியையும் அனுபவித்துக் கொண்டிருந்தால் இந்தச் சூழ்நிலை முடியப்போகின்றதே என்ற உண்மையை என் மனம் ஒப்புக் கொள்ள மறுத்தது. அதனால் வாழ்க்கை முழுவதும் என்றும் சிஷ்யனாக இருந்து கொண்டு இந்த அனுபவத்தை என்றும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆவல் என்னை அறியாமல் மேல்நோக்கி நின்றது. ஆனால் இது நடக்கக்கூடிய காரியமா? இந்த உண்மையை உணரும்போது என் மனம் துக்கமடைந்தது. இதே மனநிலை அங்குள்ள எல்லா மாணவர்களுக்கும் ஏற்பட்டது. சாஸ்வதமாக மேலும், மேலும் தங்கள் எல்லோருமே குருவின் சாஸ்திர போதனையை இடைவெளி இல்லாமல் தொடர்ந்து அனுபவிக்க ஆவலுடையவர்களாக இருந்தனர். இதுவே தான் உண்மையான உயர்ந்த குருவின் லக்ஷணத்தைக் காட்டுகின்றது.

இங்கே நடந்தது என்னவென்றால் மூன்று வருக்ஷங்கள் இடைவிடாமல் ஒரே வேதாந்தப் பாடத்தை ஒவ்வொரு நாளும் மூன்று முறை ஒரே குருவினால் எங்களுக்குப் போதிக்கப்பட்டது. இருந்தபோதிலும் ஒருவரும் இந்த குருவின் போதனை முடிவடைவதை பயிற்சியின் முடிவு நாளன்று முடிவு பெறப்போவதை நினைத்துத் துக்க

மடைந்தனர், இது தான் ஆச்சர்யம். உலகத்தில் எந்த சிஷ்யனும் ஒரே பாடமானது (ஆத்ம வித்யை தவிர) ஒரு நாளைக்கு மூன்று தரம் பூஜ்ய சுவாமிஜி அவர்களைத் தவிர மற்றவரால் போதிக்கப்பட்டால் ஒரே மாதத்தில் பயிற்சி யிலிருந்து ஓடிவிடுவான்.

சுவாமிஜி அவர்களின் ஒவ்வொரு வகுப்பும் மாணவர்களின் முழுக் கவனத்தை ஈர்த்தது. மேலும் மேலும் ஒவ்வொருவரையும் சிந்திக்கச் செய்தது. ஒவ்வொரு வகுப்பிலும் சாஸ்திரத்தின் உண்மைகள் தெளிவடைந்தது. முதல் ஆறு மாதங்கள் வரை சாஸ்திரம் நம்மால் புரிந்து கொள்ள முடியுமா என்ற எண்ணம் மனதினுள், அவ்வப் போது ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், இந்த முதல் ஆறு மாதம் கழித்த பின்பு என் மனதில் எனக்கு நன்றாக சாஸ்திரம் புரிந்து கொள்ள முடிகின்றது, என்ற தன் நம்பிக்கை எழுந்தது.

அடுத்த ஆறு மாதம் கழிந்தபின் ஓ என்ன ஆச்சர்யம், இப்போதுதான் எனக்கு நன்றாகப் புரிகின்றது, என்ற எண்ணம் தானாகத் தோன்றி மனதை உறுதிப்படுத்தியது சாஸ்திரத்தில் அதன் பிறகு ஓர் வருடம் கழித்து நான் மற்றவர்களிடம் தைர்யமாக, முதலில் எனக்கு அவ்வளவு நன்றாகப் புரியவில்லை, இப்போதுதான் தத்வ உண்மைகளை நன்றாக உணர்கிறேன் என்று தைர்யமாகக் கூற முடிந்தது.

ஆத்ம ஞானம் எளிமையானது. அதிக விளக்கம் தேவை இல்லாத குழப்பமற்றதுமானது. இந்த ஆத்மஞானம் இருந்த போதிலும் நமக்குள் அனேக சந்தேகங்கள், தெளிவற்ற மனநிலையும் இருந்தது. அதை சுவாமிஜி அவர்கள் தனக்கே உரிய சாஸ்திரம் போதிக்கும் திறமையால், கொஞ்சம் கொஞ்சமாக சந்தேகங்களையும் மனக்குழப்பத்தையும் விலக்கி, நம்முடைய உண்மை சொருபத்தைத் தெளிவு படுத்தினார். சுவாமிஜியின் இந்த போதிக்கும் முறையானது

அழகிய பூங்காவில் ஒருவன் நடக்கும் போது, ஆங்காங்கு புதிய, புதிய வர்ண மலர்களைக்கண்டு ஆனந்திப்பது போலிருந்தது.

இவ்வித அற்புதமான சாஸ்திரப்பாதையில் பூஜ்ய சுவாமிஜியால் அழைத்துச் செல்லப்பட்ட எனக்குக் கீழ்க் கண்ட ஸ்லோகம் மிகவும் முக்கியத்துவம் உள்ளதாக அமைந்தது.

சதாசிவ சமாரம்பரம் சங்கராச்சார்ய மத்யமாம்
அஸ்மத் ஆச்சர்ய பர்யந்தாம், வந்தே குருபரம்பராம்.

சிவபெருமானிடம் ஆரம்பித்து, ஆதிசங்கரரை மத்யமாகக் கொண்டு என்னுடைய குருவையும் சேர்த்து, உள்ளடங்கிய எல்லா ஆச்சார்யர்களுக்கும் என்னுடைய நமஸ்காரம்.

பகவானிடமிருந்து நமக்கு கிடைத்த வேத சொருபமாக உள்ள ஞானம், சமஸ்கிருத பாஷையில் உள்ளது. அதற்கு ஆதிசங்கரர் சமஸ்கிருதத்திலேயே, விளக்கமும் போதனா முறையையும், மானிடர்களுக்கு அளித்துள்ளார். சமஸ்கிருதம் அறியாதவர்களுக்கும், தகுதியான ஆச்சார்யர் இல்லாத வர்களுக்கும் இந்த சாஸ்திர உண்மை, தெளிவு படாமல் மறைந்தே இருக்கின்றது.

அயல் நாட்டினரான எங்களுக்கு, இந்த உண்மை முற்றிலும் மறைந்துள்ளதே. அயல் நாட்டினரான எங்களுக்கு ஆங்கிலப் பாஷையில் முற்றிலும் சமஸ்கிருதத்தில் உள்ள சாஸ்திர ஞானத்தை சம்பிரதாய முறைபடி, திறந்துகாட்டும் சக்தியாகிய திறவுகோல் சுவாமிஜியிடம் உள்ளது. குறுகிய காலத்தில் இந்தப் பேருண்மையைப் போதிக்கும் குருவை அடைந்துள்ள நான் உண்மையை அறிவது என்னுடைய பாக்யமே. மாணவர்கள் ஒவ்வொரு வரையும், தன்னைப்போல் உயர்ந்த ஆச்சார்யர்களாகச் செய்ய வேண்டும் என்று, ஒவ்வொரு மாணவரையும் பற்றி

அக்கரை எடுத்துக்கொண்டு கவனித்துத் தாயாய், தந்தையாய், தோழனாய், குருவாய் இருந்து சுவாமிஜி பூர்ணத் தியாகத்துடன், அன்பாய் ஆதரித்து இவர்களை நடத்தும் முறை மிக ஆச்சர்யமானது.

இந்தியாவிலிருந்து அமெரிக்காவரும், கீர்த்தி பெற்ற பாடகர்கள், வித்வான்கள்அ பரதநாட்டியக் கலைஞர்கள் அனைவரும் ஆர்ஷ வித்யா குருகுலத்திற்கு வரத்தவறுவது இல்லை. சுவாமிஜி கலைஞர்களுக்கும், வித்வான்களுக்கும் மிகுந்த மரியாதை கொடுத்துத் தன்னுடன் ஆஸ்ரமத்தில் சில நாட்கள் இருக்கச் செய்வார். இவர்களைப் பாராட்டி இவர்களுக்குக் கலையில் மேலும் ஆர்வம் உண்டாக்குவார். சுவாமிஜியின் முன் ஒவ்வொருவரும், தன் கலைத் திறமையைக் காட்டி குருகுலத்தையே ஆனந்தமாகச் செய்வார்கள். சுவாமிஜி அயல் நாட்டில் இவ்வளவு பெரிய ஆஸ்ரமம் அமைத்து வெற்றியோடு நடத்தி வருவதும், அமெரிக்க மாணவர்கள் சாஸ்திரப் பயிற்சி பெறுவதும் பார்த்து அனைவரும் ஆனந்தப்படுவார்கள்.

ஜுன், ஜுலை மாதங்களில் கோடைக்காலத்தில் இரண்டு, மூன்று சாதனா கேம்ப் நடத்துவார். அப்போது அனேக ஊர்களிலிருந்து, பல குடும்பத்தினர் இங்கு வந்து தங்குவார்கள். அப்போது சுவாமிஜி அவர்களுக்காக ஒரு நாளைக்கு மூன்று வேளை வேதாந்தப் பாடங்கள் போதிப்பார். இரவு நேரங்களில் சுவாமிஜி ஓய்வாக அமர்ந்திருக்கும் போது, பக்தர்கள் அனைவரும் சுற்றி அமர்ந்து கொண்டு தங்களுக்கு ஏற்படும், சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்வார்கள். பத்து நாட்கள் சாதனா கேம்ப் நிகழும் முடிவு நாள் அன்று, நாடகம், பாட்டுக் கச்சேரி வைத்து, பெரிய விருந்து தயார் செய்து, அனைவரும் சுவாமிஜிக்கு நன்றி செலுத்தி விட்டு ஆனந்தத்தோடு செய்வார்கள்.

இந்தியாவிலிருந்து வந்த அமெரிக்காவில் குடியேறி உள்ள இந்திய மக்கள் அனேகர், ஆஸ்ரமத்திற்கு வருகின்றார்கள். இவர்கள் வாழ்க்கை ஒளிபெறச் செய்ய மாதா, மாதம் ஞாயிற்றுக் கிழமைகளில் பகவத் கீதை உபன்யாசம் கேட்கும்படிச் செய்கின்றார். இவர்கள் குடும்பத்துடன் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வந்து விடுகின்றார்கள். குழந்தைகளுக்குத் தனியாக, பாலவிஹார், நீதிக் கதைகள், பகவத்கீதை தோத்திரங்கள் முதலியன கற்று கொடுக்கின்றார்கள். இந்திய கலாசாரம் என்ன என்பதைப் புரிந்து கொள்ளச் செய்கின்றார்கள். பிறகு சுவாமிஜி குழந்தைகளுடன் ஒரு மணி நேரம் அமர்ந்து அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குச் சோர் வில்லாமல், அவர்களுக்குப் புரியும்படி பதில் கூறும் பொறுமையைப் பார்க்க, ஆச்சர்யமாக இருக்கும்.

மேலும் இவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளைச் சுவாமிஜிடம் கூறி, அதற்குத் தகுந்த ஆலோசனை கேட்டு பிரச்சனைகளைச் சமாளித்துக் கொள்ளுகின்றார்கள். அனேகர் சுவாமிஜியைக் குருவாகப் பெற்று, ஆனந்தமாகத் தங்கள் வாழ்க்கையை வெற்றியோடு நடத்தி வருகின்றார்கள். இந்தியா, அமெரிக்கா, இன்னும் அனேக தேசங்களில் இருப்பவர்களுக்கு வீட்டில் படிக்க பகவத் கீதை உபதேசம் தபால் மூலம் அனுப்பிக் கற்றுக்கொள்ளும்படிச் செய்கின்றார். ஞானத்தின் உயர்வை அறிந்து அனுபவித்து வரும் சுவாமிஜி தன்னால் இயன்ற வரை, மக்களுக்குப் போதித்து, அவர்கள் வாழ்க்கை ஒளி பெறச் செய்வதையே நோக்கமாக உள்ளார்.

இவ்விதம் அயல்நாட்டினர் சுவாமிஜியின் ஞான போதனையைப் பெற்று மகிழ்கின்றனர். அதைப்போல்

சுவாமிஜியின் ஜென்ம பூமியான, இந்தியாவிலும், இவ்வித குருகுலம் ஞானபயிற்சிக்கு, அமைக்க விரும்பி இன்று கோயம்புத்தூரில் ஆனைக்கட்டி மலை அடிவாரத்தில், அஸ்திவாரம் இட்டு வளர்ந்து வருகின்றது, ''சுருதிசேவா ஆஸ்ரமம்'' 1990 வருடத்தில் இந்த ஞானசூர்யன் பிரகாசிக்க ஆரம்பித்துவிடும்!

முற்றும் உணர்ந்து துறந்த முனிவரின் வாழ்க்கையில் சிலவற்றை எழுதுவது எவ்வளவு கடினம் என்று உணர்கின்றேன். ஏன் எனில் சுவாமிஜியினுடைய விசால இருதயத்தை வர்ணிக்கும் சக்தி எனக்கு இல்லை. சுவாமிஜியின் கருணையினால் இச்சிற்றுனுவிற்கு இம்மஹா பாக்யம் கிடைத்தது. அவருடைய பரம பதத்திற்கு என்னை அர்ப்பணித்து வணங்குகின்றேன்.

சுவாமி தயானந்தா மேல்நிலைப் பள்ளி, மஞ்சக்குடி

ஒரு மஹானின் கடாட்சம் பட்டால் ஒரு நிறுவனம் எவ்வளவு பிரமிக்கத் தக்க வகையில் வளர்ச்சி அடைந்திட முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வது தஞ்சை மாவட்டத்தில் ஒரு சிறிய கிராமத்தில் உள்ள கல்வி நிலையமாகும். முப்பது ஆண்டுகளுக்கு முன் இரண்டு ஆசிரியர்களையும் முப்பது மாணவர்களையும் பெற்றிருந்த துவக்கப் பள்ளி இப்பொழுது 1500 மாணவர்கள் பயிலும், நாற்பது ஆசிரியர்கள் பணிபுரியும் ஜூனியர் காலேஜாக வளர்ச்சி பெற்றுள்ளது. இப்பள்ளியில் நல்ல கல்வித் தரத்தையும், கட்டுப்பாட்மையும், பக்தியும், வாழ்க்கை நெறிகளையும் போதிப்பதுடன் ஆசிரியர்களின் கற்பிக்கும் பாங்கையும்

அறிந்த காரணத்தினால் சுற்று வட்டாரத்து பதினைந்து மைல் தொலைவிலிருந்தும் மாணவர்கள் இப்பள்ளிக்கு வருகின்றனர். இச்சிறிய கிராமத்திலுள்ள பள்ளியில் ஆய்வகம், நூலகம், ஒலி ஒளிக் கல்வி போன்ற அனைத்து சாதனங்களும் செம்மையாகப் பயன்படுத்தப்படுகின்றன. கிராமத்து மாணவர்கள் நன்கு படித்து முன்னேற வேண்டும் என்ற நோக்குடன் ரேடியோ, டெலிவிஷன் தொழிற் கல்வியும், கணிப் பொறிக் கல்வியும் கற்பிக்கப் பெறுவது பல கல்வியாளர்களாலும் பாராட்டப் பெறுகிறது. இப்பள்ளி அமைவதற்கு ஆதார காரணமாக இருந்தவர் திருமதி V.S. கமலாம்பாள் அம்மாள் அவர்களும், இக்கல்விக் கூடத்தின் வியத்தகு வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தவர் திருமிகு டி.டி. நரசிம்மன் ஆவர். மேலும் சுவாமிஜியின் மேல் உள்ள பக்தியினால் தன்னலம் கருதாது பணிபுரியும் ஆசிரியர்களின் தொண்டும் பாராட்டுதற்குரியதாகும்.

இப்பள்ளியினால் நூற்றுக்கணக்கான கிராமப்புற ஏழைப் பெண்கள் ஒரு பைசா செலவில்லாது தன் வீட்டில் இருந்தபடியே ஆசிரியர் பயிற்சி பெற்று இப்பொழுது ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள் என்பதும் நூற்றுக்கணக்கான கிராமப்புற ஏழைப் பெண்கள் உயர் கல்வி பெறுகிறார்கள் என்பதும் இப்பள்ளியின் குறிப்பிடத்தக்க தொண்டாகும். இப்பள்ளி இல்லாவிட்டால் இவர்கள் உயர்கல்வி பெற்றிருக்க முடியாது.

(கேள்வி) ஒருவருடைய வாழ்க்கையின் நோக்கம் என்னவாக இருக்கவேண்டும்?

(பதில்) வாழ்க்கை என்பது வாழ்வதற்கே, வாழ்வு என்பது வாழ்க்கையின் உண்மைகளை, எப்போதும் மனதில் கொண்டிருப்பது வாழ்க்கையின் உண்மைகள் எப்போதும் மனதில் இருக்கும் போது யாவும் தெளிவாய்த் தெரிகிறது. எனவே வாழ்க்கையின் கர்ம பல நுட்பமான அனுபவங்களை அனுபவிக்கும் போது அந்த அனுபவங்களின் உண்மையைப் பார்க்க வேண்டும்.

(கேள்வி) வாழ்க்கையின் சந்தோஷத்திற்கு நிச்சய மான வழி எது?

(பதில்) இந்த உலகத்தில் உனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடிய வஸ்து எது என்று தெரிய வேண்டும். இதை ஆராய்ச்சி செய்யும்பொழுது, ஒரு குறிப்பிட்ட தேசமோ அல்லது காலமோ அல்லது வஸ்துவோ சதோஷத்தைக் கொடுக்க இயலாது, ஏன் என்றால் சந்தோஷமென்பது ஸ்வபமானது. துக்கமோ நமக்கு ஸ்வபவமானது அல்ல. ஏன் என்றால் துக்கப்படுவதற்கு நாம் உழைக்க வேண்டும் வீண் கற்பனைக்கு உட்படாத மனத்தில், நம்முடைய இயல்பான ஆனந்தத்தை, நாம் உள்ளேயே இருப்பதை அறியலாம் சுகம் என்பது மனத்தின் ஒரு நிலை. இந்த நிலையை அடைவதற்கு ஏதாவது வெளிவஸ்து தேவையா? சுகமாக இருப்பதற்கு உன்னைத் தவிர எதுவும் தேவை இல்லை. உன்னை உள்ள படி ஏற்றுக் கொள். உலகத்தை உள்ளபடி ஒத்துக்கொள் இதுவே வாழ்க்கையின் சுகத்திற்குத் திறவுகோல். நம்மைச் சுற்றி உள்ள பொருள்களை மாற்றிக் கொள்வதின் மூலம், சௌகர்யங்களை அதிகப்படுத்திக் கொள்ள முடியும்.

உணவு தேகபயிற்சிகளை அதிகப்படுத்திக் கொள்ள முடியும். உணவு தேகபயிற்சி, இவைகளின் மூலம் ஆரோக்யத்தை விருத்தி செய்து கொள்ள முடியும். ஆனால் ஆரோக்யத்தை விருத்தி செய்து கொள்ள முடியும். ஆனால் சௌகர்யங்களும், ஆராக்கியம் மட்டுமே சுகத்தைக் கொடுக்கும் என்று கூறமுடியாது. உண்மை வஸ்துவைப் பற்றிய அறிவைக் கொடுப்பது வேதாந்தம். ஆகையால் வேதாந்த சாஸ்திரங்கள் தான் உண்மை அறிவைக் கொடுக்க முடியும்.

(கேள்வி) மனிதன் பெற்றுள்ள பொருள்களில் உயிரைத் தவிர வேறு மிகவும் நேசிக்கத்தகுந்த வஸ்து எது?

(பதில்) மனிதன் உயிரைத் தவிர, தன்னிடம் உள்ள பொருள்களில் அதிகம் நேசிக்கும் வஸ்து அவனிடம் உள்ள சுகமே. இந்த சுகத்தைத் தவிர, மனிதன் நிரந்தரமாக நேசிப்பது வேறு எதுவும் இல்லை. மனிதன் உயிரைக் கொடுத்தாவது சுகத்தைப் பெற விரும்கிறான்.

(கேள்வி) திரைப்படம், கீழ்த்தரமான பத்திரிக்கைகள், புத்தகங்கள் மூலம் மிகுதியாக வெளிபடுத்தப்படும். சரீர இன்பம், கொலை, குற்றம் முதலியவைகள், மனிதர் களுடைய தார்மீக மனப்பான்மையைக் கெடுக்கின்றது அல்லவா?

(பதில்) நான் அவ்விதம் கருதவில்லை படத் தயாரிப்பாளர்கள் பத்திரிக்கைகள் எல்லாம், மக்களால் எது அதிகம் விரும்பப்படுகின்றதோ அதையே அவர்கள் தயாரிக்கின்றார்கள். அதனால் தவறு நம்முடைய கல்விமுறையில் தான் இருக்கின்றது ஆகையால் கல்வி முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும்.

(கேள்வி) சில சாமியார்கள் செய்யும் சித்திகளைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

(பதில்) இருக்கக் கூடிய வஸ்துவிலிருந்து தான் வேறு ஓர் வஸ்துவை காண்பிக்க முடியும். இல்லாத ஒன்றிலிருந்து எந்தவிதமான வஸ்துவையும், யாராலும் தயாரிக்க முடியாது. ஆகையால் சித்தி என்பது நம்மால் புரிந்து கொள்ள முடியாத நிகழ்ச்சி, அதன் காரணம், சித்தி செய்பவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

(கேள்வி) உங்கள் வாழ்க்கையில் மிகவும் மறக்க முடியாத நிகழ்ச்சி எது?

(பதில்) சிறு வயதில் என்மனதைத் தொடக்கூடிய ஓர் நிகழ்ச்சியைப் பற்றி என் அத்தை கூறியது என் மனதில் ஆழப்பதிந்தது என்னுடைய தாத்தாவிடம் பழைய வேலைக்காரன் ஒன்றுக்கும் உதவாத இளம் பூசணிக்காயை, கொண்டு வந்து கொடுத்தான், அதற்கு அவனுக்கு ஓர் மூட்டை நெல்பிரதியாகக் கொடுத்தார். அதற்கு அவர் மகன், ''ஒரு சிறிய பூசணிக்காய்க்காக ஏன் ஒரு மூட்டை நெல் கொடுக்கின்றீர்கள் என்று கேட்டார்.'' அதற்குத் தாத்தா பின்வருமாறு கூறினார். விவசாயத்திற்காக ஓர் அடி நிலம் இல்லாதவன் தன் சிறிய குடிசையின் ஓர் பகுதியிலே அந்தப் பூசணிக்காயை வளர்த்து வந்திருக்கின்றான். அப்படிப்பட்டவன், தன்னிடம் உள்ள ஒரே பூசணிக்காயை, கொடுத்துவிட்டதின் மூலம் அவனுக்கு ஏற்படும் பெரும் நஷ்டத்தைத் தகுந்த முறையில் ஈடுபடுத்த வேண்டும். அதே மாதிரியான நஷ்டத்தை நாம் அடைவதின் மூலம்தான் இந்த ஈடானது செய்யமுடியும். அவனுக்கு ஓர் மூட்டை நெல் பிரதியாக கொடுத்தபோது, நான் ஏதோ ஒன்றை இழந்ததாய் உணர்ந்தேன். இந்த உணர்வினால் அவனுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்த திருப்தி ஏற்பட்டதாம் அவருக்கு அந்த ஏழை வேலைக்காரன் அன்பில் சந்தோஷப்பட்டு

செய்த அச்செய்கையும் தாத்தாவின் மனோபாவமும், என்னுடைய சிந்தனை முறையில் மாறுதலை ஏற்படுத்தியது. வாழ்க்கையிலும் ஓர் திருப்பத்தை ஏற்படுத்தியது, இதனால் பிறருக்காக வாழவேண்டும் என்பதை அறிந்து அதன்படி செயல்பட்டு வருகின்றேன்.

(கேள்வி) உலக அமைதிக்குச் சந்தர்ப்பம் உள்ளதா?

(பதில்) உலக அமைதிக்கு, ஒரு விதத்தீங்கும் ஏற்படாது என்றே தெரிகின்றது. அணு ஆயுதங்கள் நான் உலகப்போரைத் தடுத்து வைத்திருக்கின்றதென்று, யாரும் நிச்சயமாகச் சொல்லலாம். ஏன் என்றால் அணு ஆயுதப் போர் ஏற்படும், பக்ஷத்தில் உலகம் பூர்ண நாசம் அடையும், என்பது மனித சமுதாயத்திற்கு நன்கு தெரியும்.

(கேள்வி) உங்கள் வாழ்க்கையில் தாங்கள் தெரிந்து கொண்ட மூன்று முக்கியப் படிப்பினைகள் என்ன?

(பதில்) (1) உலகத்தில் உள்ள வஸ்துக்களையும், நிகழ்ச்சிகளையும் உள்ளபடி ஏற்றுக்கொண்டு வாழ்வில், எங்கு எவ்விதம் செயல்படவேண்டுமோ அவ்விதம செயல்படுவது.

(2) எப்போதும் உணர்வுடன் செயல்பட வேண்டுமே தவிர எவரையும் எதிர்தாக்குதல் செய்ய கூடாது. ஒருவரை எதிர்ப்பதினால் எவ்வித நன்மையும் ஏற்படாது என்பதை அறிந்தேன்.

(3) நமக்கு இருப்பது போல், ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட மனம் இருக்கிறது என்று புரிந்து கொண்டேன். இந்த மனதினால் தான், எல்லோருக்கும் சிக்கல் ஏற்படுகின்றது என்று தெரிந்து கொண்டேன்.

(கேள்வி) எவ்விதம் மனோ நிலையை உயர்த்துவது?

(பதில்) பண்புகளின் மதிப்பை அறிந்து, பண்போடு ஒழுகுவதால் மனநிலை உயர்த்தலாம். மேலும் எல்லா வற்றையும், சாந்தமாய், நடுநிலையிலிருந்து சிந்திப்பதின் மூலம், படிப்பதின் மூலமும் நீ எப்படிப்பட்ட மனதை அடைய விரும்புகின்றாயோ, அதை அடைய முடியும்.

(கேள்வி) தியானத்தினால் ஒரு மனிதன் தெய்வீக சக்திகளை அடைய முடியுமா?

(பதில்) தெய்வீக சக்திகளை அடைய முடியும். ஆனால் நீ எந்தவிதமான தியானம் செய்கிறாய்? எதைக் குறித்து தியானம் செய்கிறாயோ அதைப் பொருத்தி ருக்கின்றது. இந்த சக்திகள் எல்லாம் எதற்கு? எதற்காக அடைய விரும்புகின்றாய்?

(கேள்வி) பயத்திலிருந்து எவ்விதம் விடுதலை பெறுவது?

(பதில்) சூழ்நிலையை உள்ளபடி ஒத்துக் கொண்டால் பயம் இருக்காது. தன்னைவிட இரண்டாவது வஸ்துவை விலக்கினால் தான், பயத்திலிருந்து முழு விடுதலை கிடைக்கும். பயத்தின் காரணத்தை கண்டுபிடித்து அதலிருந்து நீ எப்படி வெளிவருவது என்று தெரிந்து கொள்.

(கேள்வி) மன ஒருமைபாட்டிற்குச் சிறந்த வழி சொல்ல முடியுமா?

(பதில்) சாதாரண மனிதன் ஒவ்வொருவருக்கும், இயல்பாகவே மன ஒருமைப்பாடு இருக்கிறது. ஆனால் ஒரு குறிப்பிட்மட விஷயத்தில் விருப்பம் இல்லாத போது, மனது அதில் ஒருமைப்பாட்டை அடைவது இல்லை. ஆகவே எந்த வஸ்துவை விரும்புகிறாயோ அந்த வஸ்துவில் நீ விரும்பியதை வளர்த்துக் கொள் அப்போது ஒருமைப்பாடு தானாக வரும் விஷயங்களில் அனுகூலமானதைப்

பார்ப்பதினால் அதற்கு ஏற்றார் போல், செயல்படும் போது மன ஒருமைப்பாடு ஏற்படும்.

(கேள்வி) உங்கள் மாணவர்களும், மற்றவர்களும் தாங்கள் போதிக்கும் முறையைப் பற்றி மிகவும் போற்றுகின்றார்கள், இவ்விதம் திறமையாய்ப் போதிக்கும் முறை தங்களுக்கு எவ்விதம் கிடைத்தது?

(பதில்) சாஸ்திர சம்பிரதாயத்தைத் தெள்ளத் தெளிவாய் நன்கு அறிந்து இருப்பது ஒன்று. அடுத்த படியாக அறிந்திருக்க வேண்டியவை சமஸ்கிருத இலக்கணம், நியாய சாஸ்திரம், இவைகளைப் பற்றிய அறிவுகள் ஞான போதனைக்கு இருந்தால் தான், ஞான போதனா முறை தெளிவாய், ஸ்திரமாக இருக்கும் சமஸ்கிருத இலக்கணம் முதலியவை தெரிந்து இருக்க வேண்டியதின் அவசியம் என்னவெனில், ஆங்கில மூலமான அன்னியப் மொழி பெயர்ப்புகளை நம்பி இருப்போர்களுக்கு மூல சிரந்தத் திலுள்ள, சில சமஸ்கிருத வார்த்தைகளுக்கே உரித்தான மிக நுணுக்கமான கருத்துகளைப் புரிந்து கொள்ள முடியாது. ஆகையால் இக்கருத்துகள், நன்கு தெரிந்து இருந்து சம்பிரதாயப்படி போதிக்கும் திறமை இருந்தால், கேட்ப வர்களுக்கு எளிதில் புரியவைக்கலாம்.

(கேள்வி) நம் மதத்தின் வழிபாட்டு முறைக்கும், மற்ற மதத்தினர் வழிபாட்டு முறைக்கும் அதிக பேதம் உள்ளதே ஏன்?

(பதில்) நம் மதத்தினர் நம்புவது இல்லை. நம் மதம் நம்பிக்கை அடிப்படையாகவும் உள்ளது அல்ல. நம் மதத்தினர் வாழ்க்கையின் உண்மையைப் புரிந்து கொள்வதற்கு தான் சரி என்ற அறிந்தவர்கள். போகவும் என்பது, இறந்ததற்குப் பின்பு அனுபவிக்க வேண்டும் என்பது பிற மதத்தவர் கொள்கை. ஆனால் இந்துமதம் உயிருடன் இருக்கும்போதே, அந்த உண்மையைத் தெரிந்து

கொண்டு வாழ்வது. ஆரம்பத்தில் ஒழுங்கு, கட்டுபாடுகள் இரு தரப்பிலும் ஒன்று போல இருந்தாலும், முடிவில் கருத்து வேறுபாடு அதிகம் உடையது, மற்ற மதங்கள் பல ஆச்சார்யர்களை உற்பத்தி செய்வது நம் மதம் மற்ற மதத்தினர்க்கு அப்படி இல்லை ஒருவர் கூறியதையே, கூறிக்கொண்டு இருப்பார்கள். நாம் நம்புவது இல்லை மேலும் மேலும் கேள்விகள் கேட்டு உண்மையைத் தெரிந்து கொள்கின்றோம் அவர்கள் மதக்கொள்கைகளைக் கேள்வி கேட்டால் சம்மந்தமே இருக்காது. நம்பும்படி கூறுவது அம்மதங்கள், நாம் சிருஷ்டியையும், சிருஷ்டி கர்த்தாவையும் நன்கு தெரிந்து கொண்டிருக்கின்றோம். சிருஷ்டிப்பவர், சிருஷ்டி இரண்டும் நமக்குக் கடவுள் தான். ஆகையால் நாம் எங்கும் ஒரே உண்மையைப் பார்க்கின்றோம். ஆனால் எல்லா மதங்களையும், எல்லா வற்றையும், நாம் ஏற்று மதிப்புக் கொடுக்கின்றோம். இந்த உண்மை அனைவருக்கும் தெரியாது. தெரிவதும் இல்லை.

(கேள்வி) இந்த உண்மையை அனைவரும் தெரிந்து கொள்வது எப்படி?

(பதில்) இந்த உண்மையைப் போதனை மூலம் தான், அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும். ஆகையினால் தான், நான் அனேகருக்கும் நம்முடைய சாஸ்திரத்தைக் கற்றுக் கொடுக்கின்றேன். இதை நன்கு கற்று கொண்ட பிறகு, என்னிடம் பயின்ற மாணவர்கள் ஒவ்வொரு நகரத்திலும் சென்று, இந்த உண்மையைப் போதிக்கின்றார்கள்.

(கேள்வி) சமுதாயத்தில் தனம் மிக்கவர்களின் கடமை என்ன?

(பதில்) செல்வந்தர்கள் மனோபாவமானது, பெரும் தன்மை உள்ளதாக இருக்க வேண்டும். இந்த உலகத்தில் யாருக்குமே எதுவும் சொந்தம் இல்லை. இந்த உடலும் நமக்குச் சொந்தம் இல்லை. நாம் சிருஷ்டிக்காத பொருள்

களின் மீது நமக்கு என்ன உரிமை இருக்கின்றது? ஒற்றுமையும் கூட்டுறவும் தான் சிருஷ்டியின் சாரம் அல்லது தத்துவம் எந்த வஸ்துவுக்கும் உலகத்தில் தனித்த இருப்பு கிடையாது. இது போல் வாழ்க்கையிலும் ஒன்றுபட்டு வாழ்வது வாழ்வின் அடிப்படை. இதனால் ஒருவருக்கொருவர் உதவியுள்ளவர்களாக இருப்பதுவே. மற்றவர்கள் உதவி இல்லாமல் தனித்து வாழ முடியாததினால், நன்றி அறிவுள்ளவனாய் இருக்க வேண்டும். நமக்குச் சொந்த மானது எதுவும் இல்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

(கேள்வி) நம்முடைய மதத்தைப் பற்றி மக்களிடையே தவறான கருத்துகள் பரவி இருப்பதன் காரணம் என்ன. இந்த தவற்றை எவ்விதம் விலக்குவது?

(பதில்) இதைத்தான் நாங்கள் செய்து கொண்டி ருக்கின்றோம். சங்கராச்சார்யர் முதலிய ஆச்சார்ய புருஷர்களும், இதைத்தான் செய்து கொண்டிருக்கின்றார்கள். மற்றவர்களுடைய உணர்வுக்கு மதிப்புக் கொடுத்து நடப்பதற்கும், சமூகப் பொறுப்புள்ளவர்களாகவும் வாழத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது எனக்குப் பிறரால் தீங்கு ஏற்படக் கூடாது, என்று நான் எண்ணுவது போல் மற்றவர்களுக்கும் நான் தீங்கிழைக்க கூடாது, என்ற இவ்விதமான குணங்களைக் கடைபிடிக்க வேண்டும். உயர்ந்த வேலை தாழ்ந்த வேலை என்று வேறுபாடு இல்லாமல், மனோபாவங்களை மாற்றிச் செயல்புரிய வேண்டும்.

பெல்காம் சேனை தலைவர் கருப்பையாவின் சந்திப்பு

சேனைத் தலைவர் கருப்பையா சுவாமிஜியை பணிவன்புடன் வரவேற்று சில கேள்விகள் கேட்டார்.

(கேள்வி) இங்கு இருக்கும் எங்கள் பிள்ளைகள் (சிப்பாய்கள்) மிகவும் நல்லவர்கள். பக்தி உடையவர்கள். அவர்கள் நம் சம்பிரதாயத்தை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றார்கள். இங்க பூஜை செய்ய வரும் பண்டிதர்களைக் கேட்டால், இதற்கு தகுந்த பதில் கூறுவது இல்லை பூஜை மட்டும் இந்தப் பண்டிதர்கள் செய்கின்றார்கள். ஆனால் அவர்கள் கூறும் பதில் பொருத்தமாகவோ, திருப்தியாகவோ இல்லை. இந்த உண்மையை எவ்விதம் தெரிந்து கொள்வது?

(பதில்) பண்டிதர்கள் பூஜை செய்பவர்கள், மந்திரங்களை ஓதுவார்கள் ஆனால் அவர்களுக்கு மந்திரங்களின், ஆழ்ந்த கருத்தும், அது நம் வாழ்க்கைக்கு எவ்வித உபயோகம் என்பதும் தெரியாது. ஏன் எனில் அவர்கள் இதைத் தெரிந்து கொள்வதில், அக்கரை காட்டுவது இல்லை. ஏதோ கொஞ்சம் தெரிந்து கொண்டதும், பூஜா காரியங்களைச் செய்ய, வெளியில் வந்து விடுகின்றார்கள். இவர்களுக்குப் போதிய பண வசதி இல்லாததினால் மேலும் மேலும் படிக்க முடிவதும் இல்லை. சமஸ்ஃருதம் படிப்பது என்றால் அதிக நாட்கள் வேண்டும். மேலும் அவ்விதம் படித்தவர்கள் ஆனாலும் அதற்குத் தகுந்த வருமானமோ, மதிப்போ இல்லை. அதனால் இதில் பண்டிதர்கள் சிரத்தை வைப்பது குறைந்து விட்டது. மேலும் நன்கு படிக்கும் திறமை இல்லாதவர்கள் எல்லாம், அக்காலத்தில் வேதபாடசாலைக்கு அனுப்பி வைப்பார்கள். என் தாயார் கூட என்னை நீ நன்றாய்ப் படிக்கவில்லை யானால் வேத பாடசாலைக்கு அனுப்பி விடுவேன் என்று கூறுவார்கள். இவ்விதம் சிறந்த கல்வி கற்காமல் வேத பாடசாலை பயின்றவர்கள். உண்மையை சரியாய்ப் புரிந்து கொள்வது இல்லை ஆதலால் இவர்களுக்குச் சில சந்தேகங்களை விளக்க முடிவது இல்லை. மேலும் இவர்கள் இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள முயற்சிப்பதும்

இல்லை. அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டியவரை பார்த்துக் கொள்கின்றார்கள். இவர்கள் நோக்கம் உண்மையை அறிந்து கொண்டு கூறுவதும் அல்ல.

(கேள்வி) எளிய வாழ்க்கையும் உயர்சிந்தனையும் அடைவது எப்படி?

(பதில்) வாழ்க்கயின் அத்தியாவசியமான தேவைகளை மட்டும் பூர்த்தி செய்து கொள்வதின் மூலம், எளிய வாழ்க்கை அடையலாம் உயர்ந்த சிந்தனை என்பது பொருளுக்காக மனிதன் இல்லை, பொருள்கள் மனிதனுக்காக உள்ளது என்ற உண்மையை அறிவது உயாநத சிந்தனை.

(கேள்வி) இன்றைய மனிதர்கள் வாழ்க்கை எப்போதும் அமைதி இல்லாமல் இருக்கின்றது, இதை எவ்விதம் தவிர்க்கலாம்.

(பதில்) வாழ்க்கையில் ஓர் குறிக்கோள், இல்லாத தினால் ஏற்படுவது இந்த அமைதியின்மை. ஆதலால் சரியான குறிக்கோள் தேவை. பொருள்களை நாம் நாடிச் செல்லும் போது அப்பொருள்களில் நாம் எதிர்பார்க்கும் சுகம் கிடைப்பது இல்லை. அதனால் தோல்வியும் அமைதி யின்மையும் ஏற்படுகிறது. பொருள்களில் உள்ள தோஷங்களைப் பரிசீலித்து நடுநிலைமையிலிருந்து பார்ப்பதினால் மனம் அமைதி பெறலாம்.

(கேள்வி) சத்யவஸ்து அசத்யவஸ்து என்பது என்ன?

(பதில்) எப்போதும் மாறாதது சத்யவஸ்து, எதையும் எதிர்பாராமல் சுதந்திரமாக இருப்பது எதுவோ அதுவே சத்யவஸ்து. இதுவே சைதன்யம். எல்லா வஸ்துகளும், அதையே நம்பி இருக்கிறது. இருக்கும் நில முழுவதும் சைதன்யத்தையே நம்பி இருப்பது. இவ்விதத் தன்மைகள் உள்ளது அசத்யவஸ்து, அல்லது அநித்யம் ஆகும். மேற் கூறிய தன்மைகளுக்கு மாறான இயல்புள்ளது சைதன்யம். அதுவே நான்.

(கேள்வி) விக்ஞானம் உண்மையை அறிவதற்கு வழி செய்யுமா? காட்டுமா?

(பதில்) விக்ஞானம் உண்மையை அறிய வழி செய்யாது. விஞ்ஞானம் உண்மையை அறிய விரும்புகின்றது. விஞ்ஞானம் உலக விஷயத்தைப்பற்றிய ஞானத்தை தான் கொடுக்கும். உண்மை ஞானத்தைக் கொடுக்காது, உண்மை வஸ்து ஆத்மாவானதினால் நம்முடைய மதம் குருமார்களால் வளர்க்கப்படுவது. இந்த உண்மை அறிந்து. போதிக்கும் குருமார்கள் இல்லாவிடில் நம் மதமே சிதைந்து விடும். போதனையை முக்கியமாய் கொண்டுள்ளது நம் மதம் ஆகையால் நான் இந்த உண்மையை மக்களுக்கு மேலும், மேலும் போதித்துத் தெரிந்து கொள்ளச் செய்வதையே விரும்புகின்றேன்.

சுவாமிஜியிடம் இவ்விஷயங்களை எல்லாம் கேட்டுக்கொண்ட பின்பு, கருப்பையா அவர்கள் சுவாமிஜியிடம் கூறியது.

''அன்னிய மதத்தினர் உங்கள் மதம் என்ன மிகப் பழமையானது. அதில் என்ன உண்மை இருக்கின்றது? யாருக்கு இவை தெரியும் என்று கூறிய சிலர் தங்களுடைய விளக்கங்களையும் போதனா முறைகளை கேட்டுவிட்டு, இவ்வளவு உண்மைகள் உள்ள மதம், இந்து மதம் என்று எங்களுக்குத் தெரியாது. இவ்வளவு உண்மைகள் இதில் உள்ளதினால், அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியதே'' என்று கூறினார்.

சுவாமிஜி! தாங்கள் வேதத்தில் மறைந்திருக்கும் உண்மைகளை, மக்களுக்கு எளிய முறையில், வாழ்க்கைக்கு உதவும் வகையில் கூறும் பக்குவசாலி. தாங்களைச் சந்தித்து பேசும் பாக்கியம் எனக்கு கிடைத்ததே பெரும் பாக்கியம்'' என்றார்.